# நற்போதகம்.

ஜனுவரிமீ. ௲அ௱அக௵ 1881

## யோசுவாவின் புஸ்தகம்.

### VIII. அதிகாரம்.

1. இஸ்ரவேலர் முந்தி முறியடிக்கப்பட்டுப்போனதாலுண்டாகிய பயம் நீங்கவும், முதல் தடவையாகக் கிடைக்கப்போகிற கொள்ளைப் பொருள்களில் பங்குபெறவும், யாவரும் தங்கள் வேலையில் அதாவது, யுத்தத்தில் முயற்சிசெய்யவும், யுத்த மனுஷரெல்லாரையுங் கூட்டிப் போக யோசுவா கற்பனைபெற்றார்.

2. ஆயிப் பட்டணத்தார், முந்தியடைந்த ஜெயத்தினால் கொண்டிருந்த மேட்டிமையைக் கண்டிக்கவும், கானானியருக்கு மறுபடியும் திகில்பிடிக்கவும் இஸ்ரவேலருக்கு இன்னும் ஜெயமுண்டாகுமென்ற நம்பிக்கை அதிகரிக்கவும், எரிகோவுக்கும் அதின் இராசாவுக்கும் செய்ததுபோல செய் என்று தேவன் கற்பிக்கிறார்.

3. ஆயிப் பட்டணத்துக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய, யுத்த மனுஷரெல்லாரும் போவது அவசியமற்றதும் தொந்தரவானதும், பின்வருஞ் சூழ்ச்சிக்குத் தடையாயும் இருந்தபடியால், 30 000-பேரை மாத்திரம் யோசுவா தெரிந்துகொண்டார்.

"அவர்களை" என்பது 30,000-பேரைக் குறியாமல் பதிவிடைக் கனுப்பப்பட்ட 5000-பேரைக் குறிக்கும். வா. 9, 12.

4. இந்தச் சங்கதி சற்று கருகலாயும், சிக்காயுந் தோன்றுகிறது. சரித்திரத்தை வாசித்தவுடனே, 3-ல் கண்ட 30,000-பேர் ஒரு பவிஞ்சென்றும் 12-ல் சொல்லிய பதிவிடைக்கனுப்பப்பட்ட 5000-பேர் ஒரு பவிஞ்சென்றும், வா. 5: 11-ல் கண்ட மற்ற யாவரும் மறு பவிஞ்சென்றும் முனதுக்குத் தோன்றும். கவனித்துப் பார்க்கும்போது ஆயி பட்டணத்தைப் பிடிக்க இரண்டு பவிஞ்சு குறிக்கப்பட்டு ஒரு பவிஞ்சு பதிவிடைக்கனுப்பப்பட்டதென்று அறியலாம். 3-ல் கண்ட 30,000-ஜன

ங்களில் 5000-பேர் பதிவிடைக்கனுப்பப்பட்டிருக்கிறார்கள். பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவே, ஆயிக்கு மேற்காக இரண்டு பதிவிடையிருப்பது கூடாத காரியம். வா. 9, 12, 13. 12, 14, 19-முதலிய வாக்கியங்களைப் பார்க்கையில் ஒரு பதிவிடையே இருந்ததாகத் தெரியவருவதொழிய கூட, உபதேசிக்கப்பட்ட மற்றப் பதிவிடை ஒன்றுஞ் செய்ததாகவுந் தோன்றவில்லை.

60933

5. யோசுவாவும் அவனுடனிருந்த 25000-பேரும், பதிவிடை அனுப்பப்பட்ட மறுநாட் காலையில் புறப்பட்டுப்போனார்கள்.

10. அதிகாலையில் ஜனங்களை யோசுவா இலக்கம்பார்க்கவேண்டியதென்னவென்றால், தம்மோடிருந்தவர்களில் யாராவது இராத்திரியிலே தம்மைவிட்டுப் பிரிந்தாவது, பதிவிடைக்காவது போயிருக்குமோ என்பதை அறிந்துகொள்ளவும், இந்த யுத்தத்தில் இஸ்ரவேலரில் ஒரு சேதமுமில்லையெனக் காண்பித்து அதினால் இஸ்ரவேலர் தேவனில் அதிக உறுதியான நம்பிக்கை வைத்து யுத்தமுயற்சியில் பின்வாங்காத் தைரியங்கொள்ளவுமே.

"இஸ்ரவேலின் மூப்பர்" 3-ல் காட்டிய 30,000-ஜனங்களையும் நடத்திய யுத்தத் தலைவர்கள் அல்லது இஸ்ரவேலின் அதிபதிகளாகிய நியாயவிசாரணைக்காரராயிருக்கலாம். இந்த நியாயாதிபதிகள் தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த கொள்ளைப்பொருள்களைக் காபந்துசெய்யவும், வா. 2, 27. யுத்தத்துக்குப்போனவர்களுக்கும் மற்றும் ஜனங்களுககும், எண். 31: 27-ல் கண்ட உத்தரவுப்படி கொள்ளைப் பொருளைப் பங்கிட்டுக்கொடுக்கவும் யோசுவாவோடு கூடப்போனார்கள்.

13. யோசுவாவும், அவன் ஜனங்களும், முதல்நாள் சாயந்தரமே எல்லாம் ஆயத்தஞ்செய்து இரவிலேயே பதிவிடையை அனுப்பி, வா. 3. மீதியான 25000-பேருடன் இரவில் தங்கி, வா. 9. அதிகத் தூக்கத்துக்கிடங்கொடாமல், இருட்டோடெழுந்து ஜனங்களை இலக்கமும் பார்த்து, பள்ளத்தாக்குக்கு நேரே போய், வா. 13. ஆயிப் பட்டணத்தாரை யுத்தத்துக்கு அழைக்கிறவர்களாய்த் தங்களைக் காட்டினார்கள். மறுநாளிரவில் நடந்திருக்குமென்று சிலர் நினைக்கிறார்கள். அப்படியிருக்குமானால் எதிரிகள் பதிவிடையை அறிந்து பட்டணத்தை அடைகோட்டைப்படுத்த ஏதுவிருக்குமே.

14. "குறித்த வேளையில்" முன்னாலே இஸ்ரவேலரை முறியடித்த சுபநேரம் வருகிறவரை காத்திருந்து அந்த நேரம் வந்தவுடனே ஆயியின் இராசாவும் அவன் கூட்டாளிகளும் புறப்பட்டார்கள்.

16. "எல்லாரும்" பட்டணத்திலுள்ள எல்லாருமல்ல, யுத்த மனுஷர் மாத்திரமே. பின்தொடரவும், யுத்தஞ்செய்யவும் கூடாத வயதுசென்றவர்களும், பிள்ளைகளும் பட்டினத்திலிருந்தார்கள்.

TL

Ol6m 211, M81



18. யோசுவாவின் ஈட்டியின் நுனியில் கொடியுமிருந்திருக்கலாம். இது அவனோடிருந்த சேனைகளை நிறுத்திப் பின்தொடருகிறவர்களை எதிர்த்துச் சங்கரிக்கவும், தூரத்திலிருந்த பதிவிடையாட்கள் தங்களுக்குக் கற்பிக்கப்பட்டபடி செய்வதற்கு அவர்களைத் தூண்டிவிடும் அடையாளமாகவுமிருந்தது. விசேஷமாய்த் தேவனுடைய பிரசன்னத்துக்கும் ஒத்தாசைக்குஞ் செயத்துக்கும் இரகசிய அடையாளமாகவிருந்தது. யாத்தி. 17: 11-ல் சொல்லியபடி மோசேயின் கை நீட்டப்பட்டிருந்த வண்ணம் ஜெயமாகும்வரை யோசுவாவின் ஈட்டியும் நீட்டப்பட்டிருந்தது.

19. பதிவிடையிருந்தவர்கள் பட்டணத்தை முற்றிலும் தீக்கொளுத்தாமல், தங்கள் காரியம் சித்தியாயிற்றென்று தங்கள் சகோதரருக்குக் காட்டும் அடையாளமாகப் புகையெழும்பும்படி பட்டணத்தின் ஓர் பாகத்தைக் கொளுத்தினார்கள். மற்றப்படி கொள்ளைப்பொருள்கள் கிடையாதே.

20. "இடமில்லாமல்போயிற்று." மூலத்தில் வல்லபமில்லாமல் போயிற்றென்று கண்டிருக்கிறது. எண். 2: 17. நெகே. 7: 4. ஏசாயா 22: 18. சங். 104: 25.

23. மற்ற இராஜாக்களுக்குத் திகிலுண்டாகும்படி ஆயியின் இராசாவுக்கு அதிக நிந்தையும், விசேஷமுமான தண்டனையைச் செய்ய அவனை உயிரோடே பிடித்தார்கள்.

26. யோசுவாவின் நீட்டப்பட்ட கை, யுத்தத்தில் ஓய்ந்துபோகவில்லை. அல்லது சத்துருக்களைச் சங்கரிக்க இஸ்ரவேலரைத் தைரியப்படுத்த ஏதுவாயிருந்தது.

28. "என்றைக்கும்" என்பது நீடித்தகாலம். ஆதி. 6: 3. ஏசா. 42: 14. இந்தப் பட்டணம், திரும்பக் கட்டப்பட்டிருக்கிறது. நெகே. 11: 31.

29. கானானியரைப் பார்க்கிலும், அவர்களின் இராஜாக்களையே யோசுவா, கொடூரமாய் நடத்தினார். ஏனென்றால் அந்த ஜனங்களின் அருவருப்பான பாவங்களைத் தடுக்கவும், தண்டிக்கவுமான ஏற்பாடுகள் செய்யாமல், அவர்கள் அவ்வித பாவங்களைச் செய்யக் காரணராக இருந்து, அவர்களின் அழிவுக்கு முக்கிய ஏதுக்களாயிருந்தபடியினாலேயே. தேவகட்டளைப்படி உடலை மரத்தைவிட்டிறக்கினார்கள். உபா. 21: 22, 23.

30. கானான்தேசத்தில் பிரவேசித்தவுடனே செய்யக் கற்பனைபெற்றபடி ஏபால் மலையில் பலிபீடங் கட்டப்பட்டது. உபா. 11: 29. 27: 2, 3. தேவனோடு செய்த உடன்படிக்கையைப் புதுப்பித்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்வதினாலே தேவனால் மாத்திரம் தங்களுக்கு ஜெயமும் ஒத்தாசையுங் கிடைக்கக் கூடுமென்பதை அறிக்

கையிடும் நோக்கமாகப் பலிபீடங் கட்டினார்கள். கெர்சீம் மலையிலும் ஏன் கட்டவில்லையென்றால் (1) தேவனுக்கென்று ஒரே இடத்தில் மாத்திரம் பலிபீடங் கட்டவேண்டியது. உபா. 12: 13, 14. (2) ஏபால் மலையே அந்த ஓரிடமென்று முன்னால் குறிக்கப்பட்டிருந்தது. உபா. 27: 45. அங்கே நியாயப்பிரமாணத்தின் சாபங் கூறப்பட்டது. இது பாவிகள் தங்கள் சாபத்தினின்று நீங்கி, தேவாசீர்வாதம் பெற்றுக்கொள்ளவுகிற கிருபையின் எத்தனத்துக்குரிய அடையாளமாயிருப்பதால், ஏபால் மலை அதற்கேற்ற இடமே.

32. நியாயப்பிரமாணத்தைக் கரடுமுரடுமாயிருந்த பலிபீடத்தின் கற்களிலல்ல, மெதுவிடப்பட்டுச் சாந்துபூசின கற்களில் எழுதினான். உபா. 27: 2. இதில் மோசேயின் ஐந்தாகமங்களும் எழுதப்படவில்லை. அதற்குக் கற்களும், காலமும் போதாதே. பின்சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களும், சாபங்களும் எழுதப்படவில்லை. அவைகள் நியாயப்பிரமாணங்களல்ல, நியாயப்பிரமாணத்தின் விசேஷித்த பங்குகள் எழுதபபட்டன. உபா. 27: 15 விசேஷமாய் பத்துக்கற்பனைகள் எழுதப்பட்டன.

33. ஏபால், கெர்சீம், மலைகள் எப்பிராயீம் கோத்திரத்தில் சீகேமுக்குச் சமீபமாயிருந்தன. உபா: 11: 29, 30. 27: 12. நியா. 9: 7.

"வாசித்தான்." ஆசாரியனாயாவது, லேவியனாயாவது வாசிக்கும்படி கற்பித்தான். உபா. 27: 14.

"அதற்குப் பின்பு" பலிபீடங் கட்டி, நியாயப்பிரமாணம் எழுதப்பட்டபின்பு, சிலர் நினைக்கிறபடி கல்லில் எழுதப்பட்டவைகளையல்ல, நியாயப்பிரமாணத்திலே சொல்லிய ஆசீர்வாதமுஞ் சாபமுமான வார்த்தைகள் வாசிக்கப்பட்டன.

35 சிலர் நினைக்கிறபடி ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் மாத்திரமல்ல, உபா. 31: 10—12-ல் வாசிக்கிறபடி எல்லா இஸ்ரவேலருக்கு முன்பாக நியாயப்பிரமாணமுழுவதும் வாசிக்கப்பட்டது.

"அந்நியர்கள்" யூதமார்க்கத்தமைந்த புரோசெலுத்துகள்.

## கேள்விகள்.

1. தேவன் தமது சித்தத்தை மனிதருக்கு வெளிப்படுத்தின விதங்களெப்படி? ஒவ்வொன்றுக்கும திருஷ்டாந்தம் சொல்லவும்.

2. ஆயியைப் பிடித்த உபாயம்போலவே வேறெந்த சமயத்திலும் இந்த உபாயம் நடந்தது? இது குற்றமில்லையென்று காண்பியும்.

3. யோசுவா தனிமையாய் இரவில் பள்ளத்தாக்குக்கு போகவேண்டியதென்ன? இந்த யுத்தத்துக்கு எல்லாரும் போக கற்பிக்கப்பட்டதேன்?



4. ஜெயமுண்டாகுமட்டும் யோசுவா செய்ததென்ன? அது எதற்கு அடையாளம்? இதினால் நாம் படிக்கிற பாடம்.

5. ஆயி இராசா தன் சேனையெல்லாம் கூட்டிப்போய் ஒருமிக்க அழிந்ததுபோல அழிந்தவனா?

6. "பாவிகளுடைய ஆஸ்தி நீதிமான்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது." இதற்கு உதாரணம்.—எப்படி கொள்ளைப்பொருள்கள் பங்கிடப்படும்?

7. கானானியரிலும் அவர்களுடைய இராசாக்கள் கொடுமையும் நிந்தையுமான மரணம் அடைந்தார்களென்பதற்கு குறிப்புகளுண்டா? ஏன்? அவ்வித தண்டனையும் கிறிஸ்துநாதர் அடைந்தாரா?

8. கெர்சீம், ஏபால் மலைகளைப்பற்றிய விசேஷமென்ன? அங்கே நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்ட நோக்கமென்ன! இதினால் நாம் படிக்கவேண்டிய மாதிரியென்ன?

9. சாபம் கூறவேண்டிய மலையில் பலிபீடங் கட்டவேண்டியதென்ன? இது எதற்கு அடையாளமாயிருக்கலாம்?

10. இதில் இஸ்ரவேலர் சற்று நல்லவர்களென்பதற்கு குறிப்புகளுண்டா?

---

## IX. அதிகாரம்.

3. கிபியோன் ஏவியருக்கு இராஜதானி. தானி. 10: 2. 11: 19.

6. "இஸ்ரவேல மனுஷர்" இவர்கள் 15, 18, 19, 21-வாக்கியங்களினால் தோன்றுகிறபடி சாதாரணமான இஸ்ரவேலரல்ல, கனமும் அதிகாரமுமுடைய பிரபுக்களாம். இவர்கள் யோசுவாவுக்கு ஆலோசனைக்காரரும், சமாதான் ஏற்பாடுமுதலியன செய்வதற்குத் தகுந்தவர்களுமாம். கிபியோனர் ஏபால் மலையில் வாசிக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் கேட்டுப் பயந்தும், எரிகோ, ஆயிமுதலிய பட்டணங்களில் நடந்த சங்காரத்தை அறிந்தும், இஸ்ரவேலர் இத்தேசத்துக் குடிகளையெல்லாம் அழித்துப்போட்டு, அவர்களே தனித்த ஜாதியாயிருந்து அரசாளப்போகிறார்களென்பதை விசாரித்தும் தந்திரமாய் உடன்படிக்கைசெய்ய வந்தார்கள்.

7. கிபியோனர் ஏவியரைச் சேர்ந்தவர்கள். யோசு. 11: 19. நீங்கள் சமாதான உடன்படிக்கைசெய்யக் கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிற ஜாதியாரைச் சேர்ந்தவர்களாயிருக்கலாமென்று பிரபுக்கள் அவர்களிடத்தில் சொன்னார்கள். யாத். 23: 32, 33. உபா. 7: 2. 20: 15'16.

9. தேவனுடைய பெரிதான நாமத்தையும், அதிசயக் கிரியைகளையும் கேள்விப்பட்டு, யூதமார்க்கத்தைச் சேர்ந்துகொள்ளவேண்டுமென்ற மனதோடே பேசினார்கள். அவர்கள் சமீபத்திலுள்ளவர்களென்று தெரியவராதபடிக்கு யோர்தான் நதி பிரிக்கப்பட்டது எரிகோ, ஆயி பிடிபட்ட வரலாறு தெரிந்திருந்தும் அவற்றைச் சொல்லாமல், வெகுகாலத்துக்கு முன்னும் தூரமான இடங்களிலும் நடந்த விசேஷங்களைத் தந்திரமாய்ச் சொன்னார்கள்.

14. அவர்கள் கொண்டுவந்த போசனபதார்த்தங்களின் பேரிலுள்ள ஆசையினால் பிரியப்பட்டு வாங்கவில்லை. ஏனென்றால் அவைகள் கெட்டுப்போயிருந்தன. சமாதான ஏற்பாட்டுக்குரிய அத்தாட்சியாக வாங்கவுமில்லை, அது இப்போது செய்யப்படவில்லை. அவர்கள் சொன்னது சத்தியமோ அல்லவோ என்பதைப் பரீட்சிக்க வாங்கினார்கள். பெரிதும் சமுசயிக்கப்படத்தக்கதுமாயிருக்கப்பட்ட சங்கதிகளைக் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொள்ளவதுபோல இப்போ கேளாமல் விட்டுவிட்டது அவர்களுடைய தப்பிதமே. எண். 27: 21. நியாயா. 1: 1. 1 சாமு. 22: 10. 2 சாமு. 2: 1.

15. “அவர்களோடே சமாதானம் பண்ணினார்கள்.” இது யாத். 21: 32. 34: 12-ல் சொல்லியிருக்கிறபடி பிரமாணத்துக்கு விரோதமாயிற்றே என்றால் அந்தப் பிரமாணத்தின் கருத்து, இஸ்ரவேல் ஜனங்கள் கானானியரோடுகூடி வாழ்வதினால் அவர்களுடைய விக்கிரகாராதனையையும், மற்றும் பாவங்களுக்கும் உடந்தையாவார்களென்றறிந்து அந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது. அவர்கள் விக்கிரகாராதனையையும், மற்றும் பாவங்களையும் வெறுத்துச் சத்தியமார்க்கத்தை ஏற்றுக்கொள்ள மனமானால் அவர்கள் ஜீவன் காக்கப்படுவது பிரமாணத்துக்கு விரோதமல்ல. சங்காரத்துக்கு நியமிக்கப்பட்ட ஜனங்களை அழிக்காமல் இஸ்ரவேலர் விட்டுவிடுவார்களென்பதைத் தேவன் முன்னறிந்து பொதுச் சட்டமாய்க் கொடுத்தார். ஆனால் மெய்யாய்க் குணப்படுவோர்க்கு இப்பிரமாணஞ் செல்லாதென்பதைப் பின்வரும் நியாயங்களால் அறியலாம். இராகாப்புடைய திஷ்டாந்தரத்தாலும், தேவனுடைய பயங்கர தண்டனைகள் கூறப்படுகிற நோக்கத்தாலும், எரேமி. 18: 7, 8. யோனா 3, 4-அதி. தேவன் தாம் கூறின தீங்குகளைச் செய்யாதபடி நிறுத்துகிற அவருடைய தயவுள்ள செயலாலும் தெரியவருகிறது. ஆகையால் இந்த உடன்படிக்கை செய்யப்படவேண்டியது நியாயமே. எப்படியெனில் (1) யோசுவாவும் பிரபுக்களும் காரியங்களை யோசித்து அதின்பேரில் தான் அவர்கள் ஜீவனைக் காப்பாற்றினார்கள். 19: 20, 22, 23-வா. (2) வெகுகாலத்துக்குப்பின்பு இந்த ஆணையை மீறினவனைத் தேவன் தண்டித்தார். 2 சாமு. 21: 1. (3) இஸ்ரவேலர் கானானியரைச் சங்காரஞ்செய்யும்பொருட்டு, மற்றப் பட்ட



ணத்தாரின் இருதயங்களைத் தேவன் கடினப்படுத்தினாரென்று சொல்லியிருக்கிறது. யோசு. 11: 19, 20. இந்த அழிவு இஸ்ரவேல் ஜனங்களோடு சமாதானஞ்செய்துகொள்ளாதிருந்த அசட்டையினாலே வந்தது. அவர்கள் குணப்படாதிருந்தபடியால் தங்கள் இருதயக் கடினத்தினால் அழிந்தார்கள்.

18. இஸ்ரவேல் சபையார், கிபேயோனர் தங்கள் நடுவே குடியிருக்கிறவர்களென்று அறிந்தபோது, அவர்களோடு தங்களுடைய பிரபுக்கள் செய்த செய்கை தப்பிதமுள்ளதென்று அறிந்தபடியாலும், அவர்கள் செய்த ஆணையினிமித்தம் அவர்களைக் கொல்லவும் கூடாது, தேவனுடைய கட்டளைப்படி அவர்களை அழிக்கவும்வேணுமேயென்று கலக்கமுள்ளவர்களாயிருந்தபடியாலும், அந்தப் பட்டினங்களின் சுதந்தரங்களும் கொள்ளைப்பொருள்களும் போய்விட்டதே என்ற ஏக்கத்தாலும், பிரபுக்கள்மேல் முறுமுறுத்தார்கள்.

19. பிரபுக்கள் தாங்கள் செய்தது நியாயமும் புத்தியுள்ளதென்றும் சொல்லாமல் தாங்கள் கர்த்தர்பேரில் செய்த ஆணையை மாத்திரம் முகாந்தரமாகச் சொல்லுகிறார்கள். தொடக்கூடாது என்கும்போது சேதஞ்செய்யக்கூடாதென்பது கருத்து. ஆதி. 26: 11. சங். 105: 15, 144: 5. சங்காரம்பண்ணவுங் கூடாது. வா. 18. பக்திமான்கள் ஆணையிடுகையில் நஷ்டமிருந்தும் அதை நிறைவேற்றுவார்கள். சங். 15: 4. இந்த ஆணையை தேவனும் அங்கிகரித்து கிபேயோனரை அழித்த சவுல் வீட்டாரைத் தண்டித்தார். 2 சாமு. 21: 23. தகாத ஆணைகளோ செல்லக்கூடாது. மத். 14: 8, 11. அப். 23: 12, 22.

21. கிபேயோனர் எல்லா சபைகளுக்கும் பிரயோசனமாக, உபா. 29: 11-ல் கண்ட வேலைக்காரருக்குப் பதிலாக பொதுவான வேலைக்காரராயிருக்கும்படிக்கும், இஸ்ரவேலர் தேவனுடைய ஆலயத்துக்குச் செய்யவேண்டிய அற்பவேலைகளை வா. 23. அவர்கள் செய்யும்படிக்கும், பாளையத்திலும் பிரபுகளுக்கும் செய்யவேண்டிய அடிமை வேலைகளைச் செய்யும்படிக்கும் நியமிக்கப்பட்டார்கள். இதினால் கிபேயோனருடைய பட்டினங்களும், சொத்துக்களும் இஸ்ரவேலர் வசமாயின. இதினால் சபையாரின் முறுமுறுப்பு நின்றுபோயிற்று.

23. “நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்.” யோசுவா கிபேயோனரை அழைத்து நீங்கள் தேவனுடைய சாபத்துக்குத் தப்பத்தக்கவர்கள் அல்ல. நீங்கள் தேவனால் அழிவுக்கு நியமிக்கப்பட்ட கானான் சாதியாரானதால், ஒருவகையாய் நீங்கள் சங்காரத்துக்குத் தப்பினாலும் “கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்.” ஆதி. 9: 25 என்ற சாபத்துக்குரியவர்களாயிருக்கிறீர்கள் என்றார். அவர்கள் எளிமையும், இழிவும், நிற்பந்தமுமான அடிமைகளாய் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் மூர்த்தி ஆசரிப்புக்

கூடாரத்திலும், பின்பு தேவாலயத்திலும் விறகுவெட்டுகிறவர்களும் தண்ணீர் எடுக்கிறவர்களுமானதால் இவர்கள் பிற்காலத்தில் நிதினிமர் என்னப்பட்டார்கள். 1 நாளா. 9: 2. எஸ்று. 2: 43. இஸ்ரவேலர் தங்கள் தங்கள் காணியாட்சிகளுக்குப் போனபின்பு கிபேயோனர் சபைகளுக்கும் பிரபுக்களுக்குஞ் செய்த அடிமை வேலைகள் நின்றுபோயின. இவர்கள் யூதசபையில் சேர்ந்தது, இனி புறச்சாதியார் திருச்சபையில் சேருவதற்கு முன்னடையாளமாயிருந்தது.

## கேள்விகள்.

1. காறுன் சாதியான 7-வகுப்பாரைப்பற்றிய வரலாறு எழுதும்?

2. இஸ்ரவேலரோடே உடன்படிக்கை செய்யவந்த பட்டினத்தார் யார்? அப்பட்டணங்களில் நடந்த விசேஷங்களென்ன?

3. இஸ்ரவேலர் கிபேயோனரோடே உடன்படிக்கைசெய்தது சரியா? அது யாத். 23: 32, 34, 12-லுள்ள பிரமாணத்துக்கு விரோதமல்லவென்று காண்பியும?

4. கிபேயோனர் செய்த தந்திரமென்ன? அந்தத் தந்திரத்துக்காக எப்படித் தண்டிக்கப்பட்டார்கள்? இந்தத் தண்டனையினால் எந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று?

5. அக்காலத்தில் கர்த்தரை கேட்கிறவிதமெப்படி? யார் யார் என்னென்ன விஷயத்துக்காக கர்த்தரைக் கேட்டார்கள்.

6. "நீதிமான் ஆணையிட்டும் தவறுதிருக்கிறான்" என்பதற்கு திருஷ்டாந்தமுண்டா? பிரபுகள் செய்த ஆணையை மீறினவர்கள் எப்படி தண்டிக்கப்பட்டார்கள்? தகாத. ஆணைகள் பாவமானதென்று காட்டுங்கள்?

7. சுவிசேஷ நன்மைகள் சிலருக்கு சீவவாசனையாயும், சிலருக்கு மரணவாசனையாயுமிருப்பதுபோல, இஸ்ரவேலருடைய ஜெயமும் அப்படியிருந்ததற்கு குறிப்புண்டா?

8. புறச்சாதியார் திருச்சபையில் சேருவார்களென்பதற்கு இவ்வாகமத்தில் முன்னடையாளமுண்டா?

9. கிபேயோனருக்குப பூமிக்குரிய சுதந்தரமுண்டா? அவர்களுடைய பிழைப்பு எப்படியிருக்கலாம்? பிற்காலத்தில் எப்படி அழைக்கப்பட்டார்கள்? அதின் அருத்தமென்ன?

10. தூரத்திலுள்ள தாறுபதிகளைக் கண்டு அவர்களோடு உடன்படிக்கைசெய்வது மேன்மையென்றெண்ணினவர்களார்? உடன்படிக்கைக்கு உறுதியாகச் செய்கிற வழக்கமென்ன?

---



# The World's Birth.

# உலகப்பிறப்பு.

## I. அதிகாரம்.

### "ஆதியிலே."

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருஷ்டித்தார்." ஆதி. 1: 1. ஆதியாகமம், மற்றெல்லாப் புத்தகங்களை விட மிகப் பூர்வீகமும், மாட்சிமையும், இன்றியமையாததுமான புத்தகம். அது மற்றெல்லா ஆகமங்களுக்கும் ஆதாரமும் உரையுமாயிருக்கிறது. அப்படியானால் இந்தப் புத்தகத்தை ஆராயத்துவக்குமுன், நாம் ஏற்ற வண்ணம் அதிலடங்கியவைகளைக் கற்றறிய, தேவன் கிருபை தரும்படி அவரை நோக்கி விண்ணப்பஞ்செய்யவேண்டும்.

இந்தப் புத்தகம், பூமியின் உற்பத்தி, அல்லது பூர்வோத்திரத்தைக் காட்டுவதால், "ஆதியாகமம்" என்று சொல்லபடுகிறது. ஒளி, ஆகாயவிரிவு, வானஜோதிகள், கண்டங்கள், சமுத்திரங்கள், மலைகள், பள்ளத்தாக்குகள், விருட்சங்கள், பூண்டுகள், பறவைகள், மீன்கள், மிருகங்கள், மனிதர் உண்டான விதமும், பின்னும் ஐயோ! பாவம் வந்ததும், அதால் மரணம் உலகத்தில் பிரவேசித்ததும், இயேசு இரக்ஷகருக்குள்ளான கிருபையைப்பற்றிய வாக்குத்தத்தம், ஜலப்பிரளயம், ஜலப்பிரளயத்துக்குப் பின்பு பூமியின் விருத்தாந்தம், அதல் குடியேறின ஜாதிகளின் வரலாறு, இஸ்ரவேல் வம்சத்தாரின் ஆரம்பம் ஆகிய வர்த்தமானங்களின் துவக்கமும், இந்தப் புத்தகத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தப்புத்தகத்தை எழுதினவன் மோசே: அவன் இஸ்ரவேலரை வனாந்தர வழியாய் அற்புதமாய் நடத்திக்கொண்டுபோனபோது, தேவன் அவனுக்கு இந்தச் சம்பவங்களையெல்லாம் போதித்து, அதை எழுதும்படி செய்தார். அந்தந்தக் காலங்களிலுள்ள ஜாதியார், பாஷைக்காரர் அதைக் கற்றுக்கொள்ளும்படி அது எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. உபாகமம் 6: 6, 7. "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்திலிருக்கக் கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்து ப்பேசு." 4: 9. "ஓரேபிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும் போது, கர்த்தர் என்னை நோக்கி, ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச் செய்து என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன். அவர்கள் பூமியில் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்குப் பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கக் கடவர்கள்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

ஆதியாகமம், மற்றெல்லாப் புத்தகங்களைவிட மிகப் பூர்வீகமுள்ளதென்று சொல்லப்பட்டதே. அது-கி-மு-1491 ஆண்டில் எழுதப்பட்டது, உரோமை நகரி கட்டப்படுவதற்கு 738-வருஷங்களுக்கு முன்னும்,

நினிவே அழிவதற்கு 869-ஆண்டுகளுக்கு முன்னும் அதாவது, உலக இதிகாசர்கள் பொதுப்பட தங்கள் சரித்திரங்களைத் துவக்குகிறதற்கு 869-வருஷங்களுக்குமுன், எழுதப்பட்டது. இந்தப்புத்தகம் இல்லாவிட்டால் மனிதஜாதிகளுடைய சரித்திரத்தில் பாதி நமக்குத் தெரியாது. ஆதாமுதல் இயேசுகிறிஸ்துவரைக்கும் 4004-வருஷம், கிறிஸ்துமுதல் நாளதுவரையும் 1879-வருஷம் இரண்டு தொகையுஞ் சேர்க்கில் 5883-வருஷமாகிறது. ஆதியாகமத்தில் 2368-வருடச் சரித்திரம் அடங்கியிருக்கிறது.

ஆதாமுதல் ஜலப்பிரளயம்வரை 1656-வருஷங்களும், ஜலப்பிரளயமுதல் யோசேப்பின் மரணம்வரையும் 712-வருஷமுமாம். ஆதியாகமத்தில் மாத்திரம் நாளதுவரையுமுள்ளதில் இரண்டாயில் ஒரு பங்கு சரித்திரம் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகமில்லாவிடில் வானமும் பூமியும் சிருட்டிக்கப்பட்டதையும், ஆறுநாள் சிருட்டிப்பையும், முதல் மனிதன் மனுஷியையும் அவர்கள் பாவமில்லாத நிலைமையையும் அவர்கள் ஏதேனில் வாசம் பண்ணினதையும் தேவன் அவர்களோடே பண்ணின முதல் உடன்படிக்கையையும், அவர்கள் பாவத்தில் விழுந்ததையும் இரட்சகர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதையும், இரத்தப்பலி ஏற்பாட்டையும், நீதிமானாகிய ஆபேலையும், நீதியின் பிரசங்கியாகிய நோவாவையும் பற்றியும், ஜலப்பிரளயம் உண்டானதையும், அதின்பின்பு ஜனங்கள் பூமியில் குடியேறினதையும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு அழைக்கப்பட்டதையும், இரக்ஷகரைப்பற்றி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும், இஸ்ரவேலர் எகிப்துக்குப்போனதையும், யோசேப்பின் சரித்திரத்தையும் அறிய ஏதுவில்லை.

நான் யார்? எங்கேயிருந்து வந்தேன்? எங்கேபோகிறேன்? ஏன் இங்கேயிருக்கிறேன்? இங்கே என்னை வைத்தது யார்? நான் செய்ய வேண்டியதென்ன? நான் எங்கே போகிறவனாயிருக்கிறேன்? நான் இன்று இரவில் இறந்தால் எங்கேபோவேன்? இந்த உலகில் இவ்வளவு நிர்ப்பாக்கியங்கள் இருப்பானேன்? என்னிருதயத்தில் பாவம் இவ்வளவாய்க் குடிகொண்டிருப்பானேன்? நான் ஏன் மரணத்துக்குள்ளாயிருக்கவேண்டும்? மரணம் வந்ததோடே பாடுகளும் வேதனைகளும், பெருமூச்சுகளும் உண்டாவதென்ன என்ற இந்தக் கேள்விகளுக்கு உத்தரம் பரிசுத்த வேதத்தில் மாத்திரம் தெளிவாய்க் காணலாம். தேவன் அவைகளைப்பற்றி தெளிவாய் நமக்குக் கட்டளையிட்டதற்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருப்போமாக. எவ்வளவு கனபயத்தோடே அந்த விலைபெற்ற செல்வத்தை மதிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அந்தப் புத்தகத்தை எவ்வளவு பயபக்தியோடும் ஜெபசிந்தையோடும் வாசிக்கவேண்டும். பரமகாரியங்களை நீங்கள் வாசிக்கையில் உங்கள் மனம் சிதறாதபடிக்கு, கெட்ட தோழருடன் பழகாமல், அவர்கள சகவாசத்தை நீங்கள் முற்றும் விட்டுவிடவேண்டும். தேவன் உங்களுடன் பேசும்படி, உங்கள் இருதயத்தை அடிக்கடி அவரண்டைக்கு ஏறெடுக்கவேண்டும்.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார்." இங்கே ஐந்து வார்த்தைகள் இருக்கின்றன. ஆதி, தேவன், சிருட்டித்தார், வானம், பூமி, இந்த வார்த்தைகளைச் சற்று விவரமாய்ப் பார்ப்போம். "ஆதி" இந்த வார்த்தையிலே ஒரு விசேஷித்த சத்தியம் அடங்கியிருக்கிறது. இதைப் பார்க்கையில் "உலகம்" நித்தியகாலமாயிருக்கவில்லை. பூமியாவது வானமாவது இராத காலமுண்டு என்று அறியலாம். அப்போது மனிதனாவது, ஸ்திரீயாவது, நதாராவது, ஆகாயவிரிவாவது, பூமியாவது, சமுத்திரமாவது ஒன்றுமில்லை. தேவன் மாத்திரமிருந்தார்.

(இன்னும் வரும்.)



---

## Exposition of the Church Catechism.

---

## ஞானோபதேசவினாவிடை
### வியாக்கியானம்.

---

### சா-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

ச-ம் பிரிவு.

---

*கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலைப்பற்றி.*

---

(தொடர்ச்சி.)

---

சில இடங்களில், கிறிஸ்து தமது சொந்த வல்லமையினால் எழுந்தருளினதாகவும் (யோவா. 2: 19-22. 10: 15-18.) சில இடங்களில், அவர் தேவனுடைய வல்லமையினால் எழுந்தருளினதாகவும் (அப். 2: 32. கலா. 1: 1. எபே. 1: 19. பிலி. 2: 9.) சொல்லப்பட்டிருக்கிறது.

2. கிறிஸ்துநாதர் செலுத்திய பலி போதுமானதென்று நமக்கு நிச்சயப்படுத்தவும்.

நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். ரோ. 4: 25. அப். 2: 31—33.

3. நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு உறுதியாகவும்.

கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ரோ. 8: 11.

கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். 1 கொ. 15: 20. 1 தெச. 4: 14.

4. நாம் பாவத்துக்கு மரிக்கும்படி நம்மை நடத்தவும்.

அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ரோ. 6: 11. 2 கொ. 5: 15. கொலோ. 3: 1.

5. சுவிசேஷத்தின் உண்மைக்கு விசேஷித்த அத்தாட்சியாகவும்.

கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. 1 கொரி. 15: 14, 17.

6. நம்முடைய உயிர்த்தெழுதலுக்கு மாதிரியாகவும்.

மரணம் கிறிஸ்துநாதரின் தன்மையிலாவது இலட்சணத்திலாவது யாதொரு மாறுதல் உண்டாக்கவில்லை. அவர் மரணமடையுமுன் எப்படியிருந்தாரோ அப்படியே உயிரோடெழுந்தபிற்பாடும் இருந்தார். தம்முடைய சிநேகிதரில் வைத்த பட்சமும், பகைவரில் வைத்த உருக்கமும் ஒன்றுபோலவே இருந்தது. அப்படியே மரணம் நம்மிலும் ஒரு மாறுதலும் உண்டாக்கமாட்டாது.

அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். ரோ. 6; 5. பிரசங்கி 11: 3. வெளி. 22: 11.

அப்போஸ்தலர் கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலை தங்கள் பிரசங்கத்துக்கு அஸ்திபாரமாக வைத்துக்கொண்டார்கள்.

அப். 1: 21, 22. 2: 31, 32. 3: 15. 4: 2, 33. 10: 40. 13: 3), 17: 18, 32. 24: 15, 21.

---

வினா. நம்முடைய இரட்சகர் உயிர்த்தெழுந்த பிற்பாடு இவ்வுலகத்தைவிட்டு எங்கே போனார்?

விடை. அவர் பரமண்டலத்துக்கேறினார்.

மாற். 16: 19. லூக். 24: 51. அப். 1: 9. எபே. 4: 8—10.

உலகதோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித் தீருங் காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப். 3: 21.

இயேசு தாம் பரலோகத்துக்குப்போய், பரிசுத்தாவியை அனுப்புவேன் என்று வாக்குத்தத்தம்செய்திருந்தார். யோவா. 16: 7.

அப்படியே பெந்தேகோஸ்தேநாளில் பரிசுத்தாவியை அனுப்பினார். அப். 2: 3, 4.

நம்முடைய கர்த்தரின் பரமேறுதல் சங்கீதக்காரனாலே முன்னறிவிக்கப்பட்டது. சங். 24: 9, 10. 68: 18.

வினா. பரமண்டலத்தில் அவர் இருக்கும் இடம் எது?

விடை. அவர் சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்.



தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். பிலி. 2: 9.

தேவன் ஆவியாயிருக்கிறார், அவருக்கு உறுப்புகளில்லை. ஆனால் நம்முடைய சிற்றறிவுக்கு விளங்கும்படியாக, தமக்கு உறுப்புகள் இருக்கிறதாகக் காண்பித்திருக்கிறார்.

வினா. "தேவனுடைய வலதுகரம்" என்பது என்ன கருத்துக்கொள்ளும்?

விடை. 1. வல்லமையுள்ள இடம்.

மத். 26: 64. மாற். 14: 62. லூக். 22: 69.

2. கனமும், பாக்கியமுமுள்ள இடம்.

சங். 110: 1. யோவா. 17: 4, 5. எபே. 1: 20, 21. 1 பேது. 3: 22.

கிறிஸ்துவானவர் தம்முடைய மேலான ஸ்தானத்தில் நிலையாயிருக்கிறார் என்பதைக் குறிக்கும்படி, சில சமயங்களில் அவர் உட்கார்ந்திருக்கிறவராகச் சொல்லப்பட்டிருக்கிறார்.

பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். மாற். 16: 19.

அப். 2: 32—34. எபி. 1: 3. 8: 1.

அவர் நமக்காக எப்பொழுதும் மத்தியஸ்தம் செய்கிறார் என்பதைக் காண்பிக்கும்படி, சில சமயங்களில் அவர் நிற்கிறவராகச் சொல்லப்பட்டிருக்கிறார்.

ஸ்தேவான் இயேசுவானவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதாகக் கண்டான். அப். 7: 55.

அவர் தங்கியிருக்கிற இடம் பரமண்டலம். அது நித்திய ஆனந்தமுள்ள இடம்.

வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். எபி. 4: 14.

வினா. பரமண்டலத்தில் அவருடைய உத்தியோகமென்ன?

விடை. அவர் பிதாவுக்குமுன்பாக நம்முடைய மத்தியஸ்தராகவும், நமக்காக வேண்டுதல்செய்கிறவராகவும், பரிந்துபேசுகிறவராகவும் விளங்குகிறார். அவர் தம்முடைய புண்ணியங்களை எடுத்துக்காட்டி, தம்முடைய சபையின் நன்மைகளெல்லாவற்றிற்காகவும் கவலைப்படுகிறவராயிருக்கிறார்.

1. நமக்காகப் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்.

என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவா. 14: 6.

நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே. ரோ. 8: 34. எபி. 7: 25. 9: 24.

ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு

கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். 1 யோ. 2: 1.

2. நமக்குத் தேவையானவைகளைக் கொடுக்கிறவராயிருக்கிறார்.

நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன். யோவா. 12: 32.

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை எல்லாம் கிறிஸ்து ஏசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். பிலி. 4: 19. எபி. 4: 16.

3. நமக்காக ஒரு இடத்தை ஆயத்தப்படுத்துகிறவராயிருக்கிறார்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன். யோவா. 14: 3.

4. நம்மைப் பொல்லாங்கினின்று திருப்புகிறவராயிருக்கிறார். அப். 3: 26.

5. மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக இருக்கிறார்.

இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார். அப். 5: 31.

அவரை நாம் காணக்கூடாதபடி அவர் இவ்விதமாய்ப் போய்விட்டாலும், அவருடைய நாமத்தினாலே இரண்டுபேராவது மூன்று பேராவது எங்கே கூடிவருகிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் அவர் இருக்கிறார். அவர் தமது ஜனங்களோடு எப்போதும் உலகமுடிவுபரியந்தம் கூட இருப்பேன் என்று விளம்பியிருக்கிறார்.

நம்முடைய ஆண்டவர் தமது உயிர்த்தெழுதலினாலும், பரமேறுதலினாலும் எவ்வளவு சிறந்த ஈவுகளை மனிதருக்காக வாங்கி இருக்கிறார். அந்த ஈவுகளை எவ்வளவு தாராளமாய்ப் பாவிகளில் பிரதானமானவர்களுக்கும் கூட ஈகிறார். அவர் உயர்த்தப்பட்ட இந்தப் புண்ணியத்தினாலே பாவத்தை உணர்த்தவும், மனந்திரும்புதலுக்கு நடத்தவும், பாவமன்னிப்பை நிச்சயப்படுத்தவும், கிருபையில் வளரும்படி நம்மை பலப்படுத்தவும், விழாதபடி நம்மைக் காக்கவும், நித்திய மகிமைக்காக நம்மை ஆயத்தப்படுத்தவும் தம்முடைய பரிசுத்தாவியை அனுப்புகிறார். அவர்மூலமாய் நாம் நம்முடைய ஜெபங்களுக்கு கிருபையான உத்தரவுகளைப் பெற்று, நம்முடைய ஆத்துமாக்களுக்கும் சரீரங்களுக்கும் தேவையான எல்லா நன்மைகளையும்



அடைகிறோம். விலைமதிக்கப்படாத இரத்தத்தினால் சம்பாதிக்கப்பட்டதும் அளவிடப்படக்கூடாததுமான இந்த ஈவுகளுக்காக நம்முடைய மீட்பரிடத்தில் நம்முடைய ஆத்துமாக்கள் ஏற்ற நன்றியறிதல் உள்ளவைகளாயிருக்குமென்றால், நாம் நிச்சயமாகவே பாவத்துக்கு மரித்து, மாம்சத்தை அதன் பலவித இச்சைகளோடுங்கூட சிலுவையில் அறைந்து, ஆவிக்குரிய மரணத்தினின்று உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் நிலைத்திருப்போம்.

---

## இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

மாதாவினின்றெமை வளர்க்கும் மதியூட்டித்
தாதாவினின்று சமரக்ஷணை சமைக்கும்
வேதாவு மாகியுயர் வீட்டுலகம் உய்க்கும்
நீதாகிபன் கிருபை நெஞ்சுற நினைத்தி. 360

நஞ்சிவியத்தின் இடை எத்தனைகொல் நாசம்
வெஞ்சிய மாமலகை எத்தனை விதத்தில்
துஞ்சிடு பாடுகள் தொகுத்தன துகைத்திட்ட்
அஞ்சிறொறு வுதவிற் றுண்டை யருளன்றே. 361

தன்னிருதய த்தருள் தரித்தியலு மாறும்
பின்னர் அது நன்று நிலைபெற்று வளர்சீரும்
என்னபரி சென்றெருவன் எண்ணி யினிதாயில்
இன்னபரி சென்றளவிடற் கெளிய தன்றால். 362

இத்தகைய காட்சியை உன்னெண்ணிடை யிருத்திப்
பத்தபரி பாலன பராஞ்சுடரை நாடி
முத்தியுலகத்து நெறி முன்னிடுக முற்றும்
சித்த சலனத்தை யொழிகென் றினிது செப்பும். 363

நன்றுடன் நடத்தியினும் நல்லுணர்வு நல்கும்
துன்றுசில காட்சியுள தொக்கறிதி யென்னாச்
சென்றெழில் குலாவுமொரு திவ்விய விநோத
மன்று செறி மாளிகையின் மாடணுகி நின்றான். 364

பானிலவினூற் றிசழ்பருப்பத மிதென்னத்
தூநிலவு வெண்சுதை குயிற்றி ஒளிதன்னும்

வானிலவு மேனிலைய மாடமது கண்டான்
கோனிலவு நாடுகுடி கொள்ளுமன முள்ளான். 365

கண்டு மனமும் கணும் வியப்பொடு களிப்புக்
கொண்டது தனித்தனி குறித்துவருபோழ்தில்
விண்டொட நிவந்த அதன் மேலரமியத்தில்
வெண்டுகில் புனைந்துலவு வித்தகரை நோக்கா. 366

ஆசறு குணத்த னொருசிந்தையர் அபேதர்
மாசறு மெய்யன்புடையர் என்று மகிழ்பூத்துத்
தேசுற மலர்ந்த முகமே கனிதெரிக்கும்
ஈசனுல கெய்திய இருஞ்சுரவர் போலாம். 367

எட்டரிய மேனிலை யிசெய்த வருமாயில்
கிட்டரிய மாபுனித வெண்டுகில் கிடைக்கும்
சிட்டரிவ ரோடளவளாவு நிலை சேரும்
விட்டொழியு மிச்சுமை விடாயெவையு மேவா. 368

கூடுமெனில் நன்றென வுளத்திடை குணித்து
மாடணுகி நின்றமறை வாணன் முகநோக்கிப்
பீடுபெறு மேனிலை பிறங்கரமியத்தை
நாடியவரோடுரிமை நான்பெறுவ தாங்சொல். 369

ஐய எதுசித்தம் அறியே னென விளவக்
கையுற அணைத்து வருகென்று கடிகாவல்
மையற விளங்கு மணிவாயிலின் மருங்குற்
றையமறவே நிகழ்வ கண்டறிதி யென்றான். 370

வேறு.

கரையில் பேரின்ப மாளிகை அகம்புகக் கருதும்
புரையிலா மனத்தவர் பெயர் புத்தகச் சுருளில்
வரையு மாறொரு துரைமகன் வாயிலின் மருங்கே
நிரையி லிட்ட பொன்னாசனத் திருந்தனன் நிலவி. 371

மாயவேதிகள் ஆயிரம் ஆயிரம் வழங்கி
ஆயவில்லகம் புகாவகை இயன்றமட் டடர்க்கத்
தீயரோர் சிலர் வெங்கதம் திருகினர் செறிந்து
பேயெனத் திரிந்துலவினர் வாளொடு பிறங்கி. 372

சுத்தசுப்பிர சுமங்கல சுகுண மாசுயம்பு
நித்த நிர்வய நின்மல நிராமய நிருபர்
உத்தரம் இலாதுட்புகப் பெருமையில் உலவிப்
பத்தரோர்சிலர் முன்றில் வாய்நின்றனர் பரிந்து. 373

உற்ற மெய்த்திருவசனமாம் பட்டய முருவிச்
செற்றமிக்க அச்செறுநரைச் செகுத்திடார் துயங்கிக்
கொற்ற வாழ்மனை முன்றினில் வயின்றொறுங் குழுமித்
தெற்றி நின்று பின்னிடைந்தனர் சிலருளந் திகைத்து. 374

கானவேடுவர் கையகன் றறவிடாய் கதுவி
தூநறும் புனல்தருவியோர் வாவியிற்றன்ன
வானகப் புவியாங்கெதிர் மறித்திட மலங்கு
மானினத்தை யொத்தலம் வந்தார் சிலர் சிலர் மயங்கி. 375

கோம்பி முற்படு தோகையிற் குறுகி யுள்ளுடைந்து
பாம்பின் வாய்ப்படு தேரையிற் பரிவுறீஇப் பதைத்துச்
சாம்பி யுட்புகுந் தருக்கிலராகி மெய்தளர்ந்து
தேம்பி நன்னிலை கலங்கினர் சிலர் செயலழிந்தே. 376

ஆயகாலை யெம்மாண்டகைக் கன்பருச்சனை செய்
தூயசிந்தையன் நெறி தவறாதுசெல் சூரன்
காயமாதி முப்பகையறக் கடிந்தவன் ககோள
நாயகற் கிதயாசனம் அளித்த வோர் நம்பன். 377

ஸ்ரீவரக்ஷையைச் சென்னியிற் றிருத்தி மெய்யென்னும்
ஓவில் கச்சினை அரையிலிட்டிறுக்கி ஒண்ணீதி
மேவுமோர் கவசத்தினை மெய்யுறப் புனைந்து
தீவினைத் தொடர் தேய்த்திடு கழலையுஞ் சேர்த்தி. 378

பயில்தரும் விசுவாசமாம் பரிசையைப் பற்றி
செயிரிலா திருகூரொடு திகழ் திருமந்த்ர
வயிர வாட்படை வலக்கையில் வாங்கி மன்னருளால்
தைரியத்தொடு வாயிலின் அருகுறச் சார்ந்தான். 379

போற்றித்திருந்தவற் கஞ்சலி வரன்முறை புரிந்து
குறித்தி யென்பெயர் ஐய புத்தகத்தெனக் கூறி
மறித்து நின்றவம் மள்ளரோ டெதிர்ந்தமர் மலைந்தான்
வெறித்த சிந்தையார் வீசினர் வெருட்சியாம் விசிகம். 380

தழுமி நாய்க்கணங் குரைப்பினும் கோளரிக் கென்றோ
பழுது நேரு மீதறிகிலார் பலபடப் பிதற்றிக்
கழுது நல்கிய கருவிகள் கடிந்தறுகண்ணோர்
முழுது மேலெறிந் தார்த்தனர் முறைமுறை முடுகி. 381

பொன்குலா நகராதிபன் அருளிய புனித
மின்குலாவிய படைக்கலம் வீணெனப்படுமோ
வன்குலாமரோ வெற்றி பெற்றுய்வர் இவ்வண்ணம்
என்கொலாமென அயிர்த்தனர் முன்றில்வாய் எவரும். 382

எய்த வீசிய எதிர்தன வேதிகள் எவையும்
கொய்து கேடகப் புறத்திறுல் தூக்கினன் எனினும்

கைதவத்தினாற் சிற்சில ஆக்கையிற் கரந்து
செய்த காயமென் றுணர்ந்தும் அங்கிடைந்திலன் தீரன். 383

காற்றுக் கோடுபுன் பூளையிற் கருவி கைபோக்கித்
தோற்றுக் கூளியும் பின்னிடும் இவர்வலி தொலைத்துக்
கூற்றுக்கே விருந்தாக்குவல் என்பது குறியா
வேற்றுக் காலமொன் றின்றென நெடுங்கைவாள் விதிர்த்தான். 384

மந்திரத் தனிவாளினை விதிர்த்தலும் மறவோர்
தந்திரம் படவெம்க்கினித் தரிப்பிலை யென்றுச்
சிந்தி யோடினர் இரவிமுன் இருளெனத் திகழ்ந்தத்
இந்தியங்களை அவித்தவன் எழின் முகவிந்து. 385

வண்டர் தோல்வியுந் தொண்டன்வாள் வலிமையும் மருங்கு
கண்டு நின்றவர் யாவருங் கைகுவித் திறைஞ்சி
அண்டர் நாயகன் அருட்செயல் இதுவென அவர் வாய்
விண்டு சிந்தினர் ஆனந்த வாரியாம் விழிநீர். 386

கருகு சிந்தையர் உடைந்து வெந்நிட்ட அக்கணமே
பெருகு பேரின்ப மனைக்குளும் பிறங்கரமியத்தும்
உருகு காதலின் ஒள்ளியோய் உள்ளுறவருக
வருக வென்றுநன் மங்கலவாழ்த்தொலி மலிந்த. 387

அலகை தோற்றன உட்பகை அவிந்தன ஆத்த
உலக பாசமும் ஒழிந்தன இனியொரு போதும்
கலகம் இன்றெனக் கைமலர் சென்னியிற் கவின
அலகில் ஆனந்தபரவசம் அடைந்தனன் அறிஞன். 388

சத்தியங் கடைப்பிடித்து நந்தம்பிரான் அருளால்
பத்தி மார்க்கத்து நிலைநின்ற பவித்திரன் பஞ்சப்
பித்தி யாவையும் புறம்நிறீஇப் பேரின்ப மல்கு
முத்தி வீட்டினுட் புகுந்தனன் ஜெயத்தொனி முழங்க. 389

இன்ப வீட்டினுட் புகுதலும் எம்பிரான் அடியர்
அன்பு மீக்கொளத் தழுவினர் ஆதரம் புரிந்தார்
நன்புலத்து வைத்தாசிகள் பற்பல நவின்றார்
துன்பம் இங்கிலை இலையொரு சோதனை யென்றார். 390

தலையில் ஆனந்த தைலமிட் டாட்டினர் தயங்கும்
உலைவிலாத பீதாம்பர முடுத்தனர் உவந்து
விலைவரம்பிலா வெண்ணிலை அங்கிமேலிட்டார்
தொலைவிலா நலந்துய்த்தினி திருந்தனன் தூயோன். 391

(இன்னும் வரும்.)



## சமாசாரத்திரட்டு.

**ஆஸ்திரியா.**—ஆஸ்திரியாவின் தென்பாகத்தில் மீளவும், பூமியதிர்ச்சி உண்டாயிற்று. சென்றமீ 9உ-யில் மிகவும் பயங்கரப்படத்தக்கவிதமாய், எட்டுவிசை பூமி யதிர்ந்தது. முதல் அதிர்ச்சி, நடுச்சாமத்தில் யாவரும் அயர்ந்த நித்திரைசெய்யும்போது உண்டானபடியால் புருஷர், ஸ்திரீகள், பிள்ளைகள் எல்லாரும் வெளியே வந்து நின்று கத்திக் கதறி ஓலமிட்டழுதார்கள். அதிர்ச்சி நின்றபின்பு ஜனங்கள் யாவரும் கண்ட கண்ட வெளிகளில் படுத்துக்கொண்டார்கள். 10உ காலையில் மறுபடியும் அதிர்ச்சி உண்டாயிற்று. பூமி அடியோடே பல தடவை குலுங்கினதுமன்றி, இடிமுழக்கம்போன்ற சத்தங்கள் பக்கத்திலுள்ள மலைகளிலுண்டானதுபோல தொனித்தது. இந்த அதிர்தல்களினால் உண்டான நஷ்டம் அதிகம். அநேக லட்சம் ரூபாய்க்கு வருமாம். உயிர்ச்சேதங்களுமுண்டு. பரேரியா, இன்ஸபிரோக்கு முதலிய விடங்களிலும் இவ்வதிர்ச்சிகள் உண்டாயிற்று.

**ஜர்மனி**—இங்குள்ள யூதரையிட்டு ஒரு பெருங்கலகம் சில நாட்களுக்கு முன் நடந்தது. யூதர்கள் மிகத் தனவான்களாயிருப்பதினால் மிகவும் செல்வாக்குள்ளவர்களாய் நாடு நகரங்களில்வாசம்பண்ணுகிறார்களென்றும், அவர்கள் மேல் போகாமலிருக்கும்படி துரைத்தனத்தார் ஏதேனும் ஒரு பிரமாணமேற்படுத்தவேண்டுமென்றும் ஒரு கட்சியேற்பட்டிருக்கிறது. எல்லாரும் சுயாதீனராயிருக்கவேண்டுமென்பது சக்கரவர்த்தி, இளவரசர், அவர் பத்தினியார் இவர்கள் அபிப்பிராயம். இதினால் யூதர்களுக்கும் மற்றப் பிரஜைகளுக்கும் இடையில் பெருங்கலகங்களும் பிரிவினைகளும் உண்டாயிருக்கிறது. முடிவு பிந்தித் தெரியும்.

**இந்தியா**—சென்னை ராஜதானியின் புதிய கவர்னராகிய மாட்சிமை தங்கிய ஆடாம் துரையவர்கள் பெம்பாய் நகரம் வந்திறங்கினார்கள். சென்ற மாசம் 20உவரை சென்னை சமஸ்தானம் சேர்ந்திருப்பார்கள்.

கைபர் கணவாயிலுள்ள மலைநாட்டார் துரைத்தன பட்சமாய்க் கணவாய்ப்புறத்தைக் காத்துக்கொள்ளவும், ஏதாவது சில்லறை நடக்கவிருக்கையில் அதைப்பற்றி முன்னாடி எச்சரிக்கவும் அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்களாம்.

**ஜாப்பான்**—ஜாப்பான் பாஷையில் திருப்பி பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிற புதியேற்பாட்டைப் பள்ளிக்கூடங்களில் வழங்கி வரவேண்டுமென்று யோக்கோபா நகர அதிகாரிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

ஜனுவரி௴ நாள் 31-மார்கழி௴ 19உ-முதல், தை௴ 20உ-வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | ௧௯ | கர்த்தர் ஞானத்தைத் தருகிறார். நீதிமொழி 2: 6. |
| ஞா | 2 | ௨௰ | உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். 3: 6. |
| தி | 3 | ௨௧ | தீயோருடைய வழியில் நடவாதே. 4: 14. |
| செ | 4 | ௨௨ | உன் ஊற்றுகள் வெளியில் பாய்வதாக. 5: 16. |
| பு | 5 | ௨௩ | வேதமே வெளிச்சம், போதக சிட்சையே ஜீவவழி. 6: 23. |
| வி | 6 | ௨௪ | உன் இருதய பலகைகளில் எழுதிக்கொள். 7: 3. |
| வெ | 7 | ௨௫ | ஞானம் கூப்பிடுகிறதில்லையோ. 8: 1. |
| ச | 8 | ௨௬ | புத்தியின் வழியிலே நடவுங்கள். 9: 6. |
| ஞா | 9 | ௨௭ | கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண். 10: 29. |
| தி | 10 | ௨௮ | உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும். 11: 5. |
| செ | 11 | ௨௯ | நீதியின் பாதையில் ஜீவனுண்டு. 12: 28. |
| பு | 12 | ௧ | துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது. 13: 15. |
| வி | 13 | ௨ | விவேகியோ தன் நடையின் மேல் கவனமாயிருக்கிறான். 14: 15. |
| வெ | 14 | ௩ | ஜீவவழியானது உன்னதத்தை நோக்கும் வழியாம். 15: 24. |
| ச | 15 | ௪ | கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவிர்த்தியாகும். 16: 6. |
| ஞா | 16 | ௫ | இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர். 17: 3. |
| தி | 17 | ௬ | கர்த்தரின் நாமம் பலத்திருக்கும். 18: 10. |
| செ | 18 | ௭ | ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். 19:17. |
| பு | 19 | ௮ | கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன்னை இரட்சிப்பார். 20: 22. |
| வி | 20 | ௯ | துன்மார்க்கருடைய பலி அருவருப்பானது. 21. 27. |
| வெ | 21 | ௰ | அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான். 22: 8. |
| ச | 22 | ௧௧ | நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. 23: 17. |
| ஞா | 23 | ௧௨ | துன்மார்க்கருக்கு நல் முடிவு இல்லை. 21: 20. |
| தி | 24 | ௧௩ | இராசாவின் முன்னின்று துஷ்டனை நீக்கிவிடு. 25: 5. |
| செ | 25 | ௧௪ | மூடன் தன் மூடத்தனத்துக்குத் திரும்புகிறான். 26: 11. |
| பு | 26 | ௧௫ | நாளைத்தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே. 27: 1. |
| வி | 27 | ௧௬ | எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான். 28: 14. |
| வெ | 28 | ௧௭ | மனத்தாழ்மையுள்ளவனே கனமடைவான். 29: 23. |
| ச | 29 | ௧௮ | பூமியின் எல்லைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார். 30: 4. |
| ஞா | 30 | ௧௯ | மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல. 31: 4. |
| தி | 31 | ௨௰ | மாயை, மாயை, எல்லாம் மாயை. பிரசங்கி. 1: 2. |

## விசேஷ நாட்கள்.

1. விருத்தசேதனத் திருநாள்.
2. கிறிஸ்து ஜநநதிருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.
6. பிரசன்னத் திருநாள்.
9. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.
15. பௌர்ணமி.
16. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 2-ம் ஞாயிறு.
23. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 3-ம் ஞாயிறு.
25. பரி. பவுல் ஞனைப்பட்ட திருநாள்.
30 பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 4-ம் ஞாயிறு. அமாவாசை.

# நற்போதகம்.

உ. பெபுருவரி௴. ௲௮௮௧௵.

## யோசுவாவின் புஸ்தகம்.

### X. அதிகாரம்.

1. "அதோனிசேதேக்" நீதியினுண்டவன். இவன் மெல்கிசெதேக்கின் வம்சமாயிருக்கலாம். அவனுக்குரிய பத்தியில்லாதிருந்தாலும், அவன் பெயரைத் தரித்தவனாயிருந்தான். ஆதி. 14. எருசலேமுக்கு சாலேம் என்பது முந்திய பெயர். இஸ்ரவேலர் கானானைப் பிடித்தபின்பு இந்தப் பெயர் வந்ததாகச் சிலருடைய அபிப்பிராயம்.

2. யாத்திரை 15: 14—16. உபா. 11: 25.

3. அதோனிசேதேக் மற்ற நாலு இராஜாக்களைவிடப் பலத்திலும் கனத்திலும் அதிகப்பட்டவன். இப்போது இவனுக்குச் சமீபத்தில் சத்துருக்கள் வந்திருப்பதால், இவனே மற்றவர்களுக்குச் செய்தி அனுப்பினான்.

5. எபிரோன் பட்டணத்தார் ஏத்தியராயும், கிபியோனியர் ஏவியராயும், யோசு. 11: 19. இருந்தாலும், இவ்விடத்தில் எமோரியர் என்னப்படுகிறார்கள். 2 சாமு. 21: 2. இது கானானியருக்குப் பொதுப்பெயர். எமோரியர் யோர்தானுக்குக் கிழக்கே திரளாயும், ஜெயவீரராயுமிருந்தபடியால், கானான்தேசத்திலும் தங்கள் சேனைகளை அனுப்பி பல இடங்களை ஜெயித்துத் தங்களுக்குக் குடியிருப்புச் செய்துகொண்டதைவிட்டு கானானியர், எமோரியரென்றழைக்கப்படுவது நியாயமே.

7. 8 வா-ல் தேவன் சொல்லுகிற உத்தரவைக் கவனிக்குங்கால், யோசுவா முதலாவது தேவனிடத்தில் ஆலோசனை கேட்டிருப்பாரென்பது தெரியவருகிறது.

10. நியாயாதி. 4: 15. 1 சாமு. 7: 10. சங். 18: 14. ஏசா. 28: 21.

11. "பெரிய கற்கள்" பின்தொடர்ந்த இஸ்ரவேலர் மேலல்ல, ஓடுகிற கானானியர்மேல் பெரிதும், உரமுமான கல்மழை பெய்து

அவர்களைக் கொன்றது. கல்மழையோடே இடியும் மின்னலும் வந்ததாக யோசேப்புஸ் சொல்லுகிறார். அப்படியே, ஆபகூக். 3: 11-னாலுந் தெரியவருகிறது.

12. யோசுவா கர்த்தரோடு பேசினார். தேவஆவியினால் நடத்தப்பட்டவராய்ச், சத்துராதிகளை அழிக்கவேண்டுமென்ற வைராக்கியமுடையவராய் இந்த விண்ணப்பஞ் செய்கிறார். எப்படியும் ஜெயங்கிடைக்குமென்ற நம்பிக்கையினால், இஸ்ரவேலர் அந்த ஜெயத்துக்குச் சாட்சிகளாயிருக்கும்பொருட்டு, அவர்களுக்கு முன்பாக இந்த வாக்கியத்திலுள்ள வார்த்தைகளைச் சொன்னார்.

"கிபியோன் மேலே" கிபியோனுக்கு எதிராக, கிபியோனுக்கு மேலாக இப்போது சூரியனிருக்கிற நிலையில் நிற்கவும், கிபியோனை விட்டு படிப்படியாய் இறங்கிக், காணப்படாமல் போகாதபடிக்கும் கேட்கிறார். சூரியன் இறங்குகிற நேரமாயிருந்தபடியால், தமது வேலை பெரிதும், காலம்பிடிக்கத்தக்கதுமாயிருந்ததை அறிந்து, போதுமான நேரமிருக்கும்பொருட்டாக, சூரிய சந்திரர்கள் அதினதின் நிலையில் தங்கள் ஓட்டத்தை நிறுத்தினவைகளாய்த் தாமதிக்கும்படி பிரார்த்திக்கிறார்.

"ஆயலோன்" கிபியோனுக்கு வடக்கே செபுலோன் கோத்திரத்தில் ஒன்றும், நியாயா. 12: 12. கிபியோனுக்கு மேற்கே தாண் கோத்திரத்தில் ஒன்றும் உண்டு. யோசு. 19: 42. நியாயா. 1: 35. இதில் (1) பிந்தினதே சமீபமானதாலும், (2) சூரியனும், சந்திரனும் கிழக்கிலிருந்து மேற்காக ஓடுகிற ஓட்டத்துக்கு இசைவாயிருப்பதாலும், (3) யுத்தமானது கிபியோனுக்கு மேற்காக இருக்கிற ஆயலோனுக்கும் பின்பு மேற்காக இருக்கிற லாகீஸ்வரை எட்டினதாலும், பிந்தினதே இதில் குறிக்கப்படுகிறது.

இங்கே கிபியோன், ஆயலோன் என்ற இரண்டு இடங்களைப் பற்றிப் பேசுவதில், ஒன்று கிபியோன் மேலும், மற்றது ஆயலோன் மேலும் நின்றதாக நாம் நினைக்கக்கூடாது. இரண்டு இடங்களும் வெகு சமீபமாயிருந்தபடியால் இது கூடாத காரியம். இது செய்யுள் நடையான வாசகமானதாலும், கிபியோனிலிருந்து ஆயலோனுக்குச் சத்துருக்களைப் பின்றொடருகிற மார்க்கமானபடியாலும் இப்படிச் சொல்லுகிறார். சூரிய வெளிச்சமிருக்கும்போது சந்திரப்பிரகாசம் தேவையில்லை. வானசோதிகளின் ஓட்டத்தில் குழப்பம் வராதபடி சந்திரனையுஞ் சேர்த்துச் சொல்லியிருக்கிறது.

13. "சூரியன் நின்றது." ஆபகூக். 3: 11. சீராக். 46: 5, 6. இச்சங்கதி உண்மையென்று சாட்சி பகருகிறது. இஸ்ரவேலின் தேவனே மெய்யானவனென்று எல்லாருக்கும் பிரத்தியட்சமாய் விளங்கவும், கானானியர் தெய்வமென வணங்கின சூரிய சந்திரர்களெல்லாம் தெய்



வமல்ல, அவைகள் இஸ்ரவேலின் தேவனின் கட்டளைப்படி நடக்கும் சிருஷ்டிகளெனத் தெரிவிக்கும்படியாகவும் இவ்வற்புதம் நடத்தப்பட்டது. சங். 46: 8. இஸ்ரவேலர் வானஜோதிகளை வணங்கும் சோதனைக்குட்படாதபடிக்குத் தடுக்கிறதாயுமிருக்கிறது. உபா. 4: 19. எந்த யுத்தமும் இருட்டாரம்பமான உடனே நின்றுபோம். இந்தப் போர் அப்படியல்ல, சத்துருக்களை முழுவதுமாய் அழியச்செய்ய பகல் இரட்டித்தது.

"யாசேரின் புஸ்தகம்." யாசேரென்று பெயர்கொண்டவனாவது அந்த வார்த்தையின் கருத்துக்கேற்க நீதியுள்ள எந்த மனிதனாவது அக்காலத்து நடவடிக்கைகளை எழுதிய ஆகமமாம். எண். 21:14-ல் கர்த்தருடைய யுத்தங்களின் புத்தகமெனக் கண்டிருக்கிறது. யூதரால் நடத்தப்பட்ட யுத்தங்களைக் காட்டிய பாட்டாகமம். 2 சாமு. 1: 18. யோசுவாவின் புஸ்தகமெழுதப்படுமுன்னே இந்தப் புத்தகமெழுதப்பட்டுப் பிரசித்தமாயிருந்தது. இதுவும், இதுபோன்ற சில சரித்திர ஆகமங்களும் கனோன் புஸ்தகங்களல்லாதபடியால் யூதர்களால் காக்கப்படாதழிந்தன.

14. பூமியின் வடமுனை தென்முனைகளில் சில காலங்களில் இயற்கையாய் நாட்கள் நீடித்திருக்கிறபிரகாரம் இதுவும் நடந்திருக்கலாமென்ற ஆக்ஷேபனை வீணென்று இந்த வாக்கியங் காட்டுகிறது.

15. யோசுவா அந்நாளில் பாளயத்துக்குத் திரும்பவில்லை. வா. 43. 10 வா-ல் தொடங்கிய யுத்தவரலாற்றின் முடிவைக் காட்டுகிறதாயிருக்கிறது. 5-இராஜாக்களின் பட்டணங்களை அவர் இன்னும் பிடிக்கவில்லை. கொள்ளைப்பொருள்களைப் பங்கிடவுமில்லை.

19. சத்துருக்கள் தங்கள் பட்டணங்களுக்குள் புகுந்து புதுப்பெலனடைந்து யுத்தத்தை ஆரம்பிக்காதபடி பின்றொடர்ந்து சங்கரித்தார்கள்.

21. இஸ்ரவேலருக்கு விரோதமாக ஒரு நாயாகிலும் தன் நாவை அசைக்கவில்லையென்று வாசிப்பது நல்லதென்று சிலர் நினைக்கிறார்கள். யாத். 11: 7. இஸ்ரவேலருடைய ஜெயவிர்த்தியைத் தடுப்பதற்கான அற்பக்குதாவிடை முதலாய் நடக்கவில்லையென்று காட்டுகிறது. யுத்தத்தில் இஸ்ரவேலரிலொருவனாவது சேதப்படவில்லை. ஆயிப் பட்டணத்தில் இஸ்ரவேலர் முறியடிக்கப்பட்டபோது கானானியர் அவர்களை நிந்தித்ததுபோல இப்போது செய்யத் துணியாமல் அவர்கள் நாவடைபட்டது.

24. ஐந்து இராஜாக்களின் கழுத்துகளில் கால்களை வைக்கச்செய்தது தன் பெருமைக்காகவுமல்ல, அவர்களைக் கனக்குறைச்சல் செய்ய வேண்டுமென்றுமல்ல. ஆனால் (1) தேவனுக்கு விரோதமாய் நடப்

பித்த அவபத்தியான கலகத்துக்குத் தண்டனையாகவும், (2) ஆதி. 9: 25-ல் காட்டிய அடிமைத்தனத்தின் சாபம் நிறைவேற்றவும், (3) தம்முடைய படைத்தலைவர்களுக்கு, தேவன் எப்பேர்ப்பட்ட சத்துருக்களையும் அவர்கள் காலின்கீழ் நசுக்க வல்லவராயிருக்கிறாரென்று தெரிவிக்கவும், (4) சவுல் ஆகாகை உயிரோடு வைத்ததுபோல, இவர்களுஞ் செய்யாமல் தேவகட்டளையை நிறைவேற்ற ஜனங்களுக்குப் படிப்பிக்கவுமே இப்படிச்செய்தார்.

27. காட்டு மிருகங்களால் பட்சிக்கப்படாதபடிக்கும் அவர்களுடைய ஜனங்கள் வந்து மரியாதையாய் அடக்கஞ்செய்யாதபடிக்கும், பெரிய கற்களைக் கெபிவாயில் வைத்தார்கள்.

28. சூரியன் நின்ற நாளிலே அல்லது 5-இராஜாக்கள் தூக்கப்பட்ட நாளிலே மெக்கெதா பிடிபட்டது. எரிகோவின் இராஜா தூக்கப்பட்டிருப்பான், அல்லது கொல்லப்பட்டிருப்பான்.

33. கேசேர், இது எப்பிராயீம் கோத்திரத்திலுள்ளதென்றால் யோசு. 16: 3. நியாயாதி. 1: 29. மற்ற இடங்களுக்குத் தூரமானதாம். லாகீசுக்குச் சமீபமானதும் யூதாக்கோத்திரத்திலுள்ளதுமான கேசேர். 1 நாளா. 14: 16.

36. குடிகளைச் சங்கரித்ததேதவிர, பட்டணத்தைத் தங்கள் வசப்படுத்தாமல் கில்காலுக்குப் போய்விட்டபடியால், இராட்சதரும் ஓடிப்போன கானானியரும் வந்து திரும்ப அரண்செய்துகொண்டதாகத் தோன்றுகிறது. அதினால்தான் காலேப், திரும்பவும் எபிரோனைப் பிடிக்க அவசியம நேரிட்டது. யோசு. 15: 14.

41. காதேஸ்பர்னேயா கானானுக்குத் தெற்கேயுள்ளது. எண் 34: 4. உபா. 1: 19. யோசு. 15: 3.

கோசேன் எகிப்திலுள்ளதல்ல, யூதாவிலுள்ளது. யோசுவா. 11: 16. 15: 51.

## கேள்விகள்.

1. இதில் யோசுவாவுடைய செபமென்ன? அது பலத்த விசுவாசமுள்ள செபமென்று காண்பியும்?

2. சூரியனும் சந்திரனும் நின்றது அற்புதமென்று ரூபியும்? இதைப்பற்றி பலர் கொண்டிருக்கிற ஆட்சேபனைகளையும், அதற்கு உம்முடைய யோசனையுஞ் சொல்லும்?

3. தேவன் யோசுவாவுடைய கேட்டுக்கொள்ளுதலின்படி சூரியனை நிற்கப்பண்ணின நோக்கமென்ன?

4. இஸ்ரவேலர் தங்கள் பட்டயத்தால் தேசத்தைக் கட்டிக்கொ



ள்ளவில்லை. அவர்கள் புயமும் அவர்களை இரக்ஷிக்கவில்லையென்ற வாக்கியத்தை ரூபியும்?

5. யோசுவாவும் அவன் மனுஷரும் இராமுழுவதும் நடந்தும், பகல்முழுவதும் யுத்தஞ்செய்தும், இளைத்துப்போகாமல், சத்துருக்களை அழிப்பதில் விடாமுயற்சியாயிருந்தார்களே. இதினால் எந்த வாக்கியம் உண்மைபெறுகிறது?

6. எபிரோன், தேபீர், லாகீஸ், லிபனா, கோசேன் இவைகளெங்கேயிருக்கிறது? இந்த இடங்களைப்பற்றி உமக்குத் தெரிந்தவைகளை எழுதும்?

7. இஸ்ரவேல் புத்திரர்மேல் ஒரு நாவும் அசையவில்லையென்பதின் பொருளென்ன?

8. யோசுவா 5-இராசாக்களின் கழுத்தின்மேல் கால்களைப் போடச்சொன்னதற்கு முகாந்தரமென்ன? அதினால் நாம் படிக்கிறதென்ன?

9. யோசுவா சுவாசமுள்ளதெல்லாவற்றையும் சங்காரம்பண்ணினதினால் நாம் அறிந்துகொள்ளுகிறதென்ன?

10. யாசேரின் புஸ்தகத்தைப்பற்றி உமக்குத் தெரிந்தவைகளை எழுதும்? இதுபோல்வன கனோன் அட்டவணையில் சேராத வேறே புஸ்தகங்களிலிருந்து வேதத்தில் வருகிற வாசகங்களைச் சொல்லும்?

---

## XI. அதிகாரம்.

1. பற்பல சிற்றரசுகளாலாளப்பட்ட கானானியர் இப்போது ஒரே அரசனுடன் குழாங்கூடிப் போருக்கு வரச்சேர்ந்ததும், இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்த துவக்கத்தில் இவ்வித ஒற்றுமையோடு திரள் கூட்டமாய் யுத்தத்துக்கு ஆரவாரஞ்செய்யாதிருந்ததும் தேவபராமரிப்பின் ஞானமென்னலாம்.

2. "மலைகளிலுள்ள" லீபனோன் மலையடிவார நாடுகளிலுள்ள.

"கின்னரோத்," இப்பெயரால் அழைக்கப்பட்ட பட்டணம். யோசு. 19: 35.

கின்னரோத் தேசமுமுண்டு. யோசு. 11: 2. 1 இரா. 15: 20.

கின்னரோத் ஏரியுமுண்டு. யோசு. 12: 3. லூக். 5: 1.

3. "கிழக்கேயும் மேற்கேயுமிருக்கிற" யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள கானானியரும், யோர்தானுக்கு மேற்கே சமுத்திரக் கரையோரமிருந்த கானானியரும் ஏகமாய்க் கூடினார்கள்.

"ஏர்மோன் மலையடியிலுள்ள ஏவியர்." யோசுவா 9-ல் சொல்லிய ஏவியரான கிபேயோனியரிலிருந்து வேறுபடுத்தும் நோக்கமாய் இப்படிச் சொல்லியிருக்கிறது.

"மிஸ்பா." கிலேயாத்தின் வடபங்கிலுள்ளது. ஆதி. 31: 49. நியாயாதி. 11: 29. யூதாக்கோத்திரத்தில் ஒரு மிஸ்பா உண்டு. யோசு. 15: 38. பென்யமீன் நாட்டில் ஒன்றுண்டு. யோசு. 18: 26. மோவாப் தேசத்தில் ஒன்றுண்டு. 1 சாமு. 22: 3. மிஸ்பா என்றால் சாமங்காக்கிற இடம் என்று பொருள்.

4. ஆதி. 32: 12. நியாயாதி. 7: 12. 1 சாமு. 13: 5. 3 இலட்சம் காலாட்கள், 10,000 குதிரை, 20,000 இரதங்கள் வந்ததாக யோசேப்புஸ் சொல்லுகிறார்.

6. குதிரைகள் இனி யுத்தத்துக்கு உதவாமற்போகவும், இஸ்ரவேலர் தங்களுக்குக் குதிரைகளை வைத்துக்கொளாதிருக்கவும் உபா. 17: 16. மற்றமனிதர் செய்வதுபோல் இஸ்ரவேரும் குதிரைகளின் பேரில் நம்பிக்கை வைக்காமல், இரட்சிப்பு கர்த்தராலே கிடைக்குமென்று தேவன் பேரிலே நம்பிக்கை வைக்கவும், அநேகமாயிரம் இரதங்கள், குதிரைகளை விடத் தேவ வல்லமையே ஜெயத்துக்கு அனுகூலமென்று காட்டவும் நோக்கமாய்க் குதிரைகளின் குதிகால் நரம்புகளை அறுக்கச்சொன்னார். 2 சாமு. 8: 4-ல் தாவீதும் அப்படியே செய்ததாகக் கண்டிருக்கிறது.

8. "மிஸ்ரபோத்மாயீம்." சீதோனுக் கருகான உப்புக்கேணி. சீதோன் மேற்கேயும், மிஸ்பே பள்ளத்தாக்கு கிழக்கே ஏர்மோன் மலையடிவாரத்திலுமிருப்பதால், சத்துருக்கள் மேற்குங் கிழக்குமாயோட இஸ்ரவேலரும், இருபவுஞ்சாய்பிரிந்து துரத்தினதாகத் தோன்றுகிறது.

13. ஆத்சோர், இராஜநகரமும், இப்போது யுத்தம் ஆரம்பித்த இடமுமானதால், மறுபடி கானானியர் கூடியுத்த முயற்சிசெய்யாதபடிக்கு அதைச் சுட்டெரித்தார்கள். இஸ்ரவேலர் தாங்கள் கட்டாத பெரிதும் வசதியுமான பட்டணங்களில் குடியிருப்பதற்காக அரணிப்பானபட்டணங்கள் அழிக்கப்படவில்லை. உபாகமம் 6: 10.

16. "முழுத்தேசமாகிய மலைகளையும்" யூதாவிலுள்ள மலைநாடுகளாம். ஏனென்றால் (1) கானானின் தெற்கெல்லையிலிருந்து துவக்குகிறார். அங்கே முக்கியமான ஓர் மலையுண்டு. எண். 13: 17. (2) யூதாவிலுள்ள மிச்சமான பங்குமலைநாடு லூக். 1: 39, 65. யோசுவாவினால் பிடிபட்ட இடங்களில் எபிரோன் யூதாவின் மலைகளிலிருந்தது. யோசு 20: 7. (3) இஸ்ரவேலின் மலைகளிலிருந்து வித்தியாசப்படுத்த இப்படிச் சொல்லியிருக்கிறது.

"இஸ்ரவேலின் மலைகள்" 1 இராசா. 16: 24-ல் கண்ட சமாரியாவின் மலைகளாயிருக்கலாம் (2) இஸ்ரவேலிலுள்ள மலைத்தேசங்களாயிருக்கலாம்.



18. பிந்தின சரித்திரங்களாலும், உபா. 2: 14ஐ யோசு. 14: 7. ஓடு ஒத்துப்பார்ப்பதாலும், யோசுவா நெடுநாளாய் யுத்தம் நடத்தினானென்பது தெளிவாயிருக்கிறது. யுத்தவரலாறு சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் யுத்தமுஞ் சிறிதுகாலந்தான் நடந்ததென்றெண்ணங்கொள்ளாதபடி இப்படிச் சொல்லியிருக்கிறது தேவன் விசேஷித்த முகாந்தரங்களையிட்டு, படிப்படியாய்க் கானான்தேசத்தைச் செயிப்பதற்குச் சித்தங்கொண்டார். அவையாவன (1) ஒருமிக்கச் சத்துருக்களை அழித்தால், தேசம் பாழாகிக் காட்டுமிருகங்கள் பெருகுவதற்கிடமாகும். உபா. 7: 22. (2) சடிதியாயும், சுளுவாயும் யுத்தம் நடந்திருக்குமென்றால், மனுஷருடைய இயற்கைப்படி மறக்கப்பட்டு அசட்டையாயெண்ணப்படுமே. (3) நெடுநாளான யுத்தத்தினாலே இஸ்ரவேலர் யுத்தப் பயிற்சியடைய. (4) அவர்களுடைய பொறுமை, தைரியம், தேவன்பேரில் வைத்த நம்பிக்கை முதலியவற்றைச் சோதிக்க. (5) சத்துருக்களைச் செயிக்கத் தேவனுடைய ஒத்தாசை தங்களுக்கு எப்போதுந் தேவையாயிருக்கிறதென்று இஸ்ரவேலர் அறிந்து அவருக்குப் பயந்து கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருக்கவுமே.

19. யுத்தம் நெடுநாளிருந்ததென்பதற்கு இந்த வாக்கியமே, அத்தாட்சியாம்.

20. கானானியர், இஸ்ரவேலரோடு சமாதானஞ்செய்துகொள்ளும்படியாய் அவர்கள் இருதயத்தைத் தேவன் இளகச் செய்யாமல் அவர்கள் தங்கள் பகை, பெருமை, முரட்டாட்ட முதலான பாவங்களிலே நிலைத்திருக்க விட்டு விட்டார். இதினால் அவர்கள் தங்கள் பாவங்களுக்காக முழுவதுஞ் சங்கரிக்கப்படவும் இஸ்ரவேலர் அவர்களோடு கலந்து குடியிருக்க ஏதுவில்லாமலும் போயிற்று உபா. 2: 30. யாத். 7: 13.

21. "ஏனாக்கியர்." இராட்சத ஜாதியார். எண். 13: 33. இவர்கள் அவ்விடங்களிலுள்ள கெபிகளில் வாசம்பண்ணின முரடான துஷ்ட ஜனங்கள். இஸ்ரவேலர் யுத்தம் நடத்தின காலத்தில் அவர்களுக்குப் பயந்து மலைநாடுகளுக்குப் போயிருக்கலாம். யூதாவின் மலையென்றும் இஸ்ரவேல் மலையென்றும் சொல்லியிருப்பதை வைத்துக்கொண்டு, இப்புஸ்தகம் யோசுவாவின் மரணத்துக்கு வெகு காலத்துக்குப் பின்னும், இஸ்றவேல் இராட்சியமென்றும் யூதா இராட்சியமென்றும் பிரிந்த பின்பும் எஸ்றாவின் காலத்துக்குரிய பாஷை நடைப்படி இந்தப் பிரிவு கூட்டப்பட்டும், மாற்றப்பட்டுமிருக்கிறதென்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், ஆதி. 49: 9, 10. முதலிய வாக்கியங்களினால் மற்றக் கோத்திரங்களிலும், யூதாக் கோத்திரம் சிரேஷ்டம் பெற்றதென்று தோன்றுகிறபடி இக்காலத்திலும், கானான்தேசம் பங்கிடப்பட்டதில் முதல் சீட்டு அதன்பேருக்கே விழுந்தபடியாலும், யோசு. 15: 1.

விஸ்தாரமான சுதந்தரங்கிடைத்திருப்பதாலும், யோசு. 19: 9. யூதாவின்மேன்மை யோசுவாவுக்குத் தெரிந்தது தான். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களில் இதுவுமொன்றாயினும், மேற் கண்ட முகாந்தரங்களினால், பிரித்துச் சொல்லப்படுவது ஆச்சரிய மல்ல. அந்நியஸ்திரீகளிலிருந்து பார்வோனுடைய குமாரத்தியையும், 1 இராசா. 11: 1. தாவீதின் சத்துருக்களிலிருந்து சவுலையும், சங். 18. சீஷர்களிலிருந்து பேதுருவையும் மாற்கு. 16: 7. வித்தியாசப்படுத்திச் சொல்லியிருப்பது போல், இவ்விடத்தில் யூதாவையும் பற்றிச் சொல்லியிருக்கிறது.

காலேபும், ஒதனியேலும், யோசுவாவின் மரணத்துக்குப் பின் ஏனாக்கியரில் சிலரையழித்தாகச் சொல்லியிருக்க, யோசு. 14: 12. நியாய. 1: 10—13. இங்கே அவர்களை முற்றிலும் யோசுவா அழித்தாரென்று சொல்லலாமா? ஒருவேளை இந்த இடங்களிலோர் பாகம் அழிக்கப்பட்டு யோசுவாவின் காலத்திலாவது அவருடைய மரணத்துக்குப்பின்பாவது இராட்சதர்களால் திரும்பவும் வசப்படுத்தப்பட்டிருக்கலாம். (2) காலேபின் முயற்சியாலும் பலத்தாலும் இவைகள் அழிக்கப்பட்ட போதிலும், சரித்திரக்காரரின் வழக்கப்படி படைத்தலைவனாயிருந்த யோசுவாவால் நடந்ததென்று சொல்லியிருக்கலாம். ஆதலால் இங்கே யோசுவாவைப் பற்றிச் சொல்லியிருந்தாலும், யோசு 4. நியாய. 1-ல் அதைப் பிடிப்பதில் முயற்சி செய்த காலேபின் பெயருக்குக் கனமாகச் சொல்லியிருக்கிறது.

22. ஏனாக்கியர் பெலிஸ்தரின் 3 பட்டணங்களிலிருந்ததாக இங்கே குறிப்பிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் சிலர் பிற்கால சரித்திரங்களில் சொல்லப்படுகிறார்கள் 1 சாமு. 17: 4. 2 சாமு. 21: 16. பெலிஸ்தரின் தேசம் இஸ்ரவேலரால் சுதந்தரிக்கப்படவேண்டியதாயிருந்தாலும், ஏனாக்கியர் அவ்விடத்திலிருந்தபடியால், அதின்மேல் இஸ்ரவேலர் யுத்த முயற்சி செய்யவில்லை யென்றெண்ணலாம்.

## கேள்விகள்.

1. இந்த சமையத்தில் யுத்தஞ்செய்ய வந்தவர்களின் தொகையென்ன? இப்படியே எந்த சமையத்திலும் சத்துருக்கள் இஸ்றவேலருக்கு விரோதமாகக் கூடினார்கள்?

2. கானானியருடன் யுத்தஞ்செய்வதில் தேவன் தம்மில் நம்பிக்கை வைக்கத்தக்கதாக இஸ்ராவேலருக்குக் கொடுத்த கட்டளை யென்ன? ஏன்? அந்தப்படி பிற்காலத்தில் செய்தவருமார்?

3. கின்னரோத் மிஸ்பே, மேரோம் இவைகளைப் பற்றித் தெரிந்ததை எழுதும்?



4. இந்த அதிகாரத்தில் காட்டிய யுத்தத்தில் விளங்கிய தேவ ஞானத்தையும், வல்லமையையும் காட்டும்.

5. தேவன் கானானியருடைய இருதயத்தைக் கடினமாக்கினாரென்பதின் பொருளென்ன? ஏன் அப்படிச் செய்தார்? இதுக்குட்படாத பாவிகளுக்கு எச்சரிப்பாயிருப்பதெப்படி?

6. யூதா, இஸ்றவேல் என்று இராச்சியம் இரண்டாகப் பிரியுமுன் இப்படிப்பட்ட பிரிவுக்கு ஆதாரமாக வருகிற சங்கதிகளெவை! யூதாக் கோத்திரம் மற்றக் கோத்திரங்களிலும் மேன்மையடைந்திருந்ததைப் பற்றிக்குறிப்புண்டா?

7. இஸ்றவேலர் கானான் தேசத்தில் யுத்தஞ்செய்த காலம் எவ்வளவு? இவ்வளவு காலம் நீடித்திருப்பதற்கு நியாயங்களென்ன?

8. ஏனாக்கியரைப் பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதும்! காலேப், ஒதனியேல், யோசுவாவின் மரணத்துக்குப் பின் ஏனாக்கியரை அழித்ததாக நியாயாதி. 1: 10, 13. சொல்லியிருக்க இங்கே யோசுவா முற்றிலும் அவர்களை யழித்துப் போட்டதாகச் சொல்வது சரியா!

9. யோசுவாவைப் பற்றி இங்கே புகழ்ச்சியாய்ச் சொல்லியிருப்பதென்ன? அவர் எப்படி தேவனுடைய கட்டளையை நிறைவேற்றினார்?

10, பெலிஸ்தியர் தேசத்தின் வரலாறு என்ன? அங்கேயுள்ள விசேஷித்த 5 பட்டினங்களில் நடந்த விசேஷ மென்ன?

---

## The World's Birth.

## உலகப்பிறப்பு.

### I. அதிகாரம்.

"ஆதியிலே."

(தொடர்ச்சி.)

பூமியின் பூர்வோத்திரத்தைப்பற்றி தேவன் 33-நூற்றாண்டுகளுக்குமுன் மோசேக்குத் தெரியப்படுத்தினபோது, வையகத்தோர் எல்லாரும் இந்தச் சத்திய சங்கதியைப்பற்றி, மெத்த அறிவீனராயிருந்தார்கள். இஸ்ரவேலரைத்தவிர மற்றத் தேசத்தார் எல்லாரும் இருளில் நடக்கிறவர்கள்போல் நிர்தியத்துக்குட் சென்றார்கள். தங்கள் முற்பிதா தேவனைப்பற்றி அறிந்திருந்த சத்தியத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள். தாங்கள் உண்டாக்கப்பட்ட வகையின்னதென்றும், தாங்கள் போகிறதெங்கே என்றும் தெரியாதவர்களாயிருந்தார்கள். சிருட்டிப்பில் விளங்கிய தேவனுடைய மகிமையைப் பாராத குருடராயிருந்

தார்கள். "தங்களை ஞானிகள் என்றெண்ணி, பைத்தியகாரரானார்கள்." ரோமர் 1: 19—22. "தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது தேவனே அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும். ஆகையால் அவர்கள் போக்குச்சொல்ல இடம் இல்லை. அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத்தேவன் என்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியகாரரானார்கள் என்ற சத்தியம் எவ்வளவு நுட்பமாய் அவர்களில் நிறைவேறியிருக்கிறதென்று அறியலாம்.

வேதசாஸ்திரமின்றி, மனிதர் நிலைமை அநேக நூற்றாண்டுகளாய் இவ்வண்ணமாகவேயிருந்தது. இவ்வுலகப்படிக்கு அவர்களுக்குள்ளே ஞானிகள் என்னப்பட்டவர்களிருந்தார்கள். அவர்கள் இந்த ஞான விஷயத்தில் அறிவீனராயிருந்தார்கள். பிளேற்றோ, அரிஸ்ற்றாட்டல், பிளினி, புளூற்றார்க் என்பவர்கள் உலகம் நித்தியமாயுள்ளதென்று சொன்னார்கள். மேற்சொல்லியவர்களுக்குள் தேறின ஞானி என்று பேர்பெற்ற பிளேற்றோ என்பவன் மோசேக்கு 1100-வருஷங்களுக்குப் பின்பு இருந்தான். அவன், நட்சத்திரங்கள் தேவர்கள் என்று சொன்னான். யோவான் அப்போஸ்தலன் காலத்திலிருந்த பிளினி என்பவன் உலகமும் தெய்வம் என்று எண்ணினான். நாம் முன் பாராத காரியங்களைப்பற்றி மேற்படி ஞானிகள் சந்தேகத்தினால் திகைத்துக்கொண்டிருந்தார்கள். தாங்கள் இன்னதைப்பற்றி யோசிக்கவேண்டும் என்பதை அறியாதவர்களாயிருக்கிறோம் என்று தாங்களே அறிக்கையிட்டிருக்கிறார்கள். இந்த ஞானிகள் எல்லாரும் ஒன்றுகூடி ஒரு வீட்டிலிருக்கையில், ஒரு பூதப்பையன் தன் கையில் ஆதியாகமத்தைக் கொண்டு போய், அவர்கள் நடுவே நின்றால், என்னசொல்லியிருப்பான்? கனவான்களே நீங்கள் சொல்வது இன்னதென்று உங்களுக்கே தெரிகிறதில்லை. நீங்கள் சந்தேகமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். இன்னது சத்தியம் என்று சொல்ல உங்களால் கூடுகிறதில்லை. எங்கள் பள்ளியில் படிக்கிற ஒரு சிறு பையனும் இந்தச் சத்தியத்தைத் தெளிவாய் அறிந்திருப்பான். அதைத் தேவன், தமது புத்தகத்தில் காட்டியிருக்கிறார். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருட்டித்தார்." என்று விளம்பியிருப்பான். வேதசாஸ்திரத்தைப் படித்திருக்கிற பிள்ளை, உலகத்தில் ஞானிகள் என்று பேர்பெற்றிருக்கிறவர்களைவிட ஞானியாயிருக்கிறான். இந்தச் சத்தியங்கள் "கல்விமான்களுக்கும், ஞானிகளுக்கும் மறைக்கப்பட்டு பாலகருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சதியங்களை வேதாகமத்தினாலே மாத்திரம் அறியலாமென்று பார்க்கிறோம்." எபி. 11: 3. "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய்க் காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை என்றும் அறிந்திருக்கிறோம்."

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார். இந்த ஆதி எப்போதுள்ளது. ஆதிக்குமுன்னான அநாதியைப் பற்றி மோசே ஒன்றுஞ் சொல்லுகிறதில்லை. அந்தக் காலத்தைப்பற்றிநமக்கு ஒன்றுந்தெரியாது. அது நம்முடைய எண்ணத்துக்கும் மிஞ்சினகாரியம்



என்பதை மாத்திரம் அறியலாம். வானத்துக்கும் பூமிக்கும் ஒரு துவக்கமுண்டு, தேவனைத் தவிர மற்ற யாவற்றுக்கும் ஆரம்பமுண்டு. திரித்துவமானவர் நித்தியகாலமாயிருக்கிறார். தலைமுறைதலைமுறையாக அவர் தேவனாயிருக்கிறார் சங் 95: 2. அவர் "இருக்கிறேன்" என்பவர் "அவர் இருக்கிறவரும் இருந்தவரும், வருகிறவருமான கர்த்தர். நித்தியவாசகரும், பரிசுத்தரும் என்ற நாமமுடையவர்."

ஆதியிலே என்கிற வார்த்தை ஆதியாகமம் 1: 1. ஒரு காலத்தின் துவக்கத்தையும், யோவான் சுவிசேஷம் 1: 1-3-ல் ஆதிக்கு முன்னான அநாதி காலத்தையும் குறிக்கும், கிறிஸ்துவானவர் ஆதியிலே உலகம் உண்டாக்கப்படுவதற்கு முன்னிருந்தார். ஏனென்றால் உலகம் அவராலுண்டாயிற்று; அவர் பண்ணிய கடைசி ஜெபத்தினாலும் அவர் அநாதியாயிருந்தார் என்று விளங்கும் யோவான் 17: 24.

இப்போது "சிருட்டித்தார்" என்ற வார்த்தையைப் பற்றிப் பார்ப்போமாக. இந்த வார்த்தை எபிரேயு மூலத்திலே இரண்டாம் வார்த்தையாக வருகிறது. சிருட்டித்தார் என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்குதல் என்று அர்த்தம். காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை" என்று அறிந்திருக்கிறோம். எபி. 11: 3. மோசே, சிருட்டித்தல், உண்டாக்குதல் என்ற இரண்டு வார்த்தைகளையும் வெவ்வேறே அர்த்தமுள்ளதாய் உபயோகப்படுத்தியிருக்கிறார். தேவன் சிருட்டித்து உண்டுபண்ணின கிரியைகள் என்று ஆதி. 2: 3. சொல்லியிருக்கிறது மனுஷன் ஒரு பொருளை உண்டாக்கலாம், ஆனால் அதைச் சிருட்டிக்கக்கூடாது, தட்டான் தங்கத்தைக் கொண்டு நகைகளை உண்டாக்கலாம். ஆனால் தங்கமில்லாமல் தங்க நகைகளை சிருட்டிப்பது அவனால் கூடாத காரியம். வானத்தின் தூதர் முதலாய் அற்பமான மணலைச் சிருட்டிக்கச் சக்தியற்றவர்கள். தேவன் சிருட்டித்தார் என்பது நமது இருதயத்தை அதிசயத்தில் மூழ்கிப் போகப்பண்ணுகிறதாயிருக்கிறது சிருட்டிகருக்கும் சிருட்டிகளுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்று தெரியப்படுத்துகிறது. அவர் நம்மெல்லாருக்கும் மேலானவர். சிரேஷ்ட தூதருக்கும் உன்னதமானவராயிருக்கிறார். ஒரு அணு அசிக்கும், சிரேஷ்ட தூதனுக்கும் இருக்கிற வித்தியாசத்தை விட எண்ணிறந்த பங்கு சிரேஷ்ட தூதனுக்கும் தேவனுக்கும் வித்தியாசமுண்டு, அந்த வித்தியாசத்துக்கு ஒப்பிடுதலில்லை. அற்மான ஊர்வனமும், உன்னதமான தூதனும், ஜோதிமண்டலங்களும், அவருடைய சிருட்டிகள். தேவதூதர்கள் தங்களைச் சிருட்டித்த நித்தியரான தேவகுமாரனை வணங்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். "தேவதூதர்கள் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்" என்றார். எபி. 1: 6. கொலோ. 1: 16.

தேவனைப் பற்றிச் சிந்திக்கையில், "இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும் எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது" "அவர் ஆதிமுதல் அந்தமட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். அவருடைய வழிகள் ஆராய்ப்படாதவைகள், அவரைக்குறித்துக் கேள்விப்பட்டது எவ்வளவு கொஞ்சம், அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை அறிந்தவன் யார் "என்று ஒவ்வொருவரும் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். சங். 139: 6; 145. 3; பிரச. 3: 11; ரோ. 11: 33; யோபு 26: 14.

தேவன் சிருட்டித்தார் என்றதை ஆழமாய்ச் சிந்திக்கையில் தேவன் எத்தன்மையுடையவராயிருக்கிறார் என்பதையும், நாம் அவ

ருக்கு முன்பாக எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும் என்பதையும்,
உணரவேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் எல்லாமுமாயிருக்கிறார்
நாமோ ஒன்றுமில்லாதவர்கள் ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவ
ஸ்துகளையும் உண்டுபண்ணினவர் எவற்றையுஞ் செய்யவல்லவராயிருக்
கிறார். அவரால் சகலமும் நிலைத்திருக்கிறது, தமது வல்லமையுள்ள
வசனத்தின்படி எல்லாவற்றையும் தாங்குகிறவராயிருக்கிறார். அவர்
சகலத்தையும் உண்டுபண்ணினவரானதால், சகலத்தையும் அறிகிறவ
ராயிருக்கிறார். அகண்ட ஆகாச வெளியில் ஓடுகிற எண்ணிறந்த உல
கங்கள், மனிதருடைய உள்ளிந்திரியங்கள், தேவதூதரின் இருதயங்
கள் அவருக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறது. நமது தலையின்
ரோமத்தை எண்ணியிருக்கிறார் சமுத்திரத்தின் மணலைத் தொகையிட்
டிருக்கிறார். பூமியின் தூளை அளவிட்டிருக்கிறார். நமக்குத் தலைமேலே
யிருக்கிற நட்சத்திரங்களின் தொகையை அறிவார் "உங்கள் கண்
களை ஏறெடுத்துப் பாருங்கள் அவைகளைச் சிருஷ்டித்தவர் யார், அவர்
அவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப்புறப்படப்பண்ணி அவை
களை எல்லாம் பேர் பேராக அழைக்கிறவராமே. அவருடைய மகா
பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும் அவைகளில் ஒன்
றுங்குறையாமலிருக்கிறது என்று ஏசாயா 40: 26-ல் சொல்லியிருக்கி
றது. தேவன் அவைகளெல்லாவற்றையுஞ் சிருட்டித்தார். அவைகளை
ஆண்டு, தமது சர்வ வல்லபத்தால் தாங்கிக்கொண்டுவருகிறார். அவர்
அவைகளைத் தாங்காவிடில் அவைகள் நாசமாகிவிடும் "நீர் உமது
முகத்தைமறைக்க, திகைக்கும், நீர் அவைகளின் சுவாசத்தை வாங்கிக்
கொள்ள அவைகள் மாண்டு, தங்கள் மண்ணுக்குத் திரும்பும். நீர் உம்
முடைய ஆவியை அனுப்பும்போது அவைகள் சிருஷ்டிக்கப்படும். நீர்
பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர் "என்று. சங். 104: 29—30
சொல்லியிருக்கிறது. நாம் தேவனால் உண்டாக்கப்பட்டவர்களானபடி
யால், நம்மை முழுவதுமாய் அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டியவர்
களாயிருக்கிறோம் "யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொ
ண்டிருந்து தன் தேவனாகிய கர்த்தாமேல் நம்பிக்கைவைக்கிறவன் பாக்
கியவான். அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளி
லுள்ளயாவையும் உண்டாக்கினவர். அவர் என்றென்றைக்கும் உண்மை
யைக் காக்கிறவர். அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார்,
பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார்" சங். 146: 5-7.
தேவன் சிருட்டித்தார் என்ற வாசகம் தீர்க்கதரிசிகள், அப்போஸ்த
லர், ஒளியின் தூதர், தேவகுமாரன் இவர்களால் அடிக்கடி வழங்கப்ப
ட்டிருக்கிறது. மோசே அடிக்கடி இதைப்பற்றி எழுதியிருக்கிறார். சங்கீ
தத்தில் தாவீது நிறைவாய்ச் சொல்லியிருக்கிறான். யோபு அதைப்
பற்றி அதிசயத்தோடே பேசியிருக்கிறான். அப்போஸ்தலர் ஜெபத்தி
லும் இதை எடுத்துக்காட்டிப் போராமலிருக்கிறார்கள். அவர்கள் ஒரு
மனப்பட்டு தேவனை நோக்கிச் சத்தமிட்டு "கர்த்தாவே நீர் வானத்
தையும் பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவற்றை
யும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர் அப்போஸ். 4: 24. என்றார்கள்.



# Exposition of the Church Catechism.

# ஞானோபதேசவினாவிடை

## வியாக்கியானம்.

## ௩-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### ௫-ம் பிரிவு.

### கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றி.

வினா நம்முடைய இரட்சகரைப்பற்றி விசுவாசப்பிரமாணத்தில் கடைசியாகச் சொல்லியிருக்கிறதென்ன?

விடை. அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கவருவார்.

பரமண்டலத்தில் கிறிஸ்துவானவர் மத்தியஸ்தராகச் செய்கிற உத்தியோகத்தைக் கவனித்தோம். அவருடைய எல்லாச் சத்துருக்களும் கீழ்ப்படுத்தப்பட்டு (எபி. 10: 12, 13) தம்முடைய ஜனங்களெல்லாரும் சேர்க்கப்படும் காலமளவும் (1 கொரி. 15: 24—28) அவர் தமது ஊழியத்தை நிறைவேற்றுவார். அப்பொழுது முடிவுவரும். பின்பு அவர் நியாயந்தீர்க்கவந்து, மகிமையான வெண்மையாசனத்தில் வீற்றிருந்து, தமது பரிசுத்த தூதரால் சூழப்பட்டு, எல்லாமனிதருக்கும் அவரவர் செய்த நன்மை தீமைக்குத் தக்கதாக பலா பலனளித்து, நீதிமான்களைத் தமது பிதாவின் இராயச்சியத்தில் சேர்த்து, தேவனையறியாமலும் அவருடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாமலும் போனவர்களிடத்தில் பழிவாங்குவார். இந்தப் பயங்கரமான சங்கதி நடக்கப்போகிற சமையம் அறியப்படக்கூடாததாயிருக்கிறது. தேவதூதர்களும் அறியார்கள். (மத். 24: 36.) ஆனால் இப்படி நடப்பது நிச்சயம். இந்த ஜீவகாலத்தில் பொல்லாதவர்கள் வாழ்ந்து, தங்கள் இருதயத்தில் பெருமையினாலே "தேவன் எப்படி அறிவார்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் தேவனுடைய பிள்ளைகளோ அநேக துன்பங்களையும் வருத்தங்களையும் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் இந்த நிலைமையானது, தேவனுடைய நீதி விளங்குகிறதாகக் காணப்படும் இன்னொரு நிலைமையுண்டென்

பதையும், அங்கே நீதிமான்களுக்கு பாக்கியமும் பொல்லாதவர்களுக்கு நிர்பாக்கியமும் பங்காயிருக்குமென்பதையும் சுட்டிக் காட்டுகிறது. வேதாகமமும் இந்த சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது.

சங். 10. 17: 14. 37: 10, 35, 36. 73: 4, 11, 12.

அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும்மழையைப் பெய்யப்பண்ணுகிறார். மத். 5: 45.

மத். 13: 24—30, 40.

---

# இரக்ஷணிய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

ஈது சம்பவம் யாவையும் வேதியன் எதிர்ந்து
காதலா யிருகண் கணீர் மல்கிடக் கனிந்து
வேதநாயகன் கருணையை வியந்துளத் தேத்தி
ஓது சீர்த்தியாய் விடையுத வுட்புக வென்றான். 392

காலங் காட்டிய கதிர்களும் உடுக்களுங் கவினி
ஞாலங் காட்டிய பூதபௌதிகங்களும் நம்பன்
மூலங் காட்டிய இயல்விதி முறைதவறாது
சீலங் காட்டிய சீர்மையைக் கண்டனை செய்யோய். 393

இயல் முறைக்கமைந் தொழுகல்போ லெம்மையீடேற்றும்
செயல் முறைக்கமைந் தொழுகலும் நங்கடன் தீய
மயல் முறைப்படு மனஞ்செலும் நெறிப்படல் மதியன்று
உயல் முறைக்கிறை சித்தமே நலனென வோர்தி. 394

தமரநீர் உலகத்தவதரித்த சற்குருமுன்
உமது சித்தமே சித்தமென் றுவப்புடன் பணியும்
அமர நாட்டை யொத்தகனிலம் அமைக வென்றளித்த
விமல மந்திரம் ஜெபித்துமென் வேறொன்று விழைதல். 395

பித்தனோர்ந்த இப்பாத்திரம் பிரித்து நீரொடுக்கச்
சித்தமேல் அஃதாக என் சித்தமன் றென்று
வித்தகத்திரு மைந்தன் ஆத்துமத்துயர் மேவிக்
கெத்சேமில் வாய்விண்டமை கேட்டிலை கொல்லோ. 396

நல்குக்கேடென நன்மையை ஒருவுவம் நாசம்
பல்குந் தீமையை நன்மையாப் பற்றுவம் மதியற்



றல்கு சிந்தையேம் ஆதலின் அளவிலா ஞானம்
மல்கு தந்தையார் நமக்கறிந் தூட்டலே மரபாம். 397

சுருதி நாயகன் திருவுளங் கூட்டு நாள்தோறு
கருதி யாங்கு வீடடைதலே கடனெனக் கழறி
வருதி நீயெனச் சென்றிருள் மலிந்தவோர் அரங்கைக்
குருதிவாகர தாஸற்குக் காட்டினன் கூறும். 398

கூர்த்து நோக்குதி இரும்பினால் இயன்ற அக்கூட்டுள்
வேர்த்து விம்மி நெட்டுயிர்த்துடல் விதிர்ப்புற வெருண்டு
பார்த்திறங்கு சென்னிய னொருபதிதனை வினவி
வார்த்தை யாடுதி யென்றனன் மறை வியாக்கியானி. 399

நன்று நன்றெனக் கிறிஸ்தவன் நண்ணிலேதவறி
வன்றுயர்க் குறிமல்கிய வறுமுக நோக்கிக்
கன்று சிந்தையாய் யாரை நீ? கவலுமாறெவன் ஈண்ட்
ஒன்ற வந்த காரணமியா? துரைத்தியா லென்றான். 400

வினவு வாசகம் கேட்டலும் வெஞ்சிறை மறிந்த
வனவிலங்கெனத் தரிப்பிலா துழல்பவன் மறைதேர்
பனவ யானொரு கிறிஸ்தவன் பண்டெனைப் பலரும்.
கனவிலும் பிழைகண்டிலர் கண்டிலேன் யானும். 401

பிழையை யோர்பிழை யென்றுணராக் கொடும் பிழையார்
பிழையிலானெனப் பிழைபடப் புகழ்ந்திடும் பிழையை
பிழையென் றெள்ளிடாப் பித்தன்யான் பிழைபடப் பிழைத்த
பிழைபொறுப்பரோ பிழையிலா நீதியம் பெருமான். 402

வீடடைந்துய விரும்பியோய் வியன் பிரபஞ்சக்
காடடைந்தனன் சிற்றினப்ப படுகரிற் கவிழ்ந்தேன்
மாடடைந்து வந்தலகையுங் கெடுத்தது வலயக்
கூடடைந்து கெட்டேன் இனிக்கூறுவ தெவனோ. 403

பன்றிமாசறப் பன்முறை கழுவவே படினும்
சென்று சேற்றிடைப் புரள்வது போலும்வெந்திய
வன்றொடர்ப் படுஞமலிதான் கான்றதை மறுத்தும்
தின்று தேக்கெறிந் துழல்வது போலுமென் சீர்மை. 404

ஐயமின்றொரு நாள் அருவருத்தெனை அயலே
வையர் தள்ளும் இம்மாறுவேல் வழி பிழைத்ததனால்
தெய்வ வானமும் சீத்திடும் யாதினிச் செய்வல்
வெய்யபாதலம் அலதொரு புகலிலை மேலோய். 405

போந்த பாவியரெவரையும் புறக்கணியாத

சாந்தமூர்த்தி தண்ணருட்கடல் தயாநிதி தகைசால்
வேந்தனோர் திருக்குமர னென்றுரைப்பது மெய்ம்மை
ஆய்ந்த கேள்வியாய் ஐயமெட்டுணையிலை அதற்கே. 406

அனையதாயினும் நன்றிலேன் அறநெறி திறம்பி
நினைவிற் செய்கையில் ஈட்டிய நீச வெவ்வினைகள்
இனையதித்துணை யென்றுரை யாடுதற் கெளிதோ
கனைகடற் கரை மணலினுக் கதிகமாங் காண்டி. 407

வான நாயகன் இசய மாளிகையினில் வைத்த
ஞானதீபத் தையணைத்தனன் நல்லிளங் கோமான்
மேனிவார்ந்த செங்குருதியை மதித்திலன் வெறுத்தேன்
ஊனமில் மனச்சான்றையும் உள்ளுறப் புதைத்தேன். 408

ஈசன் மைந்தனைத் தினந்தினஞ் சிலுவையில் ஏற்றி
நீசவெவ்வினை உஞற்றினன் நிமல வீட்டுய்க்கும்
மாசில் நீதியை வரைந்தனன் மகிதலத் தெவர்க்கும்
நாசகாலத்து மதிவிபரீதமாம் நல்லோய். 409

ஆவலாய் அகத்தமர்ந்து போராடிய அருள்கூர்
தேவ ஆவியும் முனிந்தெனை விடுத்தனர் சிதையா
ஜீவவாக் கெலாம் எனக்கலவென்பது திண்ணம்
பாவகாரியேன் இதயமும் வைரக்கற்பாறை. 410

வேறு யானினிப் புகல்வதென் விபுதவேந்தருத்தக்
கூறு சாபமும் கோபமும் வானிடைக் குமுறி
வீறுவீறக் கணந்தொறும் கதித்தெனை வெருட்டும்
ஈறில் ஜீவனுக் கிரக்ஷமற் றினியிலை யென்றான். 411

வேறு.

கூட்டுளான் இனையகூறக் கொற்றவன் அருள்பெற்றுய்யும்
வீட்டுளானாக நின்ற வேதியன் விரைந்து பாவத்
தீட்டுளாய் எனினும் நம்பன் திருவருட் செயலோராதிக்
கேட்டுளானாக உன்னைக் கெடுத்ததென் மதிகொண்டென்றான். 412

நல்குமெய்ம் மகிழ்ச்சி யென்று நனிமதி மருண்டு தீமை
மல்கு சிற்றின்ப போகம் வரைவின்றி நுகர்ந்து வாணாள்
அலக நின்றயர்ந்தேன் இந்த அருஞ்சிறைப்பட்டேன் அந்தோ
புல்குதீவிடத்திற் ஜீவன் போமெனும் பொறியிலாதேன். 413

என்னுறு மதியீனத்தால் இயைந்த தூர்க்கரும் மாய
கொன்னுனைப் பகழிமாரி உளத்திடைக் குளிப்ப ஏவிக்
கன்னலுற் றேனைவாளாக் கடிந்து புண்படுத்தென்னுள்ளே
மன்னி நின்றுயிரை வாட்டும் வழுவறு ஜீவசாக்ஷி. 414



இலகு செந்நீதிப் பெம்மான் இருஞ்சிறைப் படுத்தெஞ்ஞான்றும்
விலகருந் தளையைப் பூட்டி விடுத்தனர் ஆதலாலே
உலகெலா மொருங்குகூடி உஞற்றினும் மீட்டற்கொல்லா
அலகில் வெஞ்சீற்றச் செந்தீ யவிக்குமோ அளியனேடம். 415

இனிவரும் நியாயத்தீர்ப்புக் கென்செய்கேன் ஈறின்றாகி
நனிவரு சதாநிர்ப்பந்த நாசத்தை உள்ளியுள்ளிப்
பனிவருமிதயத்தேன் மற்றென்னினிப் பகர்வலென்னாத்
துனிவருமுயிர்ப்பன் அஞ்சித் துடிதுடித் தலறிச் சோர்ந்தான். 416

நன்னிலை தவறியுற்ற நடுக்கமுந் திகிலுங் கண்டான்
பன்னிய மாற்றங் கேட்டான் வேதியன் பரிந்து நெஞ்சில்
கன்னில வெழுத்துப் போலக் காட்சியைக் கவினத் தீட்டி
மன்னிய குரவ எற்குன் பணியெது வழுத்து கென்றான். 417

தொண்டரைத் தெருட்டுந்தூய சுருதிநூல் வலவனீண்டு
கண்டு கேட்டறிந்த விந்தக் காட்சியைக் கருத்துள் ளூன்றிக்
கொண்ட நற்றவத்தை ஞான சீலத்தைக் கொளுத்துங் காம
மண்டெரி கனலா றைவாய் வழியினைச் செறித்தி மைந்த. 418

மதிநலங் கெடுந்தூர்ச் சீலம் மலியும் தீவினைகள் மல்கும்
பதிபகைவிஞ்சும் நிந்தைபலுகும் வெம்பழியும் சேரும்
கொதிநரகமும் அங்காக்கும் குவலயங் கூவுங் கூற்றைக்
கதி திருக்காப்புக் கொள்ளுங் காமப்பேய் கதுவுங்காலை. 419

விள்ளருங் கேட்டுக்கெல்லாம் வித்திது வாதலாலே
கள்ளமின்றாகி யுள்ளங் கனிந்துசெய் ஜெபத்தினாலும்
உள்ளுறு விரதத்தாலும் ஒருங்கறச் சிதைத்தல் வேண்டும்
தெள்ளியோய் பிறிதொன்றானும் சிதைபடாதாகு மன்றே. 420

சிற்றின்பப் பயன்கை நெல்லிக்கனி யெனத் தெரியக்கண்டாய்
பற்றறுத்தியோடுசெய்யும் பவித்திரான் மிகளே தூய
கொற்றவனுலகபோகங் கூட்டுண்டுகளிக்கும் நீரார்
இற்றிதை மறுது சேறி இலறவழியிறுதிகாறும். 421

அயலொரு காட்சி யுண்டங் கதனையும் அணுகி ஆய்ந்து
மயலறத் தெருண்டு சீவ மார்க்கம் நீ வழிக்கொளென்று
இயல் மனமயங்கி யாக்கைவிதிர்ப்புற இரங்கியேங்கித்
துயருறும் ஒருவனின்ற சூழலைக்குறுகிச் சொல்லும். 422

(இன்னும் வரும்.)

## சமாசாரத்திரட்டு.

**இங்கிலந்து.**—இங்கிலந்து தேசம் எங்குமுள்ள வர்த்தகக் கூட்டத்தாரின் பிரதிநிதிகள் லண்டனில் ஐக்கிய சபை கூடவிருக்கிறார்கள். அவர்கள் ஆலோசித்துத் தீர்மானிக்கும் விஷயங்கள் சுயாதீன வர்த்தகம், சம தீர்வை ஏற்பாடு இவைகளாம். மஹா ராணியவர்களின் சேஷ்ட குமாரத்தியை ஜர்மானிய சக்கரவர்த்தியின் புதல்வராகிய ஜர்மானிய இளவரசருக்கு மணம் புரிந்திருப்பது நமதிஷ்டருக்குத் தெரிந்த விஷயமே. அந்த இளவரசரின் சிரேஷ்ட குமாரராகிய பிரடிரிக் உல்லியம் விக்தோர் ஆல்பர்ட் என்னும் ராஜ பிரபுவுக்கு நாளது மாசம் பர்லின் நகரத்தில் விவாகம் நடக்கபோகிறதால் மஹா ராணியவர்களும் அந்த மங்களோற்சவத்துக்குப்போயிருந்து சிறப்பிக்கவிருக்கிறார்கள். பிரடிரிக் ராப்பட்ஸ் தளபதிக்கு நைட் பட்டம் சூட்டப்பட்டது. சூட்டும்போது காருண்ய ராணியவர்கள், தமது அரசாட்சி காலத்தில், தகப்பனுக்குக் கொடுத்த அப்பட்ட அந்தஸ்தை மகனுக்கும் தாமே கொடுத்தது இதுதான் முதல் தடவை என்று மொழிந்தார்களாம்.

**இந்தியா.**—சுகவீனமாயிருந்த இந்திய தேசாதிபதியாகிய கவர்னர் ஜெனரலவர்கள் இப்போது சுகமாயிருக்கிறார்கள். சென்னை ராஜதானிக்கு கவர்னராக நியமகம் பெற்ற கௌரவ ஆதாம் துரையவர்கள், சென்ற டிசம்பர் மாசத்தில் வந்து டியூக் ஆப்பக்கிங்காம் பிரபு அவர்களிடத்திலிருந்து ஆளுகையையொப்புக்கொண்டார்கள். பக்கிங்காம் பிரபு அவர்கள் சீமைக்குப் பிரயாணமானார்கள். வழியில் கயிரோ நகரத்தில் சிறிதுநாள் தங்கி, பெரிய பலபுஜக்கோபுரத்தைப் பார்வையிட்ட பின்பு, சென்ற மாசத்தின் அறுதியில் சீமைக்குப்போய்ச் சேர்ந்திருப்பார்கள. நாளது மாசம் 18உயில் இந்துதேசமுழுவதிலும், இலங்கையிலும் குடிமதிப்புச் செய்யும்படி கவரண்மெந்து உத்தரவு பிறந்திருக்கிறது

**துர்க்கி.**—துர்க்கிக்கும் கிரேக்கை ராச்சியத்துக்குமுள்ள பிணக்கு இன்னும் தீரவில்லை. இவ்விரண்டு இராச்சியத்துக்குமுள்ள எல்லைவிவாதத்தைத் தீர்க்கும்படி ஐரோப்பாவின் முக்கிய இராஜாங்கத்தாரை துர்க்கி கேட்கின்றது. இராணுவங்களைக் குறைக்கும்படி ஐரோப்பா ராஜாங்கத்தார் சொல்லிய யோசனையை கிரேக்கை மறுத்துவிட்டு, துர்க்கியோடு யுத்தஞ்செய்யத் தீர்மானித்திருக்கிறது.

**சீனு.**—சீனுவுக்கும் ருஷியாவுக்கும் குல்ட்ஜா பிரதேசத்தையிட்டு உண்டான விவாதம் சமாதானமாய்த் தீர்மானமாகிறதற்கிடமில்லாதிருக்கிறபடியால் அவ்விரு இராஜாங்கத்தாருக்குள்ளும் யுத்தமுண்டாகுமென்று நினைக்க ஏதுவாயிருக்கிறது.

---



## நோட்டீஸ்.

மகா கனம்பொருந்திய சென்னை அத்தியக்ஷரவர்களின் வேதாகம பந்தைய பரீக்ஷை

### 1881.

திருநெல்வேலி ஜில்லாவில் 1881-ம் ஹூ ஜூலை மாசத்தில் நடக்கும் பந்தயபரீக்ஷைக்குப்போக விரும்புகிறவர்கள் நாளது வருஷம் ஏப்பிரல்மீ 30உக்குள்ளாக, இடையன்குடியிலிருக்கும் கனம்: தானியேல் சாமுவேல் ஐயரவர்களுக்கு தங்கள்பெயரை எழுதியனுப்புகிறதுமல்லாமல், நபர் 1-க்கு நாலணாகட்டணமும் அனுப்புவிக்கவேண்டும்.

அப்படி பேர் எழுதியனுப்புகிறவர்கள் தங்கள் பேர்களைத் தெளிவாயும் பூரணமாயும் எழுதவேண்டியது மன்றி, தங்கள் உத்தியோக மின்னதென்பதையும் வாசஞ்செய்கிற மிஷியன் சேகரத்தின் பேரையும், இது முன் நடந்த பரீக்ஷைகளில் தாங்கள் ஏதாவது பந்தயம் பெற்றிருந்தால் இன்னின்ன வகுப்பில் இவ்விதபந்தையம் பெற்றிருக்கிறோமென்கிற விபரத்தையும் எழுதியனுப்பவேண்டும்.

### 1881-வருஷத்துக்கு பாடங்கள்.

கிரேக் புதியஏற்பாடு. (1) பரி. யோவான் சுவிசேஷம் II. அதிகார முதல் முடிவுரை.
(2) தெசலோனிக்கரின் 2 நிருபங்களும்.

தமிழ் ... .... (1) யோசுவாவின் புஸ்தகம்.
(2) ரோமர் நிருபம்.
(3) அற்புதங்களின் வியாக்கியானம் திரெஞ்சு என்பவரியற்றிய புஸ்தகம் XV. முதல் முடிவுவரை.
(4) கொலோசியர் நிருபம், மனப்பாடம்.

1882-ம் வருஷத்து பரீக்ஷைக்குரிய பாடங்கள் நாளது வருஷமத்தியில் பிரசித்தப்படுத்தப்படும்.

---

மகா கனம் பொருந்திய சென்னை அத்தியக்ஷரவர்களின் வேதாகம பந்தைய பரீக்ஷை

1881ஹூ ஜூலைமீ 12-ம் 13-ம் தேதிகளில் நடக்கும்.

பெப்புருவரிமீ நாள் 28-தைமீ 21௳முதல், மாசிமீ 18௳வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௨௧ | சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை பிரசங்கி. 2: 11. |
| பு | 2 | ௨௨ | நகைக்க ஒருகாலமுண்டு; புலம்ப ஒருகாலமுண்டு. 3: 4. |
| வி | 3 | ௨௩ | இதோ ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக்கண்டேன். 4: 1. |
| வெ | 4 | ௨௪ | தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய். 5: 2. |
| ச | 5 | ௨௫ | எல்லாரும் ஒரே இடத்துக்குப்போகிறார்களல்லவா ! 6: 6. |
| ஞா | 6 | ௨௬ | தேவனுடைய செயலைக் கவனித்துப்பார். 7: 13. |
| தி | 7 | ௨௭ | துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கமாட்டாது. 8: 8. |
| செ | 8 | ௨௮ | யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே நலம். 9: 18. |
| பு | 9 | ௨௯ | படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான். 10: 8. |
| வி | 10 | ௩௰ | விழுந்த இடத்திலேயே மரம் கிடைக்கும். 11: 3. |
| வெ | 11 | ௧ | நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. 12: 1. |
| ச | 12 | ௨ | உமது நாமம் ஊற்றுண்ட பரிமளதைலம். உன்னதப்பாட்டு 1: 3 |
| ஞா | 13 | ௩ | என் நேசர் என்னுடையவர்; நான் அவருடையவள். 2: 16. |
| தி | 14 | ௪ | என் ஆத்துமநேசரைக் கண்டீர்களா ! 3: 3. |
| செ | 15 | ௫ | லீபனோனிலிருந்து என்னோடே வா. 4: 8. |
| பு | 16 | ௬ | அவரைத் தேடினேன்; அவரைக்காணவில்லை. 5: 6. |
| வி | 17 | ௭ | நாங்களும் அவரைத் தேடுவோம். 6: 1. |
| வெ | 18 | ௮ | உன்பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது. 7: 1. |
| ச | 19 | ௯ | என் நேசரே! தீவிரியும். 8: 14. |
| ஞா | 20 | ௧௰ | என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது. ஏசாயா. 1: 3. |
| தி | 21 | ௧௧ | கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள். 2. 5. |
| செ | 22 | ௧௨ | துன்மார்க்கனுக்கு ஐயோ! 3: 11. |
| பு | 23 | ௧௩ | மகிமையானவைகளின் மேலெல்லாம் காவல் உண்டாயிருக்கும். |
| வி | 24 | ௧௪ | எனக்கும் என் திராட்சத்தோட்டத்துக்கும் நியாயந்தீருங்கள் 5:3 |
| வெ | 25 | ௧௫ | உன் பாவம் நிவிர்த்தியானது. 6: 7. |
| ச | 26 | ௧௬ | நீங்கள் விசுவாசியாவிட்டால் நிலைபெறமாட்டீர்கள். 7: 9. |
| ஞா | 27 | ௧௭ | இதோ! நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்தபிள்ளைகளும். 8: 18. |
| தி | 28 | ௧௮ | அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. 9: 7. |

## விசேஷ நாட்கள்.

2. பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்.
6. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 5-ம் ஞாயிறு.
13. செப்துவகெசிமா ஞாயிறு.
14. பௌரணமி.
20. செக்சகெசிமா ஞாயிறு.
24. பரி. அப். மத்தியாவின் திருநாள்.
27. கின்குவகெசிமா ஞாயிறு.
28. அமாவாசை.

# நற்போதகம்.

௩. மார்ச்சுமீ. ௲௮௮௧ ௵.

## யோசுவாவின் புஸ்தகம்.

## XII. அதிகாரம்.

இஸ்ரவேலர் மோசே, யோசுவா காலத்தில் பிடித்த தேசங்களின் அட்டவணை.

2. எமோரியரின் இராசாவாகிய சீகோனின் இராச்சியம் ஆர்னோன் ஆற்றின் நடுமையமட்டும் எட்டியிருந்தது. பொதுப்பட ஆறானது இரண்டு அதிபதிகளுக்கும் பாதியாக பிரிக்கப்படுவது எக்காலத்திலும் வழக்கம். சீகோன் இராச்சியத்தைச் சேராததும் மோவாபியருக்குச் சொந்தமுமான ஆக்ரோவேர் பட்டினம். உபா. 2: 9, 18 ஆர்னோன் ஆற்றின் நடுமையத்திலிருந்தது. உபா. 2: 36. 3: 16. ஆதலால் சீகோன் இராச்சியத்தின் எல்லையை திட்டமாகக் காண்பிக்கும்படியாக அப்படிச் சொல்லியிருக்கிறது.

3. சீகோன் இராச்சியத்தின் மேல் எல்லை கின்னரோத் கடலுக்கும், உப்புக்கடலுக்கும் கிழக்காகவிருந்தது.

"சமனான வெளியின் கடல்" முன் சமனானதும், செழிப்புமுள்ள வெளியானது இக்காலத்தில் உப்புக்கடலாய் மாற்றப்பட்டுப்போயிற்று.

4, 5. பாசான் இராச்சியம், யாபோக் நதிக்கும் எர்மோன் மலைக்கும் நடுவிலுள்ளது. இது 3-பங்காகப் பிரிக்கப்படும். வடக்கே அர்கோப் சீமை நடுவில் பாசான், தெற்கில் கிலேயாத் தேசமே. இதுவே செழிப்பும் கன்றுகாலிகளுக்கு நல்ல மேய்ச்சலுமான பூமி. இதில் நல்ல கர்வாலி மரங்களுண்டு. ஏசா. 2: 13. சகரி. 12: 2.

7. ஆலாக் மலை அதாவது (Smooth) மொட்டை மலை. சிலர் லீபனோன் மலைகளில் ஒரு பங்குக்குப் பேர் என்பார்கள். சிலர் ஏதோமி

னுள்ள சேயீர் மலையைக் குறிக்கிறதென்பார்கள். எர்மோன் மலையை சீதோனியர் சீரியோன் என்றும், எமோரியர் அதை சேனீர் (பனிக்கட்டி) என்றும் சொல்வார்கள்.

8. வனாந்தரமென்பது முழுவதுமாய் சனசஞ்சாரமில்லாத இடமென்று பொருள் கொள்ளக்கூடாது. அதிகக் குடியிருப்புகளில்லாத கொஞ்ச சனமுள்ள கிராமங்களிருக்கிறதற்கு வழக்கமாய்ச் சொல்லப்படும். 1 இராசா 2: 34. 9: 18. மத். 1: 3.

18. ஆலேக் ஆசேர் கோத்திரத்தில் ஒரு பட்டினம். யோசு. 19: 30. யூதாக்கோத்திரத்தில் ஒன்று இருக்கிறது. 1 சாமு. 4: 1. 29: 1 சூரியா நாட்டில் ஒன்றிருக்கிறது. 1 இராசா 20: 26. 2 இரா. 13: 17.

"லசரோன்" அப். 9: 35-ல் சொல்லப்படுகிற உலிதா என்னும் கிராமத்துக்குச் சமீபமான சாரோன் பட்டினமாயிருக்கலாம்.

23. கில்காலுக்கடுத்த சாதிகளின் இராசாவென்பது, இஸ்ருவேலர் கானானில் முதலாவது பாளையமிறங்கின இடமல்ல, அங்கே பட்டினமுமில்லை, இராசாவுமில்லை. அநேகர் நினைக்கிறபடி, வியாபாரத்துக்கும் பற்பல தொழிலுக்குமாக அநேக சனங்கள் போய்க் குடியிருந்த சமுத்திரக் கரைக்குச் சமீபமான கலிலேயாவாயிருக்கலாம். ஆதி. 14: 1. சாதிகளின் இராசாவாகிய திதியால் இருந்தான்.

24. கானான்தேச முழுவதிலும் 31-இராசாக்களிருந்தார்கள். இவர்கள் கொஞ்சமான தேசத்தில் ஆண்டபடியால் இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பட்டினமும் அதைச்சேர்ந்த சிறு பட்டிகளும் மாத்திரம் இருந்திருக்கலாம். இந்த தேசம் ஒன்றின்பின் ஒன்றாய் லகுவாய் செயிக்கப்படும்படிக்கு ஞானமுள்ள தேவன் முன்னறிந்து இப்படித் திட்டம்பண்ணியிருக்கிறார். ஆயியின் இராசாவுக்கும், பெத்தேலின் இராசாவுக்கும் மொத்தமாய்க் குடிகள் 12,000 மாத்திரந் தானே. ஒவ்வொரு பட்டினத்துக்கும் ஒரு அதிபதியிருந்தான். இதுவே எத்தேசத்திலும் பூர்வீக வழக்கமென்பதற்கு உலக சரித்திரங்களில் விபரங் காணலாம்.

## கேள்விகள்.

1. மோசே பிடித்த தேசங்களின் எல்லையைச் சொல்லு? அவைகள் யாருக்குக் கொடுக்கப்பட்டது? இஸ்ருவேலர் செய்த பாவத்தினிமித்தம் வந்த தண்டனையும் முதலாவதாக, மூந்தி சுதந்தரம்பெற்றவர்களுக்கு சம்பவித்ததென்று காட்டுங்கள்?

2. யோசுவா பிடித்த தேசங்களின் எல்லையெது? அதை தேவன் முன்னமே குறித்திருந்தாரா, ஏன்?



3. கானானின் வங்கிஷத்தாரை, ஆதி. 10: 15—18. அதிகமாயும். ஆதி. 15: 19—21. 10-சாதியாரும் உபா. 7: 1-ல் 7-சாதியாரும், இங்கே 6-வகுப்பார் மாத்திரம் சொல்லியிருப்பதென்ன?

4. கானான்தேசம் வெகு செழிப்புள்ள தேசமென்பதற்கு இந்த அதிகாரத்தில் வருகிற குறிப்பென்ன? இந்தக் காலத்தில் அதின் ஸ்திதி எப்படி, ஏன்?

5. கெசூரியர், மாகாத்தியர் இவர்களுடைய வரலாறு என்ன?

6. ஓர்மா, லாகீஸ், மெகிதோ, தோர், திர்சா, தப்புவா இப்பட்டினங்களைப்பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதும்.

7. யூதாக்கோத்திர நாட்டுக்குள் எத்தனை இராசாக்களிருந்தார்கள்? அவர்களிருந்த பட்டினங்களில் நடந்த விசேஷங்களென்ன?

## XIII. அதிகாரம்.

1. யோசுவா மரிக்கையில் 110-வயதுள்ளவராயிருந்தபடியால், தேசம் ஜெயிக்கப்படவும், பிரித்துக்கொடுக்கவுமாக 10-வருஷம் சென்றிருக்கும். ஆகையால் இப்போது அவருக்கு வயது 100-இருக்கும். தேவன் யோசுவாவுக்கு நியமித்ததும் கற்பித்ததுமான வேலையை, தாமதமில்லாமல் நிறைவேற்றச் சொல்லுகிறார்.

2. யோசுவாவால் ஜெயிக்கப்படாமல், இஸ்ருவேலரால் செயிக்கப்படும்படிக்கு மீதியாக விட்டிருந்த தேசங்களின் அட்டவணை இது முதல் சொல்லப்படுகிறது. நியாயா. 3: 1—5.

3. சீகோர். எசா. 23: 3. எரே. 2: 18.

பெலிஸ்தியர் பூர்வீகக் குடிகளாகிய கானானியரைத் துரத்திவிட்டு, அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டிருந்தபடியால், உபா. 2: 23. ஆமோஸ். 9: 7. பெலிஸ்தியர் தேசமும், இஸ்ருவேலருக்குச் சேரவேண்டிய சுதந்தரமே. ஆவியரென்ற வகுப்பார், பெலிஸ்தரென்று அழைக்கப்படுகிற கப்தோரியரால் தங்கள் ஆதி ஸ்தானத்தைவிட்டுத் துரத்தப்பட்டாலும், அவர்களில் மிச்சமானவர்கள் பெலிஸ்தியர் தேசத்துக்குச் சமீபமாய் குடியிருந்தார்கள். உபா. 2: 23.

4. இப்போது பெலிஸ்தியர் வசமாயிருக்கிற சமுத்திரக் கரையோரமான தென்திசை தேசம் துவக்கி, சீதோன்வரைக்குமுள்ள கரைதுறைத் தேசங்கள் யாவும் ஜெயிக்கப்படாமல் கானானியர் வசமிருந்தன. கானானியர் கடல் அருகே குடியிருந்தார்களென்று வேவுகாரர் வந்து சொன்னார்களே. எண். 13: 29.

"ஆபேக்" யூதேயாவிலுள்ளதல்ல, யோசுவா. 15: 53. ஆசேர் கோத்திரத்திலுள்ளதாம். நியாயாதி. 1: 31.—எமோரியர் திரள் சாதி

யாயும், வல்லபசாலிகளுமானதால் யோர்தானுக்கு அப்புறத்திலும் இப்புறத்திலும், வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்குமாக சிதறி பல இடங்களில் வாசம்பண்ணினார்கள்.

5. கிபிலியர் என்ற சனங்கள் சீதோனுக்கருகான கேபாலில் குடியிருந்தவர்கள். இவர்கள் சாலொமோன் கட்டின தேவாலயத்துக்கு மரங்களையும், கற்களையும் சவதரித்துக் கொடுத்த தீரியரோடே கூடவிருந்தவர்கள்: 1 இராசா 5: 18. எசேக். 27: 9.

யோசுவாவின் மரணத்துக்குப்பின்பு, இஸ்ரவேலர் அவிசுவாசமும் அக்கிரமக்காரருமாயிராவிட்டால் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அவர்களைத் துரத்திவிடுவேன் என்பதாக கர்த்தர் சொல்லுகிறார். இப்படி தேசங்கள் ஜெயிக்கப்படாமலிருக்க, யோசுவா பங்கிட்டுக் கொடுக்கும்படி தேவன் சொன்னதற்கு முகாந்தரமென்ன? பிற்காலத்தில் இஸ்ரவேலர் அந்த தேசங்களை செயிப்பதற்கு, தேவன் உதவியாயிருப்பரென்பதற்கு அடையாளமாகவும்.—கானானியரை ஜெயிக்கிற வேலை இஸ்ரவேலர்மேல் விழுந்த பெரிய கடமையென்றும், அப்படிச் செய்யாவிட்டால் இஸ்ரவேலர் அதிக குற்றவாளிகளென்று அறியச் செய்யவும்,—இஸ்ரவேலர் கானானியரோடே எவ்வளவெனிலும் உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும், கூட்டுறவுகளும் செய்யக்கூடாதபடிக்கு இவர்களுக்கும் அவர்களுக்கும் நடுவே பிரிவினையின் சுவரை வைக்கவும் நோக்கமாய் அந்தக் கட்டளை செய்தார்.

8. மோசே தேவஉத்தரவுப்படி 2½ கோத்திரத்துக்கும் பங்கிட்டுக் கொடுத்ததைக் கெடுக்காதபடிக்கு யோசுவா எச்சரிக்கப்படுகிறார்.

9. தீபோன், மெதேபா என்ற 2-பட்டணங்களும், மோவாபியர் வசமாயிருந்ததை எமோரியர் பிடுங்கிக்கொண்டார்கள். எண். 21: 30. இவர்களிலிருந்து இஸ்ரவேலர் பறித்துக்கொண்டார்கள். இஸ்ரவேலர் சிறைப்பட்டுப்போனபின்பு மோவாபியர் அவைகளை தங்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். ஏசா. 15: 2.

13. மோசே ஜெயித்த தேசம் இஸ்ரவேலருக்குப் போதுமானதாலும், இஸ்ரவேலர் சத்துருக்களைத் தேடித் துரத்த வேலையாயிராமல் யோர்தானைக் கடந்துபோய் கானான்தேசத்தைப் பிடிக்க ஆயத்தம்பண்ணவேண்டியதாலும், இந்தச் சாதியார் செயிக்கப்படாமல் விடப்பட்டிருந்தார்கள்.

14. மோசே லேவியருக்கு யோர்தானுக்கு அப்புறத்தில் சுதந்தரம் கொடுக்கவில்லை. (வா. 33) மோசே என்பர் அந்தத் தேசங்களை எல்லாம், ரூபனியருக்கும், காதியருக்கும், மனாசேயின் பாதி கோத்திரத்தாருக்கும் பங்கிடவேண்டிய முகாந்தரமும், யோசுவா (வா. 7.) 9½ கோத்திரத்தாருக்கு தேசத்தைப் பங்கிடும்படி கற்பிக்கப்பட்ட முகாந்தரமும் காட்டியிருக்கிறது. லேவியருக்குச் சுதந்தரம் கொடுக்கப்



படாததே அந்த முகாந்தரம்.—இஸ்ரவேலருடைய எல்லா வகைப் பலிகளும் முதற்பலன்களும், தசமபாகமும், எல்லாவித காணிக்கைகளுமே லேவியருடைய சுதந்தரம். லேவியர் தங்கள் சகோதரர் கானானில் சுதந்தரம் அடைகிறதைப் பார்த்து, பகை, பொறாமை, வன்கண்மை, எரிச்சல் முதலிய பாவங்களில் சிக்கிக்கொள்ளாதபடி இந்த வாக்கியம்போல் அநேக இடங்களில் அவர்களுக்கு ஆறுதல்சொல்லப்படுகிறது. எண். 18: 20. 23: 24. யோசு. 14: 3, 4. 13: 32, 33.

15. மோசே ரூபேன் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களுக்குத்தக்கதாகச் சுதந்தரம் கொடுத்தாரென்னும்போது, பெரிய வம்சங்களுக்கு மாத்திரம் கொடுத்தாரென்றும், மோசேயுடைய சட்டப்படி சார்ந்த உத்தியோகஸ்தர் பற்பல வம்சங்களுக்கும், வம்சங்களின் உட்பிரிவுகளுக்கும் பங்கிட்டுக்கொடுத்தார்கள் என்றும் எண்ணவேண்டியது.

.17. எஸ்போன், திபோன், ஆகரோத் என்ற பட்டினங்கள் ரூபேன், காத் கோத்திர எல்லை நடுவிலிருப்பதால், சிலவேளை ரூபேனியரைச் சேர்ந்த நாடுகளாகவும், யோசு. 14: 17: எண். 32: 37. சிலவேளை காதியரைச் சேர்ந்ததாகவும், எண். 32, 34. 1 நாளா. 6: 80, 81-லும் சொல்லியிருக்கிறது. எஸ்போன் பட்டணம் லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. யோசு. 21: 39. எருசலேம் பட்டணம் யூதராலும், பென்யமீனராலும் சேர்த்திக்கையாய் சுதந்தரிக்கப்பட்டதுபோல் இவைகளுமிருக்கலாம்.

19. பள்ளத்தாக்கின் மலையானது இஸ்ரவேலரால் கனமாயெண்ணப்பட்டது. மோசே அடக்கம்பண்ணப்பட்ட இடம் அதற்குச் சமீபம். உபா. 24: 1, 6.

21. எமோரியருடைய இராசாவின் இராச்சியம் முழுவதும் என்கும்போது அதின் மிகுதியான பங்கு என்றருத்தமாம். இந்தக் கருத்தாகவே மத். 3: 5-ல் "யோர்தானுக்கடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும்" என்றும் மத். 4: 23-ல் "கலிலேயா எங்கும்" என்றும் சொல்லியிருக்கிறது. எண். 21: 23, 24 ஐ எண். 31: 8 ஓடே ஒத்துப் பார்க்கையில், நமக்குத் தோன்றுகிறபடி ஒரே காலத்தில் அல்லது ஒரே யுத்தத்தில் மீதியானா பிரபுக்கள் வெட்டப்பட்டார்களென்றல்ல, முந்தின யுத்தத்தில் நடந்த மாதிரிப்படி நடந்திருக்கிறது. மீதியானின் பிரபுக்கள் இஸ்ரவேலர்மேல் பகையிருந்த அக்காலத்திலே கொல்லப்பட்டதாலும், அவர்களும் சீகோனுக்குச் சம்பந்தப்பட்டவர்களாயும், அவனுக்குக் கீழ் அதிபதிகளுமாயிருந்தபடியாலும், அவர்களுடைய பேர் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. மீதியானில் இராசாக்களிருந்தபோது, எண். 31: 8. மீதியானின் பிரபுக்கள் சீகோனுக்குக் கீழ் அடங்கியிருப்பதெப்படி? அக்காலத்தில் அநேகம் சிற்றரசுகள் பெரிய இராசாக்களுக்குக் கீழாக விருப்பார்கள். அந்தப்படி இந்தப் பிரபுக்கள் சீகோனுக்கு கப்பம்

கொடுக்கிறவர்களானதால் சீகோனுக்கு யுத்தத்தில் உதவிசெய்திருப்பார்கள். அவர்கள் இந்தக் காலத்தில் கொல்லப்படவில்லை. சீகோன் இராசா அந்தத் திசைகளிலுள்ள மோவாபியரை அழித்தபோது, மீதியானவர்களையும் அவர்களோடே சம்பந்தப்பட்ட மீதியானரையும் பயப்படுத்தி இப்படிப்பட்ட கப்பங்கொடுக்கும்படி அடக்கியிருப்பான்.

22. பீலேயாம் குறிகாரன். எண். 22: 5. 31: 8. தீர்க்கதரிசியென்னப்படுகிறான். 2 பேது. 2: 16.

24. "அம்மோன் புத்திரரின் பாதி தேசமும்" இந்தப் பாகம் முன் ஏமோரியர் வசமானதால், எண். 21: 26. இஸ்ரவேலருக்குப் பாத்தியப்பட்டதுதான். நியாயாதி. 1: 5. அம்மோனியருடைய சுதந்தரத்தில் இஸ்ரவேலருக்குப் பாத்தியமில்லையென்று முன்னமே எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். உபா. 2: 9.

29. ரூபேனியர், காதியரைப்போல மனாசேயரும் விரும்பவில்லை. எண். 32: 1. ஓகை செயிப்பதில் மனாசேயின் கோத்திரத்தாராகிய மாகீர் வெகு வல்லபத்தைக் காட்டினதாலும்,—தேசம் அந்த 2-கோத்திரத்துக்கு மிஞ்சியிருந்தபடியாலும், மற்ற 2-கோத்திரத்தாருக்கு உதவியாயிருக்கும்படியாகவும் மனாசேயின் கோத்திரத்துக்கும் பங்கு கொடுக்கப்பட்டது.

30. யாவீர் தகப்பன் வழியில் யூதாக்கோத்திரமாயினும், 1 நாளா. 2: 21, 22. மனாசேயின் மகனாக அழைக்கப்படுகிறார். எண். 32: 41. யாவீர் மனாசேயின் மகளைக் கலியாணஞ்செய்து மனாசேயின் கோத்திரத்தாரான வீரரோடே சேர்ந்து அவர்கள் உதவியால் 60-பட்டணங்களைப் பிடித்தார். உபா. 3: 4, 14.

31. மனாசேயின் புத்திரர் இங்கே மாகீரின் பிள்ளைகள் என்னப்படுகிறார்கள். மாகீரோ விசேஷித்தவனும் மனாசேக்கு மீதியான ஒரே மகனுமாயிருந்தவன். எண். 26: 29. 1 நாளா. 7: 14—16.

## கேள்விகள்.

1. செயிக்கப்படாத தேசங்களும் சாதிகளுமெவை? அவைகளைப் பற்றித் தெரிந்ததை எழுதும். பெலிஸ்தியர் தேசம் எப்படி இஸ்ரவேலரைச் சேரவேண்டியது?

2. யோசுவாவை சீக்கிரம் தேசத்தை இஸ்ரவேலருக்கு பங்கிட்டுக்கொடுக்கச் சொன்ன நோக்கமென்ன? இதினால் நாம் என்ன படிக்கிறோம்.

3. தேவன் 2½ கோத்திரத்துக்கும் மோசேயைக்கொண்டு கொடுத்த தேசத்தை இங்கே யோசுவாவுக்குச் சொல்லவேண்டியதென்ன?



4. பீலேயாமைப்பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதும். அவனைப் பற்றிப் புதியஏற்பாட்டில் சொல்லியிருப்பதென்ன? இவனைப்போல பொல்லாதவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னதற்கு உதாரணங்களுண்டா?

5. காத் கோத்திர நாட்டிலுள்ள விசேஷித்த பட்டினங்களையும் அவைகளில் சம்பவித்த விஷயங்களையும் எழுதும்.

6. லேவியருக்குரிய சுதந்தரமென்ன? மற்றக் கோத்திரங்களுக்கொத்தபடி லேவியருக்குச் சுதந்தரங் கொடுக்கப்படாத முகாந்தரமென்ன?

7. பெலிஸ்தியருடைய 5-பட்டினங்களை எழுதி, அவைகளின் விசேஷங்களை எழுதும். பெலிஸ்தியர் இஸ்ரவேலருக்கு வெகுநாளாய் சத்துருக்களாயிருந்தார்களென்பதற்கு விபரமுரைக்கவும்.

8. பெத்பெயோர், அஸ்தரோத், எதிரோயி, கீரியாத்தாயீம், கீலேயாத், எஸ்போன், மக்னயீம் இந்தப் பட்டினங்களிருக்கிற இடத்தைக் காட்டுகிற ஒரு சிறு படத்தை எழுதி, அதின் விசேஷங்களில் ஒவ்வொன்றுக்கும் 3-காரியங்கள் எழுதவும்.

---

## XIV. அதிகாரம்.

1. ஆசாரியனாகிய எலியேசர். யோசு. 8: 33. 9: 15, 18. 19: 51. இவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் நன்றாய்த் தேறினவர். அந்தப் பிரமாணங்களைக்கொண்டு தான் தேசமும் ஒழுங்காய்ப் பங்கிடப்படவேண்டியது. வருத்தமான சமயங்களில் தேவனிடத்தில் ஆலோசித்துக்கொள்வார். கோத்திரப் பிதாக்களின் தலைவர்கள் தேசம் பங்கிடுவதற்கு ஒவ்வொரு கோத்திரத்திலிருந்து ஒருவராக தேவனால் நியமிக்கப்பட்டும், பேரிடப்பட்டும், முன் குறிக்கப்பட்டுமிருக்கிறவர்களே. எண். 34: 19. அவர்களில் யாராவது ஒருவர் இறந்துபோயிருப்பார்களானால், யோசுவாவும் எலியேசரும், தேவஉத்தரவுப்படி பதிலாட்களை நியமித்துக்கொள்வார்கள்.

2. தேசம் சீட்டுப்போட்டுப் பங்கிடுவதற்கு தேவன் மோசேயைக்கொண்டு கட்டளையிட்டிருந்தார். எண். 26: 55. 33: 54. இஸ்ரவேலர் தங்களுடைய பங்குகளுக்குரிய வித்தியாசங்களைக்குறித்து, பொறாமையும், பகையும், திருப்தியில்லாமையும் ஒருவருக்கொருவர் சண்டைகளுமில்லாதபடிக்குமிருக்க சீட்டினால் பங்கிடப்பட்டது. மோசேயும், இயாக்கோபும் சொன்ன தீர்க்கதரிசனப்படி ஒவ்வொரு கோத்திரத்துக்கும் சுதந்தரம் கிடைத்ததைப் பார்க்கும்போது தேவனுடைய ஞானமும், சத்தியமும் உறுதிப்படுகிறது. தங்களுக்குக் கிடைத்த சுதந்

தரத்தைப்பற்றி யாராவது முறைப்பாடு செய்வார்களானால் அவர்கள் தேவகரத்துக்கு விரோதிகளாக எண்ணப்படுவார்கள். இந்தச் சீட்டு ஒவ்வொரு கோத்திரத்துக்குமுரிய பங்கை தீர்மானிக்கும். ஆனால் அந்தக் கோத்திரத்துக்குரிய எல்லையை திட்டமாய்த் தீர்மானிக்கமாட்டாது. இந்தப் பங்குகள் கோத்திரங்களின் பெருக்கத்துக்குத்தக்கதாக பிற்காலத்தில் விஸ்தாரமாக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் போயின. எண். 26: 53—56 33: 54. அதுவும் முன் குறிக்கப்பட்ட தலைவர்களால் மாத்திரம் நடத்தப்படும். யோசு. 17: 14—18.

சீட்டுப்போடப்பட்ட விதமாவது. (A. Clark.)

1. தேசம் 10-பங்காகப் பிரிக்கப்பட்டது.

2. ஒவ்வொரு பங்கும் ஒவ்வொரு விசேஷித்த பேராக அழைக்கப்பட்டது.

3. ஒவ்வொரு பங்கின் பேரும் தோற்கடுதாசித் துண்டிலாவது, மரக்கட்டைத் துண்டிலாவது எழுதப்பட்டது.

4. ஒவ்வொரு கோத்திரத்தின் பெயரும் அப்படியே 10-துண்டுகளில் எழுதப்பட்டது.

5. ஒவ்வொரு பங்கின் பேரும், ஒவ்வொரு கோத்திரத்தின் பேரும் 2-பாத்திரங்களில் போடப்பட்டன.

6. யோசுவா கோத்திரத்தின் பேர்களிருக்கிற பாத்திரத்தில் கைபோட்டு ஒன்றையெடுக்க, எலியேசர் பங்குகளின் பேர் போட்டிருக்கிற பாத்திரத்தில் ஒன்றையெடுத்தார்.

7. எடுக்கப்பட்ட பேரையும் பங்கையும் எல்லாருக்கு முன்பாகத் தெளிவாய் வாசிக்க அதுவே ஒவ்வொரு கோத்திரத்துக்கும் தேவன் தீர்மானித்த பங்கென்று தீர்மானிக்கப்பட்டது.

4. யோசேப்புக்கு 2-கோத்திரத்துக்குரிய பங்கு கிடைத்தது. ஆதி 48: 5. 1 நாளா. 5: 1, 2. லேவி நீங்கலாக கானான்தேசம் 9½ கோத்திரத்துக்குப் பங்கிடப்பட்டது.

6. யூதாவின் புத்திரர், யோசுவாவும் மற்றவர்களும் தேசம் பங்கிடுவதைப்பற்றி ஆலோசிக்கும் காலத்திலாவது, யோசுவாவும் காலேபும், இஸ்ரவேலரும் யோசு. 10: 36-ல் எபிரோனுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப்போகும் காலத்திலாவது வந்திருப்பார்கள். பொதுப்பட இந்தக் காரியம் சத்துருக்களைப் பின்தொடருகையில் அல்ல, யோசுவா கில்காலிலிருந்தபோது சம்பவித்தன. இவர்கள் காலேபுக்காக பரிந்து பேசும்படிக்கல்ல, தேவனால் அவனுக்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டதை யோசுவா நிறைவேற்றுவதைப் பார்க்கவும், காலேபுக்குப் பிரியமுண்டாக்கவும் கூடிவந்தார்கள். கில்காலில் தேசம் பங்கிடுகிற வேலை துவக்கினாலும், சீலோவில்தான் அது முற்றுப்பெற்றது



யோசு. 18: 1. காலேப் எபுன்னேயின் குமாரன் என்னப்படுகிறான். 1 நாளா. 4: 15. எஸ்ரோனின் குமாரனாகிய காலேபுக்கு வேறுபடுத்த இப்படி அழைக்கப்படுகிறான். 1 நாளா. 2: 18. இவன் கேனாசியன் வம்சத்தான். நியாயாதி. 1: 13. 1 நாளா. 4: 13, 15.

7. காலேப் வேவுபார்க்கப்போனபோது 40-வயது. யோசு. 11: 18. இவர் மற்ற வேவுகாரர் கானானியருக்குப் பயந்துபோய் அவிசுவாசத்தினால் துர்ச்செய்தி சொன்னதுபோல சொல்லாமல் விசுவாசமுள்ளவராய் உண்மையைப் பேசினார். எண். 13: 30—32. 14: 36.

9. எண். 14: 24. உபா. 1: 36.

10. இப்போது காலேபுக்கு 85-வயது. வனாந்தரத்தில் 38-வருஷமும் கானானைச் செயிப்பதில் 7-வருஷமுஞ் சென்றிருப்பதால் அவருக்கு வயது 85-சரி.

12. மலைநாட்டில் தான் எபிரோன் நகரமிருக்கிறது. யோசு. 11: 21. 20: 7. காலேப் பட்டினங்களைப் பார்க்கிலும் நாட்டைப் பேர் சொல்லி அழைப்பதற்கு முகாந்தரமுண்டு. (1) இங்கே சொல்லப்பட்ட இராட்சதர்கள் பட்டினங்களிலிருந்து துரத்தப்பட்டதால் மலைகளின் கெபிகளிலிருந்துகொண்டு இஸ்ரவேலரை இடைஞ்சல்பண்ணினார்கள். (2) பட்டினங்கள் லேவியருக்குக் கொடுக்கப்பட்டது. யோசு. 21: 11, 13. காலேப் விசுவாசமுள்ளவராய் தேவஉதவியினால் சத்துருக்களைச் செயிக்கலாமென்று தைரியமாய்ப் பேசுகிறார்.

13. யோசுவா காலேப்பை ஆசீர்வதித்தான். (1) காலேப்புடைய விருப்பத்தின்படி தேவன் அவனை ஆசீர்வதிக்கவும், அவனுக்கு உதவி செய்யவும் யோசுவா தேவனை மன்றாடியிருப்பார். (2) வேவுகாரர் சங்கதியில் அவன் சொன்னதை அங்கீகரித்து அவன் கேட்டுக்கொண்டது நியாயமென்று காட்டினார். (3) காலேப்புடைய விருப்பத்துக்கிசைந்து எபிரோனை அவனுக்குக் கொடுத்தார்.

15. அர்பா பெரிய மனுஷன். வளர்த்தியிலும், பெலத்திலும், கனத்திலும், அதிகாரத்திலும் பெரியவன்.—யுத்தம் ஓய்ந்துபோனதால் தேசம் பங்கிடுவதற்கு நல்ல சமயமாயிருந்தது.

## கேள்விகள்.

1. இஸ்ரவேலருக்குத் தேசத்தைப் பங்கிட்டவர்களார்? எப்படிப் பங்கிடப்பட்டது? ஏன்?

2. காலேப்புடைய சரித்திரமென்ன? அவருடைய விசுவாச பலத்துக்குத் திருஷ்டாந்தம் சொல்லும்.

3. ரூபேனுடைய முதற்பிறப்பு சுதந்தரம் யாருக்கெல்லாம் பங்கிடப்பட்டது. ஏன்?

4. தேவன் யோசுவாவுக்கு கானான்தேசமுழுவதையுஞ் செயிப்பாயென்று வாக்குத்தத்தம்பண்ணியிருக்க, இஸ்ரவேலர் கானானியரில் சிலரைத் துரத்திவிடாமற்போனதால், தேவனுடைய வல்லமையைப்பற்றி சிலர் ஆட்சேபித்தால் என்ன சொல்வீர்?

5. "கிரியாத் அர்பா" அர்த்தமென்ன? அதில் நடந்த விசேஷங்களென்ன? இதை காலேப் விரும்பவேண்டியதென்ன?

---

## The World's Birth.

## உலகப் பிறப்பு.

(தொடர்ச்சி.)

### II. அதிகாரம்.

தேவன்.—வானம்.—பூமி.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ்சிருட்டித்தார்."

எண்ணிறந்த யுகங்களுக்கு முன்னமே, இல் பொருளிலிருந்து பூமியும், வானங்களும், வானங்களின் வானங்களும் உண்டானதைப் பற்றி முந்தினபாடத்தில் பார்த்தோம். நாம் இந்தப் பொருளைப் பற்றிச் சிந்திக்குமுன் எட்டாம் சங்கீதத்தில் ஒருபாகத்தை வாசித்து, நமது இருதயம் துதிதோத்திரங்களால் நிறையப்படும்படி விண்ணப்பம்பண்ணுவோமாக.

"எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது. உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்: உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும நான் பார்க்கும்போது மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்." சங். 8: 1, 3, 4.

பிரியமானவர்களே வானத்தையும் பூமியையும் பார்க்கையில், நாம் ஆச்சரியப்பட்டால், நாம் இன்னமும் அதிகமாய் ஆச்சரியப்படத்தக்கதான ஒன்றுண்டு. அதாவது மகா பெரியதேவன் பூச்சிகளாகிய நம்மை நினைத்து மனுஉருவாகி நமது நடுவில் சஞ்சரித்ததே. முந்தின பாடத்தில் 'ஆதியிலே' சிருட்டித்தார், என்ற இரண்டுவார்த்தைகளைப் பற்றிமாத்திரம் பார்த்தோம். அந்த வார்த்தைகளினால் இரண்டு சத்தியங்களை அறியலாம். ஆதியிலே தேவனைத்தவிர வேறொன்றும் இருந்ததில்லை. ஆவிகளாவது சடப்பொருளாவது தேவதூதராவது பிரதான தேவதூதராவது வானமாவது பூமியாவது இல்லவேஇல்லை,



இரண்டாவது தேவன் இல் பொருளிலிருந்து சகலத்தையும் உண்டாக்கினார். அவர் உத்தரவுகொடுக்க இன்மையிலிருந்து பூமியும், அதிலுள்ளயாவும் உண்டாயின. இன்மையிலிருந்தே வானும் வானங்களும் காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளும், ஆசனங்களும், அதிகாரங்களும், கர்த்தத்துவங்களும், வல்லமைகளுமுண்டாயின.

இப்போது தேவன், வானம், பூமிஎன்ற மூன்றுவார்த்தைகளைப் பற்றிச் சிந்திப்போம். தேவன் தமது திருவசனத்தை நமக்குத் தந்திருப்பதால், அதில் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பெயர்களை நாம் கவனத்தோடே பார்க்கவேண்டும். இங்கே தேவன்என்று திருப்பப்பட்டிருக்கிற வார்த்தை எபிரேயு மூலத்தில் ஏலோயீம் என்றிருக்கிறது. வேதாகமத்தில் தேவன் சில தருணங்களில் தம்மை எகோவா (அதாவது இருக்கிறவர் அல்லது நித்தியர் என்றும்) சில வேளைகளில் தேவனென்று வழக்கமாய்த் திருப்பப்பட்டிருக்கிற ஏலோயீம்என்றும் சொல்லுகிறார். ஆதியாகமம்முதல் வாக்கியத்திலே ஏலோயீம்என்கிற வார்த்தை வழங்கப்பட்டிருக்கிறது. எபிரேயு பாஷை ஒருமை இருமை பன்மை என மூவகை எண்கள் உண்டு. உதாரணம் ஒருமைக்கு அவன். இருமைக்கு இருவர் பன்மைக்கு அவர்கள் மரங்கள் மீ. ஏலோயீமென்ற வார்த்தை ஒருமையுமல்ல இருமையுமல்ல பன்மைச் சொல்லாயிருக்கிறது. இதற்குப் பயனிலை ஒருமையாகவிருக்கிறது. ஏலோயீம சிருட்டித்தார்கள் என்றிருக்கவேண்டியதற்குப் பதிலாக சிருட்டித்தான் என்றிருக்கிறது. இதினாலே நாம் என்ன அறியலாம. நித்தியரான வல்லமையுள்ள ஒரேதேவனுண்டு. அவர் பிதா, குமாரன், பரிசுத்தாவி என மூவராயிருக்கிறார் என்பதே.

"பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா வார்த்தை பரிசுத்தாவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்." 1 யோவான் 5: 7.

ஏலோயீம்என்ற வார்த்தை உபாகமம் 6ம் அதிகாரம் 4ம் வாக்கியத்தில் வருகிறது. இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்என்றும் எபிரேயில் இஸ்ரவேலே கேள் ஏகோவாவாகிய நம்முடைய ஏலோயீம ஒரே ஏகோவாஎன்றும் இருக்கிறது.

திரித்துவத்தில் மூவரும் ஒரே தன்மையுடையவராகவிருக்கிறார் என்பதற்குக் குறிப்பாக இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி இப்போது விஸ்தாரமாய் எழுத இடம்போதாது. மற்றவைகளைப் பற்றியுஞ் சொல்லவேண்டியதிருக்கிறது.

ஆதியிலே தேவன் சிருஷ்டித்த வானம பூமியும் என்னவென்று பார்ப்போம். வானம் என்பது பூமியைத்தவிர சமஸ்தத்தில் மற்றெல்லாவற்றையுங் குறிக்கும், பூமியென்பது, நாம வாசம்பண்ணுகிற இந்தச் சிறு கிரகத்தைக் குறிக்கும். இந்தக் கிரகத்தை மனிதரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், அது பெரிதாயும் சமஸ்தத்தோடு ஒப்பிடுகையில், அற்பமாயும் காணப்படும். நமது தலைக்குமேலே ஓடுகிற இலக்கமற்ற நட்சத்திர உலகங்களைப் பார்க்கையில், நம்முடைய உலகம ஒரு சிறு அணுவைப்போலிருக்கிறது. ஆனாலும் மற்றெல்லா உலகங்களையும்விட நாம் வாசம்பண்ணுகிற பூமி, நமக்கு அதிகமாய்ச் சம்பந்தப்பட்டிருக்கிறது. பூமிஎன்பது அந்தவையகம முழுவதையும குறிக்கும். ஏசாயா 40: 22. சிலவேளைகளில் தரையைக் குறிக்கும்.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

பூவலயத்தை ஆளும் புரவலன் புதல்வன் தூய
சேவடித் தொழும்பு பூண்ட செவ்வியோய் தெரி இந்நின்ற
பாவகாரியை மற்றெனாப் பணித்து மெய் பதறும் பான்மை
மேவரப் புகறி உற்ற வேதியற் கறிய வென்றான். 423

நலங்கிளர் குரவன் கூற நடுங்கி மெய்பதறி உள்ளங்
கலங்கி வெய்துயிர்த்துச் சென்னி கவிழ்த்தந்தக் கரணம் யாவும்
மலங்கி உள்ளழியும் அந்த மதியிலான் மறைவலாளன்
இலங்கெழின் முகத்தை நோக்கி இனையன பகரலுற்றான். 424

ஆத்துமக் கவலை கொள்ளா அறிவிலி அகோர பாவத்
தீத்தொழின் மறவன் தேவச் செயலெலாம் இகழ்ந்துபேசும்
நாத்திகப் புலையன் அந்தோ நாசதேசத்தை நச்சி
ஆத்திக நெறியிற் செல்லா அசடர்க்குள் அசடனேயான். 425

கருதிலென் ஜீவகாலம் கமரிடைக் கவிழ்த்த பால்போல்
ஒருதிறத் தானும்ஐய பயன்படா தொழிந்த துண்மைச்
சுருதி கூறிய வாறாகத் துயிலிலோர் கனவு கண்டு
வருதிகிற் கணங்கள் முன்னின் றுருத்தெழ வருந்துகின்றேன். 426

திருக்கிளர் ஞான செல்வர் திருத்தியோய் திகாந்தங் காறும்
கருக்கிளர் மேகசாலங் கதுமெனத் திரண்டு வானத்
துருக்கிளர் ஜோதி யெல்லாம் புதைபட உயிர்கள் யாவும்
வெருக்கொளீஇ அலமந் தேங்க இருண்டது மேலுங்கீழும். 427

இருநிலம் புதைப்ப மல்கிப் புயல்பரந் திருண்ட தோற்றம்
ஒருமகவின்றி யூழி உடற்றும் நாளுற்ற தென்னைப்
பெருநில மடந்தை உள்ளம் பேதுறீஇ யிழவுகாட்டும்
கருநிறப் போர்வை போர்த்த காட்சியைக் கடுக்கு மாதோ. 428

நஞ்சினிற் கரிய வாகி நளிர் நெடுங் கடலிற் பொங்கிச்
செஞ்சவே உலகை மூடித் திசைதோறுஞ் செறிந்த கொண்மூ
எஞ்சுறுப் புனித நீதி இறைவன் வெஞ்சினத்தீ யாவுந்
துஞ்சிட இறுத்த தென்னத் தடித்தது துருவங் காறும். 429

தடித்தொளி தழைக்குந் தோறும் தமர வாரிதி நீர்சூழ்ந்த
படித்தலம் நடுங்கி யேங்கப் பருவரைக் குலங்கள் யாவும்



முடித்தலை தகர்ந்து சாய முடுகி மூதண்ட கோளம்
வெடித்திட அசனிக் கூட்டம் வெய்துற இடித்ததன்றே. 430

நெருங்கு காரிருந்தை யூடு நிலவுமின் னெருப்பை உய்த்து
மருங்கு வந்துலவும் ஊதைத் துருத்தியான் மலிய மூட்டி
இருங்கடை ஊழியென்னும் இகலுறு கருமான் வேலை
ஒருங்குடன் தழுவலாலே உலைக்களம் ஆயதும்பர். 431

மைக்கரு முகில்வாய் விண்டு வயங்கொளி மருவ மின்னி
ஒக்கநின் றாறுங் காட்சி உம்பர் நாயகனை நீத்துப்
பக்கமே திரிந்து சோரம் பயின்ற பாழுலகைப் பல்கால்
திக்கவ மதித்துப் பேசிச் சிரிப்பது சிவணு மாதோ. 432

அடுத்தடுத் துலகம் அஞ்ச அசனி நின் றிடிக்கும் ஓசை
வடுத்திகழ் மேனி வள்ளல் வருகின்றார் மழையிற் றோன்றி
நடுத்தர வென்று வானோர் நயந்து பல்லாண்டு கூறித்
தொடுத்திடை யறாது தேவ துந்துமி முழக்கல் போலும். 433

வருகுமரேசன் தூய மலரடிக் கன்பு செய்த
திருவுடையாரோ யன்றி ஜெகத்துளா ரெவரும் அஞ்சி
வெருவி உள்ளுடைந்து சோர்ந்தார் விதி நிடேதத்தை வீசிப்
பெருவழி துணிந்து சென்று பேதுற்றாற் பிழைப்புண்டாமோ. 434

வேறு.

புத்தேள் மறைதேர் புங்கவவிப் புதுமை நிகழும் போழ்தத்தே
செத்தேன் செத்தேன் யானென்னாச் சிந்தை கலங்கித் திடுக்கிட்டேன்
பித்தேறினர் போல் வாயுழறிப் பேதுற்றுயங்கிப் பிழை நினைந்து
கைத்தேன் அழுதேன் கதறினேன் கண்டேன் மரணக் கடுஞ்சூழல். 435

அடுக்கும் மரணம் நினையாத அமையத் தென்று கருதாது
கெடுக்கும் புன்மைச் சிறுமதியாற் கெட்டேன் அந்தோ கிளரொளிவாய்
மடுக்கும் கடிகை வந்ததினி யென்னே யென்று வானோக்கி
நடுக்குற் றலைந்தேன் திகிற்காட்சி நனிவிஞ்சியது கணந்தோறும் 436

மன்னுங் கருங்கொண்மூ வயிறு வகிரப் பிடித்த பொன்னுலீத்
என்னத் தடித்த தொருமின்னல் இடித்தஓசை யெண்டிசையும்
துன்னச் சுவர்க்க வாசிகளும் துணுக்குற் றிரியத் தொலையாத
இன்னற் கடலின் கரைகாணா திருந்தேன் இருந்த எல்லைதனில். 437

பேசும் படித்தன் றுலகுநிலை பெயரப் பெருநீர் தத்தளிக்க
மாசு படிந்த மனுக்குலங்கள் வதைப்புண் டுழல வரையிடிய
மூசுந் தருக்கள் வேர் பறிந்து முறிந்து துணிய முறைபிறழ
வீசுங் கொடிய பிரளயக்கால் வீங்கிற் றண்டம் விதிர்ப்புற்ற. 438

வருமோர் ஊழி மாருதமாம் வயவெஞ் சீயம் வந்துலவ
உருமே றஞ்சப் பிளிறொலிய ஒளிர்மின் ஓடைப் புகர்முகத்த
கருமா மேக காத்திரத்த கவின்கொள் யானைக் குழூஉக் கலங்கி
வெருவா நடுங்கித் திசைதொறுங்கூ விளிக்கொண்டோடிச் சிதறின
(வால்) 439

மெய்யாய் அந்த வேளையிலே விசுவாசிகளும் மெய்பதறப்
பொய்யாமொழி கூறியவண்ணம் புரைதீர் கடைசி எக்காளம்
மையார் கலிசூழ் வையகமும் வானுந்துளங்க வலிந்துதொனி
செய்யா முழங்கிற் றினியென்னே செயலென் றழிந்தேன் சிறுமதி
(யேன்) 440

இரவிதானே கனற்பிளம்பில் இயைந்த கொல்லோ எழிலியிடை
விரவித்தடித்த மின்னொளியை விசித்துச் சமைத்த விதமேயோ
கரவொன் றறியேன் பன்மணிகள் கதுவுங் கனகாசன உருவொன்ற
உரவுசெழுங் கொண்டலினுப்பன் உற்றதமரர் உவப்பெய்த. 441

அருளும் பொருளும் கனிதெரிக்கும் ஆன்மபோதச் சுடர்தழைப்ப
மருளுந் தெருளும் விரவி அருள் மலியப் பொலியு மிதயம்போல்
வெருளுமிருளும் மின்னொளியும் விரவி யிருள்போய் விடிவெய்தத்
தெருளும் பொருள் சேர் பொற்பீடந் திகழத்திகழ்ந்ததிருவிசும்பே. 442

ஊழிக்கதிரைப் புடைசுற்றி ஊர்கோள் வளைந்த பரிசாகத்
தாழிப் புவனம் நடுத்தீர்க்கச் சமைந்த நியாயா சனத்தை வளைத்த்
ஊழிக்கனல் செய்த்துற வெழும்பி உலவாக் கோட்டை யாயமைந்தத்
ஆழிப்பெருமான் ஆசனத்தை அடுக்க அளியேற் காவதுகொல். 443

ஆயகாலை நடுப்புரிவான் அமலன் வருகை யெதிர்நோக்கி
நேயமிகுவானவர் சேனை நெருங்கி இறைஞ்சித் தொழுதேத்தப்
போயெவ்வுலகுந் திரிந்து வரு புனிதத்தூதர் போற்றிசைப்ப
மாயமறு வேதியர் குழுமி வணங்கி வழுத்தி வாழ்த்தெடுப்ப. 444

கின்னரந் தம்புரு வீணை கிளருஞ் சுரமண்டலமாதி
நன்னர் நவிலும் இசைக்கருவி நாதகீத நயம்பொழியத்
துன்னும் அசனி இடித்ததெனத் தொனிக்கும் ஜெயபேரிகை முழங்கப்
பன்னும் சுரதுந்துமியோடு பலவாச்சிய கம்பலைபம்ப. 445

தேவதேவ திரியேக தேவசுதன் வந்தார் கொடிய
பாவ உலகை நடுத்தீர்க்கும் பரமன் வந்தார் பரலோக
ஜீவபாதை திறந்து வைத்த செல்வன் வந்தார் வந்தாரொன்ற
ஆவலோடு கட்டியங்கூறி அடியார் சங்கம் ஆர்ப்பரிக்க. 446

ஆதிமூலப் பரம் பொருளின் அருமைச் சுதனுங் கிறிஸ்தியேசு
மாதுன் வித்தாய் அவதரித்த வடிவத்திரு மேனியிற் றோன்றி
ஜோதி முகமண்டலச் சேவை தரிசித்தெவருந் தொழுதிறைஞ்ச
நீதியாதிபதியாகி நியாயாசனத்து வீற்றிருந்தார் 447



வேறு.

ஆண்டிருந்த அரசிளங் கோமுகம்
மூண்ட கோடை முதிர்கடு நண்பகல்
சேண் டயங்கிய செஞ்சுடர் போன்மெனக்
காண்டல் செய்தனென் உள்ளுறக் கன்றியே. 448

ஆதி அம்பரஞ் ஜோதி அடுக்கவும்
பூதியங்கள் எரிந்து புகைந்தன
மீதியங்கிய மீன்கணம் வீழ்ந்தன
மாதிரங்கள் குலைந்த மறுகியே. 449

பொரிவ தீவ புகைவ புழுங்குவ
எரிவ சாந்துவ வேங்குவ தேங்குவ
இரிவ சோருவ ஏகுவ மீளுவ
திரிவ நிற்ப திகைப்ப சராசரம் 450

இருளடைந்த இருசுடர் எங்கணும்
மருளடைந்து கலங்கின மாமறை
தெருளடைந்தவருந் திகைத்தார் உளம்
உருளடைந்தில தாலிவ் வுலகமும். 451

வையகத்து மடிந்தனிர் யாவரும்
நொய் தெழுந்து றவல் நடுத்திர்வையை
எய்துமின் னென்றெவருந் துணுக்குற
வெய்தோர் சத்தம்பிறந்தது விண்ணிடை. 452

திருக்கு விஞ்சிய சிந்தையினேன் செவிக்
குருக்கி வார்த்த செம்பாய தவ்வோசை நொந்
திருக்கும் புண்ணில் எரிநுழைந்தாலென
முருக்கி நின்ற தென்னுள்ளத்தை முற்றுமே. 453

ஆங்கெழுந்த அவ்வோசை அங்கங்குறத்
தாங்கி நிற்குந் தருக்கில ஆதலில்
ஓங்குமால்வரை உட்கி அவ்வொல்லையில்
வீங்குமெய் பிளந்தொக்க வெடித்தவே. 454

(இன்னும்வரும்.)

## Exposition of the Church Catechism.

# ஞானோபதேசவினாவிடை
வியாக்கியானம்.

## ௯-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

௫-ம் பிரிவு.

### கடைசி நியாயத்தீர்ப்பைப் பற்றி.

(தொடர்ச்சி.)

நியாயத்தீர்ப்பின் குறிப்பு பழைய ஏற்பாட்டின் காலத்தாருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

காயீனுக்கு.

நீ நன்மைசெய்தால் மேன்மையில்லையோ ம்ரி. ஆதி. 4: 7.

ஏனோக்குக்கு.

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார். ஆதி. 5: 24. யூதா. வச.

ஆபிரகாமுக்கு.

சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ என்றான். ஆதி. 18: 25.

யாக்கோபுக்கு.

கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன் ஆதி. 49: 18, 33.

மோசேக்கு.

நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். யாத். 3: 6, 16. லூக். 20: 37, 38.

யோபுக்கு.

என், மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன். யோபு. 19: 25.

அன்னாளுக்கு.

கர்த்தர் பூமியின் கடையாந்தரங்களை நியாயந்தீர்ப்பார். 1 சாமு 2: 10.

சவுலுக்கு.



நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள். 1 சாமு. 28: 19.

எலியாவுக்கு.

எலியா சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான். 2. இரா. 2: 11.

தாவீதுக்கு.

துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா சாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள். சங். 9: 17.

சங். 16: 9-11. 21: 4. 50: 4-6. 73: 24-26. 96: 13. 98: 9.

சாலோமோனுக்கு.

துன்மார்க்கன் தன் தீமையிலே வாரிக்கொள்ளப்படுவான்; நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன். நீதி. 14: 32. பிர. 2: 17. 11: 9. 12: 7, 14.

ஏசாயாவுக்கு.

பராக்கிரமசாலி சணற்கூளமும், அவன் கிரியை அக்கினிப் பொறியுமாகி, இரண்டும் அவிப்பாரில்லாமல் ஏகமாய் வெந்து போம். ஏசா. 1: 31.

ஏசா. 25: 8; 26: 19—21. 30: 33. 33: 14. 57: 1, 2.

அவர்களுடைய பூச்சிசாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும். ஏசா. 66: 24

எசேக்கியேலுக்கு.

பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும். எசே. 18: 4, 24, 26.

தானியேலுக்கு

நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; மற்றும் நியாயசங்கம் உட்கார்ந்தது; புஸ்தகங்கள் திறக்கப்பட்டது. தானி. 7: 9. 10. 12: 2.

ஓசியாவுக்கு.

அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மாணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? ஓசியா. 13: 14.

ஆமோசுக்கு.

உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. ஆமோஸ். 4: 12.

மல்கியாவுக்கு.

என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள். மல். 3: 17.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபுஎன்னும் கோத்திரத்தலைவர்கள் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கை

யிட்டு, சுயதேசத்தை நாடிப்போகிறோமென்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார்கள். எபி. 11: 13, 14.

நியாயத் தீர்ப்பைப்பற்றி புதியேற்பாடு இன்னம் தெளிவாய்க் காண்பிக்கிறது.

உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பானென்று அறிந்திருக்கிறேனென்று மார்த்தாள் சொன்னாள். யோவா. 11: 24.

அப். 3: 20, 21. பிலிப் 1: 23, 24.

நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. ரோ. 14: 10. 2 கொரி. 5: 10.

எபி. 9: 27. யாக். 5: 9. 2 பேது. 3: 7, 10. யூதா. 6: 7, வச.

இந்த பயங்கரமான நாள் புதியேற்பாட்டில் அநேக உபமானங்களால் விளக்கப்பட்டிருக்கிறது.

நல்லகனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். மத். 3: 10, 12.

களைகளையும், அறுக்கிறவர்களையும் ஒப்பிட்டும். மத். 13: 30, 39

நல்லவைகளையும், ஆகாதவைகளையும் சேர்க்கிற வலைக்கு ஒப்பிட்டும். மத். 13: 47, 48.

பொல்லாத ஊழியக்காரனுக்குண்டாகும் பங்குக்கு ஒப்பிட்டும். மத். 24: 48—51.

புத்தியில்லாத கன்னிகைகளுக்கு ஒப்பிட்டும். மத். 25: 10.

தாலந்து; செம்மறியாடு வெள்ளாடு என்ற உவமைகளைக் கொண்டும். மத். 25: 19—33.

இலாசரு, ஐசுவரியவான் உவமையைக்கொண்டும். லூக். 16: 19—31.

நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும் என்றும் காட்டப்பட்டிருக்கிறது. லூக். 17: 26 மத். 24: 37, 39.

---

வினா. நியாயாதிபதியாயிருப்பவர் யார்?

விடை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே.

தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்நாளிலே இது விளங்கும். ரோ 3: 16.

நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்குமுன்பாக நிற்போமே. ரோ. 14: 9, 10. 2 கொரி. 5: 10. 2 தீமோ. 4: 1.

---



# சமாசாரத்திரட்டு.

**இந்தியா.**—சந்தல்என்னும் சீமையில் புதுக்கலகங்கள் உண்
டானதினால் பட்டாளங்கள் சில அவ்விடத்துக்கு விரைவில்போக
உத்தரவு பிறந்திருக்கிறது. கோவை இருப்புப்பாதைக்குரிய ஆலோசனை
கள் முடிவாயிருக்கிறது. அவ்வேலை இங்கிலீஷ்க்காரரின் ரொக்க
த்தினால் விரைவில் நடத்தப்படுமாம். மைசூர்த் துரைத்தன இருப்பு
ப்பாதை பங்களூரிலிருந்து 35 மைல் தூரமான சின்னபட்டணம்வரை
க்கும் சென்றமீ முதல்தேய்தி திறக்கப்பட்டது. அது முடிவுபெற்
றால், மைசூர் ராஜதானிமட்டும் செல்லுமாம். கொஞ்சவயதுள்ள
பெண்களை துன்மார்க்க பிரவிர்த்திகளுக்காக விடும்பேருக்கு தெண்ட
னைசெய்யப்படுமென்று சென்னைக் கவர்ணமெந்தார் சென்னைராஜதானி
யெங்கும் பிரசித்தப்படுத்தியிருக்கிறார்கள். அப்கானிஸ்தானின் முந்தின
அமீராகிய ஷீர் அலிக்கும் ருஷிய ராஜாங்கத்தாருக்கும் போக்குவர
வுசெய்யப்பட்ட அந்தரங்க கடிதங்கள் கபூல்நகரத்தில் ராபர்ட்ஸ்
தளபதியினால் முன் கண்டுபிடிக்கப்பட்டனவே. அவை இப்போது
பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. அடுபடை தடுபடை முயற்சி
களுக்குரிய சங்கேத உடன்படிக்கையொன்று அமீருக்கும் ருஷியாவுக்
கும் இடையில் 1878-ம் வருஷத்தில் நிர்வகித்து கையொப்பமிடப்பட்
டிருக்கிறது. அந்நிய ராஜ்ஜியசத்துராதிகள் யார்வந்தாலும் ருஷியா
அமீருக்குத் துணைநிற்பதாக அதில் வாக்குறுதி பண்ணியிருக்கிறது.
1878ம்௵ அக்டோபர்மாசத்தில் எழுதிய ஒரு கடிதத்தில் பிரிட்டி
ஷ்துரைத்தனத்தாரோடு வெளிக்கு சமாதானம் பேசிக்கொள்ளவும்
ரகசியத்தில் போருக்கு ஆயத்தப்படவும் ருஷிய தளபதி அமீருக்குப்
புத்திசொல்லுகிறார். அதின்பின்னிட்டு ருஷிய தளபதிக்கு அமீர் எழு
திய கடிதத்தில் முன்னே வாக்களித்திருந்தபடி 32ஆ போர்வீரரை
தமக்கு அனுப்பக் கேட்கிறார். மாரிகாலமானதினால் மேற்படி தளம்
அனுப்ப ஏதுகாமில்லையென்று ருஷியதளபதி அதற்குப் பதிலெழுதியி
ருக்கிறார்.

**ஐரோப்பா.**—ஒல்லாந்து தேசத்தில் மாஸ் நதியைச்சேறுக்
கும் பெரிய அணைக்கட்டு ஒன்று விலிமன்எனனும் இடத்தில் உடைந்து
போகவே ஹெறுபுஸ்டென், அல்தீனு பிரதேசமெல்லாம் வெள்ளக்காடா
யின. 18-கிராமங்கள் ஜலத்தில் மூழ்கிப்போனதினால் குடிகளிலும்
பலர் மடிந்ததாக உத்தேசம். ஆடு மாடுகளின் சேதம் கணக்கில்லை.
சிப்புருதீவிலும் பயங்கரமான ஜலப்பிரவாகங்கள் உண்டாகி, லார்னகா
என்ற ஒரு ஊரில்மட்டும் 200-சில்வானங் குடும்பங்கள் இல்லிடமற்ற
வர்களாயினர். ஜர்மானியாவில் யூத ஜாதியாருக்கு விரோதமான குழ
ப்பம் இன்னும் நீடிக்கின்றதாம். அநியாயமாய் துன்பப்படும் யூதருக்கு
ஜர்மானிய சக்கரவர்த்தி அனுசாரியாக நிற்கிறார்.

---

மார்ச்சுமீ நாள் 31-மாசிமீ 19உ முதல், பங்குனிமீ 20உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௧௯ | மகத்துவமானவராலே லீபனோன் விழும். ஏசாயா 10:34. |
| பு | 2 | ௨௰ | கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். 11:2. |
| வி | 3 | ௨௧ | கர்த்தராகிய யெகோவா என்பெலனும் என்கீதமுமானவர். 12: 2. |
| வெ | 4 | ௨௨ | கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது. 13: 6. |
| ச | 5 | ௨௩ | கர்த்தர் சீயோனை அஸ்திபாரப்படுத்தினார். 14:32. |
| ஞா | 6 | ௨௪ | அவனவனுடைய ஆத்துமா அவனவனில் கிலேசப்படுகிறது. 15:4 |
| தி | 7 | ௨௫ | உனக்கு என் கண்ணீரைப் பாய்ச்சுவேன். 16: 9. |
| செ | 8 | ௨௬ | உன் ரட்சிப்பாகிய தேவனை மறந்தாய். 17: 10. |
| பு | 9 | ௨௭ | என் வாசஸ்தலத்திலிருந்து கண்ணோக்குவேன். 1 8:4. |
| வி | 10 | ௨௮ | அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள். 19: 2?. |
| வெ | 11 | ௨௯ | நாங்கள் எப்படி விடுவிக்கப்படுவோம். 20. 6. |
| ச | 12 | ௧ | நான் என் காவலிடத்திலே தரித்திருக்கிறேன். 21: 8. |
| ஞா | 13 | ௨ | எனக்கு ஆறுதல் சொல்லவாராதேயுங்கள் என்கிறேன். 22:4. |
| தி | 14 | ௩ | அவர் அதை அழிவுக்கென்று நியமித்தார். 23:13. |
| செ | 15 | ௪ | இந்த ஜனங்களின் நடுவிலும் கொஞ்சம் மீதிருக்கும். 24: 13. |
| பு | 16 | ௫ | அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். 25: 8. |
| வி | 17 | ௬ | மரித்தோரை பூமி புறப்படப்பண்ணும். 26: 19. |
| வெ | 18 | ௭ | அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன். 27: 3. |
| ச | 19 | ௮ | விசுவாசிக்கிறவன் பதறான். 28:16. |
| ஞா | 20 | ௯ | இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை. 29: 22. (30: 15.) |
| தி | 21 | ௰ | நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் ரட்சிக்கப்படுவீர்கள். (31: |
| செ | 22 | ௧௧ | சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாகஇருப்பார். 5. |
| பு | 23 | ௧௨ | இதோ ஒரு ராஜா நீதியாக அரசாளுவார். 32: 1. |
| வி | 24 | ௧௩ | கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை ரட்சிப்பார். 33:22. |
| வெ | 25 | ௧௪ | கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள். 34:16. |
| ச | 26 | ௧௫ | மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். 35: 9. |
| ஞா | 27 | ௧௬ | நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன! |
| தி | 28 | ௧௭ | கர்த்தாவே உமது செவியைச் சாய்த்துக் கேளும். 37: 17. |
| செ | 29 | ௧௮ | கர்த்தர் என்னை ரட்சிக்க வந்தார். 38: 20. |
| பு | 30 | ௧௯ | நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான். 39: 8. |
| வி | 31 | ௨௰ | என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள். 40: 1. |

## விசேஷ நாட்கள்.

2. தபசு நாட்களில், முதல் நாளாகிய புதன்கிழமை.
6. லெந்தென்னும் நாட்களில், 1-ம் ஞாயிறு.
13. லெந்தென்னும் நாட்களில், 2-ம் ஞாயிறு.
16. பௌரணமி.
20. லெந்தென்னும் நாட்களில், 3-ம் ஞாயிறு.
25. பரி, கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள்.
27. லெந்தென்னும் நாட்களில், 4-ம் ஞாயிறு.
30. அமாவாசை.

# நற்போதகம்.

௪. ஏப்பிரல்மீ. ௲௮௮௧௵.

## யோசுவாவின் புஸ்தகம்.

### XV. அதிகாரம்.

1. சீட்டுப் போடப்பட்ட வகையைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால், தேவனுடைய சமூகத்தில் செபத்தோடும், கவனத்தோடும் போடப்பட்டதென்றும்; யோசுவா 18 4, 5ல் தேசம் நன்றாய் பார்வையிடப்படுவதற்கு முன்னே 9½ பங்காக வகுக்கப்பட்டதென்றும், ஒவ்வொரு கோத்திரத்துக்குமுரிய பங்குகள் இந்தச் சமையத்தில் வெகுதிட்டமாயும், கூட்டக்குறைக்க வென்றிராமல் கண்டிப்பாயும் பகுக்கபடாமல், பொதுப்பட எந்தெந்த கோத்திரத்துக்கு என்னென்ன பங்கென்று அறியும்படிக்கு மாத்திரம் சீட்டுப்போடப்பட்டது. யூதாக்கோத்திரத்துக்குள் சிமேயோன், தாண் கோத்திரங்களுக்குப் பின்பு பிரித்துக்கொடுக்கப்பட்டது. யோசு. 19: 9.

யூதா தன் சகோதரரில் விசேஷித்தவன் என்று காண்பிக்கும்படியாகத்தேவ உத்தரவுப்படி யூதாவுக்கு முந்திச் சீட்டுவிழுந்தது.

3. எண். 34. 3—5.

6. போகானின் கல் என்கும்போது போகான்வாசம்பண்ணின இடமல்ல. யோர்தானுக்கிந்தப்பக்கத்தில் ரூபேனியருக்கு பங்கில்லையே. அவன்செய்த வீரமான ஒருசெய்கையினிமித்தம் அதைநினைக்க கல் வைக்கப்பட்டிருக்கும். அல்லது இராகேலின் கல்லறையின்மேல் இயாக்கோபு ஒருதூணை நிறுத்திவைத்ததுபோல ஆதி 35; 20. போகான்மரித்து அடக்கம்பண்ணின இடத்திலும் அப்படிப்பட்ட கல்தூண் நிறுத்தியிருக்கலாம்.

7. தேபீர் 15வால சொல்லப்பட்டதுமல்ல. அது எபிரோனுக்குச் சமீபமானதாம். யூதாவின் எல்லைக்கு வெகுதூரமுள்ளதாம். யோசு. 13. 26ல் சொல்லிய தேபீருமல்ல, அது யோர்தானுக்குப் புறத்திலுள்ளது.

8. இன்னோம் இவன்யாரென்றும் தெரியாது. அந்தப்பேரால் அந்த பள்ளத்தாக்கு அழைக்கப்படுகிற முகாந்தரமும் தெரியாது. இது எருசலேமுக்கு கீழ்பக்கத்திலிருக்கிறது. இது முந்தி வெகுபிரியமான இடமாயினும் பின்பு நிந்தையான இடமாயிற்று. இஸ்ரவேலர் பின்பு மோளேகுக்கென்று தங்கள் பிள்ளைகளை அங்கே பலியிட்டார்கள். 2இராசா. 23; 10. இது தோபேத்துஎன்றும் அழைக்கப்ப

டும். எரேமி. 7. 32; யோசியா இராசா மோளோகுஎன்ற விக்கிரத்தை அந்த இடத்தைவிட்டு எடுத்துப்போட்டபின்பு, எருசலேமியர் தங்கள் குப்பைமுதலான அசுத்தங்களை அதில் எறிந்துபோடுவார்கள். நாற்றமுண்டாகாதபடிக்கு அந்த அசுத்தங்களை நாடோறும் சுட்டெரித்துப்போடுவார்கள். இது முகாந்தரத்தால் புதுஏற்பாட்டில் அந்தவார்த்தை நரகமென்னப்படுகிறது. மத். 5 22, 29, 30; 10. 28; 18. 9.

எபூசியரின் பட்டினமாகிய எருசலேம் பூர்வீகத்தில் எபூசி என்னப்பட்டது. யோசு. 18: 28. நியாயாதி. 19: 10. எருசலேம் சரியானபடி பென்யமீனைச் சேர்ந்தது. உபா. 33: 12. யோசு. 18: 28. நியாயாதி. 1. 21; ஆனாலிங்கே 63ல் யூதாவைச்சேர்ந்ததாகச் சொல்லியிருக்கிறது. எருசலேமில் பாதி பென்யமீனுக்கும், பாதி யூதாவுக்கும் சேர்ந்திருக்கலாம். பென்யமீனர் இந்த முக்கிய இடத்தைப் பிடிப்பதற்கும் எபூசியரைத் துரத்திவிடுவதற்கும் யூதா கோத்திரத்தாருடைய உதவியைத் தேடவேண்டியிருந்தது. சிமியோனைச்சேர்ந்த சிக்லாகை பெலிஸ்தியரிடத்திலிருந்து தாவீது யுத்தத்தால் சம்பாதித்துக்கொண்டதுபோல 1 சாமு. 27: 6. இந்த எருசலேம்பட்டினமும் யுத்தத்தால் யூதா வசமாயின.

10. பெத்சேமஸ்என்று அநேக பட்டினங்களுக்குப் பேர். யூதாவில் ஒன்று. யோசு. 21: 16. 2 இராசா. 14: 11. ஈசக்காரில் ஒன்று நபுதலியில் ஒன்று. யோசு. 19: 22, 38.

14. அர்பாவின்புத்திரர் தங்கள் அரண்களிலிருந்து துரத்தப்பட்டார்கள். யோசு. 14: 12. இதுவும் பின்சொல்லப்படுகிற சங்கதியும் யோசுவாவின் ஜீவியகாலத்திலாவது யோசு. 11: 21. அவனுடைய மரணத்துக்குப்பின்பாவது நியாயாதி. 1: 10. நடந்திருக்கும். இந்த இராட்சதர்களின் பேர்களே எண். 13: 33லும் சொல்லியபடியால் அவர்கள் வெகுகாலமாய் உயிரோடிருந்திருக்கிறார்களென்று எண்ணத்தக்கது. அல்லது தங்கள் பெற்றோர் பேரால் அழைக்கப்பட்டுமிருப்பார்கள்.

17. ஒதனியேல் காலேபுடைய சகோதரனென்றால் அந்த விவாகம் சரியல்லவே யென்று சிலர் ஆக்ஷேபிப்பார்கள். சகோதரனென்று பொதுப்பட இனத்தாருக்குச் சொல்லப்படுவதாம். காலேப் ஒதனியேலுடைய சகோதரனல்ல, காலேப் எபுன்னேயின் குமாரனென்றும், ஒதனியேல் கேனாசின் குமாரனென்றும் சொல்லியிருக்கிறதே. 1 நாளா. 4: 13.

19. காலேப்பின் குமாரத்தி தனக்கொரு நன்கொடை கேட்கிறாள். ஆதி: 33: 11. புஞ்சைநிலம் கொடுக்கபட்டிருந்ததை போதாதென்று எண்ணி, நஞ்சைநிலங்களையும் சீதனமாகக் கேட்டாள். காலேப் தண்ணீர்எங்கும் பாயத்தக்கதாக மேட்டுப்புற நஞ்சைகளையும், பள்ளதாக்கான நஞ்சைகளையுங் கொடுத்தார்.

32. இதற்கு முந்தினவாக்கியங்களில் 38 பட்டினங்கள் பேர் குறிக்கபட்டிருக்க, 29 பட்டினங்களென்று தொகை சொல்வானேன? 29 பட்டினங்கள் தான் யூதாவைச் சேர்ந்தது. மற்ற 9 பட்டினமும் சிமேயோனைச் சேரவேண்டியது. அல்லது இந்த 29 பட்டினங்கள்தானமதில்சூழ்ந்த பட்டினங்களாம். மற்ற 9 பட்டினங்களுக்கும் சுற்றுக் கிராமமிருக்கமாட்டாது.

36. இங்கே 15 பட்டினங்கள் எண்ணப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க 14 பட்டினமென்று சொல்வானேன்? 14 தான் சரியான



பட்டினமாம். அல்லது கேதேரா என்பதும் கெதேரொத்தாயீம்என்பதும் ஒரேபட்டினத்துக்குப் போயிருக்கலாம்.

45—47. பெலிஸ்தியரின் பட்டினங்களில் 3 பேர் சொல்லப்பட்டிருக்க காத், அஸ்கலோன்என்ற இரண்டு பட்டினங்களும் பேர் காட்டப்படவில்லை. இவை இக்காலத்தில் வல்லமையுள்ளதும் பேர் பெற்றதுமில்லை.

63. எருசலேமின் ஓர்பாகம் யோசுவாவால் பிடிபட்டது. ஆனால் சீயோன் கோட்டை தாவீதின் காலம்வரைக்கும் எபூசியரால் காக்கப்பட்டது. அந்த எபூசியர் திரும்பவும் எருசலேமை தங்கள் வசமாக்கியிருப்பார்கள். ஆகையால் இஸ்ரவேலர் இரண்டுமூன்று தடவையாய் அவர்களோடே யுத்தஞ் செய்யவேண்டியிருந்தது. நியாயாதி. 19: 11. 2 சாமு. 5, 6, 7: யூதா புத்திரர் தங்கள் அவிசுவாசத்தால் அவர்களைத் துரத்தக்கூடாமற்போயிற்று. மாற். 6: 5, 6. அவர்கள் அவிசுவாசத்தினிமித்தம் கிறிஸ்துநாதர் தமது பலத்த செய்கைகளை அவர்கள் நடுவில் செய்யாததுபோல இதுவுமிருந்தது. மத். 13: 5, 8. அவர்கள் தங்களுடைய சோம்பல், பயம், அக்கிரமங்களுக்கிடங்கொடுத்தபடியால் தேவஒத்தாசையைத் தேடாமற்போனார்கள். இங்கே யூதாபுத்திரரைப் பற்றிச் சொல்லிய காரியமே நியாயாதி. 1: 21ல் பென்யமீனைப் பற்றியுஞ் சொல்லியிருக்கிறது. ஆகையால் எருசலேம் ஆதி. 49: 27. உபா. 33: 12. எரேமி. 6: 1. பென்யமீனைச் சேர்ந்ததாகவும் இங்கேயும் சங். 78: 68, 69ல் யூதாவைச் சேர்ந்ததாகவுஞ் சொல்லியிருக்கிறது. இரண்டு கோத்திரத்துக்கும் நடுவிலிருந்தபடியால் இருவரும் அதை சுதந்தரித்து வந்தவர்களென்றும் சிறையிருப்புக்கு பின்பும் இருவரால் குடியேற்றப்பட்டதென்றும் நேகேமி. 11: 4. சிலர் நினைக்கிறார்கள். இப்போது பென்யமீனுக்குப் பாத்தியமில்லை. யூதாப்புத்திரரோ, யோசுவாகாலத்திலும் அவருடைய மரணத்துக்குப்பின்பும் அதைப் பிடித்துக்கொள்ள வெகுமுயற்சியாயிருந்தார்கள். நியாயாதி. 1: 8. எருசலேமில் பிசசமானபாகம் பென்யமீன் எல்லைக்குள்ளானது. ஆகையால் எருசலேம் பென்யமீனுக்குரிய பட்டினங்களோடே கணக்கிடப்பட்டிருக்கிறது. தேவாலயம் கட்டின மோரியாமலையும், எபூசியரிலிருந்து பறித்த சீயோன்கோட்டையும் யூதா வசமாயின.

---

## கேள்விகள்.

1. யூதாக்கோத்திர 4 எல்லைகளையுஞ் சொல்லு? இதை வெகு திட்டமாய்ச் சொல்லவேண்டியதென்ன?

2. யூதாவுக்குவிழுந்த பட்டினங்கள் எத்தனை? அதைப்பேர் பேராகச் சொல்லவேண்டிய முகாந்திரமென்ன? பிற்காலங்களில் அவைகளில் கலகஞ்செய்த பட்டினமெது?

3. பெத்சேமெஸ், பெத்தாகோன், என்கேதி, என்சேமேஸ், கிரியாத்சேபேர், பெயெர்சேபா, இப்பட்டினங்களின் அருத்தமென்ன?

4. போகானின்கல், கெயிலா, தெக்கோவா, மாரேசா, லாகீஸ்,. இவைகளில் நடந்த விசேஷமென்ன?

5. தாவீது இராசா, சவுலால் துன்பப்பட்ட காலங்களில், அவர் பயந்து ஒதுங்கியிருந்த இடங்களெவை? அவைகளின் விசேஷங்களுமெவை?

6. தேசம் பங்கிடப்பட்டதில் முதலாவது யூதாவுக்கும் பின்பு யோசேப்புக்கும் சீட்டுவிழுந்ததற்கு முகாந்தரமென்ன !

7. இவ்வாகமம் தாவீதுஇராசாவின் காலத்துக்குமுன் எழுதப்பட்டதென்பதற்கு இவ்வதிகாரத்திலிருந்து நியாயஞ்சொல்லும் ?

8. ஒதனியேல் என்பவருக்கு மனையாட்டி கிடைத்தவண்ணம் வேறே யாருக்குங்கிடைத்தது ! எப்படி ? இரண்டுசரித்திரத்திலும் மனையாட்டிகள், கட்டாயமாயல்ல வெகுபிரியத்தோடு வாழ்ந்திருந்தார்களென்பதற்கு குறிப்பென்ன ?

9. ஒதனியேல் யார் ! அவருடைய வீரத்துக்கும், விசுவாசத்துக்குமுரிய சரித்திரச் சுருக்கத்தை எழுதும் !

---

## XVI. அதிகாரம்.

1. எப்பிராயீமரும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் இங்கே யோசேப்பின் புத்திரரென்று பொதுவாய் அழைக்கப்படுகிறார்கள். இருபேருக்கும் ஒரேசீட்டு விழுந்ததினால் அல்ல, இந்த அதிகாரத்தின் முதல்வாக்கியங்களில் அவர்களைப் பொதுவாயும், அவர்களுடைய தெற்குஎல்லையையும் சொல்லுகிறதால் அப்படி மொத்தமாய் அழைக்கப்படுகிறார்கள். தேவன் முதலாவது யூதாவுக்கும் பின்பு இயோசேப்பின் புத்திரருக்கும் ஒழுங்குப்படி சீட்டுவிழச்செய்தது ஆச்சரியமே. ரூபேனுடைய முதற்பிறப்புச் சுதந்தரம் யூதாவுக்கும், இரட்டைப்பங்கு இயோசேப்புக்கும் கிடைத்தது. 1 நாளா. 5, 1, 2. இயோசேப்பு எல்லாருக்கும் இளையவனாயினும், இயாக்கோபால் நேசிக்கப்பட்ட மனைவியால் பிறந்தவனும், எல்லாரிலும் அதிகமாய் நேசிக்கப்பட்டவனும், பஞ்சகாலத்தில் இயாக்கோபின் குடும்பத்தாரை ஆதரித்தவனுமாதலால் விசேஷித்த இரட்டிப்பான பங்கு அவனுக்குக் கிடைத்தது. இதினால் இயாக்கோபாலும், மோசேயாலும், அவர்களைப்பற்றிச் சொல்லியத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின—: கிழக்கே யோர்தானும் மேற்கே பெரியசமுத்திரமும் அவர்கள் எல்லையாதலால் செழிப்பான கானான்தேசத்தின் நடுப்பங்கு அவர்களுக்குக் கிடைத்தது.

2. பேத்தேலே ஆதியில் லூஸ்என்றழைக்கப்பட்டது. ஆதி. 28, 19, 48, 3. சிலர் இந்த லூஸ் வேறே என்கிறார்கள். நியாயாதி. 1: 26. வேறுசிலர், வெவ்வேறான பட்டினங்களாயிருந்த இரண்டும் பிற்காலத்தில் விஸ்தாரமாகி ஒன்றாய்ப் போயிற்றென்பார்கள்.

4. யூதாக்கோத்திரத்தார் தங்கள் சுதந்தரத்தைப் பெற்றபிற்பாடு யோசேப்பின் புத்திரரும் மற்றக் கோத்திரங்களுக்கு முன்னாடியே தங்கள் சுதந்தரத்தை யடைந்தார்கள். இவர்களுக்கு இயோசுவா, எலியேசருடைய உத்தரவினால், சுதந்தரம் பிரித்துக்கொடுக்கப்பட்டது.

5—9. இங்கே சொல்லியிருக்கிற எல்லையும், பட்டினங்களும் இக்காலத்திலிருக்கிற நமக்கு கருகலாயும் சமுசயமாயும் தோன்றுவது ஆச்சரியமல்ல. வெகுகாலமானதால் இடங்கள் மாற்றப்பட்டும் போயின. மற்ற இடங்கள் இருந்த தோற்றமுந் தெரியாமல் அழிந்து போயின. ஆனால் அக்காலத்து இஸ்ரவேலருக்கோ இங்கே சொல்லப்பட்டிருப்பதெல்லாம் தெளிவும், நிச்சயமுமான சங்கதிகளாக அறியப்பட்டவைகள்,



10. இங்கேயுள்ள கானானியரை சாலோமோன்இராசா காலம்வரை துரத்தக்கூடாதவர்களாயிருந்தார்கள். 1 இராசா. 9: 16. கானானியர் பகுதிகட்டினார்கள். யோசு. 17: 13. 1 இராசா. 9: 16.

---

## கேள்விகள்.

1. இயாக்கோபு, மோசே என்பவர்கள் யோசேப்பைப்பற்றிச் சொல்லிய தீர்க்கதரிசனமென்ன ? அதெப்படி நிறைவேறிற்று ?

2. எப்பிராயீம் மனாசேயின் பாதக்கோத்திரத்தாருக்கு சீட்டுவிழுந்த தேசத்தின் எல்லை எது ?—அதெப்படிப்பட்ட தேசம்.

3. எப்பிராயீம் கோத்திரத்திலுள்ள விசேஷித்தபட்டினங்களையும் அதிலுள்ள விசேஷங்களையும் சொல்லும் ?

4. இந்தக் கோத்திரத்திலுள்ளதும், புதிய ஏற்பாட்டில் பேர் காட்டியிருப்பதுமான கிராமங்களெவை ? அங்கங்கே சம்பவித்த காரியமென்ன ?

5. எப்பிராயீமர் கானானியரை துரத்திவிடாமற்போன முகாந்தரமென்ன ? நாம அதினால் என்னபடிக்கிறோம?

6. எப்பிராயீமருடைய சரித்திரச்சுருக்கத்தை எழுதும். அந்தக் கோத்திரத்திரத்தில் எழும்பின விசேஷித்த ஆட்களைச் சொல்லும்.

---

## XVII. அதிகாரம்.

1. மனாசே யோசேப்புக்கு முதற்குமாரன். எப்பிராயீம் வல்லமையும், பெருக்கமுமுள்ளவனாயினும், முதற்பிறப்புக்குரிய சுதந்தரத்தை மனாசே பெறவேண்டியது இயல்பே. அந்தப்படி மனாசேயின் பாதிக்கோத்திரத்துக்கு யோர்தானுக்கப்பாலும் சுதந்தரங் கிடைத்தது போக, யோர்தானுக்கு மேற்காகவும், அலாதியான சுதந்தரங் கிடைத்தது.

மாகீர் மனாசேக்கு ஒரேகுமாரன். அவன் இங்கேயும் நியாயாதி. 5: 14லும் முழுக் கோத்திரத்துக்கும் தலைமையாகச் சொல்லப்படுகிறான். மாகீர் மனாசேக்கு ஒரேமகனாயினும் முதற்பேறானவனென்னப்படுவது வழக்கம். மத். 1: 25. யாத். 4; 22.— இவர் தன் காலத்தில் தன்சந்ததியாரில் வீரமானசெய்கைகளைச் செய்திருப்பார். காதியருக்கும் எப்பிராயீமருக்குமுண்டான சண்டையில் தமது வீரதீரத்தை காண்பித்திருப்பார். 1 நாளா. 7: 21.—இந்த யுத்தவீரமே அவன் வமிசத்தாருக்குமிருந்தபடியால் கிலேயாத்தும் பாசான்சீமையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. சத்துருக்கள் தேசத்துக்குள் வாராதபடிக்குக் காக்கும்படியாகவே அந்த முகப்புக்குரிய பங்கு அவர்கள் கேளாதேபோதே தேவனால் கொடுக்கப்பட்டது.

2. யோர்தானுக்கப்பால் சுதந்தரம் பெறுதவர்களுடைய பேர்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. எண். 26: 29. இங்கே சொல்லப்பட்ட அபியேசர் அங்கே ஈயேசர் என்னப்படுகிறான். எண். 26: 30.

5. "10பங்கு" (1) 6பங்கு, 6பிள்ளைகளுக்கே. அதிலொருவன் ஏப்பேர். அவனுக்கு ஆண்பிள்ளைப்பிள்ளைகளில்லாததால் அவன் பங்கு அவன் பெண்மக்களாகிய 5பேருக்கு 5பங்கு கொடுக்கப்பட்டிருக்கலாம். அல்லது (2) 5பங்கு 5ஆண்மக்களுக்கும் 5பங்கு 5பெண்மக்களுக்கும் ஆக (10)பங்கு கொடுக்கப்பட்டிருக்கலாம். எண். 27: 1—11; 36அதி.

9. எப்பிராயீமுக்குரிய பட்டினங்கள் மனாசேயிலும், மனாசேக்குரிய பட்டினங்கள் எப்பிராயீமிலுமிருந்தன. அவர்கள் சகோதரரானதால் ஒருவருக்கொருவர் ஐக்கியமும் போக்குவரத்துமாயிருப்பதற்குதமாக இப்படி கலந்திருக்க தேவனுக்குச் சித்தமாயிருந்தது.

10. மனாசேக்குரிய சில பட்டணங்கள் ஆசேர், ஈசக்கார்கோத்திர எல்லைக்குளிருந்தன. அல்லது அந்த பட்டினங்கள் எப்பிராயீமரின் பட்டினங்கள் மனாசேயிலிருந்ததுபோல யோசு. 16: 9. இவைகளுமிருக்கலாம்.—யூதாகோத்திரம் பெரிதாயிருந்தபடியால் சீமேயோனுக்கு அதில்சுதந்தரம் கொடுத்ததுபோல, பெரிய பங்குகளின் கோத்திரங்களிலிருந்து கொஞ்சமானபங்கு கோத்திரத்துக்கு சமீபமான கொஞ்சவிகிதம் கொடுக்கப்பட்டன.

ஆசேர் இசக்கார் கோத்திரங்களில் கடைசியாகச் சொல்லப்படுகிற 3 நாடுகளும் அல்லது இங்கே சொல்லப்படுகிற எல்லாப்பட்டினங்களுமே 3 நாடுகளாக பிரிக்கப்பட்டு மனாசேயைச் சேர்ந்தன. அல்லது எபிரேயமூலத்தில் "நாடு" என்று ஒருமையிலிருப்பதால் இங்கே சொல்லப்பட்ட நாடுகளும் பட்டணங்களும் அந்தக் கோத்திரங்களின் மூன்றிலொரு பாகம் மனாசேயைச் சேர்ந்திருந்தனவென்று கருத்துக்கொள்ளும்.

14. யோசேப்பின் புத்திரர் தாங்கள் இரண்டு பேராயினும் ஒரேபங்கு கொடுக்கபட்டதற்கு மொறுமொறுத்தார்கள். அவர்களுக்கு கொடுத்த ஒரேபங்குதான் பின்பு பிரிக்கப்பட்டது. அவர்கள் பெருக்கமானதால் அவர்களுக்குக் கிடைத்தபங்கு சுருக்கந்தான்.

15. இயோசுவா யோசேப்பின் புத்திரர் சொன்ன நியாயத்தை ஒப்புக்கொண்டு அவர்கள் பங்கை விஸ்தாரமாக்கும்படிக்கு ஞானமாய்ப் புத்திசொல்லுகிறார். காட்டைவெட்டி விஸ்தாரமாக்கவும், கானானியரை தேவஒத்தாசையினால் துரத்திவிடவுமாகச் சொல்லுகிறார்.

"எப்பிராயீம்மலை" எப்பிராயீம் கோத்திரத்துக்கு இந்தமலை விசேஷித்த முக்கியபங்கு. யோசு. 19. 50; 20: 7; 21, 21; நியாயாதி. 4: 5.

16—18. நாங்கள் மலைத்தேசத்தை செயித்தாலும், காடுகளை வெட்டி கானானியரைத் துரத்தினாலும் தேசம் எங்களுக்குப் போதாதென்று யோசேப்பின் புத்திரர் சொன்னாலும் கானானியருக்குள் இருப்புரதங்களிருப்பதால் நாங்கள் மலைத்தேசத்தையும் பள்ளத்தாக்கான தேசங்களையும் பிடிப்பதற்குக் கூடாதவர்களாக விருக்கிறோமென்று சொன்னாலும், அவர்கள் பெருக்கமும் வல்லமையுள்ள சனமாயிருப்பதால் லேசாய் அவைகளைப் பிடிக்கலாம் என்கிறார். அவர்கள் தங்களைப்பற்றிச் சொன்ன நியாயத்தைக்கொண்டே அவர்கள் வாயை யடைத்தார். உபா. 20: 1. யோசுவா உறுதியான விசுவாசத்தோடும், தீர்மானத்தோடும், ஞானத்தோடும் சொன்ன நியாயங்கள் ஆவலாதி கொண்டுவந்தவர்களுடைய மனதை மாற்றிப்போட்டது.



## கேள்விகள்.

1. மனாசேயின் புத்திரரில் எத்தனைபேருக்கு யோர்தானுக்கு மேற்கில் சுதந்தரம் கிடைத்தது! இவர்களுக்கு யோர்தானுக்கு கிழக்கில் பங்குகொடுக்கவேண்டிய முகாந்தரமென்ன?

2. செலோப்பெயாத்தின் குமாரத்திகளின் பேரென்ன? அவர்களுடைய விசுவாசம், தயிரியம், ஞானமிவைகளுக்குரிய சரித்திரக் குறிப்பை எழுதும்.

3 மனாசேக்கு ஆசேர், இசக்கார் கோத்திரத்தில் விழுந்த பட்டினங்களெவை? அவைகளின் விசேஷமென்ன?

4. மனாசேக் கோத்திரத்தில் பிற்காலத்தில் எழும்பின விசேஷித்த மனிதனியார்? அவனுடைய நடபடிக்கை எப்படி?

5. யோசேப்பின் குமாரர் யோசுவாவிடத்தில் தங்கள் பங்கு அதிகமாய்த் தரவேண்டுமென்று கேட்பானேன்? அப்படிக் கேட்பதற்கு என்னமுகாந்தரஞ் சொல்லுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மறுமொழி என்ன?

6. யோசுவாவுடைய பாரபட்ச மற்ற குணத்துக்கும், விசுவாசத்துக்கும் இவ்வதிகாரத்தில் திருஷ்டாந்தரம் சொல்லும்

---

## XVIII அதிகாரம்.

1. தேவதீர்மானத்தின்படி ஆசரிப்புக்கூடாரம் கில்காலிலிருந்து சீலோவில்கொண்டுவந்து வைக்கப்பட்டது. உபா. 12: 5; எரே. 7: 12; இது யோசுவாவுக்கு சனமாகவும் வசதியாகவுமிருக்கும்படி வைக்கப்பட்டிருக்கலாம். யோசுவா எப்பிராயீம கோத்திரமாதலால் தேவனிடத்தில் தனக்கு விருப்பமும் அவசியமுமான காரியங்களை ஆலோசிக்கும்படிக்கு தனக்கு சமீபத்தில் ஆசரிபபுக்கூடாரம் வைக்கநேரிட்டது. (2) எல்லாக்கோத்திரத்தாரும் பலவிடங்களிலிருந்து தேவனை ஆராதிக்க கூடிவரும்படிக்கேற்ற மத்திபமான இடமாயிருந்தது. (3) இது இயாக்கோபு மேசியாவைப்பற்றிச் சொன்ன சீலோஎன்ற வார்த்தைக்குச் சரியானபேர் அந்த இடத்துக்குமிருப்பதால் அந்த இடத்தைத் தெரிந்துகொண்டார்கள். சிலர், அந்த இடத்துக்குப்பேர் ஆசரிப்புக்கூடாரம் நிறுத்தப்பட்டதற்கு பின்புதான் வந்ததென்பார்கள். இங்கே ஆசரிப்புக்கூடாரம் சாமுவேல் தீர்க்கதரிசி காலம்வரை 300வருஷத்துக்குத்திகமா யிருந்தது. 1 சா. 1: 3;

ஆசரிப்புக்கூடாரம் முன் பாளையங்களின் நடுவில் வைக்கப்பட்டது. இப்போது அதற்கு சமீபமாய் முன்னணியில் கூடாரம்போட்டிருந்த, ரூபேன், யூதா, எப்பிராயீம கோத்திரங்கள் தன்தன் சுதந்தரத்துக்குப் போய்விட்டதுய்; இப்போது அது இடம்பெருகிறதற்கு அவசியம் நேரிட்டது. எண் 4 5ல் சொல்லிய சட்டைப்படி ஆசாரியரே அதைச் சுமந்து வந்திருப்பார்கள். சீலோஎன்ற வார்த்தை சமாதானமென்ற பொருள் கொண்டது. இக்காலத்தில் தேசம் சமாதானமாயிருந்தால் அதைநினைக்க இந்தஇடத்தில் ஆசரிப்புக்கூடாரம் நிறுத்தபட்டிருக்கலாம். அப்படியே தேவாலயமும் பிற்காலத்தில் சமாதானமென்றருத்தங்கொண்ட சாலேமில் கட்டபட்டதென்பார்கள். (Dr Light foot.)

2, 3. 7 கோத்திரத்தாருக்கு தேசம் பங்கிடப்படவில்லை. யோசேப்பின் புத்திரர் செய்தபிராதால், ஆசரிப்புக்கூடாரம் சீலோவாவுக்குக் கொண்டுவருமட்டும் அதாவது சற்றேறக்குறைய ஒரு வருஷமட்டும் சிலர் நினைக்கிறபடி 7வருஷமட்டும் தாமதமாயிருந்ததால் யோசுவா அவர்களைப் பார்த்து "நீங்கள் எந்தமட்டும் அசதியாயிருப்பீர்களென்று கண்டிக்கிறார். இப்படிப்பட்ட அவர்களுடைய அசதிக்கு பல முகாந்தரஞ் சொல்லலாம்.

1. யூதாப் புத்திரருக்கு விரிவான பங்கும், யோசேப்பின் புத்திரருக்கு நெருக்கமான பங்கும் கிடைத்திருப்பதை அறிந்து திருப்தியற்றவர்களாயிருந்திருப்பார்கள். (2) எல்லாம் திட்டமாக பரிசோதிக்கப்பட்டும், அளவெடுக்கப்பட்டுமிருந்ததால்தான், ஒழுங்கும் சமமுமான பங்கு செய்யப்படுமென்று காத்திருக்கலாம். (3) அவர்கள் தூரமான இடங்களுக்குப் போய்க் குடியிருக்க வருத்தப்பட்டு, பாபிலோன் கோபுரத்தைக் கட்டினவர்கள்போல், கூட்டத்தைவிட்டுப் பிரிந்துபோகவும் மனமில்லாமல் அசதியாயிருக்கலாம். (4) அவர்கள் கானானியரிடத்தில் பறித்த கொள்ளைப் பொருள் மிகுதியாயிருப்பதால், அதை அனுபவிக்கிற சந்தோஷத்தினாலும், இனி கானானியரோடே யுத்தஞ் செய்து தேசத்தைக் கட்டிக்கொள்ள வருத்தப்பட்டதாலும் (யோசு. 17: 15, மீ. அசதியாயிருக்கலாம். இவர்கள் அசதியாயிருப்பதால் கானானியர் புதுப்பெலனடைந்து அரணான பட்டினங்களில் சேர்ந்து பலத்துப் போவதற்கேதுவாயிருக்கும்.

4. தேசம் நன்றாய் வேவுபார்க்கப்படவும் திட்டமான அளவு கணக்குகள் கொண்டுவரவுமாக, சுதந்தரம் கிடையாத 7 கோத்திரத்தில், கோத்திரத்துக்கு 3 ஆட்களாக தெரிந்துகொள்ளப்பட்டு, 3 பவுஞ்சுகளாக பவுஞ்சு ஒன்றுக்கு 7 ஆட்களாகவும்—ஒவ்வொரு பவுஞ்சிலும் ஒவ்வொரு கோத்திரத்தின் ஆளிருக்கவும் திட்டஞ் செய்து அனுப்பப்பட்டார்கள்.

5—3. பவுஞ்சாகப் போனவர்கள் சமமான 7 பங்காகத் திட்டமான கணக்குக கொண்டுவந்தார்கள். கோத்திரத்தார் பெருகவும், குறையவுமிருந்தாலும் அது கவனிக்கப்படவில்லை. பெருக்கமுள்ளவர்கள் தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற எல்லைவரைக்கும் அதாவது ஐப்பிராத்து நதிவரைக்கும் தங்களுக்குக் குடியிருப்பைச் செய்துகொள்ள விடப்பட்டார்கள்.

6. ஒவ்வொரு கோத்திரத்தாரும் தங்களுக்கு விழுந்த சீட்டின்பேரில் மனத்திருப்தியுள்ளவர்களாயிருக்கும்படி, தேவனே சாட்சியாயும் நியாயாதிபதியாயுமிருக்கும்படிக்கு உடன்படிக்கைப் பெட்டியிருக்கிற ஆசரிப்புக் கூடாரமாகிய தேவ சந்நிதியில் சீட்டுப் போடப்பட்டன.

7.—யோசு. 13: 33.—

8—10— 21பேரும் போய்ச் சுற்றிவர 7மாசம் சென்றதென்று யோசேப்புஸ் சொல்லுகிறார்.—குட்டியைப் பறிகொடுத்த கரடிகள் போல கானானியர் பதிவிருந்து இந்த வேவுகாரர்மேல் கைபோடவொட்டாதபடிக்கு தேவன் கிருபையாக காத்தார். அந்த 7பங்கையும் படமாக வரைந்து கொண்டுவந்திருப்பார்கள். இஸ்ரவேலர் இந்தக் கணக்கை எகிப்தியரிடத்தில் கற்றிருப்பார்கள். நீலநதியின் ஓட்டத்தால் எகிப்தியரின் நிலங்களின் எல்லை தெரியாமற்போவதால் வருஷந்தோறும் அளக்கிறது வழக்கமாயிருக்கும். இப்படிபட்ட அளவை புஸ்தகத்தில் கொண்டுவர தேவனால் போதனையுண்டாயிருக்கும். யாத். 31: 1—6.



11. தேவஞானத்தின்படி யோசேப்புக்கும் யூதாவுக்கும் மத்தியில் பென்யமீனுக்குச் சீட்டு விழுந்தது. இதினால் உபா. 33: 12ல் சொல்லிய தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இவன் யோசேப்புக்குப் பிரியமான குமாரன். பிற்காலத்தில் இந்தக் கோத்திரம் யூதாவோடு சேர்ந்து, எருசலேமின் தேவாலயத்துக்கும், யூதாவின் இராசாங்கத்துக்கும் சம்பந்தப்பட்டவர்களாயிருக்குபடி தேவன் முன்னறத் தீர்மானித்திருந்தபடியால் இந்தப்படி சீட்டு விழுந்தது.

14. கிரியாத்யெயாரீம் என்பது முன் கீரியாத் பாகால் என்னப்பட்டது. இஸ்ரவேலர் பாகால்களை வெறுக்கும்படிக்கு அடையாளமாக அந்தப்பேரால ழைக்கப்பட்ட கிராமங்களை பேர்மாற்றினார்கள். எண். 32: 38; யோசு. 15: 9.

## கேள்விகள்.

1.—ஆசரிப்புக்கூடாரம் சிலோவில் நிறுத்தப்பட்டதற்கு நியாயங்களென்ன ?

2. இஸ்ரவேலர் தங்கள் சுதந்தரத்துக்குப் போகாமலிருந்த தாமதத்திற்கு நியாயமென்ன? அதினாலுள்ள நஷ்டங்களெவை ?—இதினால் நமக்குரிய போதனை யென்ன ?

3. பிந்தி அனுப்பப்பட்ட வேவுகாரருடைய விசுவாசத்தை தெளிவாய்ச் சொல்லும். அவர்களுடைய பங்கு எப்படித் தீர்மானிக்கப்பட்டது.

4. பென்யமீனுடைய பங்கின் எல்லை யெது? அவனைப்பற்றி இயாக்கோபும் மோசேயும் சொன்ன தீர்க்கதரிசனமென்ன? அதெப்படி இங்கே நிறைவேறிற்று ?

5. பெயமீன் கோத்திரத்திலிருக்கிற முக்கியமான பட்டணங்களையும் அதிலுள்ள விசேஷக் குறிப்புகளையும் எழுதும் ?

6. யூதாக் கோத்திரத்தில் எழும்பின முக்கியமானவர்களுடைய சரித்திரக்குறிப்பை எழுதும்.

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

### வியாக்கியானம்.

### ௩-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### ௫-ம் பிரிவு.

### கடைசி நியாயத்திர்ப்பைப் பற்றி.

(தொடர்ச்சி.)

வினா. கிறிஸ்துவானவர் ஏன் இந்த உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்?

விடை. 1. அவர் தம்முடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறவர்களின் தன்மையில் பங்காளியாயிருக்கிறபடியினாலும்.

அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால் நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். யோவா. 5: 27.

2. பிதாவானவர் அவரை நியமித்தபடியினாலும்.

பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமல் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். யோவா. 5: 22.

அப். 10: 42. 17. 31.

அவருடைய வருகை எல்லாரும் கவனிக்கத்தக்க வகையாயிருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். மத். 16: 27.

மத். 24: 30. 26: 64. மாற். 8: 38. லூக் 9: 26. அப். 1: 11: 1 தெச. 4: 16. 2 தெச. 1: 7-10. வெளி. 1: 7. 2 பேது. 3: 10-13. வெளி. 10: 5, 6.

இந்த கம்பீரமான நியாயாசனத்துக்கு முன்பாக ஆதாமின் புத்திரர் அனைவரும் காணப்படுவார்கள்.

அபபொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மத். 25: 32.

மத். 13: 27. யோவா. 5: 28, 29. வெளி. 20: 12, 13.

அப்பொழுது எல்லாரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். 2 தீமோ. 4: 1. 1 பேது. 4: 5.

வினா. எவைகளைப்பற்றி நியாயந்தீர்க்கப்படுவோம்?

விடை. 1. மனுஷர் தங்களுடைய நினைவுகள் எல்லாவற்றையும் குறித்து கணக்குக் கொடுப்பார்கள்.

தீயநோக்கம் பாவமாம். நீதி. 24: 9.

மல்கி. 3: 16. அப். 8: 22. கொலோ. 3: 5, 6.

2. தங்கள் வார்த்தைகளைக்குறித்துக் கணக்குக் கொடுப்பார்கள்.

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய். மத். 12: 36, 37.

மல்கி. 3: 18. யூதா 15.



3. தங்கள் கிரியைகளைக்குறித்துக் கணக்குக் கொடுப்பார்கள்.

ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். பிர. 12: 14.

அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். மத். 16: 27.

மத். 25: 35. ரோ. 2: 6. யூதா 15. வெளி. 20: 12, 13.

மனுஷர் தாங்கள் செய்த பாவங்களுக்காக உத்தரவாதம்செய்வதுபோல, செய்யவேண்டியவைகளை செய்யாமல் விட்டுவிட்ட பாவங்களுக்காகவும் உத்தரவாதம்செய்யவேண்டும்.

துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள். சங். 9: 17.

மத். 25: 42. லூக். 12: 47. கலா. 6: 7, 8. யாக். 4: 17.

வினா. மனுஷர் எப்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள்?

விடை. 1. தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக்கொண்டு நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும். யோவா. 12: 48.

எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத்தீர்ப்படைவார்கள். ரோ. 2: 42. வெளி. 20: 12.

உத்தியோகம் செய்தேன் என்பது மட்டும் அந்நாளில் உதவாது. அதைக்கொண்டு நியாயஞ்சொல்லத் தூண்டப்படுவது வீணாயிருக்கும்.

அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். மத். 7: 21—23. லூக். 13: 25—30.

எல்லார்மேலும் நீதியுள்ள நியாயத்தீர்ப்புக் கூறப்படும். தானி. 12: 2, 3. யோவா. 5: 28, 29.

வினா. நீதிமான்களுக்குச் சொல்லப்படும் தீர்ப்பும், அவர்களுடைய நிலைமையும் எப்படிப்பட்டதாயிருக்கும்?

விடை. மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள். மத். 19: 28.

வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். மத். 25: 34.

1 யோவா. 3: 2. வெளி. 5: 9, 10. 7: 14, 17. 15: 13. 20: 4.

வினா. பொல்லாதவர்களுக்குச் சொல்லப்படும் தீர்ப்பும், அவர்களுடைய நிலைமையும் எப்படிப்பட்டதாயிருக்கும்?

விடை. அங்கே அவர்கள் புழுச் சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். ஏசா. 66: 24. மாற். 9: 44.

இராச்சியத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். மத். 8: 12. 13: 42, 50.

மத். 22: 13. 24: 51. 25: 39, 41. ரோ. 2: 5. 2 தெச. 1: 8, 9. வெளி. 6: 16. 14: 10, 11. 21: 8.

எவ்வளவு பயங்கரமும், எவ்வளவு தவறாததுமான சத்தியம்.

அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்துகொள்வார்கள். ஏசா. 2: 19.

ஓசே. 10: 8. எசேக். 22: 14. ஏசா. 32: 14.

இவ்வுலகத்தில் நீதிமான்கள், பொல்லாதவர்கள் என்ற இருவகுப்பார் மாத்திரம் இருக்கிறார்கள்;—அவ்விரு வகையாரின் முடிவையுப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாய். நீ யாரைச் சேரவேண்டுமென்பதைத் தெரிந்துகொள். நீ நீதிமான்களின் மரணமாய் மரிக்கவேண்டுமானால் அதற்காக ஆயத்தப்படு.

உன்னுடைய நியாயாதிபதியாயிருக்கப்போகிறவர் இப்பொழுது உன்னுடைய மத்தியஸ்தராயிருக்கிற இரட்சகரே. அவரை உனக்குச் சிநேகிதனாக்கிக்கொள். அப்பொழுது நீ பயப்படவேண்டியதில்லை. அந்தப் பயங்கரமான நாளின் பயங்கரங்கள் நிச்சயமாகவே வரும். உனக்குத் திடீரென்று அதிசயத்தை உண்டாக்கலாம். அது நீ உன் தேவனைச் சந்திக்கும்படி நல்ல ஆயத்தம்பண்ணத் துவக்கும்படி உன்னை ஏவி எழுப்பலாம். பரி. பவுல் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்தான். அப். 24: 25. நீ பயப்படுகிறாயா? நீ பயப்பட்டால் அந்த நல்ல பயத்தை அடக்கிப்போடாதே; பேலிக்ஸைப்போல அந்த நல்ல சமயத்தைக் கடத்திவிடும் நினைவு உன்னில் உண்டாகாதிருப்பதாக. ஞானத்தின் சத்தத்துக்குச் செவிகொடுக்க ஒருமணி நேரமாவது தாமதிக்காதே. நான் கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள். (நீதி 1: 24, 31) என்று சொல்லாதபடி பார்.



பாவமன்னிப்பையும், ஒப்புரவாகுதலையும் தேடு. அது அந்த நாளில் உனக்குப் பிரயோசனமாயிருக்கும்.

ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியானவர்களாக்கும்படி செபம் செய். கொலோ. 1: 12.

உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். 2 பேது. 1: 10, 11.

---

## The World's Birth.

## உலகப்பிறப்பு.

(தொடர்ச்சி.)

### II. அதிகாரம்.

தேவன்.—வானம்.—பூமி.

"தேவ வெட்டாந்தரைக்குப் பூமி" என்று பேரிட்டார். ஆதியாகமம். 1: 10. வேதாகமத்தில் பூமி என்பதற்கு இரண்டு அர்த்தம் வருவதுபோல வானம்என்பதற்கு மூன்று அர்த்தம்வரும். முதலாவது நம்மைச் சுற்றியிருக்கிற ஆகாயவிரிவுக்குப் பேர். பறவைகள் பறக்கிறதும், மேகங்களிருக்கிறதுமான ஆகாயம். சங்கீதம். 104: 12. ஆகாயத்துப் பறவைகள் என்பதில் வானத்தின் பறவைகள்என்று வேதத்திலிருக்கிறது. ஆகாய். 1: 10. இரண்டாம் வானம்என்பது சோதிமண்டலத்தைக் குறிக்கும். மூன்றாம் வானம்என்பது உன்னதம் என்றும், வானங்களின் வானம்என்றும் சொல்லப்படுகிற பேரின்ப இடம். பவுல் அந்தஇடத்துக்குப் போனான். நமது இரட்சகராகிய இயேசு அங்கே போயிருக்கிறார். உன்னதமானவர் அங்கே தமது மகிமையை விசேஷித்தவிதமாய் வெளிப்படுத்துகிறார்.

நாம் வாசம்பண்ணுகிற பூமியைப் பற்றிச் சிலவைகளைச் சொல்லுகிறேன். 1-வது அது உண்டையாயிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். இதைப்பற்றி வேதாகமத்தில் வெகுகாலத்துக்கு முன்னே சொல்லியிருக்கிறது. ஏசாயா. 40: 22 "தேவன் பூமியின் உண்டையிலிருக்கிறார்." என்று எழுதியிருக்கிறது. யோபு. 26: 10. நீதிமொழி. 8: 27. இது சத்தியமென்பதை மனிதர் சோதித்தறிந்திருக்கிறார்கள். வருஷந்தோறும் கப்பல்கள் பூமியைச் சுற்றிஓடுகிறது. மேற்குமுகமாய் யாத்திரைபண்ணிக்கொண்டு போனவர்கள் மறுபடியும் தாங்கள் யாத்திரையைத் துவங்கின இடத்துக்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள். 2-வது நம்முடைய பூமி வருஷத்துக்கொருதரம் சூரியனைச் சுற்றி முட்டைவடிவான அயனத்தில் ஓடுகிறது. அப்

படி ஓடுகையில் தன்னைத்தானே 24-மணி நேரத்திற்கொருதரம் சுற்றிக்கொள்ளவுஞ் செய்கிறது. நிரட்சரேகையில், பூமி ஒருமினிற்றுக்குள் 17மயில் அல்லது ஒருமணிநேரத்தில் 1020மயில் ஓடுகிறது. ஒருசெக்கண்டு அல்லது ஒருநொடிப்பொழுதில் 20மயில் சூரியனைச் சுற்றிக்கொண்டு போகிறது. பூமிக்குமேலே நீ 300மயில் தூரம் உயர்வான ஒருஇடத்தில் நின்றுபார்த்தால், பூமி, பீரங்கிக்குண்டு செல்லும் வேகத்தை விட 60மடங்கு அதிக விரைவாய்ப் போவதை அறிவாய். 3-வது பூமியை அளவிட்டதில் அது 25000மயில் சுற்றளவுள்ளதென்றும் 8000மயில் விட்ட அளவுள்ளதென்றும் கணிக்கப்பட்டிருக்கிறது. அதின் பரப்பு விஸ்தாரமுள்ளதென்பதைப் பின் சொல்லியதால் நீ அறியலாம். நாலுபக்கத்திலும் 40மயில் தூரமான இடங்களைப் பார்க்கத்தக்கதான ஒரு இடத்தில் நீ நின்று ஒருமணி நேரத்துக்குள்ளாக அவைகளைப் பார்க்கலாம் என்று வைத்துக்கொள். இந்தப்படி பூமி முழுவதையும் பார்க்க 9 வருஷமும் 48மணி நேரமும் செல்லும். 4-வது பூமியானது திண்மையான பூகியத்தினால் மூடப்பட்டிருந்தாலும் உள்ளே முழுவதும் அக்கினியால் நிறைந்திருக்கிறது. மனிதர் இதைக் கண்டறியுமுன்னமே, இதைப் பற்றி வேதாகமத்தில் சொல்லியிருக்கிறது. ஏறக்குறைய 3000 வருஷத்துக்கு முன்னேயிருந்த யோபு இதைப் பற்றிப் பேசியிருக்கிறான். போபு. 28: 5. பின்னும் பருவதங்கள் மெழுகுபோல உருகுகிறது என்றும் ஆட்டுக்குட்டிகளைப் போல துள்ளுகிறதென்றும் வேதத்தில் அடிக்கடி வாசிக்கிறோம். அதைப் பார்க்கில் அக்கினியின் பலத்தினாலே பர்வதங்கள் பூமியின் ஆழத்திலிருந்து மேலே எழும்பினதைக் குறிக்கலாம் என்று அறியலாம். உள்ளிருக்கிற அக்கினி அடிக்கடி வெளியே கக்கப்படுவதுண்டு. கர்த்தாவே பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும் என்று சங்கீதத்தில் வாசிக்கிறோம். சங்கீதம். 144: 5. அக்கினியை மூடுகிற பூகியம் 9முதல் 12மயில் வரையுமுள்ள திண்மையுள்ளதாயிருக்கிறது என்று எண்ணப்படுகிறது. இந்தப் பூகியத்தில் வெடிப்புக் கண்டால் பெரிய பட்டணங்கள் மூழ்கத்தக்கதாக அங்கேயிருந்து சாம்பலும், அக்கினிப்பிரவாகமும் வெளிப்படுவதுண்டு. பூமி கம்பிக்கிறதையும், திறவுண்கிறதையும் சமுத்திரத்தில் ஒரே நாளில் சிறுதீவுகளும், மலைகளும் உண்டாகிறதையும் பற்றி அடிக்கடி வர்த்தமானங்களில் சொல்லப்படுவதுண்டு.

பரிசுத்த வேதாகமத்தில் 33 நூற்றாண்டுகளுக்கு முன்னமே விளம்பியிருப்பதை சாஸ்திரிகள் நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆல்ப்ஸ்மலை இமயகிரி முதலிய பர்வதங்கள், பூமிசிருஷ்டிக்கப்பட்ட அநேக காலத்துக்குப் பின்பு, தேவனுடைய சொற்படிசெய்யும் அக்கினியினால் பூமியில் உயரமாய் எழும்பினவைகளாயிருக்கிறது. பூமிக்குள்ளாக மிகுந்த உஷ்ணமிருப்பதினால், ஊற்றுக்கண்கள் அதிக ஆழமாயிருக்கிற சுவிச்சர்லாந்து முதலிய தேசங்களில் சுடுதண்ணீர் சுரந்து வருகிறதுண்டு. அந்தத் தண்ணீரை மனிதர் ஸ்நானத்துக்காகவும், மருந்துக்காகவும் உபயோகிக்கிறார்கள். பூமிகுள் 7000 ஜாதிஅடி, அல்லது 1½-மயில் தூரம் ஒரு தரவுவெட்டினால் அங்கேயிருந்து வரும்தண்ணீர் கொதிக்கும். 10-மைல் ஆழத்திலே கல்லுங்கூட இளகிப்போம்.

நாம் வாசம்பண்ணுகிற பூமி, இத்தன்மையுள்ளதாயிருக்கிறது. வேதாகமத்தில் சொல்லியபடி. அது அக்கினியால் ஒரு காலத்தில் அழிக்கப்படும். தேவ கட்டளையின் பேரில், எந்த நேரத்திலும் வெளியே பீறிவரத்தக்கதான அக்கினி பூமிக்குள்ளாகவிருக்கிறது. “இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டு, அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.” தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல், எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்” “கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எபபடிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவடக்தயும், உள்ளவர்களாயிருக்கவேண்டும்.” “தேவனுடைய நாளுக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள். அந்த நாளில் வானங்கள வெந்து, அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே புதியவானங்களும் புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம். ஆகையால் பிரியமானவர்களே இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடு அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் 2 பேதுரு. 3: 7, 9—14. என்று வாசிக்கிறோம்.



சிருஷ்டிப்பின் கிரியைகள், எவ்வளவு ஆச்சரியமானவைகளாயிருக்கின்றன. இப்போது சொல்லப்பட்டிருக்கிற அற்பமான காரியங்கள் முதலாக எவ்வளவாய் இருதயத்தைத் துதி தோத்திரங்களால் நிறையச் செய்கிறது. அநேக லட்சவருஷங்களாய் இந்தப் பூமி மனிதனுக்காக ஆயத்தப்படுத்தப்பட்டுக், கடைசியாக சர்வவல்லவருடைய ஒரேகுமாரன் மீட்பின் கிரியை முடித்த இடமாயிருக்கிறது. கடைசியான இந்தக் கிரியை, சிருட்டிப்பின் மகிமையான கிரியைகளை விட மகத்தானது. வார்த்தையானவர் ஆதியிலே தேவனோடே இருந்தார். அவர் தேவனாயிருந்தார். அவர் மாம்சமாகி, உலகத்தோற்றத்துக்கு முன்னே தமது பிதாவினால் தமக்குக் கொடுக்கப்பட்டவர்களை மீட்கும்படியாக இந்த மண்ணில் நடமாடி மரணமடைந்தார். அவர் திரும்பவும் வந்து, அவர்களை உயிரோடே எழுப்பி, தம்மோடே என்றும் இருந்து அரசாளும்படி செய்வார்.

---

## III. அதிகாரம்.

---

“வானங்கள்.”

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ்
சிருஷ்டித்தார்.
சங்கீதம். 19. 1—11.

இப்போது நாம்பார்க்கபோகிறப் பொருள் மாட்சிமையுள்ளது. நாம் வானங்களையும் வானங்களின் வானங்களையும் பற்றிப் பார்ப்பதுடன் அவைகள் சிருஷ்டிக்கப்பட்டதையும் பற்றிப பார்க்கப்போகிறோம். நாம் வானசோதிகளின் மகத்துவத்தையும், அவைகளின் அயனங்களையும், அகண்டவெளிகளையும் பற்றிப் பேசிக்கொள்வ

துடன் இந்த மாட்சிமையான வஸ்துக்கள் நித்தியவாசகருடைய சித்தத்தினாலே இன்மைப் பொருளிலிருந்துண்டான யுகத்தைப் பற்றியும் கவனிக்கப்போறோம்.

ஆதியிலே ஏலோயீம் வானத்தைச் சிருஷ்டித்தார். சங்கீத கவிஞன், “வானங்கள் தேவனுடைய மகிமையை அறிவிக்கிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப்பகல் வார்த்தைகளைப் பொழிகிறது. இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை வார்த்தையுமில்லை என்று சொல்லியிருக்கிறான். பழைய திருப்புதலில் அவைகளின் சத்தம் கேள்விப்படாத பாஷையுமில்லை பேச்சுகளுமில்லை, என்றிருக்கிறது. அவைகளின் சத்தம் கேட்கப்படுகிற விதம் இன்னதென்பதைச் சொல்லுகிறேன். அவைகள் நமது கண்களுக்கும் புத்திக்கும் இருதயத்துக்கும் பேசுகின்றன.

1-வது பார்வைக்கு அழகாயும் இன்பமாயும் காணப்படுகிறதால் பேசுகின்றன. அவைகள் மகா தேவனுடைய மகிமையை, ஞானிகளுக்கும் பேதைகளுக்கும் அறிவிக்கிறது. வெளியில் சஞ்சரிக்கிற மேய்ப்பனுக்கும் தூரதிர்ஷ்டிக் கண்ணாடியினால் சூரியன்களும் தலைதூரமாயிருக்கிற உலகங்களும் ஓடுகிறதை ஆச்சரியத்தோடே கவனித்துக்கொண்டிருக்கிற சோதிட சாஸ்திரிக்கும் அறிவிக்கிறது.

2-வது நமது புத்திக்கும், தெரியப்படுத்துகிறது. நம்மால் கிரகிக்கக்கூடாத மாட்சிமையும், ஆச்சரியமுமான காரியங்களை நமக்கு அறிவிக்கின்றன. திவ்வியஞானம், மகத்துவம், அளவற்ற மகிமை என்றவைகளைப் பலமாய்க் காட்டுகின்றன.

3-வது நமது இருதயத்தில் அவைகள் மிகுந்த வல்லமையாய்ப் போதிக்கிறது. மனிதனே, இந்த மகிமையும் சிறப்புமானவைகளைச் சிருஷ்டித்தவர் உன் தேவனாயிருக்கிறார். அவர் உன்னை ரக்ஷிக்கப் பிரியசித்தமுள்ளவராயிருக்கிறார். மனிதனே, அவருடைய ஆச்சரியமான செய்தியைக் கேள். ஆதியிலே தேவனோடே யிருந்தவரும் தேவனா யிருக்கிறவரும் சகலத்தையு முண்டாக்கினவருமான நித்தியரான தேவகுமாரன் மாம்சமானார். தேவனுடைய ஒரே குமாரனும் வானத்தையும் பூமியையும் உருவாக்கினவருமானவர் தமது மிஞ்சின அன்பினாலே ஏவப்பட்டு, இந்தப் பூமிக்குவந்து, உன்னுடைய அருவருப்பான பாவங்களுக்குப் பிராயசித்தஞ் செய்யும்படி மரணமடைந்தார். தாம் உண்டுபண்ணின உலகத்தில் வந்தபோது தமது தலை சாய்க்கமுதலாய் இடமற்றிருந்தார் என்று அறிவிக்கிறது.

ஆதியிலே ஏலோயீம் வானத்தையும் பூமியையும் படைத்தார். பூமி என்பதற்கு இரண்டு அர்த்தம் வேதத்தில் வருவதுபோல வானம் என்பதற்கு மூன்று அர்த்தம் வருகிறது என்று சொன்னேனே. 1-வது ஆகாய விரிவைக் குறிக்கும். இந்த ஆகாய விரிவு பூமியிலிருந்து 40 அல்லது 45 மைல் உயரம்வரையும் எட்டுகிறது. உன்னதமான மலைகளின் உச்சியில் சனங்கள் தாராளமாய் சுவாசிப்பதற்கு ஆகாயமில்லை. 40 மயிலுக்கு உயர ஆகாயமேயில்லை. சூரியன் உதிக்கும்போது மனிதர் அவதானித்து ஆகாயத்தின் உயரத்தைக் கணித்திருக்கிறார்கள். வாயு நிறுக்குங் கருவியாகிய பெரோமிற்றரால் ஆகாயத்தின் பாரத்தையும் அறிந்துகொள்ளாம். இதைப் பற்றி இன்னொருதரம் பேசிக்கொள்ளலாம்.

இப்போது இண்ரடாம் ானத்தைப் பற்றிச் சிந்திப்போமாக. இரண்டாம் வானம் என்பது நட்சத்திரமண்டலம். அதின் காரியங்



களைப் பார்க்கையில், நாம் ஆச்சரியத்தில் மூழ்கிப்போகிறவர்களாயிருக்கிறோம். பூமிக்கும் சந்திரனுக்கும் இருக்கிற தூரம் 240000 மயில். பூமியிலிருந்து சூரியனுடைய தூரத்தைக் கவனித்தாலோ அது மிகவும் தொலையிலிருக்கிறது. ஒரு பீரங்கிக்குண்டு ஒருமணி நேரத்தில் 1000 மயில் விசையாய்ச் செல்லுமென்று வைத்துக்கொண்டால், அந்தக் குண்டு சூரியனைச் சேர 10 வருஷத்துக்கு மேற்செல்லும். பூமிக்குச் சமீபமாயிருக்கிற நட்சத்திரத்தின் தூரமோ சூரியனுடையதைவிட 400,000 பங்கு அதிகத் தொலையிலிருக்கிறது. மற்ற நட்சத்திரங்கள் கோடி கோடி பங்கு தொலையிலிருக்கின்றன.

தேவன் உண்டாக்கின இந்த இரண்டாம் வானத்துக்கு அப்பால் பவுல் மூன்றும் வானமாகிய பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். அது வேதத்தில் வானங்களின் வானம்என்று சொல்லப்பட்டிருக்கிறது. நட்சத்திரமண்டலம் நம்முடைய ஆகாயவிரிவுக்கு எவ்வளவு அப்பாலிருக்கிறதோ அப்படியே நட்சத்திர மண்டலத்துக்கு மூன்றும்வானம் அப்பாலிருக்கிறது. சாலோமோன் எருசலேமில் தேவாலயம் கட்டுவதைப் பற்றி தீருபட்டணத்தின் இராசாவாகிய ஈராமுக்கு எழுதினபோது அதைப்பற்றி வானாதிவானங்கள் என்று சொல்லுகிறான். எங்கள் தேவன் எல்லாத் தேவர்களைப் பார்க்கிலும் பெரியவர். ஆகையால் நான் கட்டப்போகிற ஆலயம் பெரிதாயிருக்கும். வானங்களும், வானாதிவானங்களும் அவரைக் கொள்ளக்கூடாதிருக்க அவருக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வல்லவன்யார். 2 நாளாகமம் 2: 5—6. அந்த வானாதிவானங்களிலே தேவன் தமது மகிமையை விசேஷித்த வகையாய் வெளிப்படுத்துகிறார். பவுல் அந்த இடத்துக்கு எடுத்துச்கொள்ளப் பட்டபோது தான் சரீரத்திலிருந்ததையும் சரீரத்துக்கு அப்புறத்திலிருந்ததையும் அறியேன் என்று சொல்லியிருக்கிறான். அந்த இடத்திலேயே மகிமைபொருந்திய தேவதூதர், தேவனுடையதும் ஆட்டுக்குட்டியானவருடையதுமான ஆசனத்தைச் சூழநிற்கிறார்கள். எண்ணுக்கடங்காத பரிசுத்தவான்களும் அங்கேயிருப்பார்கள். அங்கே ஆசனங்களும் துரைத்தனங்களும் வல்லமைகளும், மகிமையான கேருபீன்களும், சேராபீன்களுமுண்டு.

தேவன், தேவதூதர் இருக்கிற வானத்தையும் ஆதியிலே சிருஷ்டித்தார். அந்தத்தூதர், ஆதாமுக்கு வெகுகாலத்துக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். ஆதாம் பரதீசில் வைக்கப்படுமுன்னமே, தூதர்களில் சிலர் தங்கள் நிலைமையைக்காத்துக் கொள்ளாதபடியால் தள்ளுண்டுபோனார்கள். “தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தேவதூதர்களையும், மகாநாளின் நியாயதீர்ப்புக்கென்று, நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்.” ஜோதிதரித்த தேவதூதர்கள், ஆதாமுக்கு முன்னமே மோட்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கோடிகோடி தூதர், தேவனுடைய ஆசனத்தைச் சூழ்ந்து, அவருக்குத் துதிகளைப் பாடி அவர் சித்தத்தை நிறைவேற்றப் பறந்து செல்லுகிறார்கள்.

அவருடைய ஞானம், வல்லமை, மகிமை, மகத்துவம் இவைகளைப் பற்றி, சிருட்டியானது எவ்வளவு மாட்சிமையான எண்ணத்தை நமக்குண்டாக்கிறது. தோத்திரிக்கப்படத்தக்க நமது மீட்பரின் மீட்பின்கிரியையைப் பற்றி நாம் என்ன சொல்ல! இவ்வளவு வல்லமையும் பெருமையுமுள்ளவர் மனிதனை ரக்ஷிக்க தம்மைத் தாழ்த்திக்கொண்டது எத்தனை ஆச்சரியம்? அது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே!

நாம் இப்போது இரண்டாம் வானத்தைப் பற்றிப் பார்ப்போமாக; அதை நாம் நமது கண்ணால் பார்க்கலாம். அதைப் பற்றிச் சொல்லிய சாஸ்திரத்துக்கு வானசாஸ்திரம் என்று பேர். அந்த சாஸ்திரத்தை நாம் எத்தனைக்குக் கற்றுக்கொள்ளுகிறோமோ, அத்தனைக்கு நமக்கு இன்பமும் பிரமிப்புமுண்டாகிறது. நட்சத்திர மண்டலம், உலகத்தோற்ற முதல் ஏகோவாவின் மகிமையை காலங்கள் தோறும் அறிவித்து வருகின்றன. தூரதிஷ்டிக் கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, இப்போது ஏறக்குறைய 250 வருஷங்களுக்குள்ளே வானசாஸ்திரத்தைப் பற்றிய அறிவு விர்த்தியடைந்து வந்திருக்கிறது. அதற்கு முன்னிருந்தவர்களுக்குத் தெரியாத அநேக நூதனகாரியங்களைப் பிரதிலவந்தவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். தூரதிஷ்டிக் கண்ணாடியினாலும், க்ஷேத்திர கணிதத்தினாலும் ஆயிரமாயிரங்களாய்ப் பிரகாசிக்கிற நட்சத்திரங்களின் தூரத்தைக் கணித்திருக்கிறார்கள். தூரத்திலிருக்கிற சில உலகங்களின் பாரத்தை முதலாய்க் கணித்திருக்கிறார்கள். சூரியன், சந்திரன், கிரகங்களுடைய பாரம் இவ்வளவென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

வானசாஸ்திரிகள் நமது சூரியனைச் சுற்றி 60 கிரகங்கள் ஓடுகிறதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அவைகளில் சில நமதுபூமியைவிட பெரியவைகள். சில சிறியவைகள். திருஷ்டாந்தமாக, யூரானுஸ் என்ற கிரகம் பூமியைவிட 77-பங்கும் சனி 887-பங்கும் வியாழன் 1470-பங்கும் பெரிதாயிருக்கிறது. இந்தப் பெரிய கிரகங்கள் சூரியனுக்கு நமது பூமியைவிட தொலைதூரத்திலிருப்பதினால், அவைகளுக்குப் பல சந்திரன்களுண்டு. பூமிக்கும் சூரியனுக்கும் இருக்கிற தூரத்தை விட வியாழனுக்கும் சூரியனுக்கும் இருக்கிற தூரம் ஐந்து மடங்கு அதனம். அப்படியே சனிக்கிரகம் 9½-மடங்கும், யூரானுஸ் 19-மடங்கும் அதனமாயிருக்கிறது. நட்சத்திரங்களுக்கும் நமது பூமிக்கும் இருக்கிற தொலையைப் பார்த்தாலோ, நாம் ஆச்சரியத்தில் மூழ்கவேண்டியவர்களாயிருக்கிறோம். கடந்த ஐம்பது வருஷங்களுக்குள்ளே ஆச்சரியமானவைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகாயத்தில் கொட்டைப்பாக்குப் பருமனாய்க் காணப்படுகிற நட்சத்திரமுதலாய் சூரியன்களாம். சில நட்சத்திரங்கள் நமது சூரியனை விட மகா பிரமாண்டமுள்ளது.

நல்ல, வெளிவாங்கின இரவிலே, நாம் 1000 நட்சத்திரங்களை நமது கண்ணால் காணலாம். தூரதிர்ஷ்டிக் கண்ணாடியினால் 80000 மடங்கு அதிகமாய்க் காணலாம். ஹெர்சல் சாஸ்திரியாருடைய தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒரு பொருளை 6000-மடங்கு பருமனாகக் காட்டும். அந்தக் கண்ணாடியினால், நாம் சந்திரனுக்கு 40-மயில் தூரத்துக்கு இப்பாலிருந்து பார்ப்பதுபோல சந்திரனுடைய மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் காணலாம். இந்த அற்புதமான ஆடி, நட்சத்திரங்கள் நமது கண்ணுக்குத் தெரிகிறதைப் பார்க்கிலும் 3700 மடங்கு அதிகப் பிரகாசமாய்த் தெரியச் செய்கிறது. நாம நமது கண்ணால் நட்சத்திரங்களில் ஆறு அல்லது ஏழாம்தரமானவைகளை மாத்திரம் பார்க்கலாம். அந்த ஆடியினால் 1344-ம் தரமாயுள்ள நட்சத்திரங்களையும் காணலாம். ஹெர்சல் சாஸ்திரியார், தமது கண்ணாடியில் அந்தகாரமுள்ள ஒரு இரவில் மூன்று மயில் தூரத்துக்கப்பாலிருக்கிற கோவிலின் கோபுரத்தையும் அதில் வைக்கப்பட்டிருக்கிற கடியாரத்தையும் அந்தக் கடியாரத்தில் நிமிஷம் காட்டுகிற கம்பி எந்த இடத்திலிருக்கிறதென்பதையும் அறிந்துகொள்வார்.

---



## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**— ஆப்கானிய யுத்தச் செலவுக்காக இங்கிலந்து 50-லட்சம் பவுன் கொடுத்திருக்கிறது. அந்த யுத்தத்தின் மொத்தச் செலவுகளில் இத்தொகை நாலிலொரு பாகமென்று உத்தேசம். மகா மகிமைதங்கிய இந்திய சக்கரவர்த்தினியவர்களும் ஆப்கான் யுத்த சகாய நிதிக்காக 100-பவுன் கொடுத்து உதவினார்கள். சகாயம் பெற வேண்டியிருக்கிற விதவைகள் 84, அநாத பிள்ளைகள் 156, இந்த வகைக்கு நாளதுவரையும் கையொப்ப மூலமாய்ச் சேர்ந்த ரொக்கம் 2 614 பவுன்தான். ருஷிய சக்கரவர்த்தியானவர் சென்றமீ 13உ சாந்துபீற்றர்புரியின் தெருவொன்றிற் சவாரிபோகையில் தமது ரதத்தின் கீழிருந்து ஒரு சட்டிப்பீரங்கிக்குண்டு வெடித்ததினால் சதிக்கொலையடைந்தார். அவரது சேஷ்ட புத்திரன் அலேக்சாந்தர் என்னும் ராஜபிரபு அவர் ஸ்தானத்தில் சக்கரவர்த்தியானார்.

**தென்ஆபிரிக்கா.**—ஸ்பித்ஸ்கொப் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் பிரிட்டிஷ் சேனை தோல்வியடைந்து, தளபதியாகிய ஸ்ரீ ஜியோர்ஜ் கொல்லாய் துரையும் ராணுவ உத்தியோகஸ்தர் பலரும் கொலையுண்டனர். கொல்லாய்துரை ஸ்தானத்துக்கு ஸ்ரீ பிரடெரிக் ராபெர்ட்ஸ் துரை அனுப்பப்பட்டார். அவருக்கு பரோனெற்று பிரபுவரிசை கிடைத்திருக்கிறதாம்.

**இந்தியா**—தபாலாபீஸ் சம்பந்தமாய் சேவிங்ஸ் பாங்கு என்னும் பீ முதல் நாணயசாலை ஸ்தாபிக்க இந்திய துரைத்தனத்தார் யோசித்திருக்கிறார்கள். எவ்வளவு சிறு தொகையான ரொக்கமும் அதில் வாங்கிக்கொள்ளப்பட்டு, வருஷத்துக்கு நூற்றுக்கு 4-விகிதம் வட்டி கொடுக்கப்படும். முதல் போடுகிறவர்கள் வாரத்தில் ஒருதடவை பணம் எடுத்துக்கொள்ளத்தக்கதான ஏற்பாடுகள் செய்யப்படுவதுமன்றி, அவரவர் சுயபாஷையில் கணக்கு விபரங்களும் ஒப்புவிக்கப்படும். ஜனங்களின் சுகவாழ்வை விர்த்திபண்ணுவதே இவ்வேற்பாட்டின் தாற்பரியம். ஆப்கானிய போரில் துணைபுரிந்த சுதேச அரசரின் சேனைகளுக்கும் உதவிப் படைஞருக்கும் யுத்தப் பரிசு முத்திரை வெகுமதி பண்ண இந்திய அரசாட்சியாரின் அனுமதி பிறந்தது. விஜய நகரத்தின் மகாராஜாவானவர் பங்காளக் குடாக்கடலின் சென்னைப் பக்கத்தில் பிம்பிலிப் பட்டினம் அல்லது வேறொரு துறைமுகத்திலிருந்து வடமேற்கு மாகாணங்களைச் சேர்ந்த ஜெயபுரியில் யாதாமொரு பெரிய நகரமட்டும் எட்டக்கூடிய இருப்புப் பாதை ஒன்றுக்கு ரோட்டு சர்வே செய்யும் செலவுக்காக லட்சம் ரூபாய் கொடுக்க உடன்பட்டிருக்கிறார். மேற்படி சூழ்ச்சி அவர் தந்தை ஜீவந்தராயிருந்த காலங்களில் கொண்டிருந்த மனோரதங்களில் ஒன்றாம்.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்ருடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | உக | உங்கள் வழக்கைக் கொண்டு வாருங்கள். எசாயா. 41: 21. |
| ச | 2 | உ0 | என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன். 42: 1. |
| ஞா | 3 | உக | உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன். 43: 25. |
| தி | 4 | உஉ | இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை. 44: 21. |
| செ | 5 | உரு | கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியும் வல்லமையுமுண்டு. 45: 24. |
| பு | 6 | உச | பேல் பணியும், நேபோ குனியும் 46. 1. |
| வி | 7 | உ௫ | கல்தேயரின் குமாரத்தியே தரையிலே உட்காரு. 47: 1. |
| வெ | 8 | உசு | துன்மார்க்கருக்குச் சமாதானமில்லை. 48: 22. |
| ச | 9 | உஎ | இஸ்ரவேலே நான் உன்னில் மகிமைப்படுவேன். 49: 3. |
| ஞா | 10 | உஅ | மீட்கக் கூடாதபடிக்கு என்கரம் குறுகிற்றோ. 50: 2. |
| தி | 11 | உகூ | என் ரட்சிப்போ என்றென்றைக்கும் இருக்கும். 51: 6. |
| செ | 12 | ௧ | அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார். 52: 15. |
| பு | 13 | உ | அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். 53: 5. |
| வி | 14 | ௩ | என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன் 54: 8. (55 |
| வெ | 15 | ச | அவரை ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சியாக ஏற்படுத்தினேன். ( 4. |
| ச | 16 | ௫ | என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது. 56: 1. (57: 14) |
| ஞா | 17 | சு | இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப்போடுங்கள். |
| தி | 18 | எ | கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். 58: 8. |
| செ | 19 | அ | எங்கள் அக்கிரமங்களை அறிந்திருக்கிறோம். 59: 12. |
| பு | 20 | கூ | என் கிருபையினால் உனக்கு இரங்கினேன். 60: 10. |
| வி | 21 | க0 | என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது. 61: 10. |
| வெ | 22 | கக | உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார். 62: 5. |
| ச | 23 | கஉ | அவர்கள் நடுவிலே பரிசுத்தாவி இருக்க. 63: 12. |
| ஞா | 24 | கரு | எங்களுடைய நீதிகளெல்லாம் கந்தை. 64: 6. |
| தி | 25 | கச | அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். 65: 24. |
| செ | 26 | க௫ | அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும். 66: 24. |
| பு | 27 | கசு | என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். எரேமியா. 1: 9. |
| வி | 28 | கஎ | உன் இளவயதின் பக்தியை நினைத்திருக்கிறேன். 2: 2. |
| வெ | 29 | கஅ | தேவரீர் என் இளவயதின் அதிபதி. 3: 4. |
| ச | 30 | ககூ | என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார். 4: 1. |

## விசேஷ நாட்கள்.

8. லெந்தென்னும் நாட்களில், 5-ம் ஞாயிறு.
10. உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் 5-ம் ஞாயிறு.
14. பௌரணமி.
15. பெரிய வெள்ளிக்கிழமை.
17. ஈஸ்தர் பண்டிகை.
24. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு.
25. பரி. மாற்கு சுவி. திருநாள்.
29. அமாவாசை.

# நற்போதகம்.

௫. மேமீ. ௲அஅக௵.

## யோசுவாவின் புஸ்தகம்.

## XIX. அதிகாரம்.

1. சிமியோனுக்கு யூதாப்புத்திரரின் நடுவே சீட்டு விழுந்தது; ஏனென்றால் (1) ஆதி. 49: 7-ல் சொல்லியபடி "இயாக்கோபிலே அவர்களைப் பிரியவும் இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும்பண்ணுவேன்" என்ற சாபம் நிறைவேறும்படி தேவசெயலால் இப்படி நடந்தது. (2) யோசுவாவும் எலியேசரும் எல்லாப் பிரபுக்களும், சனங்களும் தேசத்தை நன்ருய் அளந்து சோதித்தபிற்பாடு யூதாவுக்குக் கிடைத்தப் பங்கு அதிகமாயும்; அவர்களுடைய தேவைக்கு மிஞ்சினதாயுமிருந்ததைக் கண்டு சமாதானமாய் அவர்கள் நடுவே பங்கு கிடைத்தது. (3) எண். 26: 14-ல் கண்டபடி சிமியோன் எல்லாக் கோத்திரங்களிலும் சிறுத்துப்போனதால் வேருெரு கோத்திரத்துக்குள் பங்கு கொடுக்கும்படி நேரிட்டது. இவர்கள் தங்கள் எல்லை விஸ்தாரமாகும்படி பிற்காலத்தில் செய்த நடபடிக்கையை 1 நாளா. 4: 39-முதல் பார்.

10. செபுலோன், இசக்காருக்குத் தம்பியாயினும், இயாக்கோபும் மோசேயும் கோத்திரப்பிதாக்களை ஆசீர்வதிக்கையில் செபுலோன் முந்தி ஆசீர்வதிக்கப்படுவதால், இப்போது பங்கும் ஈசக்காருக்கு முன்ருடியே கொடுக்கப்பட்டது. ஆதி. 49: 13, 14. உபா. 33: 18. "அவன் கப்பல் துறைமுகமாயிருப்பான்" என்றபடி அவன் பங்கு மேற்கே பெரிய கடலுக்கும், கிழக்கே கலிலேயாக் கடலுக்கும் நடுவேயிருந்தது. அங்கும் இங்கும் மீன்பிடிக்கிற கப்பல் துறைமுகங்களிருந்தன. கர்மேல் மலையில் நடந்த அதிசயமும், தாபோர் மலையில் நடந்த அதிசயமும், கலிலேயாக்கடலில் நடந்த அதிசயங்களும், இயேசுவானவர் இத்திசையில் போதித்த உபதேசமும் பழைய புதிய ஏற்பாட்டாகமங்களில் விபரமாய்க் காணலாம்.

11. "யோக்கினேயாம்" பேலு அல்லது கீசோன் ஆறு என்று உத்தேசிக்கப்படுகிறது.

17—23. மேற்கே பெரிய சமுத்திரமும், கிழக்கே யோர்தான் நதியும், வடக்கே செபுலோன் கோத்திரமும், தெற்கே மனாசே கோத்திரமுமாகிய இந்நான்கெல்லைக்குட்பட்ட தேசம் ஈசக்காருக்குரியது. இந்தக் கோத்திரத்தில் விசேஷித்த இடங்களாவன (1) எஸ்ரேயேல்

ஆகாப் இராசாவுடைய இராசதானி. அங்கேதான் நாபோத்தின் தோட்டமிருந்தது. (2) சூனேம் எலிசா தீர்க்கதரிசியை உபசரித்த நல்ல பெண்பிள்ளை இருந்த ஊர். (3) கீசோன் ஆறு. தெபோராளும் பாராக்கும், சிசேராவை முறியடித்த இடம். (4) கில்போகா மலைகள் சவுல் இராசாவும் அவன் மக்களும் மரித்த இடம். (5) மெகிதோவின் பள்ளத்தாக்கு யோசியா இராசா கொல்லப்பட்டது. 2 நாளா. 23: 29. சகரி. 12: 11.

24—31. ஆசேர் கோத்திரம் பெரிய சமுத்திரக் கரையோரமாயிருக்கிறது. இந்தக் கோத்திரத்தில் லூக். 2: 36-ல் சொல்லிய அன்னாள் தீர்க்கதரிசியைத் தவிர முக்கியமானவர்களில்லை. சூரியாதேசத்து இராசாவாகிய பெனாதாத் ஆகாப் இராசாவால் முறியடிக்கப்பட்ட ஆபேக்கைத் தவிர, விசேஷித்த இடமுமில்லை. 1 இரா. 20: 30. இதற்குச் சமீபமாய் தீருசீதோன் பட்டினங்களுண்டு. இங்கேதான் பூர்வீகக் குடிகளாகிய கானானியர் அடைக்கலம் புகுந்திருந்தார்கள்.

27. 1 இராசா 9: 13-ல் சொல்லிய காபூல் தேசமும் அதைச்சேர்ந்த 20-பட்டினங்களும் இதல்ல. ஏனென்றால் ஒரு விசேஷித்த கோத்திரத்துக்குப் பாத்தியப்பட்டதை சாலோமோன் இராசா வேறுபடுத்தி, ஈராமுக்குக் கொடுத்திருக்கமாட்டார். அதற்குச் சமீபமானதும் ஆசேருக்குப் பாத்தியப்பட்டதும், வேறு காபூலே.

28. “பெரிய சீதோன்” அதின் பூர்வீகம், ஆஸ்தி, மகிமை, சனப்பெருக்கம் முதலிய முகாந்தரங்களால் அப்படி அழைக்கப்படுகிறது. இந்தப் பட்டினம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்படவில்லை.

32—39. லீபனோன் மலையடி வாரத்தில் நப்தலிக் கோத்திரமிருக்கிறது. இதின் வடக்கில், தாண்கோத்திரத்தார் கைவசப்படுத்தின லாயீஸ் இருக்கிறது. மேரோம் ஆற்றண்டையில் யோசுவா யாபீனை துரத்தினார். 11: 1. இங்கேதான் கப்பர்நகூம், பெத்சாயிதா என்னும் பட்டினங்கள் திபேரியாக் கடலின் வடக்கிலிருக்கிறது. அங்கே கிறிஸ்துநாதர் செய்த அதிசயங்கள் மிகவுண்டு; சிலர் ஏசுநாதர் செய்த மலைப்பிரசங்கமும் அங்கேதானென்று நினைக்கிறார்கள்.

34. நப்தலிக் கோத்திரத்தின் தெற்கெல்லை, அதற்கும் யூதாக் கோத்திரத்துக்கும் இடையில் அநேக கோத்திரங்களிருக்க எப்படி “யோர்தானிலே யூதாவைச் சார்ந்துவரும்” என்று சொல்லலாம்! இந்த வாக்கியத்தில் செபுலோனையும், ஆசேரையும் பற்றிச் சொல்வதுபோல் சொல்லாமல் வேறே கருத்துண்டாகும்படி சொல்லுகிறார். எப்படியும் யோர்தான்மூலமாய் நப்தலிக்கும் யூதாவுக்கும் போக்குவரவு இருந்திருக்கலாம். நப்தலி வடகடையாந்தரத்தில் குடியேறியிருந்தாலும் மேற்கிலும் தெற்கிலுமுள்ள சம்பத்துக்களைச் சுதந்தரிப்பான் என்கிற தீர்க்கதரிசனம் ஒருவகையில் நிறைவேறியிருக்கின்றன. உபா. 33: 23. நப்தலி யோர்தான் நதிமூலமாய் தெற்கிலுள்ள கோத்திரங்களில் வியாபாரஞ்செய்திருப்பான். நப்தலி மட்டும் எட்டியிருக்கிற யோர்தான் நதியை தேவன் யூதாக்கோத்திரத்துக்குக் கொடுத்திருக்கலாமென்று சிலர் உத்தேசிக்கிறார்கள்.

40—48. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகையில் சதுரங்க சேனைக்கு முன்னணியில் சென்ற நால்வரில் ஒருவனாயிருந்தும், கானான்தேச சுதந்தரத்தில் கடைசிப் பங்காகச் சீட்டுவிழுந்தது.

47. தாணியர் பக்கத்திலுள்ள பெலிஸ்தரால் வெகுவாய் நெருக்கப்பட்டபோது, ஒரு கோத்திரத்துக்குஞ் சம்பந்தப்படாத வெகு தூரமான லேசேம் பட்டினத்தைப் பிடித்து தங்கள் கைவசப்படுத்திக்



கொண்டார்கள். இது யோசுவாவின் மரணத்துக்குப்பின்பு சம்பவித்தது. நியாயாதி 18-அதி.

49. எல்லாக் கோத்திரத்தாரும் சமாதானமாய்த் தங்கள் சுதந்தரங்களை ஏற்றுக்கொண்டு போவதற்குமுன், யோசுவாவுக்கும் ஒரு சுதந்தரங் கொடுத்தார்கள். யோசுவாவும், எலியேசர், கோத்திர பிரபுக்களோடே தேசத்தை சனங்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தாரேயல்லாமல் தமக்கென்று முன்னாடியே தமதிஷ்டபடி ஒன்றைத் தெரிந்துகொள்ளவில்லை.

50 தேவன் காலேபுக்குக் கொடுக்கவேண்டியதைப்பற்றி மோசேக்குச் சொல்லியிருப்பதுபோல் யோசு. 14: 6 அவனைப்போலொத்த விசுவாசமும், தைரியமுமுள்ள யோசுவாவுக்கும் தேவன் ஒரு சுதந்தரத்தைக் கொடுக்க வாக்குக்கொடுத்தார். அந்தப்படிக்கு எப்பிராயீம் கோத்திரத்தில் திம்னாத் சேராவைக் கொடுத்தார்கள். யோசுவா மற்றவர்களுக்கு மாதிரியாக அந்தப் பட்டினத்தைக் கட்டி விஸ்தாரமாக்கி குடியிருந்தான். பிற்காலத்தில் இந்தப் பட்டினம் திம்னாத், ஏரேஸ் என்று பேர் வழங்கிற்று. நியாயாதி. 2: 9.

51. எண். 34: 17. யோசு. 14: 1. 18: 1.

## கேள்விகள்.

1. சிமியோனைப்பற்றி இயாக்கோபு சொன்ன தீர்க்கதரிசனமென்ன? அதெப்படி நிறைவேறிற்று? பிற்காலத்தில் தங்கள் எல்லையை விஸ்தாரமாக்கும்படி அவர்கள் செய்த முயற்சியென்ன?

2. சிமியோன் கோத்திரம் இந்தக் காலத்தில் சிறுத்துப்போயிருந்ததற்கு முகாந்தரமென்ன? அவர்களுக்குக் கிடைத்த சுதந்தரம் யூதாக்கோத்திரத்துக்குள்ளிருந்தபடியால் அவர்களுக்கு பிற்காலத்தில் கிடைத்த நன்மையென்ன?

3. செபுலோன் கோத்திரத்தைப்பற்றி மோசே சொன்ன தீர்க்கதரிசனமென்ன? அதெப்படி இங்கே நிறைவேறிற்று? இங்கே கிறிஸ்துநாதர் செய்த அற்புதங்களெவை?

4. ஈசக்கார் கோத்திரத்தில் பிற்காலத்தில் எழும்பின விசேஷித்த மனிதர்களார்?

5. கானான்தேசத்தில் எத்தனை கர்மேல் மலைகளுண்டு? அங்கங்கே நடந்த விசேஷமென்ன?

6. யோசுவா இவ்வாகமத்தை எழுதினவரல்லவென்று ஆட்சேபிக்கிறவர்கள் சொல்வதற்கு இங்கே ஏதாவது ஆதாரமுண்டா? அதற்கு என்ன சமாதானம்!

7. தாண்கோத்திரத்தைப் பற்றிய தீர்க்கதரிசனமும், நிறைவேறினதுமென்ன? இந்தக் கோத்திர வரலாறு சொல்லும்.

8. யோசுவாவுடைய நற்குணத்துக்கு இதில் உதாரணமுண்டா?

## XX. அதிகாரம்

2. அடைக்கல பட்டினங்களைப்பற்றி. உபா. 19: 1—13. எண். 35: 9—34. யாத். 21: 13 பார். எல்லாருக்குள்ளும் தேசம் பங்கிடப்பட்ட பின்பு தேவன் அடைக்கல பட்டணங்களை ஏற்படுத்தச் சொல்லுகிறார்.

இதுவும் லேவியருக்கு பட்டணங்கள் கொடுக்கப்பட்டபின்பு தான்
இவைகள் நியமிக்கப்பட்டன. ஏனென்றால் அடைக்கல பட்டணங்களும்
லேவியரைச் சேர்ந்ததே. இளைப்பாறும்படிக்கு தேவன் இஸ்ரூவேலருக்
குப் பட்டணங்களைக் கொடுத்தபின்பு, மோசங்களுக்குத் தப்பும்படி
அடைக்கல பட்டணங்களை ஏற்படுத்தச் சொல்லுகிறார்.

2. அறியாமல், கைப்பிசகாய் என்று இரண்டுதரம் சொல்லியிருப்
பதைக் கவனிக்கையில், மனதார, அறிவோடே வேணுமென்று கொலை
பாதகஞ்செய்தவர்கள் தப்பிக்கொள்வதற்கு எவ்வளவென்கிலும் இட
மில்லையென்று அறியவேண்டும். இப்படிப்பட்டவன் பலிபீடத்தின்
கொம்பைப் பிடித்தாலுங் கொலைசெய்யப்படவேண்டுமென்று சட்டம்.
யாத். 21: 14. அந்தப்படியே சாலோமோன் உத்தரவுப்படி யோவாபும்
கொல்லப்பட்டான். 1 இராசா 2: 28, 34.

4. நியாயாதிபதிகள் பட்டணங்களின் ஒலிமுகவாசலில் உளுக்
கார்ந்திருப்பார்கள். கைப்பிசகாய்க் கொன்றவன் சங்கதிகளையெல்லாம்
விபரமாயும், உண்மையாயும் தெளிவாயும் சொல்லவேணும். நியாயா
திபதிகள் அவன் சொல்வதை சத்தியமென்று அறிந்தால் தங்களோ
டே குடியிருக்க இடங்கொடுப்பார்கள்.

6. "சபைக்கு முன்பாக அவன் நிற்கும்வரைக்கும்" இது குற்ற
வாளிகளும், குற்றஞ்சாட்டுகிறவர்களும் நிற்கவேண்டும். யாத். 18:
13. ஏசா. 50: 8. சகரி. 3: 1. கிரிமினல் சங்கதிகளை விசாரிக்கும்படிக்கு
ஒவ்வொரு பட்டணத்திலும் 23-பேர் நியாயாதிபதிகளாக நியமிக்கப்
பட்டிருப்பார்கள். முதலாவது அடைக்கல பட்டணத்து நியாயாதிபதி
கள் தீர்ப்புச்செய்ததற்கு (4-வா.) குற்றஞ்சாட்டுகிறவன் சம்மதியாவிட்
டால், பழிச்சங்கதி நடந்த சமீபமான பட்டினத்து நியாயாதிபதிகளே
தீர்ப்புச்செய்யவேண்டும். எண். 35: 12, 25. அக்காலத்து பிரதானஆசா
ரியனுடைய மரணம்வரைக்கும் அவன் கைதிபோல் அப்பட்டணத்திலி
ருக்கவேண்டும். பிரதானஆசாரியன் மரிக்குமுன் அவன் இறந்துபோ
னால் அவனை அங்கேயே அடக்கம்பண்ணி, பிரதானஆசாரியன் மரித்த
பின்பு அவனுடைய எலும்புகளை அவன் பிதாக்கள் கல்லறையில் அடக்
கஞ்செய்யக் கொண்டு போவார்களென்பதாய் யூதர் சொல்வார்கள்.

7. யோசுவாவும் பிரபுக்களும் கூடி ஆலோசித்து யோர்தானுக்கு
மேற்கே 3-பட்டணங்களும் யோர்தானுக்கு கிழக்கே 3-பட்டணங்க
ளும் ஏற்படுத்தினார்கள். இந்தப் பட்டணங்களைப்பற்றி நாம் கவனிக்க
வேண்டியது. (1) கைப்பிசகாய்க் கொன்றவன் நேராய் ஓடி வரவும்,
தூரத்திலே பார்க்கவும் அவைகள் மலைகளின்மேல் கட்டப்பட்டிருந்
தன. (2) எல்லாக் கோத்திரத்தாருக்கும் பிரயோசனமுண்டாகவே
அதாவது பாதிநாள் பயணதூரத்துக்குள்ளாகவே அவைகளிருந்தன.
காதேஸ் வடக்கிலும், எபிரோன் தெற்கிலும், சீகேம் மத்தியிலும் சம
தூரத்திலிருந்தன. (3) இவைகளெல்லாம் லேவியருக்குக் கொடுக்கப்
பட்ட பட்டணங்கள். இவர்கள் நியாயப்பிரமாணத்தை நன்றாய் அறிந்
திருப்பவர்களாதலால், அநியாயமாயும் பாரபட்சமாயும் தீர்ப்புகள்
செய்யாதபடிக்கிருக்கவும், பழிவாங்கும்படிக்கு பின்தொடருகிறவன்
மூர்க்கமாய் பட்டணத்துக்குள் வந்து பழிசெய்யாமல் நல்ல ஆலோ
சனையினாலும், போதனையினாலும் தடுக்கும்படிக்கும், இப்பட்டணங்
கள் லேவியரைச் சேர்ந்திருந்தன. அடைக்கலஞ் சேர்ந்தவனும் ஆறு
தலாயிருக்கவும், தேவாலயத்துக்குப் போகக் கூடாதவர்களானதால்
தேவஊழியக்காரரோடிருந்து அவர்கள் போதனைகளை கற்றுக்கொள்
ளவும் இடமாயிற்றே.



8. உபா. 4: 43-ல் யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள 3-பட்டினங்
களும் மோசேயினால் கொடுக்கப்பட்டன. அல்லது மோசே கொடுத்த
கட்டளையை உறுதிப்படுத்தினார்கள்.

9. கைப்பிசகாய் கொலைசெய்தவர்களுக்கும் மனதாரக் கொலை
பாதகஞ் செய்தவர்களுக்கும் வித்தியாசஞ்செய்யும்படி அவர்கள் நடு
வேயிருக்கிற புரோசெலுத்துக்களுக்கு மாத்திரமல்ல, எந்த அந்நிய
னுக்கும் இந்தச் சலாக்கியமுண்டு. எண். 35: 15.

## கேள்விகள்.

1. அடைக்கல பட்டணங்கள் நியமிக்கப்பட்ட நோக்கமென்ன?
அந்தப் பட்டணங்களிருக்கிற இடத்தைக் காண்பிக்கிற ஒரு படம்
வரையும்.

2. அடைக்கல பட்டணங்களின் அருத்தமென்ன? அவைகளெப்
படி கிறிஸ்துநாதருக்கு முன்னடையாளம்?

3. பட்டணத்தின் ஒலிமுக வாசலில் நியாயம் விசாரிக்கிற வழக்
கமுண்டென்பதற்கு உமக்குத் தெரிந்த வேதஉதாரணங்களையும் வேத
வாக்கியங்களையுஞ் சொல்லுங்கள்!

4. ஒவ்வொரு அடைக்கல பட்டணத்திலும் நடந்திருக்கிற விசே
ஷங்களை எழுதும். அவைகள் அடைக்கலத்துக்கேற்ற சரியான இடங்
கள் தானென்பதற்கு நியாயமென்ன?

5. அடைக்கல பட்டணங்கள் தவிர வேறெதையும் உயிர் தப்பும்
படி தேவன் யூதருக்கு நியமித்திருக்கலாம். அதெப்படி கிறிஸ்துநாத
ருக்குக் குறிப்பு?

---

## XXI. அதிகாரம்.

1. லேவியரின் வம்ச பிதாக்களாகிய கேகாத், கெர்சோன், மெ
ராரி, என்பவர்களும் அவர்களுடைய குடும்பத் தலைவரும் தங்கள் சுதந்
தரத்துக்காக விண்ணப்பஞ்செய்தார்கள்.

2. எண். 35: 2.

3. ஆதியாகமம் 49: 7-ல் சொல்லிய இயாக்கோபுடைய தீர்க்க
தரிசனத்தின்படியே லேவியர் எல்லாக் கோத்திரங்களிலும் சிதறியி
ருக்கும்படிக்கு இஸ்ரூவேல் புத்திரர் தங்கள் சுதந்தரத்திலே பட்ட
ணங்களைக் கொடுத்தார்கள். எல்லாச் சனங்களும் வேதத்தை அவர்
கள் வாயில் தேடும்படிக்கும், மல். 2: 7. இஸ்ரூவேலருக்கு நியாயப்
பிரமாணத்தைப் போதிக்கவும், உபா. 33: 10. எல்லாச் சமயங்களி
லும் தாராளமாய் இஸ்ரூவேலர் லேவியரண்டை போகவும் பிரயோச
னமாயிற்று. பட்டணங்களும் அதைச் சேர்ந்த வெளிநிலங்களுமே
லேவியருக்குரியது. அப்பட்டணத்தைச் சேர்ந்த வயல்களும் பட்டி
களும் இஸ்ரூவேலரைச் சேரும். 11, 12-வாக். பட்டணத்திலுள்ள ஒரு
லேவியன் வீட்டை இஸ்ரூவேலன் வாங்கினால் யூபிலி வருஷத்தில்
லேவியரைச் சேருமென்பதினால், லேவி. 25: 33, 34. அந்தப் பட்டணங்
கள் லேவியருக்கே சொந்தமென்று அறியலாம்.

4. இந்த 3-கோத்திரங்களும், தேவாலயத்துக்குச் சமீபமானதி
னால் ஆசாரியருக்கு அவைகளில் சுதந்தரம் கிடைத்தது இசைவுதான்.

தற்காலத்தில் ஆசாரியர் ஒரு பட்டணத்திலுங் கூட வாசமாயிருக்க போதுமானவர்களாயிராவிட்டாலும், பிற்காலத்தாருக்காக 13-பட்டணங்கள் கிடைத்தது அவர்களுக்குரிய கனமே. யூபிலி வருஷம்வரை லேவியர் தங்கள் வீடுகளை விற்க பாத்தியப்பட்டவர்களானதாலும், லேவி. 25: 33. இஸ்ரவேலரும் இனமுறையினாலும், பத்திக்கடுத்த விஷயங்களாலும், அவர்களோடேகூட குடியிருக்கவேண்டியிருப்பதாலும் அந்தப் பட்டணங்கள் பாழாயிராமல், எல்லாம் குடியேற்றப்பட்டிருக்கும்.

5. கோகாத்தின் புத்திரர் ஆரோனின் வம்சத்தார்தான். ஆரோனின் குடும்பம் மாத்திரம் ஆசாரியர், மற்றவர்கள் லேவியரே. ஆகையால் இவர்களுடைய சுதந்தரம் மூந்தின 3-கோத்திரங்களுக்குச் சமீபமும், ஆரோனியருக்கு அடுத்ததாயுமிருந்தது. மூந்தின கோத்திரங்களிலும், இந்தக் கோத்திரம் சிறியதானபடியால், 10-பட்டணங்கள் மாத்திரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. எண். 35 : 8.

12. ஒவ்வொரு பட்டணத்தின் 2,000 முழத்துக்கப்புறமுள்ள வயல்களும் பட்டிகளும் இஸ்ரவேலரைச் சேரும். எண். 35: 5. இந்தச் சங்கதி மற்றப் பட்டணங்களுக்கு இப்படியே என்பதற்கு உதாரணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1 நாளா. 6: 56.

15. ஓலோன் என்பது ஈலென் என்றும், 1 நாளா. 6: 58. யத்தா என்பது ஆசான் என்றும், 1 நாளா. 6: 59. மீ. அழைக்கப்படுகிறது. இடங்களின் பேர்கள் வெகுகாலத்துக்குப் பின்பும், விசேஷித்த நோக்கத்துக்காகவும் மாற்றப்படுகிற வழக்கப்படி நடந்திருக்கிறது.

41. எல்லாக் கோத்திரங்களிலும் சிறியதான லேவிக் கோத்திரத்துக்கு மற்றவர்களிலும் அதிகமான 48-பட்டணங்கள் கொடுக்கப்பட்ட அவசியமென்ன? லேவியர் அதிகம் பெற்றார்களென்பது சரியல்ல. லேவியருக்குக் கிடைத்த பட்டணங்களை விபரமாய்ச் சொல்லியிருப்பதுபோல் மற்ற கோத்திரங்களுக்கு அப்படிச் சொல்லாமல் அநேகம் விடப்பட்டிருக்கிறது. லேவியருக்கு அந்தப் பட்டணங்களும் அதைச் சேர்ந்த வெளி நிலங்களுமாத்திரம் தானே கிடைத்தது. ஆகையால் லேவியருக்குக் கிடைத்த அதிக பட்டணங்கள் கூடி இஸ்ரவேலருக்குரிய ஒரு பட்டணத்துக்குச் சரியாயிருக்கும். லேவியர் தேவ ஊழியக்காரரானதால் அவர்கள் முழுவதுமாய், தேவாராதனைக்கும் சனங்களுடைய ஆத்துமாக்களைப்பற்றிக் கவலைப்படுவதற்கும், தடைவராதபடிக்கும், தேவன் இப்படிச்செய்ய சித்தமானார்.

## கேள்விகள்.

1. லேவியருக்குக் கொடுக்கப்பட்ட பட்டினங்கள் எங்கே? இதினால் விளங்கிய தேவஞானமும், கிருபையுமென்ன?

2. ஆசாரியர் ஆரோனுடைய குடும்பமாய் மாத்திரமிருக்க அவர்களுக்கு 13-பட்டணங்கள் கொடுக்கப்படுவதற்கு நியாயமென்ன?

3. லேவியரின் பட்டணங்களில் சில பிற்காலத்தில் பேர்பெற்றதாயிற்று. எது? எப்படி?

4. ஆசாரியருக்கு யூதா, பென்யமீன் கோத்திரத்தில் சுதந்தரங் கொடுக்க நேரிட்டதென்ன?

5. லேவியருக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்கள் எல்லாம் அவர்களால் முழுவதுமாய் குடியேற்றப்படவில்லையென்பதற்கும் லேவியரில்லாததாலிருக்கிற பொல்லாங்கின்னதென்பதற்கும் ஒரு உதாரணம் சொல்லும்!



6. போதகன்மாருக்கிருக்கவேண்டிய இலட்சணங்களில் அவர்களால் தேசத்துக்குக் கிடைக்கிற நன்மைகளில் இங்கே என்னபடிக்கிறோம்?

---

## XXII அதிகாரம்.

7. யோசுவா $2\frac{1}{2}$ கோத்திரத்தாரை ஆசீர்வதித்து அனுப்புகையில் தன் முற்பிதாவாகிய யோசேப்பின் சந்ததியில் மனாசே பிரிந்துபோகையில், அவர்களை அலாதியாய் ஆசீர்வதித்து அன்புக்கும் நினைப்புக்குமடையாளமாக வெகுமானங் கொடுத்தனுப்பினார்..

8. படையெடுத்துப் போனவர்களுக்கும், யோர்தானுக்கப்பாலிருந்த சபையனைத்துக்கும் சரிபங்கு செய்துகொள்ள கற்பிக்கப்பட்டார்கள். என் 31: 27. 1 சா. 30: 24.

10. $2\frac{1}{2}$ கோத்திரத்தாரும் யோர்தானுக்கப்புறத்திலப் பலிபீடங் கட்டினார்கள். சாடையாய்ப் பார்த்தால் பலிபீடம் கானானில் கட்டப்பட்டதாகத் தோன்றும். "கானானுக்கெதிரே" என்று சொல்லியிருப்பதாலும் பலிபீடம் கட்டுவதற்கு அவர்கள் சொன்ன முகாந்தரத்தாலும், கானான்தேசத்தில் தேவனை ஆராதிக்கும்படி செய்யப்பட்ட பலிபீடத்தின் மாதிரிப்படி தங்கள் தேசத்திலே ஒன்றைக் கட்டினார்கள். "அங்கே" என்ற வார்த்தை "அப்பேது" என்று பொருள்கொள்ளும். சங். 14: 5. 36: 12. ஓசே. 2: 15. லத்தீன் பாஷையில் இடத்தைக் காட்டும் வினையுரிச்சொல் காலத்தைக் காட்டும் வினையுரியாக வழங்கப்படும்.

12. தேவனுடைய கட்டளைப்படி தேவனைவிட்டு மறுதலிக்கிறவர்கள் கொல்லப்படவேண்டும். உபா 13: 13. அதற்காக மூப்பர்களுடைய உத்தரவால் யுத்தத்துக்கு அவர்களுக்கு விரோதமாக இஸ்ரவேலர் எழும்பினார்கள். நியாயாதி 20; 1.

16. தேவன் ஆச்சரியமான நன்மைகளை யளித்திருக்கிற நாளிலே நமது வருத்தங்கள் மோசங்களினின்று காக்கப்பட்டு, நமது வேலையின் பலனை அறுக்கப்போகிற இந்நாளில், வேறே பலிபீடம் கட்டி தேவனை வணங்குவது பெரிய பாவமென்று இஸ்ரவேலர் சொன்னார்கள். யாத் 20: 24. லேவி 17: 8, 9. உபா. 12: 5. 11: 13.

17. பேயோரில் பாகாலை வணங்கின பாவம் பெரிது. எண். 25. அதினிமித்தம் தேவன் தண்டித்தாலும் எண். 25: 11. அந்தப் பாவத்தின் அழுக்கும் நிந்தையும் இன்னும் போகவுமில்லை. அந்த புளித்தமா இன்னும் சிலருக்குள் மறைக்கப்பட்டிருந்தது. யோசு. 24: 23.

18. ஒருவர் அல்லது சிலருடைய பாவத்தினால் சபையனைத்தின் மேலும் தேவன் கோபங்கொள்வாரென்ற பயமிருந்தது. எண். 16: 22. யோசு. 7: 24.

9. $2\frac{1}{2}$ கோத்திரத்தாருடைய தேசம், ஆசரிப்புக்கூடாரமும் பலிபீடமுமில்லாமலிருப்பதால் அது தீட்டாயிருக்குமென்றும் அவர்கள் வசதிக்காக தெரிந்துகொண்ட பங்கு, தேவாராதனைக்கும் தேவதயவுக்கும் இடைஞ்சலாயிருக்கிறதென்று உணர்ந்துகொண்டாலும் வேறே பலிபீடங் கட்டுகிற இப்படிபட்ட பெரிய பாவத்தைச் செய்

கிறதிலும் எங்கள் நடுவே காணியாட்சி பெற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்கள்.

23. "கர்த்தர் அதை விசாரிப்பாராக. இந்த வாசகம் வேதத்தில் அடிக்கடி வழங்கப்படுகிறது. உபா. 18: 19. 1 சாமு. 20: 16. யோபு 10: 6. சங். 10: 13.

25. வாக்குத்தத்தின் தேசத்திலிருந்து, யோர்தான்நதி 2½ கோத்திரத்தாரைப் பிரித்துப்போடுவதாலும், தேவன் தங்கள் பிதாக்களோடு செய்த உடன்படிக்கையை நீக்கிப்போடவும்; தேவனை வணங்கவும், அவருடைய தயவைப் பெறவும் பாத்தியமில்லாமல் அகற்றிப்போடவும் ஏதுவில்லாதபடிக்கு இப்படிச் செய்தோம் என்றார்கள். 2 சாமு. 20: 1. எஸ் 4: 3. யோவா. 13: 8.

34. 2½ கோத்திரத்தாரும் கர்த்தரே தேவனென்பதற்கு இந்தப் பீடமே சாட்சியென்று சொல்லி அதற்கு "ஏத்" என்று பேரிட்டார்கள். அப்படியே யோசுவாவும் 24: 27-ல் சாட்சி வைக்கிறார்.

## கேள்விகள்.

1. ஆசாரியர் மாத்திரமல்ல பிரபுக்களும் ஆசீர்வதிக்கிற வழக்கத்துக்கு உதாரணமுண்டா?
2. 2½ கோத்திரத்தாரைப்பற்றி நாம் புகழ்ச்சியாய்ச் சொல்லவேண்டிய பத்திக்குரிய நற்குணங்களை விபரமாய்ச் சொல்லவும்.
3. சாட்சிக்கடையாளமாகப் பீடம் கட்டினதாரார்?
4. தேவன் நம்மோடு கூடவிருக்கிறாரென்றதார் எப்படி? வேறே யாரும் அப்படிச் சொன்னது.
5. பீனேகாஸ் ஆர் அவனுடைய பத்தி வைராக்கியத்துக்குரிய திருஷ்டாந்தரமுண்டா? அதற்கு அவருக்குக் கிடைத்த கனமென்ன?
6. இஸ்ரவேல் புத்திரர் எனனத்துக்காக கர்த்தரை ஸ்தோத்திரித்தார்கள். அப்படியே தேவனுக்கு யார்யார் என்னென்ன சமையத்தில் ஸ்தோத்திரஞ் செலுத்தினார்கள்.

---

## XXIII அதிகாரம்.

2. தேசம் பங்கிட்ட 14-அல்லது 17-வருஷங்களுக்குப் பின்பு யோசுவா எல்லா சபையாரின் மூப்பர், தலைவர், நியாயாதிபதிகள் எல்லாரையும், கர்த்தருடைய உடம்படிக்கைப் பெட்டியிருக்கிற சீலோவில் வரவழைத்து புத்தி சொல்லுகிறார்.

6. மோசேயின் நியாயப்பிரமாணங்களைக் கைக்கொள்வதில் விசேஷமாய் மீதியானகானானியரை துரத்துவதிலும் அழிப்பதிலும் தைரியமாயிருக்கவும், நியாயப்பிரமாணத்தோடே ஒன்றைக் கூட்டவும், குறைக்கவும் கூடாதென்றும் எச்சரிக்கிறார். 1: 7. உபா. 5: 22. 28: 14.

7. மீதியாயிருக்கிற சாதிகளோடு உறவாடாமலும், சம்பந்தங் கலவாமலுமிருக்கவும்.—அந்நிய தேவர்களின் பேரைச் சொல்வதிலும், அந்தப் பேரைக் கேட்பதிலும் அதை வணங்குவதற்கான சோதனைகுட்படாமலிருக்கவும்; யாத். 23: 13. உபா. 12: 3. சங் 16:



எபேசி. 5: 3.—புறச்சாதியாரை அவர்கள் வழக்கப்படி அவர்கள் தேவர்களுக்கு ஆணையிட பலவந்தம் செய்யாமலும், அதை வணங்காமலிருக்கவும் எச்சரிக்கிறார்.

8. விடா ஐக்கியத்தினாலும் நிலைவரமான கீழ்ப்படிதலினாலும், முழுவதுமான பட்சத்தாலும், உண்மையுள்ள ஆராதனையினாலும் தேவனைப் பற்றிக்கொண்டிருக்க ஏவுகிறார். உபா 10: 20. 11: 22. 13: 4. 22: 5.

11. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் எச்சரிப்பும் விழிப்பும், சாக்கிரதையுமுள்ளவர்களாயிருந்ததைப் பார்க்கிலும், இப்போது அதிக சோதனையுள்ள நிலைமையிலிருப்பதால் அதிக கவனமாயிருக்க எச்சரிக்கிறார். மீதியான கானானியர் பக்கத்தில் மிகவும் துன்மார்க்கராயிருக்கிறபடியால் அதிக சோதனைக்கிடமாயிருக்கும். இஸ்ரவேலர் இப்போது சுகமும், செல்வமும், சமாதானமுமுள்ளவர்களாயிருப்பதால் பெருமை, தேவனை மறக்கிறகுணம், சிற்றின்பமுதலிய பாவங்களுக்கிடமாயிருக்கும். உபா 6: 10—12.

13. கானானியரோடு சம்பந்தங் கலந்து, உறவாடும்போது, அவர்கள் லேசாய் அநியாயம், அவபக்தி, தகாத இச்சைகளுக்கு நாளட வாய் இழுத்துக் கெடுத்துப்போடுவார்கள். யாத் 23: 33. உபா 7: 16. 1 இராசா. 11: 4.

14. சகல மனிதரும் போகிறவழி மரணமே. மனிதர் யாவரும் சாகவேண்டும். எபி 9: 27. இப்படியே தாவீதும் சொல்லுகிறார். 1 இராசா. 2: 2. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் மிகுதியான பங்கு இன்னும் ஜெயிக்கப்படாமருக்கக்கொள்ள "ஒரு வார்த்தையும் தவறிப் போகவில்லை" யென்று சொல்வது சரியாவென்றால், தேவன் சத்துராதிகளெல்லாரையும் சர்வ சங்காரஞ் செய்ய வாக்குக்கொடுத்திருந்தாலும் அவர்கள் தேசத்தையெல்லாம் ஒருமிக்கவல்ல, படிப்படியாய்க் கொடுக்கச் சித்தமானதால் சரிதான். உபா 7: 22.

## கேள்விகள்.

1. யோசுவா இஸ்ரவேல் சபைக்கு என்னபுத்தி சொல்லுகிறார். அந்த புத்திமதிகள் கவனமாய் அங்கிகரிக்கப்படும்படி என்ன நியாயமுரைக்கிறார்?
2. கர்த்தரைவிட்டு பின்வாங்கினால் இஸ்ரவேல் சபைக்கு என்னென்ன குறைவுகள் நேரிடுமென்கிறார்.
3. "ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான்" என்பதை ஏன் சொல்லுகிறார். அதற்குரிய திருஷ்டாந்தரஞ் சொல்லவும்.
4. "தேவன் சொன்ன நல்வார்த்தைகளில் ஒன்றும் தவறவில்லை." என்பதை ரூபகாரப்படுத்தும்.
5. விக்கிரகாராதனைக்கு விலக்கமாயிருக்கும்படி என்ன போதனை உரைக்கிறார். இந்த போதனைக்கு விகற்பமாய் நடந்தவர்களுண்டா? எப்படி?

---

## XXIV அதிகாரம்.

1. ஆசரிப்புக் கூடாரமும், உடன்படிக்கைப் பெட்டியுமிருந்த சீலோவுக்கு இஸ்ரவேல் சபையார் கூடி வந்திருப்பார்கள். அவர்

கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்களென்றும், வா. 1. ஒரு பெரிய கல்லையெடுத்து கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தின் அருகில் யோசுவா நாட்டினானென்றும் சொல்லியிருப்பதால்; தகுதியான இடமென்று நினைக்கவேண்டியது. ஆனாலிங்கே சீகேமில் கூடிவந்தவர்களென்று சொல்லியிருக்கிறது. இந்த சமையத்தில் சீகேம் வசதியான இடமாயும், லேவியருடைய பட்டணமாயும், அடைக்கல பட்டணமாயும், யோசுவாவுடைய பட்டணத்துக்குச் சமீபமாயுமிருந்ததினால் மாத்திரமல்ல, வேறே விசேஷித்த (2) முகாந்தரங்களுக்காகவும் சீகேமுக்கு கூடிவந்தார்கள். அதென்னவென்றால் (1) யோசேப்புடைய எலும்புகளையும் வா. 32 கோத்திரப் பிதாக்களின் எலும்புகளையும் அப் 7: 15, 16. கெம்பீரமாய் அடக்கஞ் செய்யவும்; (2) தேவனுக்கும் ஆபிரகாமுக்கும் சீகேமில் செய்த உடன்படிக்கையை புதுப்பிக்கவும் ஆதி 12: 6, 7. இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்தபோது, ஏபால் கெரிசீம் மலைகளுக்கு நடுவே செய்த உடன்படிக்கையைப் புதுப்பிக்கவும் நோக்கமாக சீகேமில்கூடிவந்தார்கள். இந்த மலைகளும் சீகேமுக்குச் சமீபமே. யோசு 8: 30. நியாயாதி. 9: 6, 7. இப்படியானால் அவர்கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்களென்பது சரியா? சிலசமயங்களில் உடன்படிக்கைப்பெட்டி விசேஷித்த சமயங்களில் கொண்டுபோகப்பட்டிருந்தபடி இந்தச் சமயத்திலும் நடந்திருக்கும். 1 சாமு. 4: 3. 2 சாமு. 15: 24. அல்லது பக்திக்குரிய காரியங்களுக்காகச் சபையார் ஏகமாயும், வெளியரங்கமாயும் பரிசுத்தமாயும் கூடிவரும்போது தேவன் அவர்கள் நடுவிலிருக்கிறார். யாத். 20: 24. சங். 82: 1. மத். 18: 20. அல்லது யோசுவா தேவநாமத்தைக்கொண்டு பேசினதும், அவர்கள் தேவனுடைய கட்டளையாக ஏற்றுக்கொண்டதுமான செய்கையே தேவன் அவர்களோடிருந்ததுபோலாயிற்று. ஈசாக்கு கர்த்தருக்கு முன்பாக யாக்கோபை ஆசீர்வதித்தானென்கையில், தேவனுடைய நாமம், பிரசன்னத்தைக்கொண்டு என்ற பொருளாம். ஆதி. 27: 7. எப்தா மிஸ்பாவில் கருத்தருக்கு முன்பாக தன் வார்த்தைகளைச் சொன்னானென்கையில் தேவசமுகத்தில் அவைகளுக்குச் சாட்சியாக அழைக்கிறான் என்ற பொருளாம்.

2. "நதி" ஐப்பிராத் நதியை மேன்மையாக அப்படி அழைத்திருக்கிறது. இஸ்ரவேலர் தங்கள் முற்பிதாக்களைப்பற்றி, வீம்பாய் பெருமைபாராட்டாதபடிக்கும், தங்களுக்குக் கிடைத்த நன்மைகள் யாவும் தங்கள் புண்ணியத்தினாலல்ல, தேவகிருபையினாலேயே கிடைத்திருக்கிறதென்று நிச்சயப்படுத்த நோக்கமாயும், ஆபிரகாம், நாகோர் விக்கிரகாராதனைக்காரராய் முன்னிருந்தார்களென்று சொல்லுகிறார்.

4. ஏசாவுக்கு தேவன் சேயீர் மலையைக் கொடுத்ததற்கு முகாந்தரமென்ன? இயாக்கோபுக்கும் அவன் குடும்பத்துக்கும் முழுவதுமாய்க் கானான்தேசத்தைக் கொடுக்கவே. ஆதி. 36: 7, 8.

9. பாலாக் இஸ்ரவேலருக்கு விரோதமாக ஒருக்காலும் யுத்தஞ் செய்யவில்லையே. நியாயாதி. 11: 25. அப்படியிருக்க இங்கே சொல்வியிருப்பது சரியா? பாலாக் வெளியரங்கமாயல்ல, அந்தரங்க ஆலோசனையினாலும், தந்திர உபாயங்களினாலும், பீலேயாமுடைய அபாயங்களினாலும் யுத்தஞ்செய்தானென்கலாம். வேதத்தில் எண்ணமே செய்கையாகச் சொல்லப்படுவதுண்டு. 11-வச. ஆதி. 37: 21. எசேக். 24: 13. மத். 5: 28. யோவா. 10: 32.

12. "குளவிகள்" பயங்கரமான அழிவுகளுக்கும் வாதைகளுக்களுக்கும் உவமானமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதென்று சிலர் நினைப்



பார்கள். கானானில் பிரவேசிக்குமுன்னே நேராகவே குளவிகளைக் கொண்டு தேவன் சத்துருக்களைத் துரத்தினார் என்று சொல்வதே சரி. யாத். 23: 28. உபா. 7: 20.

14. "தேவர்களை அகற்றிவிடுங்கள்." யோசுவா வெளியரங்கமான தோப்புகளையும் விக்கிரகங்களையும் அழித்துப்போட்டாலும் அவர்களில் சிலர் இரகசியமாய் தங்கள் வீடுகளில் அப்பியாசித்து வந்தார்கள். 23-வா. ஆமோ. 5: 25, 26. அப். 7: 42, 43.

15. கர்த்தரைச் சேவிப்பது அவசியமும், பிரயோசனமுமுள்ளதென்றும், விக்கிரகாராதனை புத்தியீனமும் வீணும், மோசமுள்ளதென்றும் நன்றாய் அறிந்துகொள்ள இப்படிச் சொல்லுகிறார். இஸ்ரவேலர் மெய்த்தேவனை வணங்குவதற்கு அவர்கள் சுயாதீனமாய் அல்லது அவர்களிஷ்டப்படிக்கு விட்டதாக நாம் நினைக்கக்கூடாது. நியாயப்பிரமாணமோ விக்கிரகத்துக்கு விலக்கமாயிருக்கவும், விக்கிரகபத்திக்காரரைக் கண்டிப்பாய்க் கொலைசெய்யவும் கற்பித்திருக்கிறபடியால், பயத்தோடேயாவது கர்த்தரை சேவிக்கவேண்டியதுதான். இருதயத்தோடே கர்த்தரை சேவிக்க இப்படிச்சொல்வது வேதபாஷையே. ரூத். 1: 8. 5. 1 இராசா. 18: 21. எசே. 30: 39. யோவா. 6: 67.

19. கர்த்தரைச் சேவிப்பது கூடாத காரியமாகச் சொல்லாமல் அவரைச் சேவிக்கிறதற்கு அதிக வருத்தமும், அதிகக் கவலையும், கவனமும், தீர்மானமுமிருக்கவேண்டியதென்று யோசுவா எச்சரிக்கிறார். தேவன் நிறைந்த பரிசுத்தரானபடியால் தம்மை பரியாசம்பண்ணவொட்டார். மோசேயின் காலத்திலிருந்ததுபோல அவர்கள் அவபத்தியும் அஞ்ஞானமுமுள்ளவர்களாய் தன் காலத்துக்குப்பின்பு கலகஞ் செய்யாதபடிக்கு எச்சரிக்கிறார். அவர்கள் தேவனையும் விக்கிரகங்களையும் ஒருமிக்க வணங்க இசையாதபடிக்கு அவர் எரிச்சலுள்ள தேவன் என்கிறார். தேவன் தமது பிரமாணத்தை மீறி நடக்கிறவர்களைப் பயங்கரமாய்த் தண்டிக்கிறவராயிருக்கிறார்.

23. சிலர் எகிப்திலிருந்து கொண்டுவந்ததும், கானானில் எடுத்ததுமான அந்நிய தேவர்களை தேவகட்டளைக்கு விரோதமாய் பொருளாசையினாலும், அவபத்தியினாலும் வைத்திருந்ததாகத் தோன்றுகிறது. ஆவிக்குரிய உள்ளான ஆராதனையின்னதென்று காண்பிக்கிறார். உபா. 6: 5. 1 இரா. 8: 53. 1 நாளா. 29: 10—19. நீதி. 23: 16.

25. இஸ்ரவேலர் கர்த்தருடைய சனங்களென்பதற்குரிய உடன்படிக்கையை வெளியரங்கமாய்ப் புதுப்பித்தார். அவர்களும் அவர்கள் பின்சந்ததியாரும் என்றைக்கும் கர்த்தரையே சேவிக்கும்படிக்கும், உடன்படிக்கைக்குரிய நியாயங்களை கைக்கொள்ளும்படிக்கும் ஏற்பாடு செய்தார். 2 இரா. 11: 17—20. நெகே. 10: 1.

26. சனங்கள் கர்த்தரோடே செய்த உடன்படிக்கையின் வார்த்தைகளை எழுதி, உடன்படிக்கைப்பெட்டியில் வைத்திருக்கிற உபா. 31: 9, 26. ஆகமத்தில் சேர்த்து அத்தோடே யோசுவாவின் புஸ்தகமும் வைக்கப்பட்டது. இப்படிப்பட்ட பெரிதும், விசேஷித்ததுமான உடன்படிக்கையை எப்போதும் ஞாபகமாய் நினைத்துக்கொள்ளவும்,-சனங்கள் தாங்கள் செய்த உடன்படிக்கையில் எப்போதும் உண்மையாய் நிலைத்திருக்கவும்;-அவர்கள் அதை மீறுங்காலத்தில் தேவன் பயங்கரமாய்த் தண்டிக்கும்போது சாட்சியாயிருக்கவும் நோக்கமாக, அப்படிச் செய்தார். பூர்வீக வழக்கப்படி இந்தச் செய்கைக்கு ஞாபகச்சின்னமும் சாட்சியுமாக ஒரு கல்லை நாட்டினார். ஆதி. 28: 18. 31: 45. 35: 14. யாத். 24: 4. உபா. 27: 2. யோசு. 4: 3. 8: 32. இந்த உடன்

படிக்கை ஓர்வேளை இந்தக் கல்லில் எழுதப்பட்டிருக்கலாம். புறச்சாதியார் செய்கிறபடி பலிபீடத்தினருகே மரத்தோப்புகள் வைக்கக் கூடாது என்று உபா. 16: 26-ல் கற்பிக்கப்பட்டிருந்தாலும், இப்போது ஒரு பெரிய மரத்தினருகே பலிபீடம் அல்லது உடன்படிக்கைப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது.

24. கல் கேட்டதாக சொல்லுகிற பாஷை உவமானமே. அப்படியே வானமும் பூமியும் கேட்பதாகச் சொல்லியிருக்கிறதே. உபா. 32: 1. ஏசா. 1: 2. எரே. 2: 12.

32. சீகேமில் அல்ல, அதைச் சேர்ந்த வெளிநிலத்தில் ஆதி. 33 18. இஸ்ரவேலருக்குரிய கல்லறைகள் பூர்வீகத்தில் பட்டணத்துக்கு வெளியே வயல்களிலும் தோட்டங்களிலுமிருந்தது.

33. விசேஷித்த தயவுக்காகவும், வசதிக்குத்தக்கதாகவும் உடன்படிக்கைப்பெட்டியும், ஆசரிப்புக்கூடாரமுமிருந்த ஷீலோவுக்குச் சமீமான மேட்டிலே பிரதானஆசாரியன் வாசம்பண்ணி அங்கே அடக்கஞ் செய்யப்பட்டான். மற்றப்படி ஆசாரியருக்குரிய பங்கு வீதம் யூதா பென்யமீன், சீமியோன் கோத்திரத்திலுள்ளது. அவை ஷீலோவுக்கு வெகு தூரம்.

## கேள்விகள்.

1. இந்தச் சமயத்தில் சபையார் கூடிவந்த இடமெது? அதற்குரிய நியாயமென்ன?

2. யோசுவா செய்த பிரசங்கமும், அதின் நோக்கமுமென்ன?

3. யோசுவா இஸ்ரவேல் சனங்களோடே உடன்படிக்கை செய்வதற்கு அவசியமென்ன! அந்த உடன்படிக்கையை புதுப்பித்ததற்கு அவர்செய்த (2) விசேஷித்த ஞாபக சாட்சிகளெவை?

24. மோசே இஸ்ரவேலரோடே உடன்படிக்கையை எத்தனைதரம் புதுப்பித்தார்? அப்படியே யோசுவாவும் எத்தனை தடவை?

5. நாம் தேவனோடே உடன்படிக்கைக்குள்ளாக வேண்டியது மிகவும் அவசியமும் பிரயோசனமுமுள்ளதென்று காண்பியும்.

6. யோசுவாவுடைய குணங்களை விபரமாய் எழுதி அதற்குரிய சரித்திரக் குறிப்பையும் காட்டுக.

7. அக்காலத்து இஸ்ரவேல் சபை யோசுவாவின் காலம்வரை கர்த்தரை சேவித்தவர்களென்று காட்டும்.

8. யோசுவா அந்நிய தேவர்களை அகற்றிப்போட கற்பிக்கிறாரே அவைகளெவை? ஏது? இப்படியே கற்பித்தவர் ஆர்? இதினால் நாம் படிக்கிறதென்ன?

9. ஒரு தலைவனுக்கும் போதகனுக்குமுரிய சிறந்த இலட்சணங்கள் யோசுவாவுக்கிருந்ததென்று தெளிவாய் எழுதும்.

---



# Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

## கூ-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

கூ-ம் பிரிவு.

### பரிசுத்தாவியானவரைக் குறித்து.

வினா. விசுவாசப்பிரமாணத்தில் அடுத்த உபதேசம் எது?

விடை. பரிசுத்தாவியையும் விசுவாசிக்கிறேன்.

வினா. பரிசுத்தாவியானவர் யார்?

விடை. திரித்துவத்தில் மூன்றாவது ஆளாகிய ஜீவனின் அதிபதியும், ஜீவனைக் கொடுக்கிறவரும், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமானவரே. அவர் சிருஷ்டிக்கப்படாதவர். தம்மாலே தானே இருக்கிறவரும், பிதாவோடும் குமாரனோடுங் கூட தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாயிருக்கிறார்.

தேவன் ஆவியாயிருக்கிறார். யோவா. 4: 24.

வினா. பரிசுத்தாவி ஒரு ஆள் என்று சொல்லப்படுவதெப்படி?

விடை. அவர் ஒரு ஆளுக்குரிய தன்மை, இலட்சணங்கள் உடையவராக வேதத்தில் சொல்லப்படுவதினாலேயே. அவரைக்குறித்து அறிகிறார், கொடுக்கிறார், அழைக்கிறார், செய்கிறார், வருகிறார், அனுப்புகிறார், பேசுகிறார், கேட்கிறார் முதலானவை சொல்லப்பட்டிருக்கிறது.

அவர் தோன்றத்தக்க ரூபமாய்க் காணப்பட்டார். லூக். 3: 22. அப். 2: 8.

அவர் அப்போஸ்தலருக்கு பாஷைகள் பேசும் வரத்தைக் கொடுத்தார். அப். 2: 4—8.

அவர் அப்போஸ்தலருக்கு அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்யும் திராணியைக் கொடுத்தார் அப்.2:43

கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக்கொண்டு போய் விட்டார். அப். 8: 39.

அப். 15; 28. 1 கொரி. 12: 8—10. 12; 11.

கிறிஸ்து, தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்தினார். மத். 12; 28.

வினா. பரிசுத்தாவி, தேவனாயிருக்கிறாரென்பதற்கு அத்தாட்சியென்ன?

விடை. தேவனுக்கே உரிய பற்பல இலட்சணங்களும், கிரியைகளும் அவரைக்குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தேவன் என்று வேதத்தில் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறார்.

1. சிருஷ்டிப்பின் கிரியை அவரால் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். ஆதி. 1: 2.

தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார். யோபு 26: 13, சங். 33: 6. 104: 30.

2. சர்வவியாபகர்.

உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன். சங் 139: 7. எபே. 9: 18.

3. சர்வஞ்ஞர்.

கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து, அவருக்குப் போதித்தவன் யார்? ஏசா. 40: 13, 14.

அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார். 1 கொரி. 2: 10, 11.

பரிசுத்தாவியானவர் கட்டளையிடுகிறார், நியமிக்கிறார்.

ஆவியானவர்: நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப். 8: 29.

ஆவியானவர்: பேதுருவை கொர்நேலியுவினிடத்திற்கு அனுப்பினார். அப். 10: 20. 11: 12.

பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார். அப். 13: 2.

அப். 13: 4. 20: 28.

பரிசுத்தாவியானவர் விலக்குகிறார், தடைசெய்கிறார்.

ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டார்கள். அப். 16: 6.

பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார். அப். 16: 7.

பரிசுத்தாவியின் நாமத்திலே நாம் ஞானஸ்நானம் பெறுகிறோம்.

பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம்கொடுங்கள். மத். 28: 19.



பரிசுத்தாவியானவர் திரித்துவத்தில் ஒருவரானதினாலே அவருடைய நாமத்தினாலே ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக் கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். எண். 7: 24—26.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. 2 கொரி. 13: 14.

பரிசுத்தஆவியானவரின் தேவதன்மையை இன்னம் தெளிவாய் அறியத்தக்கதாக பின்வரும் வேதவாக்கியங்களைக்கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக் கண்டும் அறியாமலும் இருங்கள் என்று ஆண்டவர் சொன்னதாக ஏசா. 6: 9-ல் சொல்லிய வார்த்தைகளை, பரிசுத்தாவியானவர் உரைத்ததாக அப். 28: 26, 27-ல் காட்டியிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைப் பரீட்சை பார்த்தார்கள் என்று யாத். 17: 7-ல் சொல்லிய வார்த்தைகளை, பரிசுத்தாவியானவர் தம்மைப் பரீட்சைபார்த்தார்கள் என்று சொன்னதாக எபி. 3: 7—9 ல் காட்டப்பட்டிருக்கிறது.

அப்படியே எரே. 31: 33ஐ எபி. 10: 15, 16 உடனும்.
2 தீமோ. 3: 16ஐ 2 பேது. 1: 21 உடனும்.
அப். 5: 3ஐ அப். 5: 4 உடனும்.
1 கொரி. 3: 17ஐ 1 கொரி. 6: 19 உடனும்.
மத். 4: 7ஐ அப். 5: 9 உடனும்.
மத். 19: 17ஐ சங். 143: 10 உடனும் ஒத்துப்பார்.

பரிசுத்தாவியானவருக்குச் சொல்லப்பட்டிருக்கிற நாமங்களாவன.

நல்ல ஆவி. நெகே. 9: 20. சங். 143: 10.
தேவனுடைய ஆவி. ஆதி. 1: 2. மத். 12: 28.
பரிசுத்தஆவி. லூக். 11: 13. மத். 12: 32. மாற். 1: 8.
வாக்குத்தத்தத்தின் பரிசுத்தஆவி. எபே. 1: 13.
சத்தியஆவி. யோவா. 14: 17. 15: 26. 16: 13.
உயிர்ப்பிக்கிற ஆவி. 1 பேது. 3: 18.
புத்திரசுவிகாரத்தின் ஆவி. ரோ. 8: 15.
பரிசுத்தத்தின் ஆவி. ரோ. 1: 4.

கர்த்தருடைய ஆவி; ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி; ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவி; அறிவை

யும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவி; ஏசா. 11: 2.

ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி. எபே. 1: 17.
ஆவி. மாற். 1: 12. லூக். 2: 27.
கிறிஸ்துவின் ஆவி. ரோ. 8: 9. 1 பேது. 1: 11.
பிதாவின் வாக்குத்தத்தம். லூக். 24: 49. அப். 1: 4.
தேற்றரவாளன். யோவா. 14: 16. 15: 26. 16: 7.
கிருபையின் ஆவி, எபி. 10: 29. சகரி. 12: 10.
மகிமையுள்ள ஆவி. 1 பேது. 4: 14.
ஜீவனுடைய ஆவி. ரோ. 8: 2.
கிருபையின் ஆவி, விண்ணப்பங்களின் ஆவி. சகரி. 12: 10.
தேவனுடைய ஆழங்களை ஆராய்ந்தறிகிறவர். 1 கொ. 2: 10.

பரிசுத்தாவியானவர், பழைய புதியஏற்பாட்டாகமங்களில் 300-தடவைக்கு மேலாக பேர் சொல்லப்பட்டிருக்கிறார்.

வினா. பரிசுத்தாவியானவர் இறங்கினதை திருச்சபை எப்போது கொண்டாடுகிறது?

விடை. பரிசுத்தாவியின் திருநாளில்—அது பெந்தேகோஸ்தே நாளாகிய வருஷோற்சவ நாள். அந்தநாளில் அப்போஸ்தலன்மார் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே கூடியிருந்தபொழுது, அவர்களெல்லாரும் சடிதியாய் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குக் கொடுத்த திராணியின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

வினா. பரிசுத்தாவி மனுஷருக்கு அவசியமா?

விடை. ஆம், அவசியந்தான். அவரில்லாமல் நாம் தேவன் அங்கிகரிக்கத்தக்க ஆராதனைசெய்யக்கூடாது, மறுபிறப்படையக்கூடாது, பரிசுத்தராய் நடக்கக் கூடாது.

தேவனைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். யோவா. 4: 24.

ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ரோ. 8: 5.

கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. ரோ. 8: 9.

ரோ. 8: 14. 1 கொரி. 12: 3.

வினா. பரிசுத்தாவியானவர் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டிருக்கிறாரா?

விடை. ஆம்.

என் ஆவியை உங்களுக்கு அருளுவேன். நீதி. 1: 23.
ஏசா. 44: 3. யோவே. 2: 23. அப். 2: 17, 18.



அவர்கள் உள்ளத்தில் புது ஆவியைக் கொடுப்பேன். எசே. 11: 19.

உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைப்பேன் எசே. 36: 27. 37: 14. லூக். 11: 13.

## The World's Birth.

## உலகப்பிறப்பு.

### III. அதிகாரம்.

"வானங்கள்."

160933
ஆவணக்காப்பக ... சென்னை-600 008.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருஷ்டித்தார்.
சங்கீதம் 19: 1—11.

(தொடர்ச்சி.)

நட்சத்திரங்களாகிய சூரியன்களையும், அவைகளின் பருமனையும் பற்றிச் சிலகாரியங்களைச் சொல்லுகிறேன். ஜோதி மண்டலத்திலே நட்சத்திரங்கள் திரளாயிருக்கிறதென்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன். ஹெர்சல் சாஸ்திரி பால்வீதி மண்டலத்திலே நமது கண்ணுக்குத் தோன்றுகிறபடி, சந்திரனுடைய பருமனுள்ள இடத்தில் மாத்திரம் 2000- நட்சத்திரங்களைத் தமது தூரதிருஷ்டிக் கண்ணாடியினால் கண்டறிந்திருக்கிறார். கால்மணி நேரத்துக்குள்ளாக 1,16,000 நட்சத்திரங்கள் கடந்துபோனதாகக் கண்ணாடியினால் பார்த்தார். நெபுலி என்கிற நட்சத்திரக் கணத்தில் ஓர்கூட்டத்தைப் பார்த்தால் முன் சொல்லியபடி, சந்திரனுடைய பருமன் அளவுக்குள் 2,00,000 சூரியன்களிருக்கிறதாகக் கணக்கிட்டிருக்கிறார். பலமான தூரதிருஷ்டிக் கண்ணாடியினால், விசேஷமாய் ரோஸ்பிரபு செய்திருக்கிற கண்ணாடியினால் சென்ற சிலவருஷங்களுக்குள்ளாக இலக்கமற்ற நட்சத்திரங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பரிசுத்தவேதம் சொல்லுகிறபடி தேவன் மாத்திரம் அவைகளைக் கணக்கிடக் கூடியவர். சங்கீதம் 147: 4. "அவர் நட்சத்திரங்களின் லக்கத்தை எண்ணி அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்."

பூர்வீகத்திலிருந்தவர்கள் நட்சத்திரங்களின் தொகை 1022 அல்லது 1026 என்று கணக்கிட்டிருந்தார்கள். வேதாகமமோ அவைகளின் தொகை எண்ணத் தொலையாதது என்று சாட்சிபகர்ந்திருக்கிறது. தேவன், அகண்ட வெளியிலே நட்சத்திரங்களைத் தூளத்தனையாய்ச் சிதறியிருக்கிறார் என்று ஹெர்சல் சொல்லியிருக்கிறார். ஆதி 15: 5; 22. 17; எபி 11: 12. ஏசாயா 40: 26.

நட்சத்திரங்களின் தொகை எண்ணிறந்ததாயிருப்பதுபோல அவைகளின் பருமனும் பிரமாண்டமாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக, மிகவும் துலக்கமாய்ப் பிரகாசிக்கிற சீரியஸ், ஆர்க்டியுரஸ் அன்ரோஸ்

வீக்கா என்னும் நட்சத்திரங்களிருக்கின்றன. அவைகளில் ஆர்க்றியுரஸ் என்னும் நட்சத்திரத்தின் விட்டம் நம்முடைய சூரியனுடையதை விட 11-மடங்கு அதனம் என்று வானசாஸ்திரத்தில் பேர்போனவர்களில் இரண்டுபேராகிய ஹெர்சல் என்பவரும், ஆர்க்கோ என்பவரும் சொல்லுகிறார்கள். அந்த நட்சத்திரம் நமது சூரியனிருக்கிற இடத்தில் வைக்கப்பட்டால் அது நமக்குச் சூரியனைவிட 121 மடங்குப் பெரிதாகக் காணப்படும். சீரியஸ் நட்சத்ரத்தின் விட்டம் நமது சூரியனுடையதை விட 3¾-மடங்கு அதிகம் என்று உல்லஸ்றறன் சாஸ்திரியார் கணித்திருக்கிறார். அந்த நட்சத்திரம், சூரியனிருக்கிற இடத்திலிருந்தால் நமக்குச் சூரியனைவிட 14-மடங்கு பெரிதாய்க் காணப்படும். வீக்கா நட்சத்திரத்தின் விட்டம் நமது சூரியனுடையதை விட 3000-மடங்கு அதிகம் என்று ஹெர்சல் கணககிட்டிருக்கிறார். அந்த நட்சத்திரம் நமது பூமிக்கு அப்பால் 22-லட்சம் கோடாகோடி மயில் தூரத்திலிருக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை விட இன்னமும் தொலை தூரத்திலுள்ளவைகளுமிருக்கின்றன. சூரியனுடைய கதிர் நமது பூமிக்கு வந்தெட்ட 8-மினிற்று செல்லும். வெளிச்சம் ஒரு செக்கண்டில் 1,92,000 மைல் தூரஞ் செல்லுகிறது. இப்படிப் பார்க்கையில் நமது பூமிக்குச் சமீபமாயிருக்கிற நட்சத்திரத்தின் ஒளி நமது பூமிக்கு வர 6-வருஷம் செல்லும். அப்படியானால் 8-ம் தரமான நட்சத்திரத்தின் ஒளி நமது பூமியிற்பட 2000 வருஷம் செல்லும்.

நட்சத்திரங்களின் ஓட்டங்களும் வெகு வேகமாயிருக்கின்றன. பந்தயக் குதிரை ஒருமணி நேரத்துக்குள் 20 அல்லது 30 மயில் ஓடும். பறவை 50 அல்லது 60 மயில் பறக்கும். புசல் 80 அல்லது 100 மயில் தூரம் செல்லும். பீரங்கிக்குண்டு 800-மயில் வரைக்கும் போகும். ஆனால் வியாழன் கிரகம் 29,000 மயிலும், சுக்கிரன் 76,000 மயிலும் புதன் 1,05,000 மயிலும், சனி 22,000 மயிலும் ஓடுகின்றன. நமது உலகம் அஸ்திபாரம் போடப்படு முன்னும் லட்சாதி லட்ச வருஷங்களாய் இப்படி ஓடிக்கொண்டிருக்கின்றன.

நமது உலகத்துக்கும் சமீபமாயிருக்கிற நட்சத்திரத்துக்கும் இடையேயுள்ள வெளியின் விட்டம் 40 லட்சகோடி மயில் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் இடையே இதைவிட அதிகமான தொலையுமிருக்கலாம். பீரங்கிக்குண்டு பூமியிலிருந்து சூரியனுக்குச் செல்ல 10 வருஷம் சென்றதானால் சமீபமாயிருக்கிற நட்சத்திரத்துக் கெட்ட 23½ லட்சம் வருஷம் செல்லும். ஆகாயத்திலே இரண்டு நட்சத்திரங்கள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருப்பதாய்ப் பார்க்கிறோம். இந்த இரண்டுக்கும் ஊடேயிருக்கிற இடை இவ்வளவு என்று சொல்லக் கணக்கில்லை. சூரியன் ஒரு மினிற்றில் 4,14000 மயில் தூரம் ஓடுகிறது. பூமிக்குச் சமீபமாயிருக்கிற நட்சத்திரம் ஒரு செக்கண்டில் 14 கோடி மைல் தூரம் ஓடுகிறது. தொலை தூரத்திலிருக்கிற நட்சத்திரங்களின் ஓட்டத்தின் விரைவுக்கும் கணக்கில்லை. அந்தரத்தில் அசைவாடுகிற தேவனுடைய உலகங்களுக்கும், சூரியன்களுக்கும் தொகையில்லை. ஒரு தேவதூதன் ஒளியைப்போல் வேகமாய்ச் சென்று தேவனுடைய சிருட்டிப்புக்களை பார்க்கும்டி உலகத் தோற்றமுதல் இது வரைக்கும் பறந்துபோனாலும் அவன் இன்னமும் முதல் எல்லையிலேதான் இருப்பான்.



## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**—இங்கிலந்தின் பிரதம மந்திரியாயிருந்த பீக்கன்ஸ்பீல்டு பிரபு சென்ற௴ 18௳யில் தேகவியோகமானார். அவருக்கு வயது 77. ஜர்மானிய ராஜபிரபுவின் பத்தினியார் காருண்யராணியவர்களைத் தரிசிக்கும்படி இங்கிலந்துக்குப் போய் சிறிதுவாரம் அங்கே தங்கியிருப்பதாக சமாசாரம். யாப்பானிய சக்கரவர்த்தியின் புதல்வன் தமது யுத்தாப்பியாசத்தை முடிக்கும்பொருட்டு இப்போது இங்கிலந்துக்குப் போயிருக்கிறார். நீஸ் நகரத்து நாடகசாலையில் தீப்பற்றிக்கொண்டதினால் 100-பேர் மட்டும் அக்கினியில் அகப்பட்டு மடிந்ததாக செய்தி. ருஷியாவிலுள்ள கஸமிக்கியோலா என்ற இத்தாலிய கிராமம் பூமிக்குள் இறங்கி அழிந்தது. 700-வீடுகள் இடிந்து விழவே அதினால் 70-பேருக்குப் பிராணமோசமும் 300-பேருக்கு ஊறுபாடுகளும் நேர்ந்தது.

**இந்தியா.**—இந்தியாவெங்கும் குடிமதிப்பு எழுதுவதும் ஜனசங்கியைகளைத் திரட்டி அட்டவணைப் படுத்துவதுமான வேலைக்கு சுமார் 20-லட்சம் ரூபாய் செல்லுமென்று கணக்கிட்டிருக்கிறது. பரோதாவின் பாலிய கைக்கோவார் அடுத்த வருஷம் ஜனுவரி௴ 1௳ பரோதா ராச்சிய அதிபதியாக பட்டஞ் சூட்டப்படுவாராம். திருவிதாங்கோட்டில் கன்னியாகுமரிக்கு வடமேற்கே 14-மைலும் முதலைப்பாறைக்குக் கிழக்கே 3-மயிலும் தூரமுள்ள முட்டம் என்னும் இடத்தில் நிலைவரமான தீபஸ்தம்பம் ஒன்று கட்டப்படப் போகிறது. மைசூர் மகாராஜா வெகு கோலாகல ஆடம்பர வேடிக்கை சடங்குகளுடன் மார்ச்சு௴ 25௳ மகுடாபிஷேகம் பெற்றார். இந்திய ராஜபிரதிநிதியவர்கள் மேற்படி உற்சவத்தில் கூடியிருக்க ஏதுவில்லாமல் இடையூறு நேரிட்டமையால் சென்னை கவர்னர் அவரது பிரதியஸ்தனாகப் போயிருந்தார்.

**தென் ஆபிரிக்கா**—மகா ராஜாத்தியவர்களின் மேலான ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டு பிரித்தானிய ஸ்தானபதி ஒருவர் தலைநகரியில் வசிக்க இடங்கொடுக்கும்படி போயெர் என்னப்பட்டவர்கள் சம்மதித்திருக்கிறார்கள். ஆகையால் அங்கே சமாதானமுண்டாகுமென்று நம்பலாம்.

மேமீ நாள்-31 சித்திரைமீ ௨0உ முதல், வைகாசிமீ ௧௯உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | ௨0 | அவர்கள் சீர்கேடுகள் அதிகரித்தது. எரேமியா. 5: 6. |
| தி | 2 | ௨௧ | உங்கள் பலிகள் எனக்கு இன்பமாயிராது. 6: 20. |
| செ | 3 | ௨௨ | என் வாக்குக்குச் செவிகொடுங்கள். 7: 23. |
| பு | 4 | ௨௩ | இதோ சீயோனில் கர்த்தர் இல்லையோ. 8: 19. |
| வி | 5 | ௨௪ | அவர்கள் என்னை அறியமாட்டோமென்கிறார்கள். 9: 6. |
| வெ | 6 | ௨௫ | அவர் சீவனுள்ள தேவன், நித்திய ராஜா. 10: 20. |
| ச | 7 | ௨௬ | நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். 11: 3. |
| ஞா | 8 | ௨௭ | கர்த்தாவே நீர் என்னை அறிந்திருக்கிறீர். 12: 3. |
| தி | 9 | ௨௮ | நீ சுத்திகரிக்கப்பட மாட்டாயா? 13: 27. |
| செ | 10 | ௨௯ | உம்முடைய நாமத்தினிமித்தம் கிருபை செய்யும். 14: 7. |
| பு | 11 | ௩0 | நான் உன்னைத் திரும்பச் சீர்ப்படுத்துவேன். 15: 19. |
| வி | 12 | ௩௧ | அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன். 16: 15. |
| வெ | 13 | ௧ | தீங்குநாளில் நீரே என் அடைக்கலம். 17: 17. |
| ச | 14 | ௨ | என் ஆத்துமாவுக்குப் படுகுழியை வெட்டுகிறார்களே. 18: 20. |
| ஞா | 15 | ௩ | அவர்கள் என்னை விட்டு விட்டார்கள். 19: 4. |
| தி | 16 | ௪ | என்னை இணங்கப் பண்ணினீர். 20: 7: |
| செ | 17 | ௫ | சீவ வழியையும் மரண வழியையும் வைக்கிறேன். 21: 8. |
| பு | 18 | ௬ | நீங்கள் நியாயமும் நீதியும் செய்யுங்கள். 22: 3. |
| வி | 19 | ௭ | நமது நீதியாயிருக்கிற கர்த்தர். 23: 6. |
| வெ | 20 | ௮ | அவர்களைக் கட்டுவேன். 24: 6. |
| ச | 21 | ௯ | துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார். 25: 31. |
| ஞா | 22 | ௧0 | உங்கள் வழிகளையும் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள். 26: 13. |
| தி | 23 | ௧௧ | இந்த நகரம் பாழாய்ப் போகவேண்டியதென்ன? 27: 17. |
| செ | 24 | ௧௨ | பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன். 28: 2. |
| பு | 25 | ௧௩ | என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். 29: 13. |
| வி | 26 | ௧௪ | அவனைச் சமீபித்து வரப்பண்ணுவேன். 30: 21. |
| வெ | 27 | ௧௫ | அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன். 31: 3. (32: 40 |
| ச | 28 | ௧௬ | எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்தில் வைப்பேன். |
| ஞா | 29 | ௧௭ | எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன். 33: 8. |
| தி | 30 | ௧௮ | அவர்களோடே உடன்படிக்கை பண்ணினேன். 34: 14. |
| செ | 31 | ௧௯ | எனக்குக் கீழ்ப்படியாமற் போனீர்கள். 35: 14. |

## விசேஷ நாட்கள்.

1. பரி. பிலிப்பு, யாக்கோபு அப். திருநாள்.
   கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 2-ம் ஞாயிறு.
8. கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 3-ம் ஞாயிறு.
14. பௌரணமி.
15. கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 4-ம் ஞாயிறு.
22. கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், 5-ம் ஞாயிறு.
26. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.
28. அமாவாசை.
29. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும், ஞாயிறு.

# நற்போதகம்.

௧. ஜூன்மீ. ௲௮௱௮௰௯.

## எண்ணாகமம்.

(தொடர்ச்சி.)

### 14. அதிகாரம்.

5. "மோசேயும் ஆரோனும் முகங்குப்புற விழுந்தார்கள்." இதற்குமுன்னமே காலேப், சனங்களை கலகம்செய்யாதபடி அமர்த்தியிருந்தான். எண். 13: 30. அப்படியே மோசேயும், உபாகமம் (1: 29-முதல்) சனங்கள் கீழ்ப்படியும்படி வேண்டிய பிரயாசப்பட்டிருந்தான். இப்படியாக இவ்வகை பிரயத்தனங்கள் பலிக்காததினாலே மோசேயும் ஆரோனும் ஊக்கமான செபத்தினாலே கர்த்தருக்கு முன்பாக விழுந்தார்கள். 16: 22. இந்தச் செபத்துக்கு உத்தரவாக கர்த்தருடைய மகிமை காணப்பட்டது. 10-வா.

9. "நிழல்" ஏசா. 30: 2, 3. 32: 2.

18. 31: 6 7.

20 "மன்னித்தேன்." பொதுவாக சனங்களுக்கு மன்னித்தார். ஆனாலும் கலகக்காரரை விடாமல் சாவுக்கு அப்புறப்படுத்தினார்.

22 "பத்து" இது நிறைவைக் குறிக்கிற எண். இஸ்ரவேலருடைய போக்குமுதல் நிறையாய்ப்போயிற்று என்றர்த்தம். என்றாலும் ரபீமார் இந்த வார்த்தைப்படியே அர்த்தம்பண்ணி, இஸ்ரவேலர் எகிப்தை விட்டதுமுதல் இத்தருணம் சரியாய் (10) முறை தேவனைப் பரீட்சை பார்த்தார்கள் என்று கணக்கிடுகிறார்கள்.

24. இங்கும் 13: 30-லும் காலேப் பேர் மட்டும் வருகிறது. ஏனென்றால் மோசே எழுதின அசல் பிரதியோடு சில காரியங்கள் பிற்காலத்தில் யோசுவாவினால் கூட்டி நுழைத்து எழுதப்பட்டதில் இந்த இரண்டு வாக்கியங்களும் சேர்ந்தவைகளென்று நினைக்கப்படுகிறது. அதினால்தான் யோசுவா தன் பேரை விட்டுவிட்டான். 30-ம் 38-ம் வசனங்களில்

இருவர் பேரும் வருகிறது. இந்தப் பாகம், மோசே எழுதின அசல் பிரதியைச் சேர்ந்தது.

மோசேயின் ஜெபம் என்று பேரிடப்பட்டு வழங்கிவருகிற 90-ம் சங்கீதமானது வனாந்தரத்தில் அலைந்து திரியும்படி இப்போ பயங்கரமானவிதமாய் சபிக்கப்பட்டவர்கள்மேல் புலம்பல் பாடிய ஒப்பாரி என்று எண்ணப்பட்டு வருவது மிகவும் ஏற்றதாயிருக்கிறது.

25. "நாளைக்கு" இனிமேற்பட என்றர்த்தம். யாத்தி. 13: 14. யோசு. 4: 6.

"சிவந்த சமுத்திரம்." கிழக்கவர் அல்லது எலானிற்றிக் குடாக் கடலைக் குறிக்கும்.

30. 32: 11, 12.

33. "சோரம்போன" பல கலகங்களைக் குறிக்கும்.

34. "என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை" "என் நோக்கத்தை மாற்றினதை" என்றும் திருப்பப்படும். மேற்காட்டிய வார்த்தைகளுக்கெல்லாம் எபிரேயு பாஷையில் ஒரே ஒரு வார்த்தைதானிருக்கிறது. அந்த வார்த்தை வேதத்தில் யோபு 30: 10-ல் மட்டும் வருகிறது.

45. "ஓர்மா" மட்டும் துரத்தினதினாலே ஓர்மாவுக்கும் காதேசுக்கும் இடையேயுள்ள நாடுகள் அமலேக்கியருடைய கையாட்சிக்குள்ளிருந்ததென்று விளங்குகிறது. 21: 3.

## 15. அதிகாரம்.

2. இஸ்ரவேல் சனங்களுடைய பிள்ளைகளுக்கு இது சொல்லப்படுகிறது. இவர்கள் கானானில் பிரவேசிப்பார்களென்பதற்குச் சட்டங்களே அச்சாரமாயும் அத்தாட்சியாயுமிருந்தது.

24. சபையாருக்குத் தெரியாமல் துணிந்துசெய்த பாவத்தைக் குறித்து.

30. "துணிகரம்" யாத்தி. 14: 8. மனதார வெளிப்படையாய் என்றர்த்தம்.

32. ஓய்வுநாள் ஏற்பாடு எத்தனை கண்டிப்பானதென்று விளங்குகிறது. வனாந்தரத்திலும் இந்த ஏற்பாடு கைக்கொள்ளப்பட்டதே.

34. ஓய்வுநாளை மீறுகிறவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. யாத்தி. 31: 14. 35: 2. ஆனால் எவ்வகை மரணமென்று சொல்லப்படவில்லை.

38. எகிப்தியரிடத்திலிருந்து இந்த வழக்கம் வந்தது. மத். 23: 5. நியாயப்பிரமாணம் (613) கட்டளைகளை அடக்கியதென்று யூதர் சொல்லுவார்கள். ஞுணகோகுகளில் காலைச்செப நேரத்தில் இந்தப்படி இப்பொழுதும் தரித்துக்கொள்ளுகிற வழக்கமிருக்கிறது.



## 16. அதிகாரம்.

கோராகு வகையறு கலகம்செய்தது. இந்த அதி. 13-ம் 14-ம் வசனங்களைக் கவனிக்கும்போது காதேசில் நடந்த கலகத்துக்குக் கொஞ்சகாலத்துக்குப்பின் இது நடந்ததாகத் தோன்றும். எப்படியும் இந்த அதிகாரம், முந்தினதின் தொடர்ச்சி அல்ல. 16-முதல் 20-அதிவரை இஸ்ரவேலர் வனாந்தரத்தில் அலையச் சபிக்கப்பட்ட காலத்தின் சங்கதிகளைச் சொல்லியது.

1. "இத்சேயாரின் மகன் கோராகு." இவ்விடத்தில் மகன் என்பதற்கு சந்ததியான் என்றர்த்தம். வேதத்தில் இப்படி வழங்குவது வழக்கந்தான்.

அம்ராமும் இத்சேயாரும் சகோதரராயிருந்தார்கள். யாத்தி. 6: 18, 21. ஆகையால் மோசே, ஆரோன் என்பவர்களுக்கு கோராகு சொக்காரன். கோராகு கோகாத்திய வகுப்பைச் சேர்ந்தவனானதால் அதிபரிசுத்தமான காரியங்கள் இவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது. அப்படியிருகக கடைக்குட்டியான (3: 27.) ஊசியேலின் குமாரன் எல்சாபான், கோகாத்திய வம்சங்களுக்குத் தலைவனாக்கப்பட்டான். 3: 30.) இதினாலே கோராகு தனக்கு இளப்பமுண்டானதென்று எண்ணி, இந்தக் கலகத்தை நடத்தினதாகத் தோன்றுகிறது. இந்தக் கலகம் இவன் பேரால் வழங்கப்படுகிறது. 5, 6. 26: 9. யூதா 11.

"தாத்தான், அபிராம், ஓன்" இவர்களில் ஓன் பேர் மறுபடி வரவில்லை. அதினாலே இந்தக் கலகக்கட்டுப்பாட்டிலிருந்து இவன் நீங்கிக்கொண்டதாகத் தோன்றும். இம்மூவரும் ரூபன் வம்சத்தாரானதால், முதற்பிறப்புச் சுதந்தரம் தங்கள் முற்பிதாவைவிட்டு எடுபட்டுப்போனதற்காகவும் ஆதி. 49: 3. இஸ்ரவேல் கோத்திரங்களுக்குள்ளே இவர்களுடைய கோத்திரம் முக்கியமற்றுப்போனதற்காகவும் மனஸ்தாபமில்லாமல் வர்மம் வைத்துக்கொண்டேயிருந்தார்கள். கோகாத்தியருக்குச் சமீபமாய் ரூபேனியர் பாளயமிறங்கியிருந்ததினாலே இந்த இரண்டு வம்சத்தாரும் ஆலோசனைசெய்யத்தக்க சமீபித்த இடத்திலிருந்தார்கள். ரூபேனர் தங்கள் கோத்திர முகாமைக்காகவும், கோராகு, ஊசியேல் முகாமையடைந்ததற்காகவும் மோசேக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள்.

2. இவர்கள் மற்றக் கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள். 27:3. மனாசேயானான செலோப்பியாத் கோராகின் கலகத்தில் சேர்ந்தவனல்ல.

3. "சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்." யாத்தி. 19: 6. ஆரோன் வம்சத்தாருடைய பட்டமும் அதிகாரமும் தனக்கு வேண்டுமென்று கோராகு எதிர்த்தான். 10-வா. லேவியருக்கும் மற்றச் சனங்களுக்குமுள்ள வித்தியாசம் அற்றுப்போகவேண்டுமென்பது கோராகின் நோக்கமல்ல. தனக்கும் தன் வகையருவுக்கும் ஆசாரிய உத்தியோகம் கிடைக்கவேண்டுமென்பதே அவன் உள் நோக்கம். இந்த உள் நோக்கத்தை அவன் மனதில் வைத்துக்கொண்டு இப்போ ரூபேனியருடைய துணை வேண்டியதிருப்பதினாலே ஒவ்வொரு இஸ்ரவேலனுக்கும் ஞானாதிகம் வேண்டுமென்று வழக்காடுகிற பாவனையாய்ச் சொல்லுகிறான்.

11. ஆரோன் முறையான ஆசாரியத்துவம் தேவனுடைய ஏற்பாடு. ஆகையால் அவர்கள் தேவனுக்கே விரோதமாகக் கூடினார்கள். இதைப்போல் நடபடி. 5: 3, 4.

13. கானான்தேசம் பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்று சொல்லப்பட்டது. இதற்குப் பரியாசமாக எகிப்தைச் சொல்லுகிறான். என்ன அக்கிரமம்.

14. "கண்களைப் பிடுங்கப் பார்க்கிறாயோ" அதாவது இவர்கள் கண்களில் மண்ணைப்போட்டுவிடேன். கானான்தேசம் அப்படி இப்படி இருக்குமென்று ஏமாற்று வாக்குப்பண்ணினாயே, உன் எத்தைப் பாராதபடி இவர்கள் கண்களைப் பிடுங்கிப்போடப் பார்க்கிறாயோ என்று அர்த்தமாய்ச் சொல்லுகிறான்.

24. கோராகு வகையருவை அக்கினி பட்சித்தது. 35-வா. ரூபேனியர் வகையருவை பூமி விழுங்கினது. 31—33.

27. எதிரிடை சாதித்துக்கொண்டு நின்றார்கள்.

32. கலகத்தில் சம்பந்தப்பட்டவர்களை மாத்திரம். 26: 11.

35. "சந்நிதி" லேவி. 10: 1—7. பரிசுத்தஸ்தலத்திலிருந்தாவது பலிபீடத்திலிருந்தாவது அக்கினி புறப்பட்டது.

37. ஆரோன், பிரதானஆசாரியன். இவன் தூபம்காட்டினவர்களிலொருவனாயிருந்தான். (17-வா.) ஆகையால் இப்போ செத்துக் கிடக்கிறவர்களுடனேகூட போய் தீட்டுப்படுவது சரியல்ல. ஆகையால் எலெயாசாருக்கு உத்தரவு பிறந்தது.

45. "முகம்குப்புற விழுந்தார்கள்.," சனங்களுக்காக மன்றாடி. 22-வா. 14: 5

46. "தூபகலசத்தை" பாவநிவர்த்தியின் சிறந்த நாளில் பிரதான ஆசாரியன் தூபம்காட்டுகிற தூபக்கலசம். லேவி. 16: 12. எபி. 9: 4.



ஒவ்வொரு ஆசாரியனுக்கும் நாடோறும் தூபம் காட்டும்படி தன்தன் தூபகலசமிருந்ததென்று லேவி. 10: 1ஆல் விளங்குகிறது. யாத்தி. 30: 1—8. கோராகும் அவன் கூட்டத்தாரும் ஆசாரியாருக்கு எதிரித்தனம் பாராட்டி தங்களுக்குத் தாங்களே தூபகலசங்களைச் சம்பாதித்துக்கொண்டார்கள். 6-வா. எசே. 8: 11.

48. தேவனால் தெரிந்து கொள்ளப்படாதவர்கள் தூபம் காட்டினபோது அழிவைக்கொண்டு வந்தது. தேவனால் அதிகாரம்பெற்ற மெய்யான ஆசாரியன் கையிலுள்ள தூபமானது சனங்களெல்லாருக்கும் இரட்சிப்பைக்கொண்டு வந்தது. இதில் கிறிஸ்து நாதராலே உண்டான பூரண பிராயசித்தத்துக்கும் மத்தியஸ்தத்துக்கும் ஆரோன் முன் குறிப்பாயிருந்தான். கிறிஸ்து நாதரோ தெரிந்துகொள்ளப்பட்ட அதிகாரம்பெற்ற மத்தியஸ்தர். அவரோ வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.

## 17. அதிகாரம்.

1—11. ஆரோனுடைய ஆசாரிய உத்தியோகத்தை கர்த்தர் மேன்மேலும் உண்மைப்படுத்திஸ்தாபித்தது.

2. எசே. 37: 16.

3. முந்திய கலகத்தில் லேவியர் சம்பந்தப்பட்டிருந்தார்கள். அதினால் ஆரோன் வீட்டாருடைய தெரிந்துகொள்ளுதலையும் முக்கியத்தையும் தெரியக்காட்டும்படி லேவியினுடைய கோலின் மேல் ஆரோன் பேரை எழுதச்சொன்னார். ஆரோன், கோகாத்துக்குப் பிறந்தவன். கோகாத், லேவிக்கு இரண்டாம் மகன். யாத்தி. 6: 16. ஆகையால் ஆரோன் லேவிக் கோத்திரத்துக்கு இயல்பான தலைவனாயிருக்கக் கூடாது.

6. "பன்னிரண்டு கோல்களை" உபா. 27: 12. போல யோசேப்பின் மக்களாலுண்டான இரண்டு கோத்திரமும் எண்ணப்பட்டிருக்க வேண்டும். ஆகையால் 12-ம் ஆரோனுடையதும் சேர்ந்து 13 ஆயிருக்கவேண்டும்.

8. ஏசா. 4: 2. 11: 1. 53: 2. எரே. 33: 6. சகரி. 6: 22.

10. "சாட்சி" நியாயப்பிரமாணம் எழுதிய (2) கற்பலகைகளைக் குறிக்கும். யாத்தி. 25: 16. உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளே (2) கற்பலகைகள் முன்பாக ஆரோனின் கோல் வைக்கப்பட்டதற்குச் சந்தேகமில்லை. சாலொமோன் நாட்களில் உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளே (2) கற்பலகைகளை அல்லாது வேறொன்றும் இருந்ததில்லையென்று 1 இரா. 8: 9ஆல் தெரியவருகிறது. அப்படியானால் உடன்படி

க்கைப் பெட்டி பெலிஸ்தரால் பிடிக்கப்பட்டதில் காணாமற் போயிருக்கவேண்டும்.

12, 13. இவ்வாக்கியங்கள் 16ம் அதிகாரத்தோடு சேர்ந்தது.

## 18. அதிகாரம்.

1. “சுமக்க” அதாவது இஸ்ரவேலர் பரிசுத்த ஸ்தலத்துக்கு அக்கிரமம் நிவிர்த்திசெய்ய வரும்போது நீங்கள் சடங்கினாலே சுமக்கவேணும். அதாவது அவர்களுக்குப் பாவநிவிர்த்தி செய்யவேண்டும் என்றர்த்தம்.

“சுமக்கிறது” என்ற எபிரேயு வார்த்தைக்கு பழய ஏற்பாட்டில், “உத்தரிக்கிறது.” “நீக்கிப்போடுகிறது.” என்று இரண்டு அர்த்தமுண்டு. இங்கே பாவத்தை நீக்கிப்போடுகிறவர்கள் உத்தரிக்கிறவர்களாகச் சொல்லப்படுகிறார்கள். ஆனால் கிறிஸ்துநாதரிடத்தில் “இரண்டு செய்கையும் ஒன்றாக ஐக்கியப்பட்டிருக்கிறது.”

2. “சேர்த்து.” லேவிஎன்ற வார்த்தைக்கும் அர்த்தம் இதே. பழயவார்த்தை புதிய அர்த்தத்தோடு இணைக்கப்பட்டது. லேவியர் தங்கள் உத்தியோகத்தின்படி சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள்தான் எபேசி. 2. 13.

“உன்னிடத்திலே. சேவிக்கவும்” ஆசாரியர் கர்த்தருக்கு ஊழியஞ்செய்தார்கள். லேவியரோ, ஆசாரியருக்கு ஊழியஞ்செய்தார்கள்.

4. “அந்நியன்” லேவியனல்லாத மற்றெவனும அந்நியனும். 7ம் வாக்கியத்தில் ஆசாரியனல்லாத மற்றெவனும் என்றர்த்தம். 3: 10. 16: 40.

15. கழுதைத் தலையீற்றுக்குப் ப்திலாக ஆட்டுக்குட்டியைக்கொண்டு மீட்கவேணும்.

16. லேவி. 5: 15. 27: 27.

18. இந்த வாக்கியம் யாத்தி. 29: 26—28வரை சொல்லிய சட்டத்தைச் சுட்டியது. இது உபா. 18: 3ற் சொல்லியபடி மாற்றப்பட்டது. இத்தால் இவ்வாக்கியம் வனாந்தரத்தில் அலையும்போது சொல்லப்பட்டதென்று வெளியாகிறதே.

21. “தசமபாகத்தை.” லேவி. 27: 30—33. மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் பத்திலொன்று கொடுத்தான். யாக்கோபு பத்திலொன்று கொடுக்கிறதாகப் பொருத்தனை பண்ணினான். இப்பொழுதோ தேவனுக்குரிய தசமபாகம் லேவியரைச் சேரவேண்டியதென்று முதலாவதாகச் சொல்லப்படுகிறது. நெகேமி. 10: 37. 12: 44. தோபித். 1, 7. தானிய தவசங்களில் லேவியர் தசமபாகம் வாங்கினதுபோல மிருக ஜீவன்களிலும் வாங்கினார்களோ இல்லையோ என்பது சந்தேகத்திலிருக்கிறது. மிருக ஜீவன்கள் அவர்களுக்குச் செலுத்தப்படவேணுமென்று எந்த வேதவாக்கியத்திலாவது தெளிவாய்ச் சொல்லப்படவில்லை. வெளியரங்கமான பலிகளுக்காக திரளான மிருக ஜீவன்கள் வேண்டியதால், மிருகங்களின் தசமபாகம் இந்த பலி வகைக்குச் செலவிடப்பட்டதென்று தோன்றும்.



23. “அவர்கள்.” என்பது கலகஞ்செய்கிற இஸ்ரவேலரைக் குறிக்கும்.

24. பரிசுத்தமான காரியங்களுக்கென்று படைத்து வைக்கப்பட்ட தசமபாகமானது ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிறது. அப்படியே ஆசரிப்புக் கூடாரத்துக்குச் செலுத்தப்படும் காணிக்கை, யாத்தி. 25: 2. தசமபாகங்கள் கர்த்தருக்கு முன் அசைவாட்டப்பட்டதாய் நினைக்க இடமில்லை.

25.—32. லேவியருக்குரிய தசமபாகத்தைப் பற்றிக் கட்டளை.

27. இஸ்ரவேலர் தங்கள் வரத்திலெல்லாம் தசமபாகம் லேவியருக்குச் செலுத்துவதுபோலவே, லேவியர் தங்களுக்குக் கிடைக்கும் தசமபாகத்திலெல்லாம் பத்திலொன்றை ஆசாரியருக்குச் செலுத்தவேண்டும். யாத்தி. 12: 16.

29. இந்தப் பிரமாணத்தைப் பார்த்தால், லேவியருக்குக் கிடைக்கும் தீர்வையிலும் அவர்களுடைய மிருகஜீவன்கள், தசமபாகம் ஆகிய இவற்றிலும் பத்திலொரு பாகத்தை தேவாராதனைக்குச் செலவிட்டதாகத் தோன்றும்.

## 19. அதிகாரம்.

### பிரேதத் தீட்டுக் கழிக்கும் முறை.

பாவத்தில் மரணம் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆதி. 2: 17. இந்த அதிகாரத்தின் பொருள், மேற்படி சம்பந்தத்தில் கட்டப்பட்டிருக்கிறது. மரணம், பாவத்தின் தோற்றமும் பயனுமாயிருப்பதால் அது தீட்டுப்படுத்துந் தன்மையுள்ளதுதான். 5: 2. 9: 6. லெவி. 10: 1, 7. 11: 8, 11, 24. 21: 1. மற்ற ஜாதியருக்குள்ளும் இந்தமுறையைக் காணலாம். எகிப்திய பூசாரிகள் கல்லறைக் குழிக்காவது, பிரேத அடக்கத்துக்காவது, அதற்கடுத்த விருந்துகளுக்காவது போகவே கூடாது.

16ம் அதிகாரத்தில் சொல்லிய வாதையினால் ஏராளமானவர்கள் மாண்டார்களே. அத்தால் ரொம்பத் தீட்டுண்டாயிற்று. அந்தத் தண்டனை பாவத்தினாலுண்டானதுதானே. இந்தச் சம்பந்தத்தினாலே இச்சமயத்தில் அதற்கடுத்த சில ஏற்பாடுகளைச் சொல்ல நேரிட்டது

இதெல்லாம் பிற்காலத்தில் வெளிப்படப்போகிற சிறந்த பாவப்பிரயச் சித்தத்தை முன் குறித்தது.

1. இந்த ஏற்பாடு பிற்காலத்துக்கென்று மாத்திரமல்ல, தற்சமயத்துக்கும் அவசியமாயிருந்ததால், இரண்டு பேரையும் நோக்கிச் சொல்லப்பட்டது.

2. "சிவப்பான." ஆதாம் சிவப்பான மண்ணினால் உண்டாக்கப்பட்டதைக் காட்டும்படியாக என்று சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் சிவப்பு, பாவத்துக்கு அறிகுறியாயிருப்பதினாலே (ஏசா. 1: 18) என்று சொல்லுகிறார்கள்.

"பழுதற்றதும்." பாவப் பலிகளுக்கெல்லாம் பொதுவாய் இந்தக் குறிப்புகளிருக்க வேண்டும். லேவி. 4: 3.

"நுகத்தடிக்கு உட்படாததும்." உபா. 21: 3. 1 சாமு. 6: 7. கிடாரிக்குத்தான் இந்தச் சட்டம். காளைக்கு இல்லை. கிடாரிகளை வழக்கமாய் உழவுக்கு உபயோகப்படுத்துகிறதில்லை. ஆகையால் நுகத்தடிக்கு உட்பட்ட கிடாரி பழுதுள்ளதாகிவிடும்.

3. "எலெயாசார்." 16: 37. இந்த வேலைக்கு ஆசாரியன் வேண்டியது. அவன் அந்த நாளில் தீட்டாயிருப்பதால் பிரதான ஆசாரியன் அந்தத் தீட்டுக்கு நீங்கலாயிருப்பான்.

"பாளையத்துக்குவெளியே." தீட்டானது கிடாரியின் மேல் சாட்டப்பட்டதாக எண்ணப்பட்டது. ஆகையால் தீட்டுப்பட்டவர்களைப் போலவே, தீட்டை ஏற்றுக்கொண்ட கிடாரியும் பாளயத்துக்கு அப்புறப் படுத்தப்பட வேண்டும். அப் படியே தீட்டுப்பட்டவர்களைத் தொட்டவர்களுக் கொப்பந்தம், தீட்டை ஏற்றுக்கொண்ட கிடாரியைத் தொட்டவர்களும் சாயங்காலமட்டும் தீட்டாயிருப்பார்கள். எருசலேமில் தேவாலயம் கட்டினபிற்பாடு கிழக்கே ஒலீவ மலையில் இந்தக் கிடாரியைக் கொல்வது பாரம்பரை வழக்கமாயிற்று. அப்படியே கிறிஸ்துநாதரும் பாவிகளோடு சம்பந்தப்பட்டதினால் அவர்களுடைய தூஷணங்களையும் சுமக்க வேண்டியதாயிருந்தது. லூக். 5: 30. 15: 2: மேலும் கிடாரி பாளயத்துக்கு வெளியே கொல்லப்பட்டதே. அப்படியே கிறிஸ்துநாதர் தமது ஜீவகாலத்தில் யூதருக்குள் விசேஷமானவர்களுடைய சேர்க்கையை விட்டு பெரும்பாலும் பிரிந்திருந்தது மாத்திரமல்ல, எருசலேமுக்கு வெளியே இரண்டு கள்ளர் நடுவில் கொலைசெய்யவும்பட்டார். எபி. 13: 11, 12.

6. லேவி. 14: 4, 6, 49. இந்த மூன்றும் சுத்திகரிப்போடு சம்பந்தப்பட்டவை. "கேதுருக்கட்டை." எரியும்போது சுகந்த வாசனை கொடுக்கும். இது அழுகலுக்கும் மரணத்துக்கும் எதிர் பரிகாரம் செய்வதாக எண்ணப்பட்டது. அதினாலே சவங்களை அடக்கம் பண்ணுகையில் இது சுட்டெரிக்கப்பட்டது. அதாலுண்டாகும் குங்கிலியம்



சவங்களை சுகந்த வர்க்கமிடுவதில் உபயோகிக்கப்பட்டது. "ஈசோப்" அழுக்கெடுக்கும் பொருளென்று எல்லாருக்கும் தெரியும். "சிவப்பு நூல்" இரத்தாம்பர சாயமானது இருதயத்தைப் பலப்படுத்துவதற்கு மருந்துகளோடு சேர்க்கப்பட்டது. கிறிஸ்துநாதருடைய, குணமாக்கும் ரத்தத்துக்குக் குறிப்பாயுமிருந்தது.

"தீட்டுக்கழிக்கும் ஜலம்" 8: 7ல் பாவத்திலிருந்து சுத்திகரிக்கும் ஜலமானது, எபிரேயு பாஷையில், "பாவஜலம்" என்றிருக்கிறது. அப்படியே தீட்டாயிருக்கிறவனைச் சேர்த்துக்கொள்ளும் ஜலமானது தீட்டுக் கழிக்கும் ஜலம் என்னப்படுகிறது.

11—22. தீட்டுக்கழிக்கும் முறையைச் சொல்லவந்ததோடு பல வகையானத் தீட்டுகளையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறது.

பிரேதத்தைத் தொட்டவன் தீட்டானது, பிரேதத்தைச் சீக்கிரம் அடக்கம் பண்ணிப்போடும்படி துரிதப்படுத்தும். காட்டு மிருகங்கள் தின்னும்படி பிரேதங்களை எறிந்துவிடுகிற கெட்ட வழக்கத்தை இது தடுக்கிறதாயுமிருக்கிறது. இந்தச் சட்டங்கள் வனாந்தரத்தில் சொல்லப்பட்டதென்பதற்கு 14ல் "கூடாரம்" என்பது சாட்சி. இஸ்ரவேலர் கானானில் பிரவேசித்து மாளிகை வீடுகளிலிருக்கும் போது யாராவது செத்தால் அந்த வீடு தீட்டாகும்.

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

### வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

௯-ம் பிரிவு.

பரிசுத்தாவியானவரைக் குறித்து.

(தொடர்ச்சி.)

வினா. பரிசுத்தாவியின் கிரியை எவை?

விடை. அவர் சுபாவ மனுஷனில் எல்லா பரிசுத்த மாறுதலையும் உண்டாக்குகிறார்.

1. அவர் மனுஷரோடு போராடுகிறார்.

என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை. ஆதி. 6: 8,

2. மனுஷனைப் பிரகாசிப்பிக்கிறார்.

சென்மச் சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியமாட்டான். 1 கொரி. 2: 14.

3. பாவத்தை உணர்த்துகிறார்.

அவர் வந்து, பாவத்தைக் குறித்துக் கண்டித்து உணர்த்துவார். யோவா. 16: 8, 9.

4. குணப்படுத்துகிறார்.

ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான். யோ. 3: 5, 6.

அவர் மனந்திரும்பும் சிந்தையையும், பாவத்தைவிட்டு விடும் விருப்பத்தையும் உண்டாக்கி; குணப்படுதலையும் நடப்பித்து, தயவு, ஞானம், அறிவு, பக்தி, சத்தியம், பொறுமை, நீடியசாந்தம், அடக்கம், பரிசுத்தம், அன்பு, சந்தோஷம், சமாதானம், ஆறுதல், நம்பிக்கை, உறுதி முதலிய கனிகள் உண்டாகச் செய்து, மோட்ச இராச்சியத்துக்குத் தகுதியானவர்களாக்குகிறார்.

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். கலாத். 5; 22.

ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். எபே. 5: 9.

5. அவர் பரிசுத்த வேதத்தை எழுதும்படி ஏவினார்.

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. 2 தீமோ. 3: 16.

தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் 2 பேது. 1: 21. 1 பேது. 1: 10. 11.

6. அவர் போதித்து, வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அறிவுண்டாக்குகிறார்.

நீங்கள் பேசவேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்தில் உங்களுக்குப் போதிப்பார். லூக். 12: 12.

பரிசுத்தாவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார். யோவா. 14: 26; 1 கொரி. 2: 3, 4. எபே. 1: 17, 18.



7. இருதயத்தில் வாசம்பண்ணுகிறார்.

அவர் உங்களுடனே வாசம்பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். யோவா. 14: 17.

தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்று அறியீர்களா ? 1 கொரி. 3: 16. 6: 19.

8. ஆறுதலுக்குக் காரணராயிருக்கிறார். அவர் நம்மைத் தேற்றி, தேவன் நம்மை அங்கீகரித்து, ஆசீர்வதிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறாரென்ற நிச்சயத்தைக் கொடுக்கிறார்.

என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்தியஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை உங்களுக்குத் தந்தருளுவார். யோவா. 14: 16.

யோவா. 14: 26. அப். 9: 31.

9. எழுப்பப்பட்ட ஆத்துமாக்களுக்கு வாக்குத்தத்தங்களை வெளிப்படுத்துகிறார்.

நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல் தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். 1 கொ. 2: 10, 12.

10. உயிர்ப்பிக்கிறார்.

ஆவியே உயிர்ப்பிக்கிறது. யோவா. 6: 63.

கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். ரோ. 8: 11.

1 பேது. 3: 13

11. அவர் எல்லாச் சத்தியத்திலும் நடத்தி, கிறிஸ்துவை மகிமைப்படுத்தி, கிறிஸ்துவினுடையவைகளை எடுத்து நமக்கு வெளிப்படுத்தி, பாவத்தைவிட்டு நீங்கும்படியாகச் செய்கிறார்.

சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். யோவா. 16: 13.

அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். யோவா. 16: 14.

12. அவர் கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார்.

அவர் என்னைக்குறித்துச் சாட்சிகொடுப்பார். யோ. 15: 26.

13. நாம் நம்மை தேவனுக்குச் சரியாய் ஒப்புக்கொடுத்து, பிள்ளைகளுக்குரிய குண இலட்சணங்களையுடையவர்களாயிருக்கிறோமென்பதைக்குறித்துச் சாட்சியிடுகிறார்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சிகொடுக்கிறார். ரோ. 8: 16.

ரோ. 9: 1. எபி. 2: 4. 10: 15.

14. பரிந்துபேசுகிறார்.

ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளால் நமக்காக வேண்டுதல்செய்கிறார். ரோ. 8: 26.

15. புத்திரசுவிகாரம் செய்கிறார்.

அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். ரோ. 8: 15. 2 தீமோ. 1: 7.

16. இருதயத்தில் தேவனுடைய அன்பை ஊற்றுகிறார்.

நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நமது இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. ரோ. 5: 5.

17. பரிசுத்தம்செய்கிறார்.

நமது தேவனுடைய ஆவியினால் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள். 1 கொரி. 6: 1.

ரோ. 15: 16. 2 தெச. 2: 13. 1 பேது. 1: 2.

18. விசுவாசத்தை உண்டுபண்ணுகிறார். அதினாலே நாம் கிறிஸ்துவானவருக்குரியவர்களாகிறோம்.

பரிசுத்தாவியினாலேயன்றி, இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனுஞ் சொல்லக்கூடாது. 1 கொ. 12: 3.

19. அவர் நம்மை முத்திரித்து, சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.

அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தைக் கொடுத்திருக்கிறார். 2 கொரி. 1: 22.

எபே. 1: 13, 14. 4: 30.

20. கிறிஸ்துவினிடத்தில் சேரும்படி செய்கிறார்.

நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய் பெற்றிருக்கிறோம். எபே. 2: 18.

21. வல்லமையினால் பெலப்படுத்துகிறார்.

நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், எபே. 3; 16. கலாத். 5; 17.

22. புதுப்பிக்கிறார்.

மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தீத்து 3: 5.

பரிசுத்தாவியினாலே மாத்திரம் நாம் எந்த நற்காரியங்களையும் செய்யக்கூடும். அவரை அசட்டைசெய்யாதபடிக்கும், துக்கப்படுத்தாதபடிக்கும் எச்சரிக்கப்படுகிறோம். அவர் நம்மைவிட்டு கடைசியாக நீங்குவாரானால் மறுபடியும் நாம் மனந்திரும்பும்படி கொண்டுவரப்படுவோமென்ற நம்பிக்கையேயில்லை. சாகாத புழுக்களும், அவியாத அக்கினியுமே நம்முடைய பங்காயிருக்கும்.



தேவனுடைய ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். எபே. 4: 30.

ஆவியை அவித்துப்போடாதிருங்கள். 1 தெச. 5: 19

ஏசா. 63: 10. அப். 7: 51.

கவலைத்தாழ்ச்சியாய் நடந்து, அவருடைய ஈவுகளை அலட்சியம்பண்ணி, அவருடைய தயவை அவமதிப்பதினாலே அவரை எதிர்த்து, அவரைத் துக்கப்படுத்தாதபடி எச்சரிக்கையாயிருங்கள். தேவன் சொல்லியிருக்கிறதை நினைத்துக்கொள்ளுங்கள். அதாவது "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை." ஆதி. 6: 3.

உற்சாக ஆவி உங்களைத் தாங்கவும் (சங். 51: 12) நிலைவரமான ஆவியை உங்கள் உள்ளத்திலே புதுப்பிக்கவும் (சங். 51: 10) தம்முடைய பரிசுத்தாவியை உங்களிலிருந்து எடுத்துக்கொள்ளாதிருக்கவும் (சங். 51: 11.) ஊக்கமாய் ஜெபம்பண்ணுங்கள்.

நீங்களோ பிரியமானவர்களே! உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள். யூதா 20, 21.

நமக்கு மெய்யான குணப்படுதலையும், தம்முடைய பரிசுத்தாவியையும் கொடுக்கும்படி ஜெபம்பண்ணக்கடவோம்.

---

## பரிசுத்தாவிக்கு விரோதமான தேவதூஷணத்தை பற்றி.

இந்தப் பாவம் மன்னிக்கப்படாதென்று நம்முடைய கர்த்தர் சொன்ன அறுபது வருஷங்களுக்குப்பிற்பாடு, பரி. யோவான் "மரணத்துக்கேதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய நான் சொல்லேன்." (1 யோவா. 5: 16) என்று சொல்லியிருப்பதினால், இந்தப் பாவம் அப்போஸ்தலர் காலம்வரைக்கும் ஒரு எல்லைப்படுத்தப்படவில்லை என்று காணப்படுகிறது.—இந்தப் பாவம்,

1. ஆவியின் கொடுமையினாலும்—ஏனென்றால் மனிதர் பாவத்தை அதிகமாய்ச் செய்கிறார்கள்.

2. கிறிஸ்துவைப் பகைப்பதினாலும்—ஏனென்றால் அவர் பாவத்தை உணர்த்துகிறார். லூக். 16: 14.

3. பாவத்திலே நிலைத்திருக்கும்படி எண்ணங்கொண்டு, அதைவிட்டுப் பிரியாதிருப்பதினாலுமே உண்டாகிறது.

இந்தப் பாவத்தில் அடங்கியவைகளாவன;

1. எல்லா பாவஉணர்ச்சியை எதிர்க்கவும், உண்மையாயிருக்குமென்று அறிந்த சத்தியத்தைத் தள்ளவும் தீர்மானம்செய்வதும்,
2. கடிந்துகொள்ளுதலையும், கடிந்துகொள்ளுகிறவர்களையும் பகைப்பதும்,
3. பாவ பழக்கத்தை விட்டுவிடமாட்டேன் என்று தீர்மானிப்பதுமே.

இந்தப் பாவத்தைச் செய்தவர்களாகக் காணப்படுகிறவர்களின் திருஷ்டாந்தங்களாவன;

கோராகு, தாத்தான், அபிராம். எண். 16: 26—32.

ஏலியின் குமாரர். 1 சாமு. 2: 25.

கன்னானாகிய அலெக்சந்தர். 2 தீமோ. 4: 14.

சத்தியத்தை யறியும் அறிவை அடைந்தபின்பு மனப்பூர்வமாய்ப் பாவம்செய்கிறவர்கள். எபி. 10: 26—31.

உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினபின், மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு செயிக்கப்பட்டவர்கள். 2 பேது. 2: 20—22.

பரிசுத்தாவிக்கு விரோதமான தேவதூஷணம் மன்னிக்கப்படமாட்டாது.

ஒருவன் பரிசுத்தாவிக்கு விரோதமாகத் தூஷணம்சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப்பான். மாற். 3: 29

லூக். 12: 10. எபி. 6: 4, 6. மத். 12: 31, 32.

மறுமை என்ற பதத்தின் கருத்து சுவிசேஷ ஏற்பாடு என்பதாம். துணிகரமான பாவத்துக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தில் பலி நியமிக்கப்படவில்லை. எண். 15: 30. மனஸ்தாபப்படுகிறவர்களுக்கே மன்னிப்புக்கொடுக்கப்படுகிறது. இந்தப் பாவம்செய்தவர்கள் மனந்திரும்பமாட்டார்கள். மற்றெல்லா பாவங்களும் தற்கால சுகம், ஆறுதல், பிரயோசனத்துக்காகச் செய்யப்படுகிறது. ஆனால் இந்தப் பாவம் தேவனுக்கு விரோதமான தீர்மானத்தின் பலனாயிருக்கிறது. பரி. பவுல் துன்பப்படுத்துகிறவராயிருந்தார். ஆனால் அறியாமையினால் செய்தார். கி-பி-361-ல் அரசாண்ட ஜூலியன் என்ற பாஷண்டன் கிறிஸ்துமார்க்கம் சத்தியமென்று அறிந்திருந்தும் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினான்.



இது தாவீது செய்த பாவமல்ல—அவன் ஒரு கடமையை அசட்டைசெய்து மற்றொரு பாவத்தில் இழுக்கப்பட்டான். அவனுடைய தவறுதல் படிப்படியாயிருந்தது. அவன் மனஸ்தாபமில்லாமல் ஒரு பாவத்திலிருந்து மறு பாவத்துக்குப்போனான். நாத்தான் தீர்க்கதரிசி அவனை எச்சரிக்க அனுப்பப்படுமட்டும் அவனுடைய மனச்சாட்சி தாலாட்டப்பட்டு நித்திரைசெய்ததாய்க் காணப்படுகிறது.

இந்தப் பாவத்தைப்பற்றி வேதத்திலடங்கிய வசனங்கள், அநேக மனச்சாட்சியுள்ள கிறிஸ்தவர்களுக்கு அதிகக் கிலேசத்தைக் கொடுக்கத்தக்கதாயிருக்கிறது. ஆனால் அந்த வசனங்கள், தங்களைத் தாழ்த்தி மனஸ்தாபப்படுகிறவர்களுக்கு அதைரியத்தைக் கொடுக்கத்தக்கதாக எழுதப்படாமல், நம்மை எச்சரிக்கவும், பாவஉணர்ச்சியுள்ள மனச்சாட்சிக்கு விரோதமாய்த் துணிகரங்கொள்ளாதபடி கடிந்துகொள்ளவுமே எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் பாவத்தைச் செய்யாதபடி அதிகமாய்ப் பயப்படுகிறவர்கள், பொதுவாக அதற்கு வெகு தூரத்திலேயே இருக்கிறார்கள். இவ்விதமாய் அவர்கள் இருக்கையில் பாவத்துக்காக துக்கப்படாமலும், தேவனுடைய தயவை அடைந்துகொள்ளும்படி எவ்வித விருப்பமில்லாதவர்களாயுமிருக்கிறார்கள்.

தாவீதைப்போல (சங். 19:13) "துணிகரமான பாவங்களுக்கு உமது அடியானை விலக்கிக் காரும்; அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்" என்று செபம்பண்ணுவாயாக.

---

## The World's Birth.

## உலகப் பிறப்பு.

### III. அதிகாரம்.

"வானங்கள்."

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருஷ்டித்தார்.

சங்கீதம் 19: 1—11.

(தொடர்ச்சி.)

தேவனுடைய இவ்வகை மகிமையையும், வானத்தின் மகத்துவங்களையும் கவனிக்கையில், சில மனிதருடைய மனதில் தீமையான எண்ணங்கள் உண்டாகின்றன. சமஸ்த உலகங்களையும் உண்டுபண்ணி,

அவைகளை எல்லாந் தாங்கி நடத்துகிற சர்வவல்லவர், இந்த நிர்ப்பந்த
உலகத்துக்கு வந்து, நமக்காக மரிப்பாரா என்று சொல்லுகிருர்கள்.
பிரமாண்டமானவைகளுக்கும், சிறியவைகளுக்கும் தேவனுடைய பார்
வையில் அற்பமான வித்தியாசமாத்திரமுண்டு. அவைகளைத் தேவனே
டே ஒப்பிட்டுப் பார்க்கையில் அவைகள் ஒன்றுமில்லாதவைகள் என்
று சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் ஞானம், வல்ல
மை என்றவைகளில் அளவற்றவராயிருப்பதுபோல, தயவிலும் இரக்
கத்திலும் அளவற்றவராயிருக்கிருர். பூமிக்கு வானம் எவ்வளவு உயர
மாயிருக்கிறதோ, அவருக்குப் பயந்தவர்கள்மேல் அவர் கிருபையும்
அவ்வளவு பெரிதாயிருக்கிறது. அவருடைய வல்லமையின் இரகசிய
மும் அவருடைய அன்பின் இரகசியமும் ஒன்றுபோலவே பெரிதாயும்
ஆச்சரியமாயுமிருக்கிறது. அவர் நம்முடைய எண்ணங்களுக்கும் மே
லானவர் என்று பார்க்கும்போதெல்லாம், அவர் கிருபையிலும் மேலா
னவரென்று அறியவேண்டும். கர்த்தர் எல்லாருக்கும் நல்லவர். அவ
ருடைய உருக்க இரக்கங்கள் அவர் கிரியைகள் எல்லாவற்றின்மேலும்
இருக்கிறது.

ஆதலால் "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத்
தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கி கூப்பிடுங்
கள். துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவு
களையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன், அவர் அவன்மேல்
மனதுருகுவார். நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்.
அவர் மன்னிக்கிறதற்குத் தயைபெருத்திருக்கிருர். என் நினைவுகள் உங்
கள் நினைவுகள் அல்ல. உங்கள் வழிகள் என் வழிகளுமல்ல" என்று
கர்த்தர் சொல்லுகிருர். பூமியைப் பார்க்கிலும் வானம் எப்படி உயர்ந்
திருக்கிறதோ அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும், என் வழி
களும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும், என் நினைவுகளும் உயர்ந்தி
ருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிருர். பிதாவே வானத்துக்கும்
பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை உங்களுக்கும் விவேகிகளுக்கும்
மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மைத் துதிக்
கிறேன் என்று எல்லோரும் சொல்லுவோமாக.

தேவஞானம் விளங்கிய பூமியையும், பெரிய வானஜோதிகளை
யும் நாம் பார்க்கையில், நாம் எவ்வளவாய் நம்மைத் தாழ்த்திக்கொள்
ளவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் அவருடைய சிருட்டிப்பில்
ஒரு அணுவுக்கொப்பாயிருக்கிறோம். அப்படியானல் நாம் எவ்வள
வாய்த் தாழ்த்திக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். பெருமை
பாராட்ட நம்மிடத்தில் என்ன இருக்கிறது? நமது சிநேகிதர் ஒரு
நிமிஷத்திலே நம்மைவிட்டு எடுபட்டுப்போகிருர்கள். ஐசுவரியம் சிற
கெடுத்துப் பறந்துபோவதுபோல போய்விடுவதுமுண்டு. சுகம் நம்
மைவிட்டு அகன்றுபோகிறது. ரூபவதி வியாதியால் வேறுபட்டுப்போ
கிருள். பசிதாகம், நிர்வாணம், துக்கம், சலிப்பு, உபத்திரவம் நம்மைச்
சூழ்ந்துகொள்ளுகிறது. நமது அறிவுக்கு எல்லையுண்டு. நாம் செய்கிற
தப்பிதங்கள், பிழைகள் அதிகம். பின்னை ஏன் நமக்குப் பெருமை?
பெருமையைத் தள்ளி சமஸ்தத்தின் அதிபதிக்குக் கீழமைந்து அவரு
டைய பரிசுத்த வேதம் சொல்லுகிறபடி மனத்தாழ்மையை நமக்கு
ஆபரணமாகப் பூண்டுகொள்வோமாக.

---



# IV. அதிகாரம்.

## முதல்நாள் படைப்பு.

ஆதி. 1: 2—5. யோபு 38: 4—7.

---

ஆதியாகமம் முதலாம் வாக்கியத்திலே தேவன் இல்பொருளி
லிருந்து ஆதியிலே வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார் என்று
சொல்லியிருக்கிறது. அப்பால் பரிசுத்தஆவியானவர் நம்முடைய உல
கம் இப்போதிருக்கிறபடி கிரமமாக்கப்பட்டதைக் காண்பிக்க சித்தங்
கொண்டு, அதைப்பற்றி எழுதிவைத்திருக்கிருர். முந்தின அதிகாரத்
தில் சொல்லியிருக்கிற மகத்தான உலகங்களைப்பற்றி அவர் அப்புறம்
காட்டுகிறதில்லை. பரிசுத்த வேதாகமம் நமக்கு வானசாஸ்திரத்தையா
வது, தேவதூதரின் சரித்திரத்தையாவது காட்டும் நோக்கமாய் எழு
தப்படவில்லை. கிருபையினலே தேவன் நமக்குள்ளே நடப்பித்துவரு
கிற பெரிதான கிரியைகளையும், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கர்த்
தாராகிய ஏசுவினல் மீட்கப்பட்டதையும், அந்த ரட்சகரின் நித்திய ஆளு
கையையும் காட்ட நோக்கமாய் எழுதப்பட்டது. சமஸ்த சிருட்டிப்
பைப்பற்றித் தொடுப்பாய்ச் சொன்னபிறகு, நம்முடைய உலக சரித்
திரத்தை தேவஆவியானவர் காட்டியிருக்கிருர். "பூமியானது ஒழுங்
கின்மையும் வெறுமையுமாயிருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்
தது."

தேவன் ஆறுநாள் கிரியைகளைத் துவக்குமுன், பூமி ஒழுங்கின்
மையும் வெறுமையுமாய் எவ்வளவு காலமாயிருந்ததென்பதை ஒரு
வரும் அறியோம். அநேக லட்ச வருஷங்களாய் அப்படியிருந்தாலும்
இருக்கலாம். ஏறக்குறைய 6,000-வருஷங்களுக்கு முன்னே முதல்
மனுஷன் உருவாக்கப்பட்டான் என்பதையும், அதற்கு முந்தி தேவ
தூதர்கள் சிருட்டிக்கப்பட்டிருந்தார்கள் என்பதையும் அறிவோம்.
ஆதாம் பாவத்தில் விழ, கெட்டுப்போன தூதர்களே கருவிகளாயிருந்
தார்களென்று அறிவோம். தேவதூதருக்குப் பரீட்சையின் காலமிருந்
தது. அவர்களில் அநேகர் ஆதி நிலைமையைக் காத்துக்கொண்டார்கள்,
அநேகர் தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொள்ளாமல்,
தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்டு, மகாநாளின் நியாயத்
தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினலே கட்டப்பட்டு, அந்தகாரத்
தில் அடைத்துவைக்கப்பட்டிருக்கிருர்கள். இதெல்லாம் ஆதாம் சிருட்
டிக்கப்பட்டதற்கு முன்னதாக நடந்தன. தேவன் இந்த உலகத்தைச்
சிருட்டித்தபோது தேவதூதர்கள் கெம்பீரித்தார்கள். தேவன் யோ
பைப் பார்த்து நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்
கேயிருந்தாய்? நீ அறிவாளியானல் அதை அறிவி. அதின் ஆதாரங்கள்
எதின்மேல் போடப்பட்டது? அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்?
அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப் பாடித், தேவ
புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே என்று சொல்லியிருக்கிருர்.

ஆதலால் ஆதியாகமத்தின் முதலாம் வாக்கியத்துக்கும் இரண்
டாம் வாக்கியத்துக்கும் இடையேயுள்ள காலம் இவ்வளவு என்று
சொல்ல ஒருவராலும் முடியாது. ஆகவே நம்முடைய உலக சிருட்டிப்
பைப்பற்றி நாம் பாராமல் அது இப்போது காணப்படுகிறபடி கிரம
மாக்கப்பட்டதைப்பற்றிப் பார்ப்போமாக. முன் வருகிற அதிகாரங்

களில் காட்டிய சில காரியங்களை மறுபடியும் வினாவிடையாக உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

பூமியின் வடிவத்தைப்பற்றிப் பரிசுத்த வேதாகமத்தில் என்ன சொல்லியிருக்கிறது?

அது உண்டையாயிருக்கிறது. ஏசா. 40: 22.

பூமிக்குள் என்னவிருக்கிறது என்று சொல்லியிருக்கிறது?

அக்கினியிருக்கிறது. யோபு 28: 5.

பூமி எதின்மேல் தொங்கவைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லியிருக்கிறது?

பூமியை அந்தரத்திலே தொங்கவைத்திருக்கிறார். யோபு 26: 7.

பூமியின் சுற்றளவு என்ன?

25,000-மயில்.

பூமி சூரியனைச் சுற்றியோட எவ்வளவு காலஞ் செல்லும்?

365¼-நாள்.

அது சூரியனைச் சுற்றியோடுகையில் தன்னைத் தானே சுற்றுவதுண்டா?

24-மணிநேரத்துக்கொருதரம் தன்னைச் சுற்றுகிறது.

ஆகாயத்தில் எட்டுப் பத்து மைல் தூரத்திலே நீ நின்று பூமி ஓடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தால் பட்டணங்களும், மலைகளும், ஆறுகளும், தேசங்களும், இராஜ்ஜியங்களும், சமுத்திரங்களும் கடந்துகொண்டிருப்பதை ஆச்சரியத்தோடே பார்த்துக்கொண்டிருப்பாய். இப்படி 24-மணி நேரத்துக்கு ஒருதரம் அந்தந்த இடங்கள் திரும்பத்திரும்ப கடந்துகொண்டேயிருப்பதைக் காண்பாய்.

இப்போது வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற காரியத்தைப் பார்ப்போமாக.

பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. அதாவது, எல்லாம் குழப்பமாயிருந்தது. மனிதர், மிருகங்கள், பறவைகள், மச்சங்கள், ஊர்வனங்கள், விருட்சங்கள், புல்பூண்டுகள், உலர்ந்த தரை, கடல், ஆகாயம், ஒளி இவைமுதலியன பூமியில் இல்லை.

ஆழத்தின்மேல் இருளிருந்தது. அதாவது பூமி எங்கும் தண்ணீரால் நிரம்பியிருந்ததோடே கொடிய அந்தகாரமுமிருந்தது. வெளிச்சமே கிடையாது. கீழேயிருக்கிற அக்கினியினால் கொதிக்கிற தண்ணீர் நீராவியாய் எழும்பிக்கொண்டிருந்தன. பூமி இருளும் குழப்பமுமாயிருந்தது.

---

## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**—காலஞ்சென்ற பீக்கன்ஸ்பீல்டு பிரபுவின் பிரேதத்தை இராஜாங்க செலவில் கோலாகலமாய் அடக்கஞ்செய்ய வேண்டுமென்று மகா ராணியவர்கள் யோசித்தும் அவர் உயிரோடிருக்கும்போது விரும்பிக்கொண்டபடி ஹண்டன் என்னுமிடத்தில் முன் அவர் பத்தினி அடக்கப்பட்டிருந்த இடத்துக்கு அருகில் க்ஷேமிக்கப்பட்டது. பிரதம மந்திரியாகிய கிலாட்ஸ்டோன் பிரபு பூரண சுகத்தோடிருக்கிறார். பார்லிமெந்தைச் சேர்ந்த அவுஸ் ஆப்காமன்ஸ் என்னும் ஜனபிரதிநிதிகளின் சபையில் அபின் வியாபாரத்தைக்



குறித்து இந்திய கவர்ண்மெந்தார் தீர்க்காலோசனைசெய்து வேறு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறதாய்ப் பிரஸ்தாபிக்கப்பட்டது. பிராஞ்சு துரைத்தனத்தார் தியூனிஸ் என்னும் இடத்துக்கு அநேகம் சேனைகளை அனுப்பியிருக்கிறதுமன்றி, அவ்விடத்தில் சில சண்டைகளும் நடந்ததென்று செய்தி. தியூனிஸ் என்பது துருக்கி சுல்தானுக்குச் சம்பந்தமான இடம். அவ்விடத்திலுள்ள அறிவீனரான சிலர் பிராஞ்சிய தோணிகளின்பேரில் துபாக்கிவெடி தீர்ந்ததுமுதலிய ஏதுகரங்களால் இந்தப் பிணக்கு நேரிட்டிருக்கிறது. இதினால் பெரும் சமர்செய்ய நேரிட்டாலும் நேரிடலாம். ருஷிய சக்கரவர்த்தியாகிய 3-ம் அலெக்சாந்தர் என்பவர் பிரஜைகளுக்கு நன்மை பயக்கத்தக்க நல்ல பிரமாணங்களை ஏற்படுத்த எத்தனித்திருக்கிறார். மேலும் அங்கிலேய துரைத்தனத்தோடு சிநேகமேனாயாய் நடந்துகொள்ள விருப்பமுற்றவராயுமிருக்கிறார். சதிக்கொலையுண்டிறந்துபோன தம் பிதாவின் குணம் குறியுள்ளவரல்லவாம். சென்றமீ கடைசியில் அவர்பெர்லின் நகரத்துக்கு வரவிருந்தார்.

**தென்ஆபிரிக்கா.**— திரான்ஸ்பாலில் போயர்கள் சமாதானத்துக்கு உடன்பட்டிருக்கிறதாக முன் தெரிவித்தோமே. பின்னிட்டு வந்த சமாசாரத்தால், போயர்கள் இங்கிலீஷரின் பேரில் மீளவுஞ் சண்டைசெய்யத் தொடங்குகிறதாய்த் தெரியவருகிறது. பட்டால் தெரியும் புத்தி முட்டாட்களுக்கு.

**இந்தியா.**—நேபாள தேசத்து மகாராஜா மரணமடைந்தார். யாத்தியஸ்தன் இராஜ்யபாரங் கைக்கொண்டார். கந்தகாரில் எல்லாம் அமைதியாயிருக்கிறதாம். ஆப்கான் யுத்தத்தில் பிரிட்டிஷ் துரைத்தன பக்கமாய் சம்பந்தப்பட்டு நின்ற சேனைகளுக்கு பார்லமெந்து மகா சங்கத்தார் நன்றி சொன்னார்கள். நருமதையாற்றில் கட்டிய பெரிதும் சிறந்ததுமான பாலமொன்று இந்த மாசம் 10உயில் பிரதிஷ்டைசெய்யப்படும். அதிலும் சிறந்த பாலம் இந்தியாவெங்குமில்லையாம்.

சென்னை ராஜதானியின் கவர்னராகிய மகா கனமும் சங்கையும் பொருந்திய ஆதாம் பிரபவர்கள் சென்றமீ 24உ காலை சுமார் 7-மணிக்கு காலஞ்சென்று போனார்களென்கிற துக்கசெய்தியை அறிவிக்கிறோம். ஷை பிரபவர்கள் 5-6-மாசத்துக்குமுன் தேசாதிபத்தியத்தைவிட்டு சுதேசத்துக்குப்போன டியூக்பிரபவர்களுக்குப் பதிலாக சென்னை கவர்னர் வேலைக்கு நியமிக்கப்பட்டவர். இவர் மரிக்கும்போது இவருக்கு வயது 59. இவருடைய சிறிய தகப்பனார் முன் சென்னைத் துரைத்தனத்துக் கவர்னராயிருந்தவர். இப்போது காலஞ்சென்ற பிரபு முன் பம்பாய்த் துரைத்தனத்துக் கவர்னராயிருந்த லாட் எல்வின்ஸ் டோன் பிரபுக்கு 1853-ம் வருஷத்தில் அந்தரங்கலிகிதராயிருந்தவர். காலஞ் சென்றுபோன பிரபுவின்பத்தினியாரும் குடும்பமும் பம்பாய் மார்க்கமாய் புகைக்கப்பலேறி சீமைக்குப்போக விருந்தார்கள்.

இலங்கையில் இவ்வருஷம் நடந்த முத்துச்சலாபம் வெகு நயமாயிருந்தது. சிப்பிகளின் கிரயம் உயர்ந்ததினால் கவர்ண்மெந்தாருக்கு 6-லட்சம் ரூபாய்க்கு அதிகமான லாபங் கிடைத்ததாம்.

---

ஜூன் மீ நாள்-30. வைகாசி மீ 20உ-முதல், ஆனி மீ 18உ-வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௨௦ | அவர்கள் அக்கிரமத்தை விசாரிப்பேன். எரேமியா. 36: 31. |
| வி | 2 | ௨௧ | நீங்கள் மோசம்போகாதிருங்கள். 37: 9. |
| வெ | 3 | ௨௨ | கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடும். 38: 20. |
| ச | 4 | ௨௩ | அந்நாளிலே உன்னைத் தப்புவிப்பேன். 39: 17. |
| ஞா | 5 | ௨௪ | கர்த்தரால் உண்டான வசனம். 40: 1. |
| தி | 6 | ௨௫ | எங்களைக் கொலைசெய்ய வேண்டாம். 41: 8. |
| செ | 7 | ௨௬ | கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்போம். 42: 6. |
| பு | 8 | ௨௭ | சாவுக்கு ஏதுவானவன் சாவுக்கு. 43: 11. |
| வி | 9 | ௨௮ | என் வார்த்தைகள் மெய்ப்படும். 44: 29. |
| வெ | 10 | ௨௯ | உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ ? 45: 5. |
| ச | 11 | ௩௦ | உன்னை மட்டாய் தண்டிப்பேன். 46: 28. |
| ஞா | 12 | ௩௧ | கர்த்தர் அதற்குக் கட்டளை கொடுத்தார். 47: 7. |
| தி | 13 | ௧ | உங்கள் பிராணன் தப்ப ஓடிப்போங்கள். 48: 6. |
| செ | 14 | ௨ | உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. 49: 11. |
| பு | 15 | ௩ | அவர்களுடைய மீட்பரோ வல்லமையுள்ளவர். 50: 34. |
| வி | 16 | ௪ | கர்த்தர் நிச்சயமாகப் பதில் அளிப்பார். 51: 56. |
| வெ | 17 | ௫ | இவனுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுத்தான். 52: 9. |
| ச | 18 | ௬ | கர்த்தாவே என் சிறுமையைப் பாரும். புலம்பல். 1: 9. |
| ஞா | 19 | ௭ | உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு. 2. 19. |
| தி | 20 | ௮ | ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டார். 3. 31. |
| செ | 21 | ௯ | உன் அக்கிரமத்துக்கு வரும் தண்டனை தீர்ந்தது. 4: 22. |
| பு | 22 | ௧௦ | எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும். 5: 21. |
| வி | 23 | ௧௧ | ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்தது. எசேக்கியேல். 1: 20. |
| வெ | 24 | ௧௨ | நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு. 2: 7. |
| ச | 25 | ௧௩ | அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான். 3: 19. |
| ஞா | 26 | ௧௪ | அவர்களுடைய அக்கிரமத்தைச் சுமப்பாய். 4: 4. |
| தி | 27 | ௧௫ | உன் நடுவிலே நீதியைச் செலுத்துவேன். 5: 8. |
| செ | 28 | ௧௬ | நான் கர்த்தரென்று அறிந்துகொள்வார்கள். 6: 13. |
| பு | 29 | ௧௭ | அவர்கள் அக்கிரமமே அவர்களுக்கு இடறலாயிருந்தது. 7: 19. |
| வி | 30 | ௧௮ | அவர்களுக்கு நான் செவிகொடுப்பதில்லை. 8: 18. |

## விசேஷ நாட்கள்.

5. பரிசுத்த ஆவியின் திருநாள்.
11. பரி. அப். பர்னபாவின் திருநாள்.
12. திரித்துவத் திருநாளாகிய ஞாயிறு.
    பௌரணமி.
19. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு.
24. பரி. யோவான்ஸ்நானன் பிறந்த நாள்.
26. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 2-ம் ஞாயிறு.
    அமாவாசை.
29. பரி. அப். பேதுருவின் திருநாள்.


# நற்போதகம்.

௭. சூலாய்மீ. ௲௮௮௧௵.


## எண்ணாகமம்.

(தொடர்ச்சி.)

### 20. அதிகாரம்.

20-ம் 21-ம் அதிகாரங்கள், காதேசிலிருந்து சேயீர் மலையைச் சுற்றி யோர்தானுக்குச் சமீபமான பிஸ்காவின் கொடிமுடிகளுக்கு இஸ்ரவேலர் பண்ணின பிரயாணத்தையும், அந்தப் பிரயாணத்தில் நடந்த பல சம்பவங்களையும் சொல்லியது. இதற்கு டாப்பு 33: 37-41 பார். சீனாய்முதல் கானான்வரையும் இஸ்ரவேலர் செய்த பிரயாணங்களில் இது மூன்றாம் வகுப்பு. இஸ்ரவேலர் எகிப்தை விட்ட 40-ம் வருஷம் இது நடந்தது.

நடந்த சங்கதிகளை அத்தனை காலக்கிரமமாய்ச் சொல்லவில்லை. 21: 1. ஆராத்தின் இராசா யுத்தம்செய்தது, இஸ்ரவேலர் காதேசிலிருந்து ஓர் மலைக்குப் பிரயாணம்பண்ணின காலத்திலும் (33: 37-40.) அவர்கள் தென்திசையாகத் திரும்பினதற்கு (20: 21. 21: 4.) முன்னுமாக நடந்தது. 20-ம் அதிகாரத்தின் பொருளோவென்றால், இஸ்ரவேலர் வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசிக்குமுன் அவர்களுடைய பழய அதிபதிகள் அவர்களுக்கு உண்டாக்கின நஷ்டத்தைச் சொல்லுகிறதாய்க் காணப்படுகிறது.

1. "சபையார் எல்லாருக்கும்" 13: 26-லும் 14: 1-லும் இப்படி வருகிறது. இப்போ அவர்கள் (38) வருஷக்காலமாய் அலைந்திரிந்து மறுபடியும் ஒன்றுசேர்ந்து கானானுக்குப் பிரவேசிக்கப் போகிறார்கள் என்று காட்டுகிறது. மேற்படி (38) வருஷக்காலங்களில் நடந்த சங்கதி யாதொன்றும் நமக்குத் தெரியாது. கலகக்காரரான அவிசுவாசிகள் மாண்டுபோகிற காலமாயிருந்தது. எசே. 20: 15. ஆமோஸ் 5: 25. ஓசி. 9 : 10.

"சீன் வனாந்தரத்தில்" 10: 12. 34: 3. இது காதேசின் ஊற்றுக்குச் சமீபமாயிருந்தது. முந்திய சமயத்தில் பாரான் வனாந்தரத்தில் மேற்காக சமபூமியில் பாளயமிறங்கியிருந்தார்கள். இப்பொழுதோ ஏதோ முகாந்தரத்தையிட்டு கிழக்காக சீன் வனாந்தரத்தின் பரும்புகளின்மேல் பாளயமிறங்கினார்கள். அதினாலேதான் அவர்கள் காதேசிலிருந்ததைப்பற்றி வித்தியாசமாய் அடியிற் காட்டிய வாக்கியங்களிற் சொல்லப்படுகிறது. (12: 16. 13: 26.) (33: 36. 33: 18.)

"முதலாம் மாதம்" இஸ்ரவேலர் எகிப்தை விட்ட (40) ம் வருஷத்தின் முதலாம் மாதம்.

"மிரியாம்" இயூசிபியஸ், தன் காலத்தில் மிரியாமின் கல்லறை, பெத்ராவிலிருந்ததாகச் சொல்லுகிறார், இப்பொழுதில்லை.

2—6. தண்ணீரில்லாததைப்பற்றி சனங்கள் வாக்குவாதம் செய்தது. இவர்கள் காதேசின் ஊற்றண்டை பாளயமிறங்கியிருந்தார்களே, அந்த ஊற்றில் இத்தனை ஏராளமான சனங்களுக்குத் தண்ணீர் போதுமானதாயிருந்ததில்லை. முந்தின தலைமுறையார் முறுமுறுத்ததுபோலதான் இவர்களும் செய்தார்கள். 14: 2. 17: 3,

"கோலை" துளிர்விட்ட கோலல்ல. எகிப்தில் அற்புதங்களைச் செய்த கோலாம். 7: 8, 19. 8: 5. இப்படிப்பட்ட காரியத்துக்காக ரபிதிமில் வழங்கினது. யாத்தி. 17: 5. இத்தனை அதிசயங்களை நடப்பித்த கோலானதால் ஞாபகத்துக்காக இது ஆசரிப்புக்கூடாரத்தில் வைக்கப்பட்டிருந்தது. அப்படியே 9-ம் வா—ல் "கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை" என்றிருக்கிறது.

10. தேவன் தண்ணீர் வரப்பண்ணுவாரோ என்று (12-வா.) மோசேயும் ஆரோனும் சந்தேகப்பட்டதாகத் தோன்றுது. 27: 14. உபா. 32: 51, 52. சங்கி. 106: 33. ரபிதிமில் அற்புதமாய்த் தண்ணீர் வரச்செய்தவர்கள் இப்போ தேவனுடைய தெளிவான உத்தரவு பிறந்திருக்கும்போது, அவ்வகை அற்புதத்தை மறுபடி செய்ய சந்தேகப்படுவார்களென்று நினைக்கவும் இடமில்லை.

11. "கன்மலையை இரண்டுதரம் அடித்தான்." தேவனுடைய கட்டளை (8-வா) "கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்" என்பது. அப்படியிருக்க அடித்ததும் விசேஷமாய் இரண்டுதரம் அடித்ததும், மோசே உக்கிரமான எரிச்சல்கொண்டதைக் காட்டுகிறது. மேலும் "கலகக்காரரே கேளுங்கள்" என்பதாக அவன் சனங்களைப் பார்த்துப் பேசின விதமும் அவனுடைய கடுங்கோபத்தை வெளிப்படுத்துகிறது. அதுவுமல்லாமல், "நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ" என்று சனங்களைப் பார்த்துக் கேட்டதில், இரட்சகராகிய தேவனுடைய மகத்துவத்தைப் பாராட்டவேண்டிய இவர்கள் (அதாவது மோசேயும் ஆரோனும்) தாங்களாய் தண்ணீர் கொடுப்பதாக தங்களை



நோக்கும்படி சனங்களிடத்தில் பேசுகிறார்கள். இதெப்படியென்று
பூராயமாய் விசாரித்தால், தேவனுடைய உத்தம ஊழியக்காரனாகிய
மோசே, இஸ்ரவேலர் அடுத்தடுத்துச் செய்த இரண்டகங்களைப் பொ
றுக்கமாட்டாமல் சோர்ந்துபோய் கடைசியாக வாய்விட்டுத் தவறிப்
பேசும்படிக்கும் நேரிட்டது. இஸ்ரவேலருக்கு தேவனுடைய ஸ்தா
னாபதியாக மோசே தன் உத்தியோகத்தை நடத்திவரும் முறையில்,
அவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட மகிமையான பெரிய வேலைக்கு இப்
பொழுது அபாத்திரனாய் நடந்துகொண்டான். இப்படியாக மோசே
"இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக தேவனைப் பரிசுத்தம்
பண்ணவில்லை." மோசே மிதமிஞ்சிப் பேசின வார்த்தைகளையும் செய்
கைகளையும் ஆரோன் தடுக்கக் கூடியதாயிருக்க அவனும் தடுக்கவில்லை.
ஆகையால் தேவன் அவர்களிருவரையும் இனிமேல் நடக்கவேண்டிய
தமது வேலையைவிட்டு அப்புறப்படுத்தி தண்டித்து, தமது வேலையை
நிறைவேற்றுகிற ஊழியத்தை இன்னொருவனுக்குக் கையளித்தார்.
மோசேக்கே இந்த அவதியானால், சுயநீதிக்காரன் எங்கே!

கிறிஸ்துநாதர் மாத்திரம் நோவை நீக்கும் பாத்திரம்,
கிறிஸ்துநாதர் நீதிமான் தப்பில்லாத தர்மவான்.

13. "மேரிபாவின் தண்ணீர்." மேரிபா என்றால் சண்டை
என்றர்த்தம். இந்த மேரிபாவை, யாத்தி. 17: 2-ல் சொல்லிய மேரிபா
விலிருந்து வித்தியாசப்படுத்தும்படியாக, 27: 14-ல் காதேஸ் ஊர்
அருகிலுள்ள மேரிபா என்றும், உபா. 32: 50-ல் காதேஸ் மேரிபா
என்றும் சொல்லியிருக்கிறது.

"பரிசுத்தம் விளங்கினதினாலும்" தேவனுடைய பரிசுத்தத்
துக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த மோசேயையும் ஆரோனையும்
தண்டித்ததினாலே.

14. நியா. 11: 16, 17. எண். 20: 1ஐ 33: 38-ஓடு ஒத்துப்பார்ப்பதி
னால் இஸ்ரவேலர் காதேசில் 3-அல்லது 4-மாசம் தங்கியிருக்கவேண்
டும். 38-வருஷ அலைந்து திரிந்து மறுபடி வந்து சேர்ந்திருக்கிறவர்களை
திரும்பச் சீர்ப்படுத்தும்படி காலஞ்சென்றிருக்கும் என்பதற்குச் சந்
தேகமில்லை. சுருக்கமான வழியே போய் யோர்தானின் கரைகளைப்
பிடிக்கும்படியாக, காதேசிலிருந்து நேர் கிழக்கே போய் ஏதோமிய
மலைகளின் மத்தி வழியாய்ச் செல்லவேண்டியிருந்தது. இந்த மலைகள்
உயரமும் செங்குத்துமாயிருந்தது. குறுக்கே இரண்டு மூன்று சங்கட
மான கணவாய்களுண்டு. அவற்றில் உவேடிகூவெயர் (The wady qhu-
weir) என்னப்பட்ட கணவாய் வழியாகமட்டும் பாளயங்கள் போகக்
கூடும். இப்படியிருப்பதினாலே அகத்தியம் உத்தரவு கேட்கவேண்டிய
தாயிருந்தது. 17-வா.

17. "உமது சகோதரனாகிய" ஏசா, யாக்கோபுக்குள்ள பழய சிநேகத்தை ஏதோமியர் நினைத்து உதவிசெய்யும்படி ஆதி. 33: 1-17.

நியா. 11: 17-னால் இந்தப்படி மோவாபியரிடத்திலும் கேட்டதாக விளங்குகிறது.

16. "தூதனை" யாத்தி. 14: 19 பொதுவாக இஸ்ரவேலருக்குக் கிடைத்த அற்புத நடத்துதலைக் குறிக்கும்.

17. மோசே, உயேடிகூவெயர் வழியை நோக்கினான் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்தப் பள்ளத்தாக்கில் இப்பொழுதும் நல்ல மேய்ச்சலுள்ள இடங்களும் நீரூற்றுகளுமிருக்கிறது.

20. இஸ்ரவேலர் தாங்கள் அனுப்பிய ஸ்தானாபதிகள் பதில் செய்தி கொண்டுவருமுன், கிழக்கே புறப்பட்டுவிட்டார்கள்.

22. "ஓர்மலை" இந்த மலை ஏதோம் நாட்டின் கரையோரமாய் 33: 37.) அராபாவின் கீழ் பக்கத்தில் பெத்ரா கிட்ட இருக்கிறது. இது மெதித்திராணியக் கடல் மட்டத்திலிருந்து 5000-அடி உயர்ந்தது. இதற்கு இரண்டு விசேஷித்த சிகரங்களுண்டு. அவற்றில் ஒன்றின்மேல் ஒரு சிறு சதுரமான கட்டிடமிருக்கிறது. அந்தக் கட்டிடத்தன்மேல் ஒரு தூபிகையுண்டு. இந்தத் தூபிகை, ஆரோனுடைய பிரேதக் கல்லறை என்று சொல்லப்பட்டு வருகிறது. "சபையார் எல்லாரும் பார்க்க." (27-வா.) ஆரோனும் அவன் கூட்டாளிகளும் இம்மலையில் ஏறும்போது, இஸ்ரவேலர் அராபாவிலுள்ள மோசெரோத் அல்லது மோசெரா என்ற இடத்தில் பாளயமிறங்கியிருந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை. 33: 30. உபா. 10: 6. ஓர்மலை சந்தேகமில்லாமல் ஏதோமிய எல்லைக்குள்ளிருந்தும், அது பாழான சிகரமாயிருந்தது. ஏறினவர்கள் மூன்று பேர் மட்டும் என்பதினாலே யாதொரு தடைசெய்யப்படவில்லை.

26. "வஸ்திரங்களை" ஆசாரிய வஸ்திரங்களை. லேவி. 7: 7-9.

"எலெயாசாருக்கு உடுத்துவாயாக." ஆரோனுடைய உத்தியோகம் இவனுக்குக் கொடுக்கப்பட்டதைக் காட்ட. 1 இராசா 19: 19.

27. "சபையார் எல்லாரும் பார்க்க" மலையின் உச்சியில் நடக்கிற காரியம் சனங்களுக்குத் தெரியாது. இப்படியாக ஆரோன் உயிரோடிருக்கும்போதும் (17-அதி.) அவன் மரணத்திலும்கூட அவனுடைய உத்தியோக சுயத்தை தேவனே காத்துவந்தார். தேவஉத்தரவுப்படி எலெயாசாருக்கு உத்தியோகம் வந்தது. பிரதானஆசாரிய உத்தியோகம் பாரம்பரியமாய் நிலையாயிருந்து வருவதைக் காட்டினது. எபி. 7: 23 மோசே தேவனிடத்திலிருந்து நேரான அதிகாரம் பெற்றிருந்தபடியினாலே அந்த உத்தியோகம், மோசேயின் உத்தியோகத்துக்குக் கீழாயிருந்தது.

29. "ஆரோன் சிவித்து" 33: 37—39. உபா. 10: 6.



## 21· அதிகாரம்.

"ஆராத்" ஒரு சிறு பரும்பின் மேலிருக்கிறது. அந்தப் பரும்புக்கு இப்பொழுது "டெல் ஆராத்" என்று பேர். இது எபிரோனுக்குத் தெற்கே (20) மயில் தூரத்திலிருக்கிறது. இப்பொழுது அந்த இடத்தில் சனசஞ்சாரமே இல்லை.

"வேவுகாரர் காண்பித்த வழி." (33) வருஷத்துக்குமுன் மோசே அனுப்பின வேவுகாரர் சீன்வனாந்தரத்தினூடே போனார்கள். 13: 21.

"யுத்தம்பண்ணி" 20: 1-ல் சொல்லியபடி ஆரோனுடைய மரணத்துக்குப்பின் நடந்ததல்ல. தன் எல்லையைவிட்டு இஸ்ரவேலர் (60) மயில் தூரம் அப்புறப்பட்டு ஓர்மலைக்குப் போகும்வரையும் ஆராதின் இராசா யுத்தம்பண்ணாமல் பொறுமையாயிருந்தான் என்று நினைக்க இடமில்லை. அல்லது மறு பட்சத்தில் பார்த்தால், இஸ்ரவேலர் கானானுக்குப் போகிற பிரயாணத்தைவிட்டுத் திரும்பி சீன் வனாந்தரத்துக்கு வந்து, காதேசுக்கு வடக்கே இருக்கிற ஆராத்தைப் பிடிக்கும்படி காதேசில் இறங்கினார்கள் என்று நினைக்கவும் இடமில்லை. காதேசிலிருந்து இஸ்ரவேலர் கூடாரங்களை எழுப்பினவுடனே, அவர்கள் எந்தத் திசையாய்ப் பிரயாணம்பண்ணவேண்டுமென்று விளம்பரமாகுமுன்னதாகவே ஆராத்தின் இராசா வந்து தாக்கினதாகத் தோன்றுகிறது.

வேவுகாரர் காண்பித்த வழியாக வருகிறார்கள் என்று ஆராத் ராஜா கேள்விப்பட்டபோது என்ற வார்த்தைகள், ஆராத் இராசாவின் எண்ணங்களையும் பயத்தையும் காட்டுகிறது. இஸ்ரவேலர் கானான் தேசத்தைப் பிடிக்கும்படி காதேசிலிருந்தே முன்போல் (14: 40-45.) யுத்தம் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று நினைத்து, சத்துருக்கள் தன் எல்லைக்குள் வந்து சேருமுன் அவர்களைப் பின்னுக்குத் துரத்திவிடும்படி தீர்மானித்தான். இந்த அதிகாரங்களில் காலவரிசையை அதிகமாய் நோக்காமல் சரித்திரக்காரன் பொருள் வரிசையைப் பிடித்துப் போகிறான். இந்தப் புஸ்தகத்தில் மற்றும் இடங்களிலும் இப்படி உண்டு. 9: 1. மோசேக்குள் இஸ்ரவேலர் அடைந்த ஜெயங்களில் இதுதான் முதலாவது ஜெயம் என்பதைக் காட்ட நோக்கமாய் ஆராத் ராஜா செய்த யுத்தத்தை சரித்திரக்காரன் முகவுரைபோல சொல்லுகிறான்.

3. "ஓர்மா" சர்வசங்காரம் என்றர்த்தம். இதை ஜெயித்தபின் இஸ்ரவேலர் இங்கே தாமதித்திராமல் தென் கிழக்காய் பிரயாணப்பட்டார்கள். பிற்பாடு கானானியர் மறுபடியும் இதைக் குடியேற்றி இதற்கு சேப்பாத் என்ற பழைய பேரை இட்டார்கள். இதை மறுபடியும் யோசுவா பிடித்தான். பிற்பாடு நியா. 1: 17.

4. ஏதோம் தேசத்துப் பள்ளத்தாக்குகள் வழியாய் மோவாப் தேசத்துக்குப் போகிற நேர் பாதை அடைபட்டுப்போனபடியினாலே (20: 20, 21.) மலையைச்சுற்றி, சுற்றுப்பாதையாய்ப் போக நேரிட்டது. அவர்கள் இப்போ சீன் அல்லது அராபா வனாந்தர வழியாய் தெற்கே போகவேண்டும். மேற்கே, தி என்னப்பட்ட சுக்கான் கல் செங்குத்துப் பரும்புகளிருந்தது. கிழக்கே, சேயீர் மலை கருங்கல் தொடர் இருந்தது. அக்காபா குடாக்கடல்வரையும் தெற்கே போய், பிறகு கிழக்கே இடதுபக்கமாய்த் திரும்பி அப்புறம் வடக்கை நோக்கி மோவாபுக்கு நேரே போகவேண்டும். உபா. 2: 3. இப்படியாக அவர்கள் சில நாள் அராபா பாழ் வனாந்தரத்தில் சரியான அன்னம் தண்ணீர் கிடையாமல் சங்கடப்படவேண்டியதிருந்தது. மேலும் பக்கத்து குடாக்கடல் கரையிலிருந்து தேரிக்காற்றும் புசலும் எழும்பி இவர்களை வருத்தப்படுத்தினது. ஆகையால் "வழியினிமித்தம் சனங்கள் மனமடிவடைந்தார்கள்."

6. "கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள்." உபா. 8: 15. ஏசா. 14: 29. 30: 6. இந்தச் சர்ப்பங்கள் கடித்தால் தீயாய்க் கமறும். அதினால் இந்தச் சர்ப்பங்களுக்கு இந்தப் பேர் வந்தது. சீனாய்ப் பெனின்சலாவிலும் அராபாவிலும் பலவகையான விஷஜெந்துக்கள் பெருமிதமாய் உண்டு. இப்பொழுதுமுண்டு.

8. யோவான் 3: 14, 15. சபிக்கப்பட்ட கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவமாக வெண்கல சர்ப்பம் செய்யப்பட்டது. இதற்கு உருவமிருந்தாலும் விஷமில்லை. அப்படியே கிறிஸ்துநாதர் நமக்காகச் சாபமானாலும் (கலா. 3: 14). நமக்காகப் பாவமானாலும் (2 கொரி. 5: 21.) அவரிடத்தில் பாவவிஷமில்லை. எபி. 7:26. அவரை விசுவாசத்தினால் நோக்கிப் பார்க்கிறவன், பாவம், மரணம் இவற்றினின்று பிழைப்பான்.

10. "ஒபோத்" ஏதோமின் வடபாகத்துக்குக் கிழக்கே பியூனன் கிட்ட.

12. "சாரேத் பள்ளத்தாக்கு." அல்லது சாரேத் ஆறு சவக்கடலில் விழுகிறது. இஸ்ரவேலருக்குக் குறுக்கிட்ட முதல் ஆறு இதுதான்.

13. "அர்னோன் ஆறு" மேல்முகமாய் ஓடி சவக்கடலில் விழுகிற ஆறுகளில் இதுதான் விசேஷித்தது. இதுதான் விரைவுள்ளது.

14. இந்த யுத்த புஸ்தகத்தைக்குறித்து நமக்கு வேறே யாதொன்றும் தெரியாது.

15. "ஆர்" அர்னோன் நதிக்கரையில்.

16. "பேயேர்" ஏசா. 15: 18. அர்னோனுக்கப்பால்.



17. இவ்விடத்தில் கிணறு தோண்டித் தண்ணீர் குடித்தார்கள். பிற்காலத்தில் இஸ்ரவேல் வாலிபப் பெண்கள் தண்ணீர் எடுத்துவரும் போது இதைப் பாடுவார்கள்.

19. "மாத்தனா" மேற்கே நோக்கின பிரயாணத்தில் இதுவே முதல் தங்கல். தீபோன் கிட்ட.

"நகாலியேல்" தேவனுடைய ஆறு என்றர்த்தம். ஆர் நகரத்துக்குச் சற்று வடக்காய் இதைக் கடந்திருக்கவேண்டும்.

"பாமோத்" பாமோத் பாகால் என்றும் பேர். பாகாலின் உயர்ந்த இடங்கள் என்றர்த்தம். 22: 41. ஏசா. 15: 2. தீபோனுக்கு வடக்கே.

20. "மோவாபின் வெளி." 22: 1.

"பிஸ்கா" 33: 47. எஸ்போனுக்கு வடக்கே, அபாரீம் மலைத்தொடரின் ஒரு உச்சிக்கு பிஸ்கா என்று பேர். நேபோ என்பது, அந்த உச்சியின்மேல் அல்லது அதின் மேல்சரிவில் கட்டப்பட்ட ஒரு பட்டணம். 32: 3, 38. இஸ்ரவேலர் "நேபோவுக்கு எதிரான" 33: 47 (அதாவது நேபோவுக்குக் கிழக்கே) பாளையமிறங்கியிருந்தார்கள் என்று சொல்லப்படுவதால் அது பிஸ்காவின் மேல்சரிவில்தானிருக்கவேண்டும். (32: 49-வியா.)

21—24. எமோரியர் எல்லைவழியாய் இஸ்ரவேலர் பிரயாணம் பண்ணினதை மோசே இதுவரையும் தொடர்ச்சியாய்ச் சொல்லி வந்தார். இந்த வாக்கியமுதல் அவர்களுடைய எல்லைக்குள் வழியுண்டாகும்படி நடந்த யுத்த சரித்திரத்தைச் சொல்லுகிறார். அதற்காக முன் காலத்துக்குத் திரும்பிக்கொள்ளுகிறார்.

24. "யாப்போக்கு" ஆதி. 32: 22. அம்மோன் புத்திரரின் ரபாப் பட்டணம் கிட்ட இது ஆரம்பித்து கீழ் திசைக்கு ஓடி வடதிசைக்குத் திரும்பி பிற்பாடு மேல்திசையாய் ஓடி அர்னோன் நதிக்கு (45) மயிலுக்கு வடக்கே யோர்தானைச் சேருகிறது. அது ரபாவுக்கும் கொசாவுக்கும் மத்தியிலிருப்பதால் அம்மோனிய எல்லையைக் குறித்தது.

"அம்மோன் புத்திரரின் எல்லை அரணிப்பானதாயிருந்தது." ரபாப் பட்டணத்தின் அரணிப்பைப் பார்த்து சீகோன் பயந்து தன் எல்லையை விஸ்தீரணமாக்கவில்லை என்று காட்ட நோக்கமாய் சரித்திரக்காரன் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார். இஸ்ரவேலர் வேறே முகாந்தரமாய் அதைக் கடந்துபோனார்கள். உபா. 2: 19.

25. யோர்தான் சவக்கடலைச் சேருகிற இடத்துக்கு நேர் கிழக்கேயிருக்கிறது. அழிந்து கிடக்கிறது.

26. "தேசத்தையெல்லாம்" அர்னோன் நதிக்கு வடக்கேயுள்ளதைமட்டும் குறிக்கும்.

29. "கேமோஷ்" மோவாபியருக்குக் குலதெய்வம். இந்த வார்த்தைக்கு எஜமான் என்றர்த்தம். இதின் வணக்கத்தை இஸ்ரவே

லருக்குள் சாலொமோன் இராசா கொண்டுவந்தான். 1 இரா. 11: 7. 2 இரா. 23: 13. மோவாபின் இராசாவாகிய மேஷா தன் மகனைத் தகனபலியிட்டது இந்தக் கேமோசுக்குத்தான். 2 இரா. 3: 26, 27.

30. "எஸ்போன்" எல்லாப் பட்டணங்களுக்கும் வடக்கேயிருந்தது. தீபோனைப்பற்றி. 32: 34-பார். மேதேபா, எஸ்போனுக்கு 4-மயிலுக்குத் தெற்கே. 1 நாளா. 19: 7, 15.

32. "யாசேர்" எஸ்போனுக்கு 10-மயிலுக்கு வடக்கே. இதற்கு ஓர் கோட்டை உண்டு. சுற்றுமதிலுள்ள ஒரு குளமுமுண்டு. எரே. 48: 32-ல் இதற்கு கடல் என்று பேர். இந்தப் பட்டணத்தின் பேர், அதைச் சூழ்ந்த நாடுகளுக்கும் வந்தது. 32: 1. யோசு. 13: 25. 2 சாமு. 24: 5. இதை இஸ்ரவேலர் கட்டிக்கொண்டது எமோரியர் இராச்சிய முழுமையும் கட்டிக்கொண்டதற்குச் சரி. 32: 35.

33. ஓக் என்பவன் ஜாதி வேறே. உபா. 3: 2. யோசு. 12: 5. 13: 11. இதைக் கட்டிக்கொண்டது. 32: 39.

"எத்ரோபு" ஜார்மக் ஆற்றின் ஒரு கிளையில் கட்டப்பட்டது. இந்த ஆற்றின் பேர் வேதத்தில் இல்லை. என்றாலும் இந்த ஆறு கிலேயாத், பாஷான் இந்த இரண்டு தேசத்துக்கும் எல்லையாயிருந்தது. உபா. 3: 10-வியா.

---

## 22. அதிகாரம்.

இந்த அதிகாரத்தோடு இந்தப் புஸ்தகத்தின் நான்காம் பிரிவு துவக்குகிறது. 22-அதி-முதல் 25-அதி-வரை. இந்த அதிகாரங்களில் இஸ்ரவேலர் மோவாபின் வெளிகளில் பாளயமிறங்கியிருக்கும்போது அவர்களுக்குச் சம்பவித்தவைகளைச் சொல்லியிருக்கிறது. மேலும் இஸ்ரவேலர் இப்போ வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரிக்க யோர்தானை மட்டும் கடக்கவேண்டியிருப்பதால் அதற்கடுத்த சில ஒழுங்குகளை மோசே சொல்லுகிறார்.

22-முதல் 24-முடிய பிலேயாமின் நடபடியையும் அவன் உரைத்த தீர்க்கதரிசனங்களையும் சொல்லுகிறார்.

1. "மோவாபின் சமனான வெளிகள்." தெற்கே சவக்கடலுக்கடுத்த பெத்எசிமோத் முதல் வடக்கே ஆபேல்சித்திம்வரையும் பாளயமிறங்கியிருந்தார்கள்.

2. "பாலாக்" 4-வா. 21: 26. இந்த வாக்கியங்களைக் கவனிக்கும்போது இவன் பாரம்பரையாய் பட்டத்துக்கு வந்த இராசாவாயிராமல் மீதியானிய வம்சத்தானாயிருந்தானென்று தோன்றும். சிப்



போர் (பட்சி) என்பது மீதியானிய பேர். இருஷ். ஓரேப் என்பதற்கு காகம் என்றும், சேப் என்பதற்கு ஓனாய் என்றும் அர்த்தம். மோவாபியரை எமோரியர் ஜெயித்தபின், மீதியானிய பிரபுக்கள் ஊக்சோசாதியாரைப்போல சமயம்பிடித்து மோவாபில் அதிகாரம்செலுத்தி வந்ததாகத் தோன்றும்.

5. "பிலேயாம்" தன் தேசத்தில் மெய்த்தேவனைப்பற்றிய ஒரு வணக்கத்தை அநுசரித்து வந்தவன். ஐபிராத் நதியருகிலுள்ள பெத்தூர் திசைகளில் ஆபிரகாம், தேரா, நாகோர் இவர்கள் குடியிருந்தார்கள். இவன் சீமோன் மேகஸ்போல் பணஆசையுள்ளவன்.

"பெத்தூர்" 23 7-ல் கிழக்கு மலைகள் என்பது ஆராம் அல்லது மெசொபத்தோமியா (உபா. 23: 4.) ஆனதால் பூர்வ சோதி சாஸ்திரிகள் குடியிருந்த மேல ஐபிராத்திலிருக்கவேண்டும். பெத்தூர் என்ற வார்த்தைக்கு வெளிப்படுத்துதல் என்றர்த்தம். இந்தத் திசைகளில் மாந்திரியக்காரரும் சோதிட சாஸ்திரிகளும் குடியிருந்தார்கள்.

8. "இராத்திரிக்கு" சொப்பனத்திலாவது இராத்தரிசனத்திலாவது [illegible] வெளிப்படுத்தப்படும் என்று பிலேயாம் நினைத்தான். இஸ்ரவேலர் [illegible] நடத்தப்பட்டு வருகிற செய்தி எப்படியும் [illegible] தெரிந்திருக்கவேண்டும். ஆகையால் மோவாபின [illegible] இராத்திரிக்கு இருக்கச்சொன்னதே இவனுடைய மூதலாம் [illegible].

13 "உத்தரவுகொடுக்கமாட்டோமென்கிறார்." அர்த்தமென்ன? [illegible] இவனுடைய உள்ள [illegible]. அந்த [illegible] தேவனுடைய உத்தரவும் வேணும். தேவ சமமதமும [illegible] பணமும் ஆகவேணும்.

15. பிலேயாம் எங்களோடே வரமாட்டேனென்று சொன்னான். (14-வா.) [illegible] சொன்ன வார்த்தையைக்கொண்டும், அக்காலத்து [illegible] வைத்துக்கொண்டும், பணம் அதிகமாய் வாக்குச் சொல்ல தகுதியில்லதான் பிலேயாம் வரவில்லை என்று பாலாக் நினைத்தான்.

19. இப்போதான் பிலேயாமின் உள்ளக் கருத்து வெளியாகிறது. தேவன் முந்திச் சொன்ன தெளிவான உத்தரவுக்கு (12-வா.) விரோதம் பேசுவாரா? பின்னையேன் இவர்களையும் இருக்கச் சொல்லவேணும்.

20 தேவன் இவனை இச்சையான ஆசைக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்.

22 "கர்த்தருடைய தூதனானவர்" இஸ்ரவேலரை வனாந்தரத்தில் நடத்த (யாத்தி. 14: 19). யோசுவாவுக்குக் காணப்பட்ட தூத

னானவர். யோசு. 5: 13.–இஸ்ரவேலைச் சபிக்க விருப்பங்கொண்டதில் பிலேயாம் இஸ்ரவேலின் அதிபதியோடு போராடினான். பாவத்தினாலே மூடப்பட்ட இவன் கண்களைத் திறந்து, தன் நடக்கையைச் சீர்தூக்கிப் பார்க்கும்படி பிலேயாமை உணர்த்தும் நோக்கமாய் இப்போ தூதனானவர் நின்றார்.

28. மீதியானிய யுத்தத்தில் இவன் சிறைபிடிக்கப்பட்டபின் இந்த விபரங்களை இவன் அறிவித்திருப்பான். கழுதை பேசின வார்த்தைகளின் பொருள் கூடவந்த (2) வேலைக்காரருக்கும் (22) பாலாகின் பிரபுக்களுக்கும் (35) விளங்கியிருக்கமாட்டாது. பிலேயாமின் மனசுக்கு நன்றாய்த் தெரியும்.

39. "கீரியாத் ஊசோத்" அர்னோன் நதிக்குத் தென்புறத்தில். இங்கே பாலாக் குடியிருந்தான். மறுநாள் அர்னோனுக்கு வடக்கான பாமோத் பாகாலுக்கு அழைத்துப்போனான்.

---

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

### வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

### ௭-ம் பிரிவு.

பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையைப்பற்றி.

வினா. இந்த விஷயம் ஏன் விசுவாசப்பிரமாணத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது?

விடை. கிறிஸ்துவின்மூலமாய் உண்டுபண்ணப்பட்டிருக்கிற இரட்சண்ணிய நன்மைகளும், பரிசுத்தஆவியானவரின் கிரியைகளும், பிரயோசனமற்றதும் வீணுமாய்ப் போகாதபடி, அவைகள் அருளப்படத்தக்கதாக சபை இருக்கவேண்டுமென்பதினாலேயே.

வினா. திருச்சபை என்பது என்ன?

விடை. தேவன், மனுஷருக்குள்ளே தமக்கென்று தெரிந்துகொண்டிருக்கிற விசுவாசிகளின் கூட்டமே.

நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபையிலிருந்தவனும் இந்த மோசேயே. அப். 7: 38.



1. ஒரு வீட்டிலே கூடுகிற சிறு கூட்டமும் சபை என்னப்படும்.
   ஆக்கில்லாவின் வீட்டிலே கூடுகிற சபை. ரோமர் 16: 5. 1 கொரி. 16: 19.
   நிம்பாவின் வீட்டிலே கூடுகிற சபை. கொலோ. 4: 15.
   பிலேமோன் வீட்டிலே கூடுகிற சபை. பிலே. 2.
2. பற்பல வீட்டாரும், ஒரு பட்டணத்து விசுவாசிகளெல்லாரும் கூடுகிற பெரிய கூட்டமும் சபையென்னப்படும்.
3. இடம், உபதேசம், ஆளுகை, ஆராதனை முறைமை இவைகளினாலே விசேஷித்தறியப்படுகிற கிறிஸ்தவர்களின் கூட்டமும் சபை என்னப்படும்.
   திஷ். யூதேயா, சமாரியா, கலிலேயா சபைகள்.
   ரோமைச் சபை, கிரேக்கச் சபை, இங்கிலாந்து சபை.
4. உலகமெங்குமுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களும் சேர்ந்த கூட்டமும் சபை என்னப்படும். அதற்கு இயேசுகிறிஸ்து தலையாயிருக்கிறார். கிறிஸ்துவின் சரீரமென்னப்படுகிற ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனும் அவயவமாயிருக்கிறான்.
   தேவன் தம்முடைய சுயஇரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபை. அப். 20: 28.
   1 கொரி. 11: 28. எபே. 1: 22, 23. கொலோ. 1: 18. எபி. 12: 23.

வினா. திருச்சபைக்குரிய இலட்சணங்களெவை?

விடை. தேவனுடைய சுத்தாங்க வசனம் பிரசங்கிக்கப்பட்டும், கிறிஸ்துவின் நியமப்படி சாக்கிரமெந்துகளுக்கு அவசியம் வேண்டிய யாவற்றையும் செய்யவேண்டியவிதமாய்ச் செய்து, தகுதியாய் ஆசரிக்கப்பட்டும் வருகிற விசுவாசிகளுடைய சங்கமே கிறிஸ்துவின் வெளியரங்கமான சபை.

வேதசித்தாந்தப் பிரமாணம். 19.

வினா. அப்படியானால் அந்தரங்கமான திருச்சபை ஒன்று இருக்கிறதா?

விடை. ஆம், ஞானஸ்நானத்தினால் சபையின் ஐக்கியத்துக்குட்பட்ட எல்லாரும் வெளியரங்கமான சபையைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், ஆவிக்குரிய உள்ளான கிருபைக்கு அடையாளமும், முத்திரையுமாயிருக்கிற ஞானஸ்நானத்தைப்பெற்று, அதினாலே குறிக்கப்பட்ட கிருபைக்கு பங்காளிகளானவர்கள் மாத்திரம் அந்தரங்கமான திருச்சபையைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்கள் இன்னாரென்பதை எல்லா இருதயங்களையும் ஆராய்ந்தறிகிற தேவன் மாத்திரம் சொல்லக்கூடும்.

**வினா.** கிறிஸ்துவின் அந்தரங்கமான திருச்சபை எத்தனை பாகமாயிருக்கிறது?

**விடை.** இவ்வுலகத்திலே இருக்கிறவர்களும், மோட்சத்தில் சேர்ந்திருக்கிறவர்களுமான இரண்டு பாகமாயிருக்கிறது.

**வினா.** இவ்வுலகத்திலே இருக்கிற சபை எப்படி அழைக்கப்படுகிறது?

**விடை.** போராடுகிற சபை என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் அதின் அவயவங்கள் தங்கள் ஆவிக்குரிய சத்துருக்களோடு போராடுகிற நிலைமையிலிருக்கிறார்கள்.

துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு நமக்குப் போராட்டமுண்டு. எபே. 6: 12.

**வினா.** மோட்சத்திலிருக்கிற சபை எப்படி அழைக்கப்படுகிறது?

**விடை.** வெற்றிசிறந்த சபையென்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் அவர்களின் போர முடிந்து, பரமண்டலத்தில் வெற்றிசிறந்தவர்களாய் ஆனந்தமடைகிறார்கள்.

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ, அவனுக்கு என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன். வெளி. 3: 21.

இவர்கள் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனிப் பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது எந்த உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. வெளி. 7: 15 16.

**வினா.** சபையானது ஏன் பரிசுத்தமுள்ளதென்று சொல்லப்படுகிறது?

**விடை.** 1. அது பொல்லாத உலகத்துக்கு வித்தியாசமான சபை என்று அறியப்படும்படிக்கும்.

இப்படி பொல்லாத உலகத்திலிருந்து திருச்சபையில் சேர்க்கப்பட்டவர்கள் பரிசுத்த அழைப்பினால் அழைக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

அவர் நம்மை பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். 2 தீமோ 1: 9. கலா. 1: 4. 1 யோவா. 5: 19

2. அது சரீரமாயும், பரிசுத்தஆவியானவர் அதின் உயிருக்கு ஆதாரமாயுமிருப்பதினாலும்.

கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். 1 கொ. 6: 17.

எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டோம். 1 கொரி. 12: 13.



3. சபையின் எல்லா உண்மையான அவயவங்களையும் தேவன் தமக்கென்று தெரிந்துகொண்டபடியினாலும்.

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டார். சங். 4: 3.

அவர்கள் பரிசுத்த கனிகளைக் கொடுக்கிறார்கள். (எபே. 2: 13. 2 தீமோ. 2: 19)

பரிசுத்தவான்களென்று அழைக்கப்படுகிறார்கள். 1 கொ. 1: 2.

4. கிறிஸ்துவும் தமது சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரைமுதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும், தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்ததினாலுமே. எபே. 5: 25—27.

**வினா.** பொதுவான சபை என்று சொல்லும்போது, அதினாலே ரோமான் கத்தோலிக்க சபை என்று அர்த்தங்கொள்ளுமா?

**விடை.** அப்படி அர்த்தங்கொள்ளாது. ரோமான சபையானது பொதுவான சபையில் ஒரு பங்குதான்.

**வினா.** அப்படியானால் கருத்து என்ன?

**விடை.** பொதுவான என்பது எங்குமுள்ள அல்லது முழு என்ற கருத்தாம்.

**வினா.** ஏன் திருச்சபையானது பொதுவான என்று அழைக்கப்படுகிறது?

**விடை.** அது யூதசபையைப்போலொத்த ஒரு தனித்த ஜாதியாரை மாத்திரம் குறியாமல, எல்லா ஜாதியாரையும் பாஷைக்காரரையும் அடக்கிச் சொல்லப்படுவதினாலேயே.

**வினா.** அப்படியானால் பொதுவான பரிசுத்த சபை என்பதின் கருத்தென்ன?

**விடை.** ஆவிக்குரிய சிரசாகிய கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு, தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரை உண்மையாய் ஆராதிக்கிற, எல்லாக் காலத்திலும் பாஷைக்காரரிலுமுள்ள விசுவாசிகளே.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவரும். 1 கொரி. 1: 2.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரும். எபே. 6: 24.

## The World's Birth.

# உலகப்பிறப்பு.

## IV. அதிகாரம்.

முதல்நாள் படைப்பு.

ஆதி. 1: 2—5. யோபு 38: 4—7.

(தொடர்ச்சி.)

இங்கே ஒரு விசேஷித்த காரியத்தை அறிவிக்கிறேன். பரிசுத்த வேதம் உலகச் சிருட்டிப்பைப்பற்றி, அநேக இரகசியங்களை வெளிப்படுத்தியிருக்கிறது. அதிலே இரண்டு காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாயிருப்பதால், சாஸ்திரிகளும் முதலில் நம்பாமல், பின்பு மலைகளையும் பூமியின் மேல்பாகங்களையும் நன்றாய் ஆராய்ந்ததின்பேரில் ஆச்சரியமுண்டாக்க அவைகள் உண்மை என்று கண்டிருக்கிறார்கள். தண்ணீரும் தீயும் சேர்ந்து நம்முடைய பூமியின் மேல்பாகம் இப்போதிருக்கிறபடி ஆகும்படி செய்திருக்கின்றன. தண்ணீர், தீ இந்த இரண்டு பொருட்களும் ஒன்றுக்கொன்று எவ்வளவு நேர் எதிரிடையுள்ளது. அப்படியிருந்தும் இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து கிரியை நடப்பித்திருக்கிறது என்பது சத்தியம்.

இக்காலத்திலிருக்கிற கல்விமான்கள் எல்லாரும் முதலாவது ஆதியில் பூமியானது அநேக யுகங்களாகத் தண்ணீரால் மூடப்பட்டிருந்ததெனறும் பூமியின் பூதியமாயிருக்கிற பாறைகள் தண்ணீர் அடியில் மணல் அல்லது சகதிகளாயிருந்திருக்கவேண்டும் என்றும், இரண்டாவது அக்கினியும் அப்போதே கிரியையை நடத்திக்கொண்டு வந்தனவென்றும், அக்கினியின் பலத்தினால் பாறைகள் உன்னதமான அநேக மலைகளாக எழும்பப்பட்டிருக்கவேண்டும் என்றும் ஒன்றுபட எண்ணங்கொண்டிருக்கிறார்கள்.

ஆதியாகமம் 1-அதி. 2-வாக்கியத்தைப் பார்த்தால் தண்ணீரானது அக்கினியைச் சுற்றி அதற்குமேல் நின்றதென்று அறியலாம். பரிசுத்த பேதுரு எழுதின இரண்டாம் நிருபத்தில் இரண்டு சங்கதிகளை அறியலாம். முதலாவது பூமியானது சலத்தினின்று தோன்றி சலத்தினாலே நிலைகொண்டிருக்கிறது. இரண்டாவது இந்தப் பூமியானது ஒரு நாளில் அக்கினியால் அழிக்கப்படும் என்பதே.

ஆனால் இது காரியங்களைக்குறித்து இப்போது பாராமல் நாம் இத்தருணத்தில் கவனிக்கவேண்டியவைகளைப் பார்ப்போமாக. முதல் நாலு வாக்கியங்களின் அர்த்தத்தை விளக்குவிக்கும்படி நாலு கேள்விகளுக்கு உத்தரவுசொல்லவேண்டும்.

1-வது. தேவஆவியானவர் தண்ணீரின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் என்பதின் அருத்தமென்ன என்றும்.

2-வது. தேவன ஒளி உண்டாகக்கடவதென்க ஒளி உண்டாயிற்று என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அந்த ஒளியைப்பற்றி என்ன எண்ணம் கொள்ளவேண்டியதாயிருக்கிறதெனறும்.



3-வது. சூரியனானது முதல் மூன்று நாட்களிலும் எங்கேயிருந்தது என்றும்.

4-வது. சாயங்காலமும் விடியற்காலமுமானதால் முதலாம் நாள் உண்டாயிற்று என்பதின் பொருள் என்ன என்றும் பார்க்கவேண்டும்.

முதல் கேள்விக்கு உத்தரவு. தேவஆவியானவர் என்பது பரிசுத்தஆவியானவரைக் குறிக்கிறது. அவர் பிதாவோடும் குமாரனோடும் சேர்ந்து ஆத்துமாவில் கிரியை நடப்பிப்பதுபோல உலக சிருஷ்டிப்பிலும் கிரியைசெய்தார். மூவரும் என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரே தேவனாகவிருக்கிறார். பறவைகள், மச்சங்கள், ஊர்வனங்கள், விருக்ஷங்கள், தண்ணீர்தரையிலுள்ள சுய சக்தியினாலுண்டானவைகளாயிராமல் ஆவியானவராலேயே சிருஷ்டிக்கப்பட்டன. ஆவியானவர் அசைவாடிக்கொண்டிருந்தார் என்ற மூல பதம் பட்சிகள் தங்கள் முட்டைகளின்பேரில் சிறகை விரித்து அடைகாப்பதற்கொத்த வார்த்தையாகவிருக்கிறது. ஜீவனும் ஒளியும் மகிமையுமில்லாத இருள் மூடிய பூமியில் அவர் அசைவாடினார். சிருஷ்டி கர்த்தாவாகிய ஆவியானவர் சகலத்தையும் ஒழுங்குக்குக் கொண்டுவர அப்படிச் சித்தம் கொண்டருளினார்.

இரண்டாம் கேள்விக்கு உத்தரவு. தேவன் ஒளி உண்டாகக் கடவது என்றார். உடனே இருள் நீங்க ஒளி பிரகாசித்தது. இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ணினார். 2 கொரி. 4: 6 தேவன் ஒளி நல்லதென்று கண்டார்.

இரண்டாம் கேள்விக்குச் சரியான உத்தரவுசொல்லுமுன்னே மூன்றும் கேள்விக்கு உத்தரவுசொல்லவேண்டும். தேவன் முதலாம் நாளிலே ஒளியை உண்டாக்கினபோது, சூரியன் இருந்ததா, இல்லையா? அது இருந்ததென்றே சொல்லவேண்டும். ஏனென்றால் அது தேவன் ஆதியிலே படைத்த வானஜோதிகளில் ஒன்றாயிருக்கிறது. பூமியானது சூரியனைவிட 13-லட்சம் பங்கு பெரியது. பூமியானது இருளிலே அதைச் சுற்றிக்கொண்டேயிருந்தது.

சூரியனானது இன்னமும் கொளுத்தப்படாத பெரிய விளக்கு போலிருந்தது. அது நாலாம் நாளிலே பிரகாசம் கொடுக்கும்படி ஒளி ஏற்றப்பட்டது. சந்திரன் அதின் விம்பத்தினால் பிரகாசிக்கிறது. இவ் வண்ணமாய் இரண்டும் பிரகாசங்கொடுக்கும் சுடர்களாயின. நமது சூரியன் பிரகாசங் கொடுக்கும்படி ஒளி ஏற்றப்பட்டாலும் அது முழுவதும் ஒளீ பொருந்தியதல்ல. அதிலே கரும்புள்ளிகளுமுண்டு. இந்தக் கரும்புள்ளிகள் நமது பூமியைவிட 3,55,000-மடங்கு பாரமுள்ளது.

அப்படியானால் வெளிச்சம் எப்படி வந்ததென்று நீங்கள் கேட்கலாம். சூரியனில்லாமல் வெளிச்சமும் வெப்பமுமுண்டென்பதை கேஸ் என்னும் வாயு தீபத்தினால் அறியலாம். தேவன் வேறுவகையாய் இந்த வெளிச்சமுண்டாகும்படி செய்திருக்கலாமே.

மோசே சிருட்டிப்பைப்பற்றிச் சொல்லியவைகள் எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது. வேதம் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் என்பதற்கு அது ஒரு பலத்த அத்தாக்ஷியாயிருக்கிறது. மனிதன் அந்தச் சரித்திரத்தை எழுதினால் சூரிய வெளிச்சத்துக்கு முந்தி வெளிச்சமிருந்ததாக எழுதியிருக்கமாட்டான்.

நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிற கேணிகளில் காணப்படுகிற செடிகள், விருட்சங்கள், விதைகள் அவ்வளவு பருமனாயிருப்பதைக் கவனிக்கிற தாபர சாஸ்திரிகளும், புவனகோள சாஸ்திரிகளும் மேற் சொல்லிய தாபரங்கள் இக்காலத்திலிருக்கிற உஷ்டண தேசங்களில்

முதலாய் நமது சூரியனின் வெளிச்சம் வெப்பத்தினுல் வளரக்கூடாத
வைகள் என்று சொல்லுகிருர்கள். வேதாகமத்தில் பிரியப்படாதவர்க
ளும் நம்முடைய சூரியனுடைய வெப்பம் வெளிச்சத்தைவிட அதிக
வெப்பம் வெளிச்சத்தினுல் சரியாய்ச் சாதித்திருக்கிற விருட்சங்கள்
வளர்ந்திருக்கவேண்டும் என்கிருர்கள். சாஸ்திரிகள் இதைக் கண்டு
பிடிக்குமுன் இது காரியத்தைக் காட்டியிருக்கிற பரிசுத்த வேதாகமத்
திற்கே மகிமை.

---

## V. அதிகாரம்.

### இரண்டாம் நாள் கிரியை.

முந்தின அதிகாரத்தில் வெளிச்சத்தைப்பற்றிப் பார்த்தோம்.
இந்த அதிகாரத்தில் ஆகாயவிரிவைப்பற்றிப் பார்க்கக்கடவோம்.
வெளிச்சமுண்டானபின்பும், பூமி இன்னமும் தண்ணீரால் நிறைந்தி
ருந்தது. தண்ணீரில் மிதக்கும் பேழையில் நீங்கள் அப்போது வாசஞ்
செய்தாலும் நீங்கள் பிழைத்துக்கொள்ளமாட்டீர்கள். ஒரு நிமிஷத்
துக்காவது மூச்சுவிட உங்களால் கூடாது. கழுத்துக் கிருகருண்டவன்
போல நீங்கள் மூச்சுமுட்டி இறந்துபோவீர்கள். ஏனென்றால் ஆகா
யம் இன்னமும் பூமியில் உண்டாக்கப்படவில்லை.

தேவனுடைய கிருபையினால் அப்போது நீங்கள் பிழைத்திருந்
தீர்கள் என்று வைத்துக்கொள்வோம் வீட்டில் விளக்கு எரியப் பார்ப்
பீர்களா? செடிகளை வளரச் செய்வீர்களா? கூடாது. எவ்வளவாய் ஒரு
வருக்கொருவர் சத்தமிட்டுப் பேசினாலும் அது கேட்குமா? பீரங்கி
வெடி தீர்த்தாலும் அதைக் கேட்பீர்களா? கேட்கமாட்டாது. ஆகாயம
இல்லாவிடில் சப்தம் செல்லாது. ஆகாயம் தொனிக்குக் கருவியாயிருக்
கிறது. ஆகாயமில்லாதிருக்கில் பறவைகள் பறக்கவுமாட்டாது. புகை
எழும்பவுமாட்டாது. மேகங்கள் உயர ஏறவுமாட்டாது. காற்று வீச
மாட்டாது, தீ எரியாது, மனிதனாவது, மிருகமாவது பிழைக்கவும்
ஏதுவிருக்கமாட்டாது. மோசே வேதாகமத்தை எழுதினபோது, ஆகா
யத்தைப்பற்றி கல்விமான்களுக்கு ஒன்றுந் தெரியாது. வாயு சாஸ்திரம்
கண்டுபிடிக்கப்படுவதற்கு 3,000-வருஷங்களுக்கு முன்னே மோசே
இந்தச் சங்கதியை எழுதிவைத்திருக்கிருன்.

இருநூறு வருஷங்களுக்கு முன்னே கெலிலீயா என்ற ஒரு இத்
தாலியன் இருந்தான். அவன் ஆகாயத்தின கனதிமுதலியவைகளைக்
கண்டுபிடித்தான். ஒரு சாதாரண ஜல சூத்திரத்தில் கிணற்றிலிருந்து
32-அடிக்குமேல் தண்ணீர் ஏருதென்று கவனித்து, அதற்கு முகாந்
தரம் இன்னதென்று அறிய யுகதியைச் செலுத்தினுன். அப்போது
பூமியானது, அதரிசனமானதும், இசிவுள்ளதும், ஊடுருவிப் பாக்கக்
கூடியதும், திண்மையுள்ளதுமான பொருளால் முழுவதும் சூழப்பட்
டிருக்கிறதென்றும், அது பூமிக்குமேல் 50-மயில் தூரம் பரவியிருக்
கிறதென்றும், மச்சங்களானவை கடல் தண்ணீரில் வைக்கப்பட்டிருப்
பதுபோல மனிதரும் வாயுக்கடலின் அடியில் வைக்கப்பட்டிருக்கி
ருர்கள் என்றும் 32-அடி ஆழமுள்ள ஒரு ஏரியின் ஜலம் நமது தலை
யின்மேல் எவ்வளவு பாரமுள்ளதாயிருக்குமோ அப்படியே வாயுவும்
அவ்வளவு பாரமாய் நமதுமேலிருக்கிறதென்றும் கண்டறிந்தான்.



பிந்திய காலத்தில் இந்த வாயுவானது இருவகையுள்ளதென்று
கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் இரண்டும் திராட்சஇரச
மும் தண்ணீரும் கலந்தால் எப்படியிருக்குமோ அப்படியே கலப்பா
யிருக்கின்றன. தற்செயலாய் அவைகள் அப்படி இராமல் நிறுக்கப்
பட்டால்போல நுல்லியமாய் ஒரு வகை வாயுவில் ஒரு பங்கும் இன்
ஞெரு வகையில் நாலு பங்குமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்
தச் சராசரி குறைந்தால் நாம் சுவாசிக்கக் கூடாது. அது அதிகப்பட்
டால் நமது ஈரலில் எரிவுண்டாகி வியாதிப்படுவோம்.

தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணி, "ஆகாயவிரிவுக்குக் கீழே
யிருக்கிற ஜலத்துக்கும், ஆகாயவிரிவுக்கு மேலேயிருக்கிற ஜலத்துக்
கும் பிரிவுண்டாக்கினுர்." அது அப்படியே ஆயிற்று. ஆகாயவிரிவி
லுண்டாகிய ஒரு பிரயோசனத்தைப்பற்றி இங்கே சொல்லியிருக்கி
றது. அது சலத்தினின்று சலத்தைப் பிரிக்கிறது. அது நீரணுக்களான
வை பூமியின் மீதில் தங்காமல் ஆகாயத்தில் எழும்பும்படி செய்கிறது.
வாயுவின் திண்மையினால் இப்படியாகிறது. உயர மேகங்கள் வாயுவி
ஞல் தண்ணீரினின்று பிரிக்கப்பட்டிருக்கின்றது. தேவன், மனிதன்
வாசம்பண்ணத்தக்கதாய் இரண்டாம் நாளிலே இந்தத் திரையை உண்
டுபண்ணினுர். அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி அவை
களைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிருர். ஏசாயா 40:
22-என்று சொல்லப்பட்டிருக்கிறது:

இந்தச் சத்திய சங்கதி யோபின் ஆகமத்திலும் சொல்லியிருக்கி
றது. அவர் காற்றுககு அதின் நிறையை நியமித்து, ஜலத்துக்கு அதின்
அளவைப் பிரமாணித்து, மழைக்குத் திட்டத்தையும், இடிமுழக்கத்
தோடே கூடிய மின்னலுக்கு வழியையும் ஏற்படுத்துகிருர். அவர்
அதைப் பார்த்துக் கணக்கிட்டார். அதை ஆராய்ந்து ஆயத்தப்படுத்தி
மனுஷனை நோக்கி, இதோ ஆண்டவருக்குப் பயப்படுகிறதே ஞானம்.
பொல்லாப்பைவிட்டு விலகுவதே புத்தி என்றுர் என்பதே. யோபு 28:
25—28. இந்த வசனங்கள் எவ்வளவு அதிசயமானவைகளாயிருக்கின்
றன. மேகங்கள், நீரணுக்கள், புகை ஏன் மேல் நோக்கிச் செல்லுகிற
தென்பதை பூர்வீகஞானிகள் அறியாதிருந்தார்கள். அவைகள் தங்க
ளுக்குள்ளிருக்கிற ஏதோ சக்தியினுலே உயர எழும்பினதாக எண்ணி
னுர்கள். அக்காலத்தோருக்கு வாயுவின் திண்மை இப்படியென்று தெ
ரியாது. நவீன காலத்தோர் அதைப்பற்றி நன்றாய் அறிந்திருக்கிருர்கள்.
வாயுவைவிட புகை, நீரணுக்கள் லேசானவைகளானதால் அவைகள்
உயர எழும்புகின்றன என்று அறிந்திருக்கிருர்கள். நீரணுக்கள் திரள்
திரளாய் எழும்பி, திரண்டு, தேசங்களில் மழையாய்ப் பெய்து, பூமியி
லே செழிப்பை உண்டுபண்ணி, மலைகளில் விருக்ஷங்களை வளரச்செய்
து, பள்ளத்தாக்குகளைத் தண்ணீரால் நிறையச்செய்து, நதிகள் பிரவா
கிக்கும்படி செய்கிறது.

தேவனுடைய வார்த்தையால் தண்ணீர்கள் பர்வதங்கள்மேல்
நின்றன. அவைகள் மலைகளிலேறி பள்ளத்தாக்குகளிலிறங்கி, நீர்
அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது. அவர் பள்ளத்தாக்கு
களில் நீரூற்றுகளை வரவிடுகிருர். அவைகள் மலைகள் நடுவே ஓடுகிறது.
சங்கீதம் 104: 6—14-என்று கவிஞன் பாடியிருக்கிருர். தண்ணீரினின்
று தண்ணீரைப் பிரிக்கிறதென்று சொல்லிய வசனம் எவ்வளவு நுட்ப
மாய் நடந்திருக்கிறதென்பதைப் பார்த்திருக்கிறோம்.

இதைப்பற்றி இன்னொரு காரியம் பார்க்கவேண்டும். மேலே
இருக்கிற ஜலத்துக்கும் கீழே இருக்கிற ஜலத்துக்கும் பிரிவு உண்டாக்கி

ளுர் என்று சொல்லியிருக்கிறதே. பூமி மூன்றில் இரண்டு பங்கு ஜலத்தால் மூடப்பட்டிருக்கிறதே. மேலே இருக்கிற மேகங்களிலுள்ள ஜலத்தைச் சமுத்திர ஜலத்தோடே ஒப்பிட்டுப் பார்க்கில் மேலே இருக்கிற ஜலம் சொற்பமெனச் சொல்வாரிருக்கலாம். பூமியில் பெரிதும் சிறிதுமான எத்தனையோ நதிகள் ஆயிரக்கணக்கான வருஷங்களாய் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளிலுள்ள தண்ணீர் எங்கேயிருந்து வருகின்றன. மலையிலிருந்து என்று சொல்வீர்களாக்கும். மலைக்கு எங்கேயிருந்து வருகின்றன. மேலேயிருந்தல்லவா?

ஆகாயமாகிய வாயுவினால் நாம் பிழைக்கிறோம். அதில்லாமல் நாம் மாண்டுபோவோம். உங்கள் ஆத்துமா பிழைக்கவேண்டுமானால் தேவஆவியானவர் உங்களுக்கு வேண்டும். அவர் உங்களில் கிரியைசெய்யவேண்டும். அவருடைய வரங்களுக்காக ஜெபம்பண்ணுவீர்களாக.

## VI. அதிகாரம்.

### மூன்றும் நாள் கிரியை.

ஆதி. 1: 9—13.

முதல் இரண்டு நாள் கிரியைகளும், பெரிதும் அதிசயமுமானவைகள் என்று பார்த்தோம். மூன்றும் நாள் கிரியையும் அதிக அதிசயமுள்ளதாயிருக்கிறது. முதலாம் நாளிலே தேவன் வெளிச்சத்தைப் படைத்தார். இரண்டாம் நாளிலே அவர் ஆகாயவிரிவை உண்டாக்கினார். ஆனால் பூமியில் இன்னமும் ஜீவப்பிராணிகளில்லை. மூன்றும் நாளில் மூன்று அதிசயங்கள் உண்டாயின.

முதலாம் அதிசயம் வெட்டாந்தரை காணப்பட்டது. இரண்டாம் அதிசயம் சமுத்திர தண்ணீர் ஒன்றாய்த் திரட்டிச் சேர்க்கப்பட்டது. மூன்றும் அதிசயம் புல், பூண்டு, விருக்ஷங்கள் உண்டாக்கப்பட்டன. பூண்டுகளுக்கு ஆகாரமாகிய தரையும் ஆகாயமும் உண்டானபின்பு, விதவிதமான விருக்ஷங்கள் உருவாக்கப்பட்டன. சில தாபர சாஸ்திரிகள் 60,000-சாதிகளான பூண்டுகள், விருக்ஷங்கள் உண்டென்றும், சிலர் 100,000-சாதிகளுண்டென்றும் சொல்லுகிறார்கள். தேவகட்டளையினால் பாழாய்க் கிடந்த உலகத்தில் அழகுபொருந்திய விருக்ஷ சாதிகள் அதை அலங்கரித்தன. அவைகளெல்லாம் தங்களிலேயே விதையைப் பிறப்பிக்கிறதாயிருக்கின்றன. தேவன் வானத்தின் கீழிருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும் வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. இது எவ்வளவு அதிசயமான காட்சி. நாம் குடியிருக்கும்படியாக தேவன் இடத்தை ஆயத்தம்பண்ணினார். இங்கேயே தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு, தேவஞானத்தை அதின் குடிகளுக்குத் தெரியக்காட்டினார். தேவன் வெட்டாந்தரை சிருஷ்டிக்கப்படக்கடவது என்று சொல்லாமல் "காணப்படக்கடவது" என்றார். வெட்டாந்தரை அநேக நூற்றாண்டுகளாய்த் தண்ணீருக்குள் உண்டாயிருந்தது. வெட்டாந்தரை உருவாக்கப்பட்டதைப்பற்றி சாஸ்திரிகளுக்குள் ஒற்றுமையிருந்ததில்லை. சிலர் மலைகள் அடுக்கடுக்காய் வளர்ந்திருப்பதைக் கண்டு அவைகள் தண்ணீரால் உண்டாயிருக்கவேண்டுமென்று சாதித்தார்கள்.



## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**—அயர்லாந்தில் உண்டான கலகம் இன்னும்
ஒழியவில்லை. துரைத்தன சேனைகள் இன்னும் அங்கே போய்க் கொண்
டிருப்பதினால் பயங்கரமான யுத்தம் நடக்குமென்று தோன்றுகிறது.
பிரின்ஸ் ஆப்வேல்ஸ் என்னும் இளவரசரவர்கள் ஆஸ்திரேலியாவுக்குப்
போய் வரவேணுமென்று செய்திருந்த யோசனை முற்றும் நின்று
போயிற்று. இளவரசரவர்கள் அபிப்பிராயப்படி அவர்கள் குமாரரிரு
வர் அங்குபோய் வரத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. குவெபெக் என்
னும் இடத்தில் நெருப்புண்டுபட்டு ஆயிரம் வீடுகள் அழிந்துபோயின.
பிரின்ஸ் லெயோப்போல்டு என்னும் மகாராணியாரவர்களின் நாலா
வது குமாரர் டியூக் ஆவ் ஆல்பனி என்னும் பட்டம் பெற்றிருக்கிறார்.
பர்மாவிலுள்ள சிததாங் பள்ளத்தாக்கில் ரெயில்வே போடுங் காரியத்
துக்கு சீமை இந்திய துரைத்தன மந்திரியவர்களால் அனுமதி கொடுக்
கப்பட்டது. இங்கிலந்தில் தந்தித்தபால் ஆபீசுகளில் ஸ்திரீகள் அநேகர்
அலுவல் செய்துவருகிறார்கள். இந்தியாவிலும் அப்படியே செய்யக்
கூடுமாவென்று பரீக்ஷிக்கும்படி உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. வட
ஆபிரிக்காவைச் சேர்ந்த தியூனிஸ் என்ற இடத்தை பிரான்சுக்காரர்
கைப்பற்றிக்கொண்டார்கள். தங்கள் எல்லைக்குள் நுழைந்து சச்சரவு
செய்கிற அரபியராகிய காட்டுச் சனங்களைத் தடுக்க தியூனிஸால்
கூடாதிருக்கிறதினால், அந்த இடத்தைத் தாங்கள் கைவசப்படுத்தியி
ருக்கிறதாக பிராஞ்சுக்காரர் சொல்லுகிறார்கள். இப்படி அவர்கள்
செய்தது துருக்கிக்கும் இத்தாலிக்கும் மனத்தாங்கல் வருத்துவதா
யிருப்பதினால் பிரான்சுக்கும் இத்தாலிக்கும் யுத்தம் உண்டாகுமோ
வென்று அச்சங்கொள்ள ஏதுவாயிருக்கிறது.

**இந்தியா.**—கிஷ்ண நதிதீரத்தில் பேஷ்வாரோ என்னுமிடத்
தில் நேரிட்ட பயங்கரமான அக்கினி வாதையினால் அநேக நூற்றுக்
கணக்கான சனங்கள் வீடுவாசலில்லாத அகதிகளானார்கள். பஞ்
சாப் ரெயில்வே ஒன்றில் கொடிதான விபத்து ஒன்று நேரிட்டது.
மூன்றும் வகுப்புப் பிரயாணிகளின் வண்டி யொன்றின் அச்சு அகஸ்
மாத்தாய் முறிந்ததினால் வண்டித்தொடர் பாதையைவிட்டு விலகவே
24-சுதேசிகள் காயப்பட்டும் இறந்தும் போனார்கள். நேபாள மகா
ராஜா காலஞ்சென்றுபோனபோது, சத்தியென்று சொல்லப்படுகிற
உடன்கட்டையேறுகிற காரியமொன்றும் நடக்கவில்லை. இவ்வித அக்
கிரமமான காரியமொன்றும் நடக்கக்கூடாதென்று, காலஞ்சென்ற
மகா ராஜா தாம் சாகும்தருணத்தில் கட்டளையிட்டிருந்தாராம். கல்
கத்தாவின் அத்தியக்ஷரவர்களாகிய மகாகனம்பொருந்திய மெத்தி
ராப்பாலிற்றனவர்கள் தென்இந்தியாவில் நெடும் பிரயாணஞ்செய்து
திருச்சபைகளைச் சுற்றிப்பார்த்து மீளவும் க்ஷேமமாய் கல்கத்தா
போய்ச் சேர்ந்தார்கள். நாளது மாசத்தில் அசாம், கச்சார் என்னு
மிடங்களுக்கு யாத்திரைபோகவிருக்கிறார்கள்.

**ஆப்கானில்** அமீருக்கும் ஆயூப்கானுக்கும் பெரும்யுத்தம்
நடக்கும்போல தோன்றுகிறது. ஆயூப்கானுடைய சேனைகள் கிரிஷ்
கைச் சூழ்ந்து மொய்த்துக்கொண்டிருக்கக், கந்தகாரைக் காவல்பண்
ண அதிகப் பிரயத்தனங்கள் செய்யப்படுகிறது. சென்றமீ 3உ கிரிஸ்
கில் நடந்த சண்டையொன்றில் அமீரின் பட்சத்தில் சிலர் காயப்பட்
டார்கள். எதிரிகளின் சேனைகளில் 40-50-பேர் கொலையுண்டார்கள்.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றன்றுள்ள தியானம். |
|---|---|---|---|
| ஜூலாய்மீ நாள்-31. ஆனிமீ 19உ-முதல், ஆடிமீ 18உ-வரை. | | | |
| வெ | 1 | ௧௯ | என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள். எசேக்கியேல் 9: 6. |
| ச | 2 | ௨௰ | ஆலயம் மேகத்தினாலே நிறைந்திருந்தது. 10: 4. |
| ஞா | 3 | ௨௧ | அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக்கொடுப்பேன். 11: 19. |
| தி | 4 | ௨௨ | நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும். 12: 25. |
| செ | 5 | ௨௩ | என் ஜனத்தை உங்கள் கைகளுக்கு நீங்கலாக்கிவிடுவேன். 13: 21 |
| பு | 6 | ௨௪ | தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்; 14: 10. |
| வி | 7 | ௨௫ | என் முகத்தை அவர்களுக்கு விரோதமாகத் திருப்புவேன். 15: 7. |
| வெ | 8 | ௨௬ | நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன். 16: 60. |
| ச | 9 | ௨௭ | உடன்படிக்கையை முறித்தவன் தப்பித்துக்கொள்வானோ? 17: 15. |
| ஞா | 10 | ௨௮ | நீங்கள் ஏன் சாகவேண்டும். 18: 31. |
| தி | 11 | ௨௯ | அது தரையிலே தள்ளுண்டது. 19: 12. |
| செ | 12 | ௩௰ | உங்களை நீங்களே அருவருப்பீர்கள். 20: 43. |
| பு | 13 | ௩௧ | என் உக்கிரத்தை ஆறப்பண்ணுவேன். 21: 17. |
| வி | 14 | ௧ | உன் அசுத்தத்தை உன்னில் ஒழியப்பண்ணுவேன். 22: 15: |
| வெ | 15 | ௨ | நியாயத்தை விளங்கப்பண்ணுவேன். 23: 24. |
| ச | 16 | ௩ | இனி மவுனமாயிருக்கமாட்டாய். 24: 27. |
| ஞா | 17 | ௪ | நான் கர்த்தரென்று அறிந்துகொள்வாய். 25: 7. |
| தி | 18 | ௫ | உன்னை மகா பயங்கரமாக வைப்பேன். 26: 21. |
| செ | 19 | ௬ | உன்னைப் பூரண வடிவாய்க் கட்டினார்கள். 27: 4. |
| பு | 20 | ௭ | உன் நடுவிலே மகிமைப்படுவேன். 28: 22. |
| வி | 21 | ௮ | எனக்காக அதைச் செய்தார்கள். 29: 20. |
| வெ | 22 | ௯ | கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது. 30: 3. |
| ச | 23 | ௰ | அதின் அக்கிரமத்தினிமித்தம் அதைத் தள்ளிப்போட்டேன். 31: 11. |
| ஞா | 24 | ௧௧ | உன்மேல் என் வலையை வீசுவேன். 32: 3. |
| தி | 25 | ௧௨ | எங்கள் பாவங்கள் எங்கள்மேல் இருக்கிறது. 33: 10. |
| செ | 26 | ௧௩ | இவரே அவர்களுக்கு மேய்ப்பனாயிருப்பார். 34: 23. |
| பு | 27 | ௧௪ | என்னை அவர்களுக்குள் அறியப்பண்ணுவேன். 35: 11. |
| வி | 28 | ௧௫ | உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். 36: 25. |
| வெ | 29 | ௧௬ | என் வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும். 37: 27. |
| ச | 30 | ௧௭ | கடைசிநாட்களிலே இது சம்பவிக்கும். 38: 16. |
| ஞா | 31 | ௧௮ | என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருப்பேன். 39: 26. |

## விசேஷ நாட்கள்.

3. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 3-ம் ஞாயிறு.
10. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 4-ம் ஞாயிறு.
11. பௌரணமி.
17. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 5-ம் ஞாயிறு.
24. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 6-ம் ஞாயிறு.
25. பரி. அப். யாக்கோபின் திருநாள்.
26. அமாவாசை.
31. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 7-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

அ. ஆகஸ்துமீ. ௲௮௮௧ ௵.

## எண்ணாகமம்.

(தொடர்ச்சி.)

### 23. அதிகாரம்.

1. இந்த பலியினால் தேவனை வசப்படுத்திக்கொள்ளலாம் என்று நினைத்தான். (7) பலிபீடங்கள் அக்காலத்தில் அறியப்பட்டிருந்த (7) கிரகங்களுக்கும் குறிப்பாக என்று தோன்றும். எப்படியும் இவற்றால் மெய்த்தேவனைப்பற்றிய எண்ணந்தான் பிலேயாம் மனசிலிருந்தது.

3. ஆகாயத்திலாவது பூமியிலாவது தனக்கு ஏதாவதொரு அடையாளம் தோன்றுமென்று நினைத்தான். 24: 6.

4. "தேவன்" எபிரேயு பாஷையில் "ஏலோகிம்" என்றிருக்கிறது. இதற்கு முன்னும் பின்னும் "எகோவா" என்றிருக்கிறது. பிலேயாம் தேடின வழியாய் இப்போ தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்தச் சித்தமானார்.

7. "அராம்" மேட்டுநிலம் என்றர்த்தம். பலஸ்தீனாவின் வடகீழ் எல்லைமுதல், ஐபிராத், திகிரீஸ் நதிகள்வரையுமுள்ள மேடான தேசங்களையெல்லாம் இந்த வார்த்தை குறிக்கும். இவ்விடத்தில்தான் பிலேயாம் குடியிருந்தான். உபா. 23: 4.

9. "தனியே வாசமாயிருப்பார்கள்." மற்றச் சாதியாருடைய ஆராகிர்தமில்லாமல் பத்திரமாயிருப்பார்கள். உபா. 33: 28. எரே. 49: 31. மீகா. 7: 14. தேவனைத் தங்களுக்கு அடைக்கலமாக வைத்துக்கொண்ட காலமெல்லாம் இஸ்ரவேலர் இப்படி சுகபத்திரமாய்க் காக்கப்பட்டார்கள். இஸ்ரவேலர் உள்ளாக தேவனை உண்மையாய் நேசித்தால் வெளிப்படையாயும் காக்கப்படுவார்கள். இந்தச் சத்தியம் பிலேயாமுக்கு நன்றாய்த் தெரியும். அதினாலேதான் தேவன்பேரி

ளுள்ள இஸ்ரவேலருடைய உத்தம பக்தியைப் பிரித்துவிடும்படி கள்ள யோசனை சொல்லிக்கொடுத்தான். 31: 16.

10. ஆதி. 13: 16. 28: 14. இவ்வாக்கியங்களிற் சொல்லிய ஆசீர்வாதங்கள் நிறைவேறினதற்கு, ஷை ஆசீர்வாத வார்த்தைகளைக்கொண்டே சாட்சி பகருகிறான்.

"நீதிமான்" ஆபிரகாம் முதலிய முற்பிதாக்களைக் குறிக்கும். ஏசா. 41: 2.

"முடிவு." எபிரேயுவில் "கடைசிக் காணியாட்சி" என்றிருக்கிறது. அதாவது நீதிமானாகிய ஆபிரகாமின் மரணத்தில் ஆபிரகாமுக்குக் கிடைக்கும் பாக்கியமான நித்திய காணியாட்சி பிலேயாமுக்கும் வேண்டுமாம்! நீதிமானுடைய பாக்கியத்தை விரும்புகிறவர்கள் நீதிமானுடைய நீதியை முந்த விரும்பவேண்டுமே. "அநீதத்தின் கூலியை" (2 பேது. 2: 15.) விரும்புவோருக்கு பிலேயாமின் முடிவுதான் கிடைக்கும்.

11—13 "யாக்கோபின் தூளை எண்ணத்தக்கவன் யார்" என்று பிலேயாம் சொன்னதினாலே, இஸ்ரவேலருடைய ஏராளத்தைக் கண்ட காட்சியினாலே மருண்டுபோய் இப்படிச் சொல்லுகிறானென்று பாலாக் நினைத்து, இஸ்ரவேலருடைய கடைகோடிப் பாளயத்தை மட்டும் பார்க்கத்தக்க வேறோரிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோனான். இவ்விடத்தில் இஸ்ரவேலரைப்பற்றி பிலேயாமுக்கு வித்தியாசமான மதிப்புண்டாகும் என்று நினைத்தான்.

14. "சோப்பீமின் வெளி." அல்லது காவல் காக்கிறவர்களின் வெளி. இது பிஸ்கா சிகரத்தின்மேல், முந்தின இடத்துக்கு வடக்காயும் இஸ்ரவேலர் பாளயத்துக்குச் சமீபமாயுமிருந்தது. இருந்தாலும் பிலேயாமுடைய கண்ணுக்குமுன் இடையிடையே மலைத்துண்டுகளிருந்ததினால், மிகுதியான பாளயத்தை இவன் காண ஏதுவில்லாமல் இவன் கண்கள், இஸ்ரவேலருடைய பாளயத்தைத் தாண்டி யோர்தானின் கரைகளை காணக் கூடியதாயிருந்தது. ஒருவேளை யோர்தான் கரை புரண்டோடுவதில் ஒரு சிங்கம் பலத்தோடு எழும்பி இப்போ இவனுக்கு எதிரே வந்திருக்கலாம். (எரேமி. 49: 19.) இந்தச் சகுனத்தை வைத்துக்கொண்டு இவனுடைய இரண்டாம் உவமையைச் சொன்னான். தேவநடத்தலும்இருந்தது.

21. "அக்கிரமம்—குற்றம்" இந்த வார்த்தைகள், சங்கீ. 10: 7. 90: 10-வாக்கியங்களிலும் வருகிறது. இவைகள் அக்கிரமத்தையும் அதின் பலனாகிய துன்பங்களையும் குறிக்கும்.

"ஜயகெம்பீரம்" ஜூபிலி பண்டிகையின் சத்தம்போல.

23. உலக வகையான உபாயங்கள் உதவாது. தேவன் இஸ்ரவே



லரோடுகூட இருக்கிறார் என்பதை பிலேயாம் நன்றாய்க் கண்டுகொண்டான். குறிசொல்லுதல். யோசு. 13: 22.

28. "பேயோரின் கொடுமுடி." பிஸ்காவுக்கு வடபுறத்திலிருந்தது. உபா. 34: 6.

## 24. அதிகாரம்.

1. "வனாந்தரத்திற்கு" அதாவது இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த மோவாபின் சமனான வெளி. இஸ்ரவேலரைச் சபிக்கும்படி நிமித்தம் பார்த்து இப்போ சடைத்துப்போனான். இப்போ நேரே பார்த்து இஸ்ரவேலின் கோத்திரங்களின்மேல் ஏமாந்து இவ்வாக்கியங்களை உரைத்தான்.

3. "கண் திறக்கப்பட்டவன்." உள்ளான தரிசனத்தின் கண்ணாம். மனுஷருடைய சுபாவக்கண்ணுக்கு மறைக்கப்பட்ட காரியங்களை அறிய இப்போ இவனுக்குப் பகுத்தறிவுண்டாயிற்று.

6. "தோட்டங்களை" ஐபிராத் நதியோரமான அழகிய தொங்கு தோட்டங்களை ஞாபகத்தில் வைத்துப் பேசுகிறான்.

"கர்த்தர் நாட்டின" பரதீசைக்குறித்துச் சொல்லுகிறான். ஆதி. 2: 8.

சந்தனமரம் வாசனைக்கும்; கேதுரு மரம் மகத்துவத்துக்கும் குறிப்பாம்.

7. "நீர்ச்சால்கள்" ஐபிராத்துக்கடுத்த நிலங்களுக்கு தண்ணீர் கொண்டுபோக, நீர்ச்சால்களை நிரப்பி காவு தடியின் இருகடையிலும் கொழுவி நடந்துபோவார்கள். கீழ்தேசங்களில் எல்லாச் செழிப்புக்கும் காரணம் தண்ணீர்தான். இஸ்ரவேலருக்குச் செழிப்பின் ஆசீர்வாதத்தைக் கூறி இதைச் சொல்லுகிறார்.

"ஆகாக்" அமலேக்கிய பிரபுக்களுக்கு இது பாரம்பரியப் பேர். 1 சாமு. 15-அதி. இந்த வார்த்தைக்கு "உயர்வு" என்றர்த்தம். ஆமான் (எஸ்தர் 3: 1.) இந்த வம்சத்தைச் சேர்ந்தவனென்று தோன்றும். இந்தக் காலத்தில் அமலேக்கியர் வல்லமையுள்ள சாதியாராயிருந்தார்கள். 20-வா. இருந்தாலும் இஸ்ரவேலர் பிற்காலத்தில் அடைந்த வல்லமைக்கு நிகரல்ல. சவுல் இவர்களை ஜெயித்தபின் (1 சாமு. 15-அதி.) இவர்கள் தலையெடுக்கவில்லை. தாவீது இராசா காலத்தில் சத்துராதிகளாக வந்தார்கள். 1 சாமு. 27-அதி. 30-அதி. கடைசியாக அவர்களில் மீந்திருந்தவர்கள் எசேக்கியா இராசாவின் காலத்தில் அழிக்கப்பட்டார்கள். 1 நாளா. 4: 43.

17—19. பிலேயாம் உள்ளான தரிசனத்தில் காண்பதைச் சொல்லுகிறான். எபிரேயு பாஷை நடையில், "அவர் இப்பொழுது இராவிட்டாலும் அவரைப் பார்க்கிறேன். அவர் சமீபத்தில் இல்லாவிட்டாலும் அவரைத் தரிசிக்கிறேன்" என்றிருக்கிறது.

"அவரை." நட்சத்திரம் என்றும் செங்கோல் என்றும் சொல்லப்படுகிறவர். வரப்போகிறவர்களைக்குறித்து பேரில்லாமல் அவரை என்று சொல்லுவது வழக்கந்தான்.

"நட்சத்திரம்." இது இராஜ வல்லமைக்கும் சிறப்புக்கும் அறிகுறியான வார்த்தையாக எல்லாத் தேசத்தாருக்குள்ளும் வழங்கியது. இனி எழும்பப்போகிற பிரபலமான இராசாக்களுடைய பிறப்பையும் மகிமையையும் முன்னறிவிக்கும்படி நட்சத்திரங்களாவது வால்வெள்ளிகளாவது மூன தூதன்போல் தோன்றும் என்று பூர்வத்தார் நம்பி வந்தார்கள். அதை வேதத்திலும் காணலாம். ஏசா. 14: 22. தானி. 8: 10. வெளி. 1: 16, 20. 2: 1. 9: 1. யூதருக்குள் இந்த எண்ணம் பெரும்பாலுமிருந்ததென்பதும், விசேஷமாய் மேசியாவின் வருகைக்கு அடையாளமாக இப்படி எண்ணப்பட்டு வந்ததென்பதும், ஆதிரியான் இராசன் காலத்தில் எழும்பின பிரபலமான கள்ள மேசியா, தனக்கு பார்கோகாப் என்று பேரிட்டுக்கொண்டதினால் தெரியவரும். பார்கோகால் (Bar-cochab) என்பதற்கு நட்சத்திரப் புத்திரன் என்றர்த்தம்.

"சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும." அல்லது "கலக புத்திரரை எல்லாம் கவிழ்த்துப்போடும்." கலக புத்திரர் என்பது மோவாபின் யுத்தவீரரைக் குறிக்கும். இவர்களுடைய பராக்கிரமத்தையும் மூர்க்கத்தையும் யாத்தி. 15: 15. ஏசா. 15: 4. 16: 6. வாக்கியங்களில் காண்க. "சேத் என்ற வார்த்தையை, எரேமி. 48: 45-ல் "சீகோன் என்ற வார்த்தையோடு சேர்த்திருக்கிறது. அவ்வாக்கியத்தில் "கலகஞ்செய்கிறவர்கள்" (அல்லது மார்ஜினிற் கண்டபடி "கூக்குரலின் புத்திரர்) என்று திருப்பியிருக்கிறது சரியே. இந்த வாக்கியத்தில் "சேத்" என்பது ஒரு மோவாபிய இராசாவின் பேரென்று இரண்டொரு நவீன காலத்து சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இந்த அபிப்பிராயத்துக்கு அவர்கள் சொல்லுகிற நியாயம், செப்துவஜின்று திருப்புதலிலும் மற்றும் திருத்தல்களிலும் "சேத்" என்பது ஒரு ஆள் பேரைக் குறிக்கிறதாயிருக்கிறதென்கிறார்கள்.

யூதருடைய அபிப்பிராயம் என்னவென்றால், சேத் என்பது ஆதாமின் மகன்; சேத் புத்திரர் என்பது, மனுஷ சாதியார் யாவரும். "அவர்" அதாவது இஸ்ரவேலிலிருந்து எழும்பப்போகிற ஆண்டவர் (அதாவது Ruler) மனுஷ சாதியார் யாவரையும் ஆளுவார் என்பது இந்த வாக்கியத்தின் தாற்பரியம் என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் இந்த வினைச்சொல்லானது ஆளுகைசெய்கிற அர்த்தத்தைக் கொடுக்கமாட்டாது. மொத்தமாகப் பார்த்தால், இந்த வாக்கியத்தை மேற்கோளாக வைத்துச் சொல்லிய எரேமியாவின் தீர்க்கதரிசனத்திற் காட்டிய அர்த்தமே சரியானதென்று காணப்படுகிறது.



"சேயீர்" மோவாபுக்குத் தெற்கும் அராபா வனாந்தரத்துக்குக் கிழக்குமாக ஏதோமியர் குடியேறின மலைத்தேசத்துக்குப் பழய பேராம. ஆதி. 36: 8. உபா. 2: 1. இதின் தென்பாகம் நாளதிலும் எஷ்ஷோரா என்று அழைக்கப்படுகிறது. பழய பேர் கெடுதலாகி இப்படி மாறியிருக்கலாம்.

"மீதியானவர்களை" முன்னாலே அழிக்கப்பட்டதில் தப்பித் தவறி மீதியாயிருக்கும் பட்டணங்களையெல்லாம் அழிப்பார் என்றர்த்தம். இந்த வார்த்தைகள், யாக்கோபிலிருந்து தோன்றுகிறவரை வெற்றிவீரன் என்று காட்டுகிறது. எப்படியென்றால் இந்த ஜெயகெம்பீரன் முதலில் யுத்தத்தில் சத்துருக்களைத் தோற்கடித்தபின், யாராவது தப்பித் தவறியிருக்கிறார்களா என்று தேடிப்பார்த்து அழிப்பாராம்.

பிலேயாம் சொன்ன தீர்க்கதரிசனங்கள் ஜெயவீரனான தாவீதில் ஒருவாறு நிறைவேறியது. 2 சாமு. 8: 2, 13, 14. 1 இரா. 11: 15, 16. சங். 60: 8. என்றாலும் தாவீதாவது அவனுக்குப் பின்னானவர்களாவது ஏதோமியரையும் மோவாபியரையும் பூரணமாக ஜெயிக்கவில்லை. நியா. 3: 12. 1 சாமு. 14: 27. உம்றி காலத்தில் மோவாபியர் ஜெயிக்கப்பட்டு அவனாலும் அவனுக்குப் பின்வந்தவர்களாலும் (40) வருஷம் ஒடுக்கப்பட்டதாக மோவாப் தேசத்திலுள்ள ஒரு கல்லில் எழுதியிருக்கிறது. 2 இராசா 1: 1. 3: 4, 5. இந்த வாக்கியங்களில் சொல்லியபடி மேஷா மருளவிழுந்ததினால் அவன் அடைந்த சித்தியைக்குறித்தும் ஷை கல்லில் எழுதியிருக்கிறது. மேலும் மோவாபியரைப்பற்றி 2 இரா. 3: 21. 13: 20-பார். கடைசியாக கி. மு. 129 வருஷம் யோவான் இற்கானுவினால் பூரணமாக ஜெயிக்கப்பட்டு யூதரோடு சேர்ந்துபோனார்கள். ஏதோமியரைப்பற்றி 1 இரா. 11: 14. 2 இரா. 8: 20. 14: 7. 2 நாளா. 28: 17-வாசி. மோவாபைப்பற்றி ஏசா. 15: 16: 1—5. 25: 10 ஆமோஸ். 2: 1. செப். 2: 8. ஏதோமைப்பற்றி ஏசா. 34: 5. 63: 1-3. எரே. 49: 7. புல. 4: 21, 22. எசே. 25: 12. ஆமோ. 9: 11, 12. ஒபதி. 17-வா. இருவரையும் பற்றி ஏசா. 11: 14.

இவ்விருவரையும் சேர்த்துச் சொல்லுகிறான். தீர்க்கதரிசிகளும் அப்படியே சொன்னார்கள். இதில் கவனிக்கவேண்டியதென்னவென்றால், இவ்விரு சாதியாரும் இஸ்ரவேலருக்கு விரோதிகளாயிருந்ததில் தேவனுடைய ஆளுகைக்கும் விரோதிகளாயிருந்ததினாலே. (24: 8.) எல்லா அஞ்ஞான ஜாதியாரையும் குறிக்கும்படியாக முக்கியமான இவ்விரு ஜாதியாருடைய பேரை பிலேயாம் சொல்லுகிறான். ஆகவே இந்த இரண்டு சாதியாருடைய பேரைச் சொன்னது சகல அஞ்ஞானிகளையும் சேர்த்துச் சொன்னதற்குச் சரியாம். தீர்க்கதரிச

னங்களில், யாக்கோபின் வித்தார் மேசியாவின் இராச்சியத்தாராகச் சொல்லப்படுவதுபோல, ஏதோமும் மோவாபும் மேசியாவின் இராச்சியத்துக்குச் சத்துராதிகளாகச் சொல்லப்படுகிறுர்கள். இவர்களுக்கு ஆக்கினை கூறினது தேவனுடைய இராச்சியத்துக்கு விரோதிகளான எல்லாருக்கும் ஆக்கினை கூறினதுக்குச் சரியாம்.

மேற்காட்டியபடி ஆதிரியான் இராயன் காலத்தில் யூதர் செய்த கடைசிக் கலகத்தை நடத்தினவன் தனக்கு நட்சத்திரப் புத்திரன் என்ற பேரை வைத்துக்கொண்டதைக் கவனிக்கும்போது. யூதர்கள் அக்காலம்வரையும் பிலேயாம் சொன்ன இந்த மகத்தான தீர்க்கதரிசனம் நிறைவேறக் காத்திருந்தார்கள் என்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருக்கிறதே. அப்போது மோவாபியர் இல்லை. அவர்கள் இற்கானுவினுல் அழிக்கப்பட்டுப்போனுர்கள். இப்படியெல்லாமிருக்கக் கொள்ள மோவாபியரை நொறுக்கிப்போடுகிற நட்சத்திரத்தின் நிறைவேறுதலுக்கு யூதர் ஆதிரியான் காலம்வரையும் எதிர்நோக்கியிருந்தார்களே. ஆகையால் நட்சத்திரம் என்பது மேசியாவையும், மோவாப், ஏதோம் என்பது அவருடைய சத்துருக்களெல்லாரையும் முக்கியமாய்க் குறிக்கும் என்றறியவும். 14: வா-ல் "கடைசிநாட்களில்" என்பதும் இதைக் காட்டுகிறது. தானி. 10: 14. மத். 2: 2-ல் கிழக்கத்தி சாஸ்திரிகள், பிலேயாமைப்போன்றவர்கள், ஒரே தேசத்திலுள்ளவர்கள். மத். 2: 2. எண். 23: 7.

ஆட்சேபனை. இந்தக் கள்ளத் தீர்க்கதரிசி மேசியாவின் நாட்களை விரும்பி அவருடைய மகத்துவத்தைக்குறித்து எப்படி தீர்க்கதரிசனம் உரைப்பான் ?

உத்தரவு. உண்மையுள்ள பரிசுத்த தீர்க்கதரிசிகள் முதலாய் பரிசுத்தாவியானவர் தங்களுக்கு வெளிப்படுத்தினவைகளின் பொருளை முற்றும் அறியாமல் பேசினுர்களே. (1 பேது. 1: 11.) இருதயத்தில் விரும்பாத காரியத்தை தன் உதட்டினுல் விளம்பின பிலேயாம், தான் உரைத்த தீர்க்கதரிசனத்தின் பொருளை அறியாதிருப்பது ஆச்சரியமல்லவே. ஆகையால் இவன் உரைத்த தீர்க்கதரிசனத்துக்கு பரிசுத்த தீர்க்கதரிசிகள் கொடுக்கும் அர்த்தமே சரியானதென்று நாம் நினைத்து நடக்கவேண்டியது.

20. "பார்த்து" நட்சத்திரத்தைப் பார்த்ததுபோல ஆவியிலே தான் அமலேக்கைப் பார்த்தான்.

அமலேக்கியர் ஏதோமியரிலிருந்துண்டானவர்கள். இவர்களுடைய முற்பிதா ஆதியிலேயே ஏதோமியரிலிருந்து பிரிந்து வேறே பலத்த சாதியான். இவர்கள் குடியிருந்த இடமானது, யூதாவின் மலைத்தேசத்துக்குத் தெற்கே காதேஸ் வரையும் எட்டியிருந்தது. (எண். 13: 29. 14: 43, 45.) கல் அரபியின் வடபாகமுழுவதிலும், ஆவி



லா துவக்கி எகிப்தின் கரையோரமான சூர்வரையும் பரவியிருந்தார்கள். 1 சா. 15: 3, 7. இவர்களில் ஒரு கோத்திரத்தார், கானுனின் மத்தியில் குடியேறியிருந்தார்கள். நியா. 12: 15.

21. "கேனியன்" ஆதி. 15: 19-ல் முதலாவதாகச் சொல்லப்படுகிறுர்கள். நியா. 1: 26-ல் அவர்கள் யூதாப் புத்திரரோடு சேர்ந்து காரியங்களை நடத்தினதாக வாசிக்கிறோம். மோசேயின் மாமன் கேனியன் என்று சொல்லப்படுகிறுன். நியா. 4: 11. மோசேயின் மாமன் மீதியான் தேசத்து துரை அல்லது ஆசாரியனுயிருந்ததினுலே (யாத்தி. 2: 16.) கேனியர், மீதியானியராலே உண்டானவர்களாயும், ஆபிரகாமுக்கு கேத்தூராளாலே உண்டான சந்ததியாராயுமிருக்கவேண்டும். ஆதி. 25: 2. இவர்கள் இஸ்ரவேலரோடு எப்போதும் சிநேகமாயிருந்ததாகத் தோன்றும். 1 சா. 15: 6. 27: 10.

ஆனுல் ஆதி. 15: 19-ல் சொல்லிய கேனியர் வேறே என்று தோன்றுகிறது. இவர்கள் கானுனிய ஜாதியார். கெயின் (Kain) என்ற ஒரு பட்டணத்தின் பேராலே இவர்களுக்கு இந்தப் பேர் வந்தது. இவர்களைக்குறித்து தான் பிலேயாம் தீர்க்கதரிசனம் சொல்லுகிறுன்.

"உன் கூட்டை கன்மலையில் கட்டினுய்." கூடு என்பதற்கு எபிரேயு வார்த்தை கென் (Ken). கேனியர் குடியிருந்த ஸ்தலத்துக்கு கெயின் (Kain) என்பார்கள். பிலேயாம் ஒரு வார்த்தையிலிருந்து இன்னொரு வார்த்தைக்குத் தாவுகிறுர். இது ஒருவேளை எங்கேதியைக் குறிக்கலாம். இதற்குத் தெற்கே (10) மயில் தூரத்தில் சவக்கடலின் மேல்கரையில் மலைத்துண்டுகள் செங்குத்தாய் எழும்பியிருக்கிறது. இதின்மேல் ஒரு பட்டணமிருந்தது. (பிற்காலத்தில் மசடா என்ற பட்டணம் இதில் கட்டப்பட்டது.) இதைக்குறித்துதான் பிலேயாம் சொல்லுகிறதாக பெரும்பாலும் சொல்லப்படும்.

23. இஸ்ரவேலருக்கு உடன்படைகளாயிருந்த கேனியரை அசூரியர் சிறைப்பிடித்துக்கொண்டுபோவது, பூமியிலே ஆறுதலும் அமைதலுமில்லாமற்போவதுபோல பிலேயாமுக்குக் காணப்பட்டது. கேனியரோ அழிந்துபோகும்போது வேறே எவன் உலகத்திலிருப்பான் என்கிறுன்.

24. "சித்தீம்" இது சீப்புரு தீவாம். (Cyprus) மேற்கேயுள்ள தீவுகளிலெல்லாம் இதுதான் சமீபமானது, இதொன்று தான் பலஸ்தீனுவிலிருந்து பார்க்கக் கூடியது. மெதித்திராணியா பக்கமாயுள்ள மற்றெல்லா திசைகளுக்கும் பதிலாக பிலேயாம் இதை வைத்துக்கொண்டான். கிழக்குத் திசையிலுள்ள பெரிய இராஜ்யங்களை ஜெயிக்கும் ஒரு வீரர் ஷி கடல்வழியாய் வருவார்களாம். ஏசா. 23: 1, 12. எரே. 2: 10.

தானியேல் 11: 30-ல் சித்தீம் என்பது இத்தாலியைக் குறிக்கும்.

“ஏபேர்” வல்கெற்றிலும LXX-லுமிருக்கிற வார்த்தை எபிரேயனாக் குறிக்கமாட்டாது. இந்த வார்த்தை சேமின் சந்ததியாரைப் பொதுவாகக் குறிக்கும். இவர்களில் அசூர் ஒருவன். (ஆதி. 10: 21, 22.)

“அவனும்” அதாவது மெதித்திராணியாக் கடலை உருவி வந்து அசூரையும் ஏபேரையும் அழிக்கிற வெற்றிவேந்தனைக் குறிக்கும். மற்றப்படி அவன் என்பது அசூரையாவது ஏபேரையாவது குறியாது. சித்தீமின் துறையிலிருந்து ஜெயிக்கவரும் இராச்சியத்தார் இன்னொன்று வெளிப்படுத்தப்படவில்லை. சித்தீமின் கப்பல்கள் வந்தது மக்கப்பெயர் காலத்துக்கடுத்த சங்கதியாம். இதற்கடுத்த விபரங்களை வியாக்கியானப்படுத்துவது லேசல்ல. பிலேயாமின் தீர்க்கதரிசனங்கள் அத்தனை கருகலாயிருக்கிறது.

“தன் இடத்திற்கு” தன் சொந்த தேசத்துக்குத் திரும்பினான் என்றர்த்தமல்ல. பாலாக் இருந்த இடத்திலிருந்து பிலேயாம் வேறேரிடத்திற்குத் திரும்பினான் என்று தான் என்றர்த்தம. ஆதி. 18: 33. 31: 55. 1 சா. 26: 25. 2 சா. 19: 39. பிலேயாம் இன்னம் மீதியானியருக்குள்ளிருந்துகொண்டு, இஸ்ரவேலரை அழிக்கும்படி நூதன வழிவகைகளை யோசித்து, கடைசியாக அவன் பாவத்திலேயே அழிந்து போனான். 31: 8, 16.

---

1881—82-ஹு-ல் ரிசல்ட் கிரான்று பள்ளிக்கூடங்கள் சோதனையாகும் தேதியைக் காட்டிய அட்டவணை.

## திருநெல்வேலித் தாலூகா.

| | | | |
|---|---|---|---|
| தச்சநல்லூர். | சூலை 8 | நாஞ்சான்குளம். | மேய் 28 |
| கல்லூர். | மேய் 25 | தெங்கலம். | மேய் 28 |
| அருவன்குளம். | சூலை 12 | மணற்காடு. | சூன் 4 |
| பழையபேட்டை. | சூலை 7 | அரியகுளம். | சூன் 4 |
| புதுப்பேட்டை. | சூலை 7 | ஓமநல்லூர். | மேய் 23 |
| சுத்தமல்லி. | மேய் 24 | கொங்கந்தான்பாறை. | மேய் 21 |
| கருங்காடு. | சூலை 5 | மடத்துப்பட்டி. | மேய் 30 |
| வெள்ளாளன்குளம். | மேய் 26 | உக்கிரங்கோட்டை. | நவம்பர் 9 |
| வெட்டுவான்குளம். | மேய் 28 | ரஸ்தா. | நவம்பர் 10 |
| வெங்கலப்பொட்டல். | மேய் 27 | மேலக்குளம். | செப்ற்றெம்பர் 26 |
| பிள்ளையார்குளம். | மேய் 27 | கிடியூர். | மேய் 21 |
| பார்வதியாபுரம். | மேய் 27 | மாவடி. | மேய் 21 |
| (ஸ்ரீவாய்குந்தான்குளம். | மேய் 21 | வீரகேரளபிறுன்செல்வி. | மேய் 21 |



| | | | |
|---|---|---|---|
| பக்கிளி. | மேய் 21 | கான்சாபுரம். | சூன் 9 |
| குன்னத்தூர். | சூலை 7 | திருவெங்கிடநாதன்கோவில் | சூலை 6 |
| சிக்கிலியன்கிராமம். | செப்ற். 12 | தக்கரம்மாள்புரம். | செப்ற். 23 |
| பிராயன்குளம். | செபற்றெம். 21 | கண்டித்தான் குளம். | மேய் 23 |
| மணப்படையூர். | செப்ற். 23 | அடிமித்திதான குளம். | செப்ற். 24 |

## தென்கரைத் தாலூகா.

| | | | |
|---|---|---|---|
| இடையன்குடி போர்டி. | நவ. 19, 21 | கீழப்புதுக்குடி. | டிசம்பர் 1 |
| நாசரேத் போர். | பெ. 23, 24 1382 | சோனகன்விளை. | டிசம்பர் 1 |
| ஆள்வார்திருநகரி A V S | பெ. 27,28 | நாலுமாவடி. | டிசம்பர் 3 |
| சாயற்புரம். | மார்ச்சு 4 1882 | இரட்சண்ணியபுரம். | டிசம்பர் 3 |
| மேற்படி | மார்ச்சு 4 | கீழநாலுமாவடி. | டிசம்பர் 3 |
| மெஞ்ஞானபுரம் போர். | நவ. 25,26 | ஆத்தூர். | டிசம்பர் 3 |
| பண்ணைவிளை. | மார்ச்சு 2, 3 1882 | நெய்விளை. | டிசம்பர் 3 |
| மெஞ்ஞானபுரம் கிராம | நவ. 25, 26 | பாட்டைக்கரை. | டிசம்பர் 3 |
| சாந்தபுரம். | நவம்பர் 25, 26 | பிரகாசபுரம். | டிசம்பர் 3 |
| ஆரோக்கியபுரம். | நவம். 25, 26 | சாத்தன்குளம். | நவம்பர் 16, 17 |
| மேலவீரவநல்லூர். | நவம். 25, 26 | சத்தியநகரம். | நவம்பர் 16, 17 |
| லெட்சுமிபுரம். | நவம்பர் 25, 26 | சிறப்பூர். | நவம்பர் 16, 17 |
| மாணிக்கபுரம். | நவம்பர் 25, 26 | அனுக்கிரகபுரம். | நவம்பர் 22 |
| அடைக்கலபுரம். | நவம்பர் 25, 26 | சுகநகரம். | நவம்பர் 22 |
| செய்துங்கநல்லூர். | நவம்பர் 11 | தர்மநகரம். | நவம்பர் 22 |
| பாவநாசபுரம். | நவம்பர் 25, 26 | கடாட்சபுரம். | நவம்பர் 24 |
| கல்லுவிளை. | நவம்பர் 25, 26 | அன்பின்நகரம். | நவம்பர் 24 |
| பிள்ளைவிளை. | நவம்பர் 25, 26 | கிருபாபுரம். | நவம்பர் 16, 17 |
| எழுவரமுக்கி. | நவம்பர் 25, 26 | சொக்கலிங்கபுரம். | நவம். 16, 17 |
| பூலிகுடியிருப்பு. | நவம்பர் 25, 26 | முத்துக்கிஷ்ணபுரம். | நவ. 16, 17 |
| வெள்ளாளன்விளை. | நவம்பர் 28 | விஜயராமபுரம். | நவம். 16, 17 |
| சுகாயபுரம். | நவம்பர் 28 | அமத்தவண்ணுக்குடி. | நவ. 16, 17 |
| தைக்கா. | நவம்பர் 28 | புடுக்கப்பத்து. | நவம்பர் 22 |
| சீக்காச்சி. | நவம்பர் 28 | புதுக்குளம். | நவம்பர் 16, 17 |
| தேரிக்குடியிருப்பு. | நவம்பர் 28 | செக்கடிவிளை. | நவம்பர் 16, 17 |
| பூச்சிக்காடு. | நவம்பர் 28 | நேசபுரம். | நவம்பர் 22 |
| பாமன்குறிச்சி. | நவம்பர் 28 | நெய்யூர். | நவம்பர் 24 |
| சௌதபாரோ வடக்கு. | டிசம். 1 | செண்பலிங்கபுரம். | நவம்பர் 24 |
| மேற்படி மத்தி. | டிசம்பர் 1 | நாயினூர். | நவம்பர் 24 |
| மேற்படி தெற்கு. | டிசம்பர் 1 | வடக்குஅமத்தவண்ணுக்குடி. | 16, 17 |

| | |
|---|---|
| பிச்சுவிளை. | நவம்பர் 16, 11 |
| தோப்பைகுளம். | நவம. 16, 17 |
| குலசேகரன்குடி. | நவம். 16, 17 |
| கொம்பன்குளம். | நவம். 16, 17 |
| ஆசீர்வாதபுரம். | நவம்பர் 12, 14 |
| திருவரங்கப்பட்டி. | நவம். 12, 14 |
| கலுங்குவிளை. | நவம்பர் 12, 14 |
| ஆதாளிகுளம். | நவம்பர் 12, 14 |
| நெடுங்குளம். | நவம்பர் 12, 14 |
| பனைக்குளம். | நவம்பர் 12, 14 |
| கருங்கடல். | நவம்பர் 12, 14 |
| மேல புதுக்குடி. | மார்ச்சு 1. 1882 |
| அருளூர். | நவம்பர் 12, 14 |
| மீரான்குளம். | நவம்பர் 12, 14 |
| பழனியப்பபுரம். | நவம். 12, 14 |
| சந்தோஷபுரம். | நவம்பர் 12, 14 |
| கட்டாரிமங்கலம். | நவம். 12, 14 |
| தாதன்குளம். | நவம்பர் 11 |
| மணல்விளை. | நவம்பர் 12, 14 |
| இருவரங்கனேரி. | நவம்பர் 12, 14 |
| மல்லன்புதுக்குளம். | நவம் 12, 14 |
| ஆனந்தபுரம். | நவம்பர் 15 |
| பழங்குளம். | நவம்பர் 15 |
| கருவேலம்பாடு. | நவம்பர் 15 |
| அறியாமொழி. | நவம்பர் 15 |
| வைத்திலிங்கபுரம். | நவம்பர் 15 |
| குப்பாபுரம். | நவம்பர் 15 |
| குறிப்பன்குளம்சாண்குடி. | நவ. 15 |
| மேற்படி மறக்குடி. | நவம்பர் 15 |
| அரசகுளம். | நவம்பர் 15 |
| மனரம்மியபுரம். | நவம்பர் 16, 17 |
| தஞ்சநகரம். | நவம்பர் 16, 17 |
| குமரன்விளை. | நவம்பர் 18 |
| சமாதானபுரம். | நவம்பர் 18 |
| பனைவிளை. | நவம்பர் 18 |
| காலாங்கரை. | செப்ற்றெம்பர் 26 |
| அதிசயபுரம். | நவம்பர் 18 |
| கண்டிபுரம். | நவம்பர் 18 |

| | |
|---|---|
| நல்லூர். | நவம்பர் 18 |
| சௌக்கியபுரம். | நவம்பர் 18 |
| பண்ணைவிளை. | மார்ச்சு 2, 3 1882 |
| பண்டாரவிளை. | மார்ச்சு 2, 3 |
| பெருங்குளம். | மார்ச்சு 2, 3 |
| செவளை. | மார்ச்சு 2, 3 |
| முடித்தாநந்தல். | மார்ச்சு 2, 3 |
| ஆழ்வார்தோப்பு. | மார்ச்சு 1 1882 |
| சிரீவைகுண்டம். | மார்ச்சு 1 |
| திருவழுதிநாடான்விளை. | மார். 2, 3 |
| ஏரல். | மார்ச்சு 2, 8 |
| குலசேகரநத்தம். | மார்ச். 1 1882 |
| நட்டாத்தி. | மார்ச்சு 2, 3 |
| மணல்க்கரை. | ஜூன் 10 |
| மங்களபுரம். | மார்ச்சு 2, 3 1882 |
| அணியாபரநல்லூர். | மார்ச்சு 2, 3 |
| வாகைக்குளம். | மார்ச்சு 2, 3 |
| நாலாங்குடி. | மார்ச்சு 2, 3 |
| கொங்கராயகுறிச்சி. | மார்ச்சு 2, 3 |
| பேரூர். | மார்ச்சு 1 1882 |
| நாணற்காடு. | மார்ச்சு 1 |
| கிழஆழ்வார்தோப்பு. | மார்ச்சு 1 |
| கொம்புக்காரன்பொட்டல். | மா. 2, 3 |
| கண்ணுண்டிவிளை. | மார்ச்சு 2, 3 |
| அடைக்கலபுரம். | மார்ச்சு 2, 8 |
| தருவை வடக்கு. | நவம்பர் 19, 21 |
| மேற்படி கிழக்கு. | நவம்பர் 19, 21 |
| மேற்படி தெற்கு. | நவம். 19, 21 |
| எழக்கரைவிளை. | நவம்பர் 19, 21 |
| தஞ்சபுரம். | நவம்பர் 19, 21 |
| சிவசுப்பிரமணியபுரம். | நவ. 19, 21 |
| முதலூர். | நவம்பர் 23 |
| சோலயபுரம். | நவம்பர் 23 |
| கண்காணியார்புரம். | நவம்பர் 23 |
| புதூர். | நவம்பர் 23 |
| அடையல். | நவம்பர் 23 |
| காட்டுக்காட்டுவிளை. | நவம்பர் 23 |
| சட்டான்மடம். | நவம்பர் 23 |

| | |
|---|---|
| காலான்குடி. | நவம்பர் 23 |
| வைரவம். | நவம்பர் 23 |
| சௌந்தரபுரம். | நவமபர் 23 |
| நரையன்குடி. | நவம்பர் 23 |
| உடைப்பைக்குடி. | நவம்பர் 23 |
| கிறிஸ்தியானகரம். | நவம்பர் 29 |
| பண்டாரஞ்செட்டிவிளை. | நவம். 29 |
| கொட்டன்காடு. | நவம்பர் 29 |
| வேதக்கோட்டைவிளை. | நவம். 29 |
| மங்கலபுரம். | நவம்பர் 29 |
| வடக்கூர். | நவம்பர் 29 |
| காலன்குடி. | நவம்பர் 29 |
| பெருமாள்புரம். | நவம்பர் 29 |
| உடன்குடி. | நவம்பர் 29 |
| குலசேகரபட்டணம்ள. வி. எஸ். 30 | |
| நாசரேத் அனுதம். | பெ. 23, 24 1882 |
| மூக்குப்பீறி. | பெபுருவரி 23, 24 |
| ஓய்யான்குடி. | பெபுருவரி 23, 24 |
| வெள்ளாரிக்காயூரணி. | பெபு. 23, 24 |
| வருத்தான்குளம். | பெபுரு. 23, 24 |
| அசப்பைகுளம். | பெபுரு. 23, 24 |
| தையலாபுரம். | பெபுரு. 23, 24 |
| பிடாநேரி. | பெபுரு. 23, 24 |
| தோப்பூர். | பெபுரு. 23, 24 |
| பிள்ளையன்மனை. | பெபுரு. 23, 24 |
| மதலைமொழி. | பெபுரு. 23, 24 |
| வெள்ளைமடம். | பெபுரு. 23, 24 |
| எருசலேம். | பெபுரு. 23, 24 |
| உடையார்குளம். | பெபுரு. 23, 24 |

| | |
|---|---|
| மலைவார்நத்தம். | பெபுரு. 27 |
| காரையடி. | பெபுருவரி 27 |
| மறக்குடி. | பெபுருவரி 27 |
| மணல்குண்டு. | பெபுருவரி 27 |
| மூலக்கரை. | பெபுருவரி 27 |
| குளத்துக்குடி. | பெபுரு. 25. 1882 |
| கடையனோடை. | பெபுருவரி 25 |
| பன்றிமடல். | பெபுருவரி 25 |
| மணல்மேடு. | பெபுருவரி 25 |
| தொட்டியன்குடி. | பெபுருவரி 25 |
| கோமாளிகுடி. | பெபுருவரி 25 |
| குலைக்கான்குடி. | பெபு. 25. 1882 |
| மாணத்தி. | பெபுருவரி 25 |
| கல்லான்பாறை. | பெபுருவரி 25 |
| நாசரேத் இரவு. | பெபுரு. 23, 24 |
| மேற்படி மத்தி. | பெபுரு. 23, 24 |
| சாயற்புரம். | மார்ச்சு 4. 1882 |
| சுப்பிரமணியபுரம். | மார்ச்சு 4 |
| நடுவக்குறிச்சி. | மார்ச்சு 4 |
| செபத்தியபுரம். | மார்ச்சு 4 |
| முள்ளான்விளை. | மார்ச்சு 4 |
| குமாரபுரம். | மார்ச்சு 4 |
| சட்டாலன்குளம். | ஜூன் 28 |
| சளவாபுரம். | ஜூன் 28 |
| மொட்டை தாதன்விளை. | ஜூன் 28 |
| இடையர்காடு. | ஜூன் 28 |
| கோவலன்காடு. | ஜூன் 28 |
| சம்போடை. | ஜூன் 28 |
| வாளவெல்லான். | ஜூன் 28 |
| உமாரிக்காடு. | ஜூன் 28 |

## ஓட்டப்பிடாரந் தாலூகா.

| | |
|---|---|
| புதியம்புத்தூர் போர்டிங். | செப்ற்றெம்பர் 6 |
| மேற்படி | செப்ற்றெம்பர் 6 |
| ராஜாவின் கோவில். | செப்ற். 6 |
| முப்பிடுபட்டி. | செப்ற்றெம்பர் 5 |
| சம்புலிங்கபுரம். | செப்ற். 5 |

| | |
|---|---|
| நாகலாபுரம். | ஆகஸ்து 27 |
| மேற்படி பிராஞ்சு. | ஆகஸ்து 27 |
| பட்டிதேவன்பட்டி. | ஆகஸ்து 27 |
| புதூர். | ஆகஸ்து 27 |
| முத்துசாமிபுரம். | ஆகஸ்து 27 |
| எதிராணைப்பட்டி. | ஆகஸ்து 31 |

| | |
|---|---|
| குஞ்சியாபுரம். | ஆகஸ்து 31 |
| வேம்பார். | ஆகஸ்து 31 |
| கீழக்கரந்தை. | ஆகஸ்து 31 |
| வேம்பூர். | ஆகஸ்து 31 |
| மேலசெய்த்தலை. | செப்ற். 2, 3 |
| கீழச்செய்த்தலை. | செப்ற். 2, 3 |
| ஆத்தனூர். | செப்ற். 2. 3 |
| தளவாபுரம். | செப்ற்றெ. 2, 3 |
| சண்முகபுரம். | செப்ற்றெ. 2, 3 |
| சுந்தலைக்கோட்டை. | செப்ற். 2, 3 |
| மீனூக்ஷிபுரம். | செப்ற்றெ. 2, 3 |
| வெள்ளாரம். | செப்ற்றெ. 2, 3 |
| கொல்லன் பரம்பூர் | செப். 2, 3 |
| கவர்னர்கிரி. | செப்ற்றெ. 2, 3 |
| காட்டுநாயக்கன்பட்டி. | செப். 2, 3 |
| பாண்டியாபுரம். | செப்ற். 2, 3 |
| சுப்பிரமணியபுரம். | செப்ற். 2, 3 |
| குமாரபுரம். | செப்ற். 2, 3 |
| ஆத்தன்கரை. | ஆகஸ்து 26 |
| குருவார்பட்டி. | ஆகஸ்து 26 |
| கந்தசாமிபுரம். | ஆகஸ்து 26 |
| நம்பியாபுரம். | ஆகஸ்து 26 |
| வலிடுபட்டி. | ஆகஸ்து 26 |
| சித்தநாயக்கன்பட்டி. | ஆகஸ்து 26 |
| விளாத்திகுளம். | ஆகஸ்து 30 |
| கரிசல்நுளம். | ஆகஸ்து 30 |
| சங்கன்ஊரணி. | ஆகஸ்து 30 |
| இலந்தைக்குளம். | ஆகஸ்து 30 |
| காடல்குடி. | ஆகஸ்து 29 |
| வடமலாபுரம். | ஆகஸ்து 29 |
| துரைசாமிபுரம். | ஆகஸ்து 29 |
| சுப்பலாபுரம். | ஆகஸ்து 29 |
| குளத்தூர். | செப்ற்றெம்பர் 1 |
| வேப்பல் ஓடை. | செப்ற்றெ. 1 |
| பனையூர். | செப்ற்றெ. 1 |
| சிப்பிகுளம் | செப்ற்றெம்பர் 1 |
| கிச்சிலாபுரம். | செப்ற். 1 |
| முத்துராமலிங்கபுரம். | செப்ற். 1 |
| பூசனூர். | செப்ற்றெ. 1 |
| மாத்தண்டன்பட்டி. | செப்ற். 1 |
| மீனூக்ஷிபுரம். | செப்ற். 1 |
| பாண்டியாபுரம். | செப்ற். 1 |
| சண்முகபுரம். | மார்ச்சு 7. 1882 |
| மடத்தூர். | மார்ச்சு 7 |
| ஓடைபட்டி புதூர். | செப்ற். 5 |
| அரசடிபனையூர். | செப்ற். 5 |
| தருவைகுளம். | செப்ற். 5 |
| டேவிசாபுரம். | மார்ச்சு 7. 1882 |
| அர்சாயபுரம். | செப்ற்றெம்பர் 5 |
| மீளவட்டான். | செப்ற். 5 |
| மாப்பிள்ளையூரணி. | மார்ச். 7. 1882 |
| வேடநத்தம். | செப்ற்றெம்பர் 7 |
| மாதளைபுரம். | செப்ற்றெ. 7 |
| வெங்கடாசலபுரம். | செப்ற். 7 |
| பூதலைபுரம். | செப்ற். 7 |
| நத்தத்துப்பட்டி. | செப்ற். 7 |
| புதுக்கோட்டை. | மார். 6. 1882 |
| கொலையன்கரிசல். | மார்ச்சு 6 |
| முல்லைக்காடு. | மார்ச்சு 6 |
| மறவன்மடம். | மார்ச்சு 6 |
| நாச்சியாபுரம். | மார்ச்சு 6 |
| சேர்வைகாரன்மடம். | மார்ச்சு 6 |
| ராமசாமிபுரம். | மார்ச்சு 6 |
| பேரூரணி. | மார்ச்சு 6 |
| மடத்துப்பட்டி. | மார்ச்சு 6 |
| சோளபுரம். | மார்ச்சு 6 |
| மளவாநத்தம். | மார்ச்சு 6 |
| பொம்மியாபுரம். | மார்ச்சு 6 |
| வடக்குசக்கம்மாள்புரம். | செ. 2, 3 |
| பண்ணிகுளம் போர்டி. | மார்ச் 13, 14. 1882 |
| மேற்படி டே. | மார்ச்சு 13, 14 |
| தெற்கு மயிலோடை. | மார். 13, 14 |
| அகிலாண்டபுரம். | மார்ச்சு 13, 14 |
| கரிசல்குளம். | மார்ச்சு 13, 14 |
| வட இலந்தைக்குளம். | மார். 13, 14 |
| கல்லத்திக்கிணறு. | மார். 11. 1828 |
| துரையூர். | மார்ச்சு 15 |
| அயிரவன்பட்டி. | மார். 13, 14 1882 |
| வேப்பன்குளம். | மார்ச்சு 13, 14 |
| கோவிந்தபுரம். | மார். 13, 14. 1882 |
| மருதன்வாழ்வு. | மார்ச்சு 13, 14 |
| சவலாப்பேரி. | மார்ச்சு 13, 14 |
| பசுக்கயிலாசபுரம். | மார்ச்சு 13, 14 |
| காலான்பட்டி. | மார்ச்சு 13, 14 |
| பாமன்பச்சேரி. | மார்ச்சு 13, 14 |
| இளவிகரிசல்குளம். | மார்ச்சு 13, 14 |
| கசவன்குண்டு. | மார்ச்சு 13, 14 |
| அத்திக்கிணறு. | மார்ச்சு 13, 14 |
| ஈராச்சி. | மார்ச்சு 15. 1882 |
| வாலன்பட்டி. | மார்ச்சு 13, 14 |
| தொட்டன்பட்டி. | மார்ச்சு 13, 14 |
| நாரைக்கிணறு. | மார்ச்சு 11. 1882 |
| கைலாசபுரம். | மார்ச்சு 11 |
| கயிற்ரூர். | மார்ச்சு 13 |
| கழுகுமலை. | அக்டோபர் 6 |
| துரைசாமிபுரம். | அக்டோபர் 6 |
| குமாரெட்டியாபுரம். | ஆகஸ்து 19 |
| வானரம்பட்டி. | ஜூலை 13 |
| சடலை. | அக்டோபர் 31 |
| லிங்கம்பட்டி. | அக்டோபர் 31 |
| கடலை மேல். | அக்டோபர் 31 |
| வானரம்பட்டி. நம்பர் 2. | ஜூலை 13 |
| கைலாசபுரம். | மார்ச்சு 10. 1882 |
| திம்மராஜபுரம். | மார்ச்சு 10 |
| பாறைக்கூட்டம். | மார்ச்சு 10 |
| அய்யனூத்து. | மார்ச்சு 10 |
| மகிழம்பூபுரம். | மார்ச்சு 10 |
| சவரிமங்கலம். | மார்ச்சு 10 |
| தளவாபுரம். | மார்ச்சு 10 |

## சாத்தூர்த் தாலூகா.

| | |
|---|---|
| சாக்ஷியாபுரம் போர்டிங். | அக். 18 |
| முதலிபட்டி. | அக்டோபர் 14 |
| பூச்சக்காப்பட்டி. | அக்டோ. 14 |
| தம்மநாயக்கன்பட்டி. | அக்டோ. 14 |
| ரெட்டியாபட்டி. | அக்டோபர் 13 |
| விருதுப்பட்டி. | அக்டோ. 13 |
| பனையடிப்பட்டி. | அக்டோ. 7, 8 |
| ஏழாயிரம்பண்ணை. | அக்டோ. 7, 8 |
| சிப்பிபாறை. | ஜூலை 14 |
| மூப்பன்பட்டி. | அக்டோ. 31 |
| குஞ்சன்பட்டி. | அக்டோ. 31 |
| ஊமைத்தேவன்பட்டி. | அக். 31 |
| சக்கிலியபட்டி. | அக்டோ. 31 |
| கொல்லப்பட்டி. | அக்டோ. 31 |
| மேட்டுமலை. | அக்டோ. 31 |
| ஆலம்பட்டி. | அக்டோ. 31 |
| கரிசல்பட்டி. | அக்டோ. 31 |
| ஏழாயிரம்பண்ணை. | அக்டோ. 7, 8 |
| பழயஏழாயிரம்பண்ணை. | அக். 7, 8 |
| மேட்டூர். | அக்டோ. 7, 8 |
| தங்கரெட்டிபட்டி. | அக்டோ. 7, 8 |
| சூரங்குடி. | அக்டோ. 10 |
| நடுசூரங்குடி. | அக்டோ. 10 |
| ஒட்டையால். | அக்டோ. 10 |
| சந்திரபட்டி. | அக்டோ. 10 |
| சாத்தூர். நம்பர் 1 | அக்டோ. 11, 12 |
| மேற்படி நம்பர் 2 | அக். 11, 12 |
| மேற்படி நம்பர் 3 | அக்டோ. 11, 12 |
| பனையடிப்பட்டி. | அக்டோ. 11, 12 |
| கலிவார்பட்டி. | அக்டோ. 11, 12 |
| ஒட்டம்பட்டி. | அக்டோ. 11, 12 |
| கரிசல்பட்டி | அக்டோ. 11, 12 |
| சுப்பலாபுரம். | அக்டோ. 11, 12 |
| பேத்துரெட்டிபட்டி. | அக். 11, 12 |
| நல்லி. | அக்டோ. 11, 12 |
| முள்ளிச்செவல். | அக்டோபர் 29 |

| | | | |
|---|---|---|---|
| ஒப்பத்தூர். | அக்டோ. 29 | சின்ன கொல்லன்பட்டி | ஆகஸ். 5 |
| சங்கரபுரம். | அக்டோ. 29 | | |

## சிரிவில்லிப்புத்தூர்த் தாலூகா.

| | | | |
|---|---|---|---|
| சிரிவில்லிப்புத்தூர். எ வி எஸ் | அக்டோ. 24 | சோளபுரம். | ஜூலை 19 |
| | | புதுப்பட்டி. | ஜூலை 30 |
| சந்தப்பேட்டை. | அக்டோ. 22 | பெட்டக்குளம். | அக்டோ. 22 |
| அத்திகுளம். | அக்டோ. 22 | அளகாபுரி. | அக்டோ. 19 |

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### கூ-ம் அதிகாரம்.

எ-ம் பிரிவு.

திருச்சபையின் பணிவிடைக்குரிய ஏற்பாடுகள்.

வினா. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழிருந்த சபையின் முறைமை என்ன?

விடை. பிரதானஆசாரியன், ஆசாரியர், லேவியர் என்ற மும்மடங்கான வகுப்புள்ளதாயிருந்தது. மோசே, ஆரோனை பிரதானஆசாரியனாகவும், அவன் குமாரரை ஆசாரியராகவும் அபிஷேகம் செய்யும்படி தேவனாலே கட்டளைபெற்றான். (யாத். 18.) ஆரோனுடைய மரணத்துக்குப்பின் பிரதானஆசாரிய உத்தியோகம், தேவனுடைய கட்டளையினாலே அவனுடைய மகன் எலெயாசாருக்கு ஒப்புவிக்கப்பட்டது எண். 20: 25—29.

ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார் என்பவன், லேவியருடைய தலைவர்களுக்குத் தலைவனாய்ப் பரிசுத்த ஸ்தலத்தைக் காவல்காக்கிறவர்களுக்கு விசாரிப்புக்காரனாயிருக்கவேண்டும். எண். 3: 32.

வினா. யூதச்சபை ஆராலே ஏற்படுத்தப்பட்டது?

விடை. தேவனாலேயே ஏற்படுத்தப்பட்டது. ஆனால்—

ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாகும். எபி. 7: 12.



வினா. திருச்சபையிலே வெவ்வேறான பட்டம்பெற்ற தேவஊழியக்காரர் நியமிக்கப்பட அப்போஸ்தலன்மாராலே கொடுக்கப்பட்டிருக்கிற ஏற்பாடுகள் அல்லது கட்டளைகளுண்டா?

விடை. அவர்கள் எழுதின ஆகமங்களில், அத்தியக்ஷர்களையும், பிரெஸ்பிற்றர்ஸ் அல்லது மூப்பர்களையும், டீக்கன்ஸ் அல்லது உதவிக்காரர்களையும் ஏற்படுத்தியிருப்பதாக காண்பித்திருக்கிறார்கள்.

வினா. மூப்பர்கள் அல்லது பிரெஸ்பிற்றர்ஸ் யார்?

விடை. அவர்களே சபையின் போதகர்கள்.

பவுலும் பர்னபாவும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்திவைத்தார்கள். அப். 14: 23.
அப். 20: 17. தீத்து 1: 5.

வினா. அவர்களுடைய உத்தியோகம் என்ன?

விடை. கிறிஸ்துவின் மந்தையை விசாரித்து, போதிப்பதே.

நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். 1 தீமோ. 5: 17.

வினா. மூப்பர்கள் எப்பொழுதாவது கண்காணிமார் என்று அழைக்கப்பட்டார்களா?

விடை. ஆம், கண்காணிமாரென்று அழைக்கப்பட்டார்கள்.

1. பரி-பவுல் மிலேத்துவிலிருந்து, எபேசுவின் மூப்பர்களுக்கு ஆள் அனுப்பினபோது, அவன் அவர்களுக்குக் கட்டளையிட்டதாவது.

தேவன் தம்முடைய சுயஇரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். அப். 20: 28.

2. பரி-பவுல் தீத்துவுக்குச் சொல்லுகிறதாவது;

நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே.—ஏனெனில் கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்றவிதமாய் குற்றஞ்சாட்டப்படாதவனாயிருக்கவேண்டும். தீத்து 1: 5—7.

3. பரி-பவுல் பிலிப்பியருக்கெழுதின நிருபத்தில் சொல்லுகிறதாவது;

பிலிப்பிப் பட்டணத்தில் கிறிஸ்து ஏசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும் எழுதுகிறதாவது. பிலி. 1: 1.

அங்கே மூப்பர்கள் இல்லாமல், அநேக கண்காணிகள் இருந்திருக்கவேண்டும், அல்லது மூப்பர்கள் இருந்திருப்பார்களென்றால் பரி-பவுல் அவர்கள் பேரைச் சொல்லாதபடி விட்டிருக்கவேண்டும் என்பது சந்தேகம். ஆகையால் இங்கே கண்காணிகளென்பது மூப்பர்கள் என்ற பேருக்குப் பதிலாக வழங்கியிருக்கவேண்டும்.

4. பரி-பவுல் 1 தீமோ. 3-ம் அதிகாரமுழுவதிலும் கண்காணிகளுக்கும் உதவிக்காரருக்கும் ஏற்ற புத்திமதிகளையும், அவர்களுக்கிருக்கவேண்டிய இலட்சணங்களையும் எடுத்துக்காட்டுவதில் மூப்பர்களுடைய பேரைச் சொல்லவேயில்லை. ஆனால் தீமோத்தேயு, மூப்பர்களை மற்றவர்கள் நடுவில் அபிஷேகம்செய்து வைக்கும்படிக்கே எபேசுவில் விடப்பட்டிருந்தார். ஆகையால் இங்கே கண்காணிகள் என்பது, மூப்பர்கள் என்ற கருத்துக் கொள்ளும்.

5. பரி-பேதுருவும் நாம் எழுதிய முதலாம் நிருபம் 5-ம் அதிகாரம் 1: 2-ம் வசனத்தில் அப்படியே சொல்லுகிறார்.

---

## The World's Birth.

## உலகப்பிறப்பு.

## VI. அதிகாரம்.

### மூன்றாம் நாள் கிரியை.

ஆதி. 1: 9—13.

(தொடர்ச்சி.)

சிலர், மலைகள் உருக்கிச் சேர்க்கப்பட்டிருக்கிறதைக் கண்டு, அவைகள் அக்கினியால் உண்டாயிருக்கவேண்டும் என்றார்கள். வேதாகமம் இருபட்சத்தார் சொல்வதும் சரியென்று விளம்பியிருக்கிறது. பூமியின் பூதியம் அக்கினியும், தண்ணீரும் சேர்ந்து கிரியைசெய்ததால் உண்டாயிருக்கிறதென்றும், அடுக்கடுக்காயிராத மலைகள், தண்ணீர் ஆழங்களின் கீழ் அக்கினியால் உண்டாயினவென்றும் அறிவிக்கிறது. அக்கினியினின்றும் தண்ணீரினின்றும் நமது பூமி உருவாக்கப்பட்டிருக்கிறதை நாம் பார்க்கையில், நாம் அனுதினமும் தேவனுடைய சர்வவல்லமையால் காக்கப்பட்டிருக்கிறோம் என்று அறிந்து அவர் பேரில் பூரண நம்பிக்கை வைப்போமாக.

கல்விமான்கள் 28-விதமான அடுக்குப்பாறைகளிருக்கின்றன என்றும் ஒவ்வொரு அடுக்கும் 1,000-அடித் திண்ணமுள்ளதென்றும்



அடுக்கு இல்லாத பாறை எட்டுவகையாயிருக்கிறதென்றும் அவைகள் ஒவ்வொன்றின் திண்ணம் மிகவும் அதிகம் என்றுஞ் சொல்லுகிறார்கள்.

தேவன் ஜலத்தை ஓரிடத்தில் சேர்த்தார். நமது பூமி, சமுத்திரங்களினாலும், கடல்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் நீளம், அகலம், ஆழம், அதின் ஏற்றவற்றம், அதின் ஓட்டங்கள் இவைகளைப்பற்றிச் சொல்ல இடம் போதாது. அதின் ஆழம் சில இடங்களில் நாற்பது ஐம்பதினாயிரம் அடி என்று விழுதுவிட்டுப் பார்த்திருக்கிறார்கள். சமுத்திரம் எவ்வளவு பிரயோசனமுள்ளதென்று பாருங்கள். நம்முடைய ஜீவனைக் காப்பதற்கு அது மிகவும் அவசியமாயிருக்கிறது. தண்ணீரின் அளவும் தரையின் அளவும் தற்செயலாயிருக்கிறதென்று எண்ணவேண்டாம். தேவன் அவைகளை அளவுப்பிரமாணத்தின்பேரில் அமைத்திருக்கிறார். அவர் தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து, வானங்களைச் சாணளவாய்ப் பிரமாணித்து, பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கி பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுத்திருக்கிறார். ஏசா. 40: 12.

சமுத்திரங்களும் கடல்களும் இப்போதிருக்கிறதைவிடச் சிறியவைகளாயிருந்தால், நம்முடைய பூமி அழிந்துபோம். ஏனென்றால் அவைகளிலிருந்து எடுக்கப்படுகிற தண்ணீர் நமது நிலங்களுக்குப் பாயவும், நமது ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கவும் போதுமானதாயிராதிருக்கலாம். அவைகள் பெரிதாயிருந்தால் மழையின் மிகுதியால், பூமி வாசம்பண்ண உதவாத கழிநிலமாய்ப் போய்விடும். சமுத்திரம் உலகத்தின் பெரும்பாதையாயிருக்கிறது. அதில்லாவிட்டால் இப்போது நடந்தேறுகிறபடி வியாபாரம் முயற்சியாயிருக்கமாட்டாது.

சமுத்திர ஜலம் உப்பாயிருக்கிறது. அப்படியிருப்பதினால் அது கெட்டு நாறாதிருக்கிறது, சமுத்திரப் பிரயாணம்பண்ணுகிறவர்களில் சிலருக்கு நல்ல சுகமுண்டாகிறதுமுண்டு. தேவன் சகலத்தையும் மனுஷர்களுக்குப் பிரயோசனமாகவே படைத்திருக்கிறார்.

“தேவன் பூமியானது, புல்லையும் விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருக்ஷங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் சாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருக்ஷங்களையும் முளைப்பித்தது. தேவன் அது நல்லதென்று கண்டார்.

தேவனுடைய வாயிலிருந்து உத்தரவு புறப்படவே, பூமியை அலங்கரிக்கிற சாதிசாதியான புல், பூண்டுகள், விருக்ஷங்கள் உண்டாயின. அவை தங்களில் தானே விதை உண்டாகும்படி அமைக்கப்பட்டன. உலகமுடிவுவரைக்கும் அவைகள் தலைமுறைதலைமுறையாய்ப் பூமியைச் சிறப்பித்துக்கொண்டேயிருக்கும். இதற்குமுன்னே பூமியில் ஜீவனுள்ள வஸ்து உண்டாக்கப்படவில்லை. ஆகாயம், காற்று, சமுத்திரம், தரை இவைகளுக்குச் சீவனில்லை. விருக்ஷங்களுக்குப் புத்தி, சித்தம், உணர்ச்சி இல்லாதிருந்தும் ஜீவனுண்டு. பூண்டுகளைக் கவனியுங்கள். அவைகள் விதையிலிருந்து உண்டாகி பூமியின் சாரத்தை உண்டு, ஆகாயத்தையும் வானத்தின் பனியையும் அவைகளின் இலைகள் வழியாய் உட்கொண்டு செழித்தோங்கும். தங்கள் வாசனையை உலகத்துக்குப் பரிமளிக்கிறது. அவைகள் ஆகாயத்தை உட்கொள்ளுகிறதுமுண்டு. வெளியே விடுகிறதுமுண்டு; அவைகள் பகலில் புதுப்பெலத்

தோடே எழும்புகிறதுமுண்டு. இரவில் தூங்குகிறதுமுண்டு. நமது நரம்புகள் வழியாய் இரத்தம் தேகமெங்கும் பரம்புவதுபோல, அவைகளின் நரம்புகளின் வழியாயும் சாரம் ஏறுவதுமுண்டு. வருஷாவருஷம் அநேகம் பூண்டுகளைப் பிறப்பிக்கவும் செய்கிறது. கர்த்தாவே உமது கிரிகள் எவ்வளவு திரளாயிருக்கிறது. அவைகளை எல்லாம் ஞானமாய்ப் படைத்தீர். பூமி உமது பொருட்களால் நிறைந்திருக்கிறது. சங்கீ. 104: 24. ஆ, தேவனுடைய ஞானம், வல்லமை, ஐசுவரியம், தயாளம் எவ்வளவு சிறந்ததாயிருக்கிறது!

தேவனுடைய தயாளம் எவ்வளவு பெரிதாயிருக்கிறது! அவர் பூமியை மிருதுவான பசுமையால் நிரப்பியிருக்கிறார். கண்களுக்கு இன்பமும் நாவுக்கு ருசிகரமும் கொடுக்கும் செடிகள், விருக்ஷங்கள் எத்தனை திரளாயிருக்கின்றன. அவைகள் எவ்வளவு சிறப்பாய் உடுத்தப்பட்டிருக்கின்றன. மிகுந்த மகிமைபொருந்திய சாலோமோன் இவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை. கர்த்தரைத் துதியுங்கள். அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

மன்கோபார்க் என்ற ஒருவர் இருந்தார். அவர் ஆப்பிரிக்காவில் பிரயாணம்பண்ணிக்கொண்டிருந்தபோது ஒருநாள் அவர் தனிமையாகவிருந்தார். அப்போது அவர் மனதிலே கலக்கமுண்டாக அவநம்பிக்கை மேற்கொண்டது. பிழைப்பேன் என்ற நம்பிக்கை அவருக்கு அற்றுப்போயிற்று. அவர் தனித்து இளைப்படைந்தவராய் தரையில் படுத்திருந்து தாம் தமது வீட்டிற்கு வெகு தொலைக்கு அப்பால், மாண்டு போகும்படி தீர்மானிக்கப்பட்டிருப்பதாய் எண்ணினார். அப்போது அந்த வனாந்தரத்திலே உலர்ந்த மணல் தரையின் மீது ஒரு பூண்டு வளர்ந்து பசுமையாயிருந்ததைக் கண்டார். காணவே அவருக்குப் புது நம்பிக்கையுண்டாயிற்று. அந்தச் சிறிய பூண்டை உண்டாக்கிப் பாதுகாத்துவருகிற மகா தேவனுடைய வல்லமையை உணர்ந்தார். அந்த மகா சிருஷ்டிகர் எங்குமிருக்கிறார். அவர் சர்வவல்லவர், இரக்கம் மிகுத்தவர், கிருபையிலும் சத்தியத்திலும் பெருக்கமுடையவர். அவருடைய கிரியைகள் அவரது மகிமையையும் உண்மையையும் இந்த ஆப்பிரிக்காவின் பாலைவனத்திலும் தெரிவிக்கிறது என்று தியானித்தார். அதால் அவர் புது தைரியமடைந்து, தான் ஒன்றியாயிருந்த அந்த வேளையிலே ஆனந்தக் கண்ணீர் விட்டு, எழுந்து புறப்பட்டுப் போய், அபாயத்துக்கு விலக்கிக் காக்கப்பட்டு சுகமாய்ப் பிரயாணத்தை முடித்தார். உலகம் பாவத்தால் தீட்டுப்பட்டிருக்கிற இக்காலத்தில் அதிலுள்ள தாபரங்கள் இவ்வளவு மாட்சிமையுள்ளதாகக் காணப்பட்டால், அது உண்டாக்கப்பட்ட துவக்கத்தில், தேவன் எல்லாம் மிகவும் நல்லதென்று கண்டாரே. அப்போது அது எவ்வளவு அழகு பொருந்தினதாயிருக்கவேண்டும். விதைகளைப்பற்றி கவனிக்கையில் எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது. அது பெரிய அற்புதம்போலிருக்கிறது. பின்வரும் சந்ததியாருக்கு உபயோகமாக விதைக்குள் விதையடங்கியிருக்கிறதாக நினைக்கவேண்டியதாயிருக்கிறது. தேவன் தங்களில் தங்கள் விதையை உடைய விருக்ஷங்கள் முளைப்பிக்கக் கடவதென்க, அப்படியே ஆயிற்று என்று வாசிக்கிறோம். அந்த விதைகள் எவ்வளவு ஏராளமாயிருக்கின்றன. அவ்வளவு ஏராளமாயிருந்தாலும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயுமிருக்கின்றன. அவைகளுக்குள் ஜீவசக்தியும் இருக்கிறது.

---



## சமாசாரத்திரட்டு.

**இந்தியா.**—மவுண்ட்ஸ்டுவார்ட்டு எல்பின்ஸ்டொன் கிராண்டுவ் என்னும் பிரபு அவர்கள் சென்னைராஜதானியின் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் பார்லமெந்து என்னும் மகா சங்கத்தின் ஓர் அவயவமாயிருக்கிறார். அவர் பிதா முன் சத்தாராவின் ரெசிடெண்டாகவிருந்தவர். நூதன கவர்னரின் வயது 52.

டெலிகிராப் என்னும் தந்தித்தபால் கூலி விஷயத்தில் சென்னைக் கவர்ண்மெண்டார் சில திருத்தம் செய்திருக்கிறார்கள். இந்தியாவில் ஒரு ஸ்டேஷனிலிருந்து மற்றொரு ஸ்டேஷனுக்கு அனுப்பும் 6-வார்த்தைகளுக்கு ரூ. 1-வீதமும்; 6-வார்த்தைகளுக்கு அதிகப்பட்டால், அதிகப்பட்ட வார்த்தை ஒன்றுக்கு அணா 2-வீதமும்; இந்தியாவிலிருந்து கொழும்புக்கு 6-வார்த்தைகளுக்கு ரூ. 1-8-0 வீதமும் இனிக் கட்டணம் வாங்கப்படும்.

குப்பார்த்துல்லா சமஸ்தானத்தில், விதவைகளுக்கு புனர் விவாகம் செய்வது அனுகூலமென்ற கட்சி உண்டாயிருக்கிறது. அங்குள்ள பிராமணர் இது விஷயத்திற்கு சார்பாயிருக்கிறார்கள்.

நாளது மாசம் ஆரம்பமுதல் தபாலில் அனுப்பும் கடிதங்கள் முதலானவைகளை ரிஜிஸ்டர் செய்வதற்கு அணா 2-வீதம் கூலிவாங்க சென்னைக் கவர்ண்மெந்தார் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள்.

**அயர்லாந்து.**—அயர்லாந்தின் நூதன நிலத்தீருவைச் சட்டம் பார்ல்மெந்தில் ஜனப்பிரதிநிதிகளின் சபையில் கவனமாய்ப் பார்வையிடப்படுகிறது. அயர்லாந்தில் இன்னும் சமாதானமுண்டாகவில்லை.

**ஆப்கானிஸ்தான்.**—ஆப்கானிஸ்தானில் அமீருக்கும் அயூப் கானுக்கும் சச்சரவுண்டுபட்டிருக்கிறது. நடந்த சில சண்டைகளில் அமீரின் சேனைகள் ஜெயமடைந்தன.

**அமெரிக்கா.**—ஐக்கிய மாகாணங்களின் அதிபதியாகிய கார் பீல்டு துரையை புத்திசுவாதீனமில்லாத ஒரு மனுஷன் துபாக்கியால் சுட்டு படுகாயப்படுத்திவிட்டான். அதிபதி பிழைத்துக்கொள்வாரென்று நம்பிக்கை.

அமெரிக்காவிலும் வடஇந்தியாவின் சிலபாகங்களிலும் சில நாட்களுக்குமுன் ஒரு வால்வெள்ளி காணப்பட்டது. தற்காலத்தில் காணப்படுகிற இந்த வால்வெள்ளியானது இதற்குமுன் 1812-ம் வருஷத்தில் காணப்பட்டதாம். அக்காலத்தில் இதே வால்வெள்ளி பிந்தியுங் காணப்படுமென்று சாஸ்திரிகள் நம்பி எழுதிவைத்திருக்கிறார்கள். அப்படியே அது திரும்பவும் காணப்படுகிறது என்றும், அந்த வால்வெள்ளி சூரியனிலேனும் பூமியிலேனும் விழுமென்றாவது அதினால் சேதமுண்டாகுமென்றாவது சொல்ல நிமித்தமில்லையென்றும் சாஸ்திரிகள் தெரிவிக்கிறார்கள்.

ஆகஸ்து௴ நாள்-31. ஆடி௴ 19௳-முதல், ஆவணி௴ 17௳-வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | ௧௯ | கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்தது. எசேக்கியேல் 40: 1. |
| செ | 2 | ௨0 | இது மகா பரிசுத்தஸ்தலம் என்றார். 41: 4. |
| பு | 3 | ௨௧ | அறைவீடுகளுக்கு என்னை அழைத்துக்கொண்டுபோனார். 42: 1. |
| வி | 4 | ௨௨ | கர்த்தருடைய மகிமை ஆலயத்தை நிரப்பிற்று. 43: 5. |
| வெ | 5 | ௨௩ | இவர்கள் என் பரிசுத்தஸ்தலத்துக்குள் பிரவேசிப்பார்கள். 44: 16. |
| ச | 6 | ௨௪ | அது அவர்களுடைய காணியாட்சி. 45: 5. |
| ஞா | 7 | ௨௫ | அது சுதந்தரவீதமாய் அவர்களுக்குச் சொந்தமாகும். 46: 16. |
| தி | 8 | ௨௬ | அவனுடைய சுதந்தரத்தை அவனுக்குக் கொடுக்கக் கடவீர்கள். (47: 23. |
| செ | 9 | ௨௭ | யேகோவா ஷம்மா என்னும் பெயர் பெறும். 48: 35. |
| பு | 10 | ௨௮ | இவர்கள் ராஜசமுகத்தில் நின்றார்கள். தானியேல் 1: 19. |
| வி | 11 | ௨௯ | அழியாத ஒரு ராச்சியத்தை எழும்பப்பண்ணுவார். 2: 44. |
| வெ | 12 | ௩0 | அக்கினியின் நடுவிலிருந்து வெளியே வந்தார்கள். 3: 26. |
| ச | 13 | ௩௧ | அவருடைய வழிகள் நியாயமுமானவைகள். 4: 37. |
| ஞா | 14 | ௩௨ | தமக்குச் சித்தமானவனை உயர்த்துவார். 5: 19. |
| தி | 15 | ௧ | அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை. 6: 23. |
| செ | 16 | ௨ | பரிசுத்தவான்கள் ராஜரிகத்தைப் பெறுவார்கள். 7: 18. |
| பு | 17 | ௩ | இந்தத் தரிசனத்தை நீ மறைத்து வை. 8: 26. |
| வி | 18 | ௪ | மேசியா சங்கரிக்கப்படுவார். 9: 26. |
| வெ | 19 | ௫ | சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதைத் தெரிவிப்பேன். 10: 21. |
| ச | 20 | ௬ | பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள். 11: 31. |
| ஞா | 21 | ௭ | ஞானவான்களோ உணர்ந்துகொள்ளுவார்கள். 12: 10. |
| தி | 22 | ௮ | நீங்கள் என் ஜனமல்ல. ஓசியா 1: 9. |
| செ | 23 | ௯ | இரக்கம்பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன். 2: 23. |
| பு | 24 | ௧0 | பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்புவார்கள். 3: 5. |
| வி | 25 | ௧௧ | தேசத்திலே உண்மையுமில்லை, இரக்கமுமில்லை. 4: 1. |
| வெ | 26 | ௧௨ | நானே பீறிவிட்டுப்போய் விடுவேன். 5: 14. |
| ச | 27 | ௧௩ | மூன்றாம்நாளிலே நம்மை எழுப்புவார். 6: 2. |
| ஞா | 28 | ௧௪ | எப்பிராயீம் திருப்பிப்போடாத அப்பம். 7: 8. |
| தி | 29 | ௧௫ | உன் வாயிலே எக்காளத்தை வை. 8: 1. |
| செ | 30 | ௧௬ | நீதிசரிக்கட்டும் நாட்கள் வரும். 9: 7. |
| பு | 31 | ௧௭ | நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள். 10: 12. |

## விசேஷ நாட்கள்.

7. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 8-ம் ஞாயிறு.
10. பௌரணமி.
14. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 9-ம் ஞாயிறு.
21. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 10-ம் ஞாயிறு.
24. பரி-அப். பர்த்தொலோமேயுவின் திருநாள்.
25. அமாவாசை.
28. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 11-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௯. செப்தேம்பர்௴. ௲அஅக௵.

## எண்ணாகமம்.

(தொடர்ச்சி.)

### 25. அதிகாரம்.

1. "சித்தீம்" ஆபேல் சித்தீமுக்குச் சுருக்கப் பேர்.

2. "அவர்கள்" அதாவது மோவாபின் குமாரத்திகள். எபிரேயு பாஷையில் "அவர்கள்" என்பதும் பெண்பாலாயிருக்கிறது. வினைச் சொல்லும் பெண்பால் வினையாயிருக்கிறது.

3. "பற்றிக்கொண்டார்கள்." முந்திய வாக்கியத்திற் சொல்லியபடி மோவாப் தேவர்களுக்கு இட்ட பலிகளை விருந்துண்டதினாலே. யாத்தி. 34: 15. 1 கொரி. 10: 18. இந்த வார்த்தையையே மறுபடியும் வழங்கியிருக்கிறது. சங்கீ. 106: 28. வல்கெற்றிலும், LXX-லும், "பயிற்றுவிக்கப்பட்டார்கள்" என்றிருக்கிறது. பாகால் ஆராதனை பாதி இப்படிப்பட்ட அசுத்தந்தான். ஓசியா 4: 14. 9: 10.

"பாகால் பேயோரை" பேயோர் என்ற இடத்தில் (23: 25.) வணங்கின பாகால் என்றர்த்தம். இடப்பேரானது அந்தத் தெய்வத்துக்கே பேராயிற்று. 18-வா. 31: 16. யோசு. 22: 17. பெத்பேயோர் என்றால் பேயோரின் வீடு என்றர்த்தம். உபா. 3: 29. 4: 46. பாகால் பேயோரும் கேமோஷ் தேவனும் ஒன்றுதான் என்று தோன்றும். 21: 29. 32: 37, 38.

4. இஸ்ரவேலின் நியாயாதிபதிகளால் இவர்கள் கொல்லப்படவேணும். 5-வா. பிற்பாடு அவர்களைச் சூரியனுக்கெதிரே (அதாவது பகிரங்கமாய் 2 சாமு. 12: 12.) தூக்கிப்போடவேணும். அவர்கள் தண்டனையை அதிகப்படுத்தும்படியாக இப்படிச் செய்யப்பட்டது. ஒரு சிலுவையில் உடலை ஆணி அறைந்தாவது அல்லது சேர்த்துக் கட்டியாவது தூக்கினார்கள். உபா. 21: 23. 2 சாமு. 21:

5. "உங்கள் மனிதரை" அவ்ரவர் அதிகாரத்துக்குட்பட்டவர்களை.

6. "அழுது" வாதை துவக்கிற்று. பத்தியுள்ள இஸ்ரவேலர் தேவனை மன்றுடும்படி கூடினூர்கள். யோவேல் 2: 15—17.

"மீதியானிய ஸ்திரீ" சிம்ரியை மயக்கினவள். 15-வா-ல் தோன்றுகிறபடி இவள் ஒரு பெரிய மனுஷனின் பிள்ளை. இவள் பிதா, மீதியானியரின் ஐந்து இராசாக்களில் ஒருவன். 31: 8. ஷெ இராஜ குமாரத்தியினுடைய அந்தஸ்தைக் கவனிக்கும்போது, சிம்ரிக்கு தற்செயலாய் அகப்பட்டவளல்ல. வில்லாதவதை விற்றுகிலும் சிம்ரியை வசப்படுத்திப்போடவேணுமென்று மீதியானியர் நோக்கத்தோடே இவளைக்கொண்டு அவனை அபாயத்திற்குட்படுத்தினதாக விளங்குகிறது. 18-வா.

8. "வாதை" பெருவாரிக்காய்ச்சல் முதலிய கொள்ளைநோயரம். நியாயாதிபதிகள் இட்ட மாணுக்கினையையும் குறிக்கும்.

9. "இருபத்துநாலாயிரம் பேர்." பரி. பவுல் 23,000 பேர் என்கிறார். 1 கொரி. 10: 8. தங்கள் சகோதரரால் மாண்டவர்கள் ஆயிரம்பேர் என்று யூத பாரம்பரை சொல்லுகிறது பவுல் இதைக் கழித்துச் சொல்லுகிறதாகத் தோன்றும்.

11. பினெகாஸ் இஸ்ரவேலர் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தமாக தேவன் அங்கிகரித்தார்.

12. தேவனுக்கும் சனங்களுக்கும் சமாதானம்பண்ணினதினுல், ஆசாரிய உத்தியோகம் இவனுக்கு நிலைத்தது. இவன் பிரதானஆசாரியனபின் கொஞ்சக்காலம் அதாவது ஏலிமுதல் தாவீதுவரையும் இவன் வம்சத்தைவிட்டு இந்த உத்தியோகம் தாண்டிப்போனுலும், எப்படியோ இவன் சிற்றப்பன் இத்தாமார் வம்சத்துக்கு மறுபடி திரும்பி பினெகாஸ் வழியிலேயே கிறிஸ்துநாதர் வருமளவும் நிலைத்திருந்தது.

17. மோவாபியருடைய கெடுதலான சடங்குகளாலே இஸ்ரவேலர் இழுக்கப்பட்டாலும், மீதியானியர்தான் இஸ்ரவேலரை வசப்படுத்தி சிக்கிக்கொள்ளும்படி செய்த சற்பனையில் முக்கியமானவர்களாயிருந்தார்கள். இவர்களை வெட்டும்படி கொடுத்த கட்டளை 31-அதி-ல் நிறைவேறியது.

---

## 26. அதிகாரம்.

### மோவாபின் சமனை வெளிகளிலே இலக்கம் பார்த்தது.

மீதியானியரோடும் கானனியரோடும் யுத்தம்செய்யப்போகிறார்கள், கானன்தேசத்தைப் பங்கிட நோக்கமாகவும் இஸ்ரவேலர் தங்கள் வம்சங்களின்படியே தொகையிடப்பட்டார்கள். 54-வா.



1. "வாதை தீர்ந்தபின்பு" சனங்கள் தொகையிடப்பட்ட காலத்தைக் காட்டுகிறது. சில கோத்திரங்களில் தொகை குறைவுபட்டதற்கு முகாந்தரம் விளங்கும்.

4. பின்வருவது எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலருடைய நாமங்களாம்.

5. முந்தின விசை (1-அதி.) தொகையிட்ட கோத்திர முறைப்படியே இப்பொழுதும் தொகையிடப்பட்டார்கள். ஒரு வித்தியாசமுண்டு. அதாவது மனுசேக் கோத்திரம் இவ்விடத்தில் எப்பிராயீமுக்கு முந்திச் சொல்லப்படுகிறது. இப்பொழுது அந்தக் கோத்திரம் சனப்பெருக்கமுள்ளதானதால் முந்திச் சொல்லப்படுகிறது.

இரண்டு குடிமதிப்பிலுமிருந்த சனத்தொகை பின்வரும் டாப்பினுல் துலங்கும்.

| | சீனயில் | மோவாபின் சமனை வெளியில். |
|---|---|---|
| ரூபன். | 46,500 | 43,730 |
| சிமியோன். | 59,300 | 22,200 |
| காத். | 45,650 | 40,500 |
| யூதா. | 74,600 | 76,500 |
| இசக்கார். | 54,400 | 64,300 |
| செபுலோன். | 57,400 | 60,500 |
| எப்பிராயீம். | 40,500 | 32,500 |
| மனுசே. | 32,200 | 52,700 |
| பென்யமீன். | 35 400 | 45,600 |
| தாண். | 62,700 | 64,400 |
| ஆசேர். | 41,500 | 53,400 |
| நப்தலி. | 53,400 | 45,400 |

ஏழு கோத்திரங்களில் தொகை அதிகப்பட்டிருக்கிறது. அவற்றில் மூன்று யூதாவைச் சேர்ந்தது. ஐந்து கோத்திரங்களில் தொகை குறைந்திருக்கிறது. அவற்றில் மூன்று ரூபனைச் சேர்ந்தது. எல்லாக் கோத்திரங்களிலும் மனுசேக் கோத்திரத்தில் மிகுதியான சனம் பெருகியிருக்கிறது. (32: 42.) எல்லாக் கோத்திரங்களிலும் சிமியோன் கோத்திரத்தில் மிகுதியான சனம் குறைந்திருக்கிறது. முந்தின விசைக்கு இந்த விசை பாதிதானுமில்லை. இபபோ நடந்த துன்மார்க்கத்தில் முக்கியஸ்தனுய்க் காணப்பட்ட சிமரி, இந்தச் சிமியோன் கோத்திரத்தான். 25: 14. இந்தக் கோத்திரத்தார் இவனுடைய கெட்ட நடக்கையைப் பின்பற்றி வாதையில் மிகுதியாய் அழிக்கப்பட்டதாய்த் தோன்றும். 12-வா. இதற்குச் சற்றுக்காலத்துக்குப்பின் மோசே தன் கடைசி

ஆசீர்வாதத்தைக் கோத்திரங்களுக்குச் சொன்னதில், இந்தச் சிமியோன் கோத்திரத்துக்கு மட்டும் யாதொன்றும் சொல்லாமல் விட்டுவிட்டார்.

லேவிக்கோத்திரம் தவிர மற்றக் கோத்திரங்களுடைய குடும்பங்களெல்லாம் 57. அந்தந்த குடும்பங்களுக்கு முற்பிதாவும் தலைவனுமாகச் சொல்லப்பட்டிருக்கிறவர்கள், ஆதியாகமம் 46-அதிகாரத்தில் சொல்லிய யாக்கோபின் பேரன் பூட்டன்மார்தான். (சொற்ப வித்தியாசமட்டுமுண்டு.). இரண்டு டாப்பிலும் யூதாவின் இரண்டு பேரப்பிள்ளைகளும், ஆசேரின் இரண்டு பேரப்பிள்ளைகளும் ஒன்றுபோலவே சொல்லப்படுகிறார்கள். ஆகையால் ஆதியாகமம் 46-அதி-ல் காட்டிய டாப்பானது, யாக்கோபோடுகூட எகிப்துக்குப்போனவர்களின் பேர் டாப்பாயிராமல், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட காலத்தில் அந்தந்தக் குடும்பங்களுக்குத் தலைவர்களாயிருந்தவர்களுடைய பேர் டாப்பாயிருக்கிறதென்று அறிந்துகொள்ளவேண்டும். இவர்களெல்லாரும் வம்ச பாரம்பரைப்படியுள்ளவர்களென்றாவது, அங்கே பேர் சொல்லிய முற்பிதாவின் வழியிலுண்டானவர்களென்றாவது நினைக்கவேண்டியதில்லை. சில விஷயங்களில் பேரொடுப்பாயிருந்த வேறே வீட்டுத் தலைவன் குடும்பப் பிரதானியாகச் சொல்லப்பட்டிருக்கிறதுண்டு. திருஷ். தாணுக்கு அநேகம் பிள்ளைகளும் வம்சப் பிரிவுகளுமிருந்தாலும், நமக்குத் தெரிந்த ஒரு மகனுடைய பேரை வைத்து எல்லாரையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறது. எப்பிராயீம் கோத்திரத்தில் இளைய பிள்ளைகளுடைய வமசத் தலைவன் குடும்பப் பிரதானியாகச் சொல்லப்படுகிறான்.

**11.** 58-வா. சாமுவேல் தீர்க்கதரிசி கோராகின் வம்சத்தான். 1 நாளா. 6: 22. அப்படியே ஏமான் (1 நாளா. 25: 5. 6: 33). அநேக சங்கீதங்கள் கோராகின் புத்திரருக்காகச் செய்யப்பட்டது. சங்கீதம் 42: 44: 45:

**12.** "நேமுவேல்" அப்படியே 1 நா. 4: 24. ஆனால் ஆதி. 46: 10. யாத்தி. 6: 15-ல் எமுவேல் என்றிருக்கிறது. இருபேரும் ஒரு ஆளைக் குறிக்கிறது; நகல்செய்தவர்களால் இந்த வித்தியாசம் வந்திருக்கவேண்டும்.

"யாமின்" அப்படியே ஆதி. 46: 10. யாத்தி. 6: 15. ஆனால் 1 நாளா. 4: 24-ல் யாரீப் என்றிருக்கிறது.

பூர்வ டாப்புகளில் ஓகாத் என்பவன் சிமியோனின் குமாரரில் ஒருவனாகச் சொல்லப்படுகிறான். இந்தப் பேர் இவ்விடத்திலாவது நாளாகமத்திலாவது இல்லை. இந்தக் குடும்பம் இப்போ அற்றுப்போச்சுதென்று நினைக்கலாம். சிமியோனியருக்குள் இந்த வீட்டார் பேரொடுப்பாயுள்ளவர்கள். சிம்ரி இந்த வீட்டுப் பிரபு. ஆகையால் இப்போ



நடந்த வாதையில் இந்த வீட்டார் முழுவதுமாக வாரிக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

"கிலெயாத்" செலோபியாத்துக்குத் தகப்பனைப்பெற்ற பேரன். இவனுக்கு இப்போ ஆண் சந்ததி இல்லை.

51. இஸ்ரவேலரில் ஆண், (லேவியர் தவிர) 601730-பேர். இது சீனாயின் குடிமதிப்புத் தொகைக்கு, 1820-பேர் குறை. இப்போ உண்டான வாதையில்லாவிட்டால், தொகை அதிகப்பட்டே இருக்கும்.

56. "சீட்டு விழுந்தபடியே" இந்த ஏற்பாடு வைராக்கியங்களையும் சண்டைகளையும் ஒயப்பண்ணும். மேலும் எல்லாக் கோத்திரத்தாரும் தங்களுக்குக் கிடைத்த எல்லை தேவனாலே கொடுக்கப்பட்டதென்று எண்ணுவார்கள். நீதி. 16: 33.

62. சீனாயின் தொகைக்கு 1000-பேர் அதிகம். 3: 39.

64. முந்திய குடிமதிப்பில் எண்ணப்பட்டவர்களெல்லாரும் சேரோத் ஆற்றைக் கடக்குமுன்னதாகவே வனாந்தரத்தில் மடிந்துபோனார்கள். உபா. 2: 14, 15. எலியேசர் எண்ணப்பட்டிருக்கிறான். ஆனால் இவன் லேவிக்கோத்திரத்தான்.

## 27. அதிகாரம்.

26: 52—56. "தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களுக்குரிய நாமங்களின்படியே சுதந்தரித்துக்கொள்ளக் கடவர்கள்" என்று தேவன் கட்டளையிட்டிருந்ததினாலே, செலோப்பியாத்தின் குமாரத்திகள் வந்து இப்படிக் கேட்க நேரிட்டது. 1-6. இவர்களுக்குக் கிடைத்த தீர்ப்பானது, இனிமேல் ஆண்சந்ததியில்லாமல் இறந்துபோகும் மனுஷனுக்கெல்லாம் இதே தீர்ப்பும் சட்டமுமாயிற்று. 36-அதி-ல் இதற்கடுத்த வேறே ஏற்பாடுகளும் கூட்டப்பட்டது. கானானைச் சுதந்தரித்துக்கொள்வதற்குரிய ஏற்பாடுகளைச் சொல்வதில் அந்தந்தச் சமயத்துக்குத்தக்கதாக ஷை ஏற்பாடுகளும் கூட்டப்படவேண்டியதாயிற்று. கானானைப்பற்றிய ஏற்பாடுகளெல்லாம் சொல்லியானபின், அதில் பிரவேசியாத மோசேயின் மரணமும் (20: 12.) 12—14. அவனுக்குப் பதிலாள் நியமிக்கப்பட்டதும் சொல்லப்பட்டது. 15—23.

1. இதுவரை இஸ்ரவேலில் பெண்பிள்ளைகள் தனியே சுதந்தரபாத்தியம் அடைந்ததாய்த் தோன்றாது. என்றாலும் தகப்பன் தன் பெண்மக்களுக்கும் தன் அந்தியகாலத்தில் சுதந்தரம் கொடுத்ததாகத் தெரியவருகிறது. 1 நாளா. 2: 21. மீ. எண். 32: 41. மேலும் 1 நாளா. 2: 34. இப்படிப்பட்ட வழக்கம் மற்றும் கீழ்தேசத்தாருக்குள்ளுமிருந்தது. ஆதி. 31: 14. யோபு 42: 15.

2. (70) மூப்பருக்கு முன்பாக என்று தோன்றாது. மோசே எலெயாசார் இவர்கள் உத்தரவுப்படி சனங்களை லக்கம்பார்த்த பிரபுக்கள் கோத்திரப் பிதாக்கள் குடும்பத் தலைவர்கள் ஆகிய இவர்கள் முன்புக்கு வந்ததாகத் தோன்றும்.

3. "தம்முடைய பாவத்தினாலே." கானான்தேசத்தில் பிரவேசியாதபடி சபிக்கப்பட்டவர்களில் இவரும் சேர்ந்தவர். 14: 31.

12. சனங்கள் இதற்குள்ளாக அபாரிம் மலைகளைக் கடந்துவந்திருக்கிறார்கள். 21: 20. 28: 14. இந்த அதிகாரத்திற் சொல்லியபடி யோசுவா நியமிக்கப்பட்டபிற்பாடு தான் மோசே அவனுக்குப் புத்திமதி கற்பித்திருக்கவேண்டும். உபா. 31: 15.

18—21. யோசுவா பட்டாபிஷேகமடைந்தது.

20. "உன் கனத்தில்" உன் ஆதிக்கத்திலும் அதிகாரத்திலும் என்றர்த்தம்.

21. யோசுவா, எலெயாசாருக்கு முன்பாக நிறுத்தப்பட்ட விஷயத்தில் மோசேக்குத் தாழ்ந்தவனாயிருந்தான். ஏனென்றால் மோசே நேராக தேவனால் அதிகாரம்பெற்றவன். யோசுவாவோ பிற்காலத்தில் வந்த இஸ்ரவேலின் அதிகாரிகளைப்போலவே பிரதானஆசாரியனாலே ஊரீம் தும்மீம் வழியாய் தேவஉத்தரவுபெற்று நியமிக்கப்பட்டவன். யோசுவா தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்துக்கு மிஞ்சி, கிபியோனியர் விஷயத்தில் தேவனிடத்தில் உத்தரவு கேளாமல் உடன்படிக்கைசெய்ததை தேவன் ஒப்பவில்லை. யோசு. 9: 3. மு.

"ஊரீம்" யாத்தி. 28: 30.

மோசே நேராய் தேவனிடத்திலிருந்து அதிகாரத்தை அடைந்த விஷயத்தில் எவ்வளவு கண்யமுள்ளவனாயிருந்தான். ஆனால் அவனுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்த கிறிஸ்துநாதர் எத்தனையோ அதிகாரமுள்ளவராயிருக்கவேண்டும். அவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுமுடையவர். "அவருடைய இராச்சியம் அழியாதது. அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும்." ஆமென்.

---

## 28. அதிகாரம்.

---

கானானில் இப்போ இஸ்ரவேலர் பிரவேசிக்க ஆயத்தமாயிருப்பதால் அதற்குத்தக்கதாக பலிகளைக் குறித்த கட்டளையைச் சொல்லுகிறார்.

2. "காணிக்கை" இதற்கு எபிரேயு வார்த்தை, "கொர்பான்" ("Korban.") மாற்கு 7: 11. தகனபலியோடு சேர்த்துச் செலுத்தப்பட்ட போசனபலியை விசேஷமாய்க் குறிக்கும். 15-அதி. லேவி. 21: 6;



3—8. நித்தமிடும் தகனபலி, சீனாயின் அடியில் சொல்லப்பட்டது. யாத்தி. 29: 38—42.

9, 10. இதுமுன் சொல்லப்படவில்லை. நாடோறும் செலுத்துகிற பலியல்லாமலும் கூட இரண்டு ஆட்டுக்குட்டி செலுத்தப்படவேண்டும்.

11—15. அமாவாசைப் பலியும் இவ்விடத்தில் முதலாவதாகச் சொல்லப்படுகிறது. அமாவாசையைக் கொண்டாடவேண்டியது சீனாயில் சொல்லப்பட்டது. 10: 10. இஸ்ரவேலர் பிற்காலத்திலும் இதை ஆசரித்திருக்கிறார்கள். 1 சாமு. 20: 5. 2 இரா. 4: 23. 1 நாளா. 23: 31. கொலோசர் 2: 16.

16—25. பஸ்காபலி, அமாவாசைப் பலிபோலதான். ஆனால் பண்டிகையின் 1-ம் 7-ம் நாட்களில் அதே மாதிரி செலுத்தப்படவேண்டும். லேவி. 23: 7, 8.

26—31. முதற்பலன் சேர்க்கிற பண்டிகைப் பலியானது ஒருநாளில் முந்தியதில்போல செலுத்தப்படவேண்டும்.

---

## 29. அதிகாரம்.

---

12—34. அதிகமான பலி இந்தப் பண்டிகையில்தான் செலுத்தப்பட்டது. அதாவது, 14-ஆட்டுக்கடா, 98-ஆட்டுக்குட்டிகள், 70-க்குக் குறையாமல் காளைகளுமாம். இந்தத் தொகை பஸ்காப் பண்டிகையில் செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டிக்கு இரட்டிப்பும், காளைக்கு நாலுமடங்கும் அதிகமாம். பூமியின் முதற்பலன்களுக்குத் தோத்திரமாக இப்பண்டிகை விசேஷமாய்க் கொண்டாடப்பட்டதால் அதற்குத்தக்கதாக பலியும் அதிகப்பட்டிருக்கிறது.

"ஏழாம்நாளிலே ஏழு காளைகள்." ஏழு என்பது உடன்படிக்கையை அறிகுறியாகக் காட்டுகிற லக்கம். இஸ்ரவேலருக்கு இரக்கமாய்க் கிடைக்கிற பெருமிதமான தானியதவசங்களெல்லாம் அவர்களுக்கும் தேவனுக்குமிருக்கிற உடன்படிக்கையின் விசேஷத்தினாலேயே கிடைக்கிறதென்பதைக் காட்ட இப்படிக் கற்பிக்கப்பட்டது.

---

## 30. அதிகாரம்.

---

பொருத்தனைகள் பெரும்பாலும் பலியோடு சம்பந்தப்படுவதால் இந்த அதிகாரத்தில் தொடர்ச்சியாய்ச் சொல்லப்படுகிறது. இது முந்தியும் சொல்லப்பட்டது. லேவி. 27-அதி.

வாலிபப் பையன்கள் செய்யும் பொருத்தனைக்கு விடுதலை இந்த அதிகாரத்திற் சொல்லப்படவில்லை. ஆகையால் ஆண்பிள்ளைகள் பொருத்தனைசெய்தால் அது எவ்விதத்தினாலானாலும் தவிர்க்கப்படாமல் நிறைவேற்றப்படவேண்டும்.

5. “மன்னிப்பார்.” ரத்துச்செய்வார் என்றர்த்தம். 2 இரா.

---

**Exposition of the Church Catechism.**

## ஞானோபதேசவினாவிடை

### வியாக்கியானம்.

## ௯-ம் அதிகாரம்.

### ௭-ம் பிரிவு.

### திருச்சபையின் பணிவிடைக்குரிய ஏற்பாடுகள்.

(தொடர்ச்சி.)

வினா. மூப்பருடைய உத்தியோகத்துக்கும், மூப்பரையும் சபையாரையும் விசாரணைசெய்யும்படி, அவர்களுக்கு மேலாக வைக்கப்பட்டிருக்கிறவருடைய உத்தியோகத்துக்குமுள்ள வித்தியாசமென்ன? அப்போஸ்தலருடைய மரணத்துக்குப்பின் கிறிஸ்து சபையில் கண்காணியார் என்று அழைக்கப்பட்டது யார்?

விடை. அவர்கள் இருவரும் விசாரணைக்காரராகவே இருந்தார்கள். இதுவே கிரேக்கைப் பாஷை வார்த்தையின் கருத்து. மூப்பர்கள் கிறிஸ்துவின் சபையாகிய மந்தையை விசாரித்தார்கள். (அப். 20: 28. 1 பேது. 5: 1, 2.) ஆனால் அப்போஸ்தலரும், அவர்களால் நியமிக்கப்பட்ட தீமோத்தேயு, தீத்து என்பவர்களும் மேல்விசாரணைக்காரராயும்; தீமோத்தேயு, தீத்து என்பவர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களால் திட்டமாய் விளங்குகிறபடி, மற்ற போதகர்களை விசாரிக்கிற கண்காணிமார்களாகவும் இருந்தார்கள்.

(Presbyters) பிரெஸ்பிற்றர்ஸ் என்ற பேர் சுருங்கி (Priest) பிரீஸ்ற் என்று வழங்குகிறது. இவர்கள்தான் மூப்பரென்றும், குருக்களென்றும் அழைக்கப்படுகிறவர்கள்.



வினா. கண்காணியாருடைய விசேஷித்த வேலையென்ன?

விடை. 1. குருமாரையும், உதவிகுருமாரையும் அபிஷேகம்செய்வது.

நீ குறைவானவைகளை ஒழுங்குப்படுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னை கிரேத்தா தீவிலே விட்டு வந்தேனே. தீத்து 1: 5.

2. போதகன்மாரின் உபதேசங்களைக் கண்காணிக்கிறது. வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும், நீ சிலருக்குக் கட்டளையிடும்பொருட்டாக, நான் மக்கேதோனியாவுக்குப் போனபோது, உன்னை எபேசுப் பட்டணத்திலிருக்கவேண்டிக்கொண்டபடியே செய்வாயாக. 1 தீமோ. 1: 3, 4.

3. அவர்களின் நடக்கைகளை விசாரணைசெய்வது.

மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகளில்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது. 1 தீமோ. 5: 19.

4. வேதத்தில் தீர்மானமாய்ச் சொல்லாதிருக்கிற புறம்பான ஒழுங்குகளைக்குறித்துத் திட்டஞ்செய்து, சபைகளை விசாரித்து வருவது. தீத். 1: 5.

ரோ. 12: 8-ல் விசாரணைசெய்கிறவன் சாக்கிரதையாயிருக்கக் கடவன் என்று சொல்லும்போது, சபைகளையும், குருக்களையும் விசாரித்துவருகிற இவ்வகைப் பட்டமுடைய சிரேஷ்ட குருவையே குறிக்கிறது.

வினா. கண்காணிப்பின் உத்தியோகம் அப்போஸ்தலராலே யாருக்கு ஒப்புவிக்கப்பட்டது?

விடை. தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் ஒப்புவிக்கப்பட்டது.

இம்மூவகையான உத்தியோகஸ்தர்களே திருச்சபையில் ஒழுங்கின்படி பட்டம்பெற்று வந்தவர்களாம். இக்னேசியுஸ் சிமிர்னாப் பட்டணத்தாருக்கு எழுதின ஓர் நிருபத்தில் அவர் கிறிஸ்தவர்களை நோக்கி, நீங்கள் உங்களுடைய பிஷப்புகளுக்குக் கீழமையவும், உங்களுடைய பிரெஸ்பிற்றர்களைக் கனஞ்செய்யவும்' உங்களுடைய டீக்கன்களை மதிக்கவும் கடவீர்களென்று சொல்லியிருக்கிறார்.

வினா. குருக்களையும், உதவிகுருக்களையும் நியமிக்கிற வகை எப்படி?

விடை. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஜெபத்தினாலே பிரித்து வைக்கப்பட்டு, அப்போஸ்தலர் அல்லது கண்காணிமார் தங்களுடைய கைகளை அவர்கள்மேல் வைப்பதினாலே, தீமோத்தேயு நியமிக்கப்பட்டபோது மூப்பருடைய கைகளும் அவர்மேல் வைக்கப்பட்டது.

மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது, தீர்க்கதரிசனத்தினுல் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே. 1 தீமோ. 4: 14.

இதினிமித்தமாக நான் உன்மேல் கைகளை வைத்ததினுல் உனக்குண்டான தேவவரத்தை நீ அனல் மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன். 2 தீமோ. 1: 6.

எந்த பட்டாபிஷேகமாவது, அப்போஸ்தலராலே அல்லது அவர்களாலே விசாரணைக்காரராக நியமிக்கப்பட்டவர்களாலேயல்லாமல், மூப்பராலே நடத்தப்பட்டதாக புதியஏற்பாட்டில் சொல்லப்படவில்லை. சீர்திருத்தலின் காலத்துக்கு முன்னும் கண்காணிமாருக்கேயல்லாமல், மற்றெவருக்காவது இந்த உத்தியோகமிருந்ததாகக் காணப்படவில்லை.

வினு. குரு அல்லது உதவிகுருப்பட்டத்துக்கு ஆட்களைத் தெரிந்துகொள்வது, யாருக்கு ஒப்புவிக்கப்பட்டது?

விடை. ஜனங்களுக்கு ஒப்புவிக்கப்படாமல், அதிகாரிகளாக அல்லது அத்தியக்ஷர்களாக அப்போஸ்தலராலே நியமிக்கப்பட்டவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டது.

அநேகம் சாட்சிகளுக்குமுன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. 2 தீமோ. 2: 2.

மேலும், தீமோத்தேயும் தீத்தும் இந்த உத்தியோகங்களுக்கு ஆட்களை தெரிந்து ஏற்படுத்தும்படி கற்பிக்கப்பட்டார்களேயல்லாமல், அப்படி நியமிக்கப்படுகிறவர்களின் நடத்தைகளை திட்பமுட்பமாய் அறியக்கூடாதவர்களாயிருந்தார்கள். ஆகையால் தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாவது;

ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே. 1 தீமோ. 5: 22.

ஆனுல் அத்தியக்ஷர், ஜனங்களில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாலே பிரித்துவைக்கப்பட்டவர்களை மாத்திரம் அபிஷேகம்பண்ணுகிறதானுல், அவர்கள்மேல் எவ்வளவு சீக்கிரமாய்க் கைகளை வைததாலும் பரவாயில்லை. பரி-பவுல் சொல்லுகிறதாவது;

தாமதிப்பேனேயாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. 1 தீமோ. 3: 15.

வினு. உதவிகுருவின் உத்தியோகமென்ன?

விடை. வேதவாக்கியங்களில் சொல்லப்படவில்லை. ஆனுல் தீமோத்தேயுவினுலும், அக்காலத்து திருச்சபையினுலும் இது பூரணமாய் அறியப்பட்டிருக்கவேண்டும். 1 தீமோ. 3; 8-13 ல் சொல்



லியபடி, குருக்களைப்போலவே, உதவிகுருக்களும் தேவபக்
தியும், நல்நடக்கையுமுள்ளவர்களாயிருப்பது அவசியம்.
இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும். குற்றஞ்
சாட்டப்படாதவர்களானுல், உதவிக்காரராக ஊழியஞ்செய்
யலாம். 1 தீமோ. 3: 10.

மேலும் உதவிகுருக்கள் மேலான ஊழியத்தை எதிர்நோக்கியிருந்
தார்கள். ஏனென்றுல்,—
உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றுய்ச் செய்கிறவர்
கள் தங்களுக்கு நல்ல நிலையையும், அடைவார்கள். 1 தீமோ.
3: 13.

வினு. அப்போஸ்தலர் நடபடி 6-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டி
ருக்கிற ஏழுபேரும் உதவிகுருக்களில்லையா?

விடை. இல்லை. அவர்கள் அப்போஸ்தலர் நடபடியில் உதவிகுருக்களெ
ன்று அழைக்கப்படாமல், அந்த அதிகாரத்தின் முகவுரையில்
மாத்திரம் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறுர்கள்.

வினு. பவுல்அப்போஸ்தலனுடைய மரணத்துக்குப்பின், திருச்சபை
யின் முறைமையைப்பற்றி என்ன தெரியும்?

விடை. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரி. யோவானுலே சொல்லப்
பட்டிருக்கிற ஏழு சபைகளிலொவ்வொன்றும் தூதன் என்று
சொல்லபபட்ட ஒரு ஊழியக்காரனை உடையதாயிருந்தது.
அவர்கள் சபைக்கும், போதகர்களுக்கும் மேல்அதிகாரிகளா
யிருந்தார்கள். அவர்களே மேல்விசாரணைக்காரர் அல்லது
அத்தியக்ஷர்களாயிருந்தார்கள்.

வினு. இந்த தூதர்கள், அத்தியக்ஷர்களாயிருந்தவர்கள் என்று எண்
ணுவதற்கு முகாந்தரமென்ன?

விடை. பரி-பவுல் எபேசுவில் இருந்த காலத்தில் நாம் பார்க்கிறபடி,
எபேசுவிலே மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா
எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்
படுத்திக்கொண்டான். அப். 19; 8, 10, 26.
அதினுலே ஏராளமான கிறிஸ்தவர்களுக்கு பல போதகர்களின் விசா
ரணை அவசியம். மேலும் பரி-பவுல் எருசலேமுக்குப் போகிற
வழியில், இந்தப் பட்டணத்தண்டை வந்தபோது,
அவன் எபேசுவுக்கு ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வர
வழைத்தான். அப். 20: 17.
அப்படியானுல் அந்த தூதன் அவர்களெல்லாருக்கும் மேலாக வைக்
கப்பட்டிருந்தவரோ.

வினு. எபேசுச் சபையின் தூதன், அத்தியக்ஷரின் அதிகாரத்தையு
டையவராயிருந்தாரென்பதற்கு அத்தாட்சியென்ன?

விடை. அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து, அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் அறிந்திருக்கிறேன். வெளி. 2: 2.

மேலும் அவன், கர்த்தராகிய இயேசுவினிடத்திலிருந்து, பரி-யோவான் மூலமாய், தன் நடக்கைக்காக மெச்சுக்கொள்ளப்பட்டிருக்கிறான்.

வினா. தியத்தீரா சபையின் தூதன் அத்தியக்ஷராயிருந்தாரென்பதற்கு அத்தாட்சியென்ன?

விடை. தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லும் ஏசபேல் என்னும் ஸ்திரீயானவளை போதிக்கும்படி இடங்கொடுத்ததற்காக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். வெளி. 2: 20.

அவருக்கு அவளைப் பேசாமலிருக்கும்படி செய்யக்கூடிய அத்தியக்ஷ உத்தியோக அதிகாரமிருந்தாலொழிய, மற்றப்படி இதற்காக குற்றம்சாட்டப்படக்கூடியவரல்லவே.

வினா. வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஆசியாவிலுள்ள சபைகளின் ஆளுகை, மற்றக் கிறிஸ்தமான சபைகளின் ஆளுகைக்கு வித்தியாசமானதென்று நினைப்பதற்கு நியாயமுண்டா?

விடை. இல்லை. கிறிஸ்துவின் சபை எவ்விடத்திலும் மேல் அதிகாரிகள் அல்லது அத்தியக்ஷரால் ஆளப்பட்டதென்றும், எல்லாரும் ஒரே பொதுவான அத்தியக்ஷ அல்லது குரு சங்கத்துக்குட்பட்டவர்களாயிருந்தாலும், ஒவ்வொருவரும் தங்கள் சொந்தச் சேகரத்தை மேல்விசாரணைசெய்தார்களென்று நம்புவதற்கு போந்த நியாயமுண்டு.

அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக்குறித்து ஆலோசனைபண்ணும்படி கூடினார்கள். அப். 15: 6.

அவர்கள் பட்டணங்கள்தோறும் போகையில், எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள். அப். 16: 4.

வினா. அப்போஸ்தலரின் மரணத்துக்குப்பின், திருச்சபையின் முறைமையைப்பற்றி என்ன தெரியும்?

விடை. அப்போஸ்தலருடைய காலத்தில் இருந்தவர்கள் எழுதிவைத்திருக்கிறவைகளினாலே நாம் அறிகிறபடி, பிலி. 4: 3-ல் சொல்லப்பட்டிருக்கிற கிலெமெந்து பிற்பாடு ரோமாபுரி அத்தியக்ஷராகவும், பரி-யோவானின் சிஷனாகிய போலிகார்ப் சிமிர்னாவின் அத்தியக்ஷராகவும், இக்னேசியஸ் அந்தியோகியாவின் அத்தியக்ஷராகவும் இருந்தார்கள். அப்போஸ்தலரின் மரணத்துக்குப்பின், உடனே ஒவ்வொரு சபையிலும் அத்தியக்ஷரென்று சொல்லப்பட்ட மேலான உத்தியோகஸ்தரும், குருக்கள், உதவிகுருக்கள் என்று சொல்லப்பட்ட மற்ற இருவகை உத்தியோகஸ்தர்களும் இருந்தார்களென்று அறிகிறோம்.



வினா. இந்த ஒழுங்கு பொதுப்பட ஆதிச்சபையில் ஒப்புக்கொள்ளப்பட்டதா?

விடை. அத்தியக்ஷர்கள், குருக்கள், உதவிகுருக்கள் என்னப்பட்ட மூவகை உத்தியோகஸ்தர்களும், கிறிஸ்துவுக்குப்பின் 1500-வருஷக்காலமாய் சபையில் ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். அக்காலம்வரையில் அத்தியக்ஷரில்லாத ஒரு கிறிஸ்து சபையாவது இல்லை. மேலும், இந்த ஒழுங்கு அப்போஸ்தலராலே ஸ்தாபிக்கப்பட்டிராவிட்டால், பிற்பாடு சபைச் சரித்திரங்களில் காட்டப்படாமல் ஏற்படுத்தப்பட்டிருக்கக் கூடாது.

வினா. கிறிஸ்துவின் ஊழியக்காரனாகும் உத்தியோகத்துக்கு யாராவது சுதாவாய் ஏற்பட்டுக்கொள்ளலாமா?

விடை. அப்போஸ்தலனாகிய பவுல்-தீமோத்தேயு, தீத்து என்பவர்களுக்குப் போதித்திருக்கிறபடியே, இந்த ஊழியத்துக்கென்று அபிஷேகம்பண்ணப்படப்போகிறவர்கள், அதிகாரம்பெற்றவர்களாலே சரியானபடி தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருக்கவேண்டுமேயொழிய, தன்னுடைய சுயமனதின்படி சுதாவாய் ஒருவனும் இந்த ஊழியத்துக்கு ஏற்பட்டுக்கொள்ளக் கூடாது.

வினா. ஆனால், ஸ்தேவானுடைய மரணத்துக்குப்பின், சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும், ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையை பாழாக்கிக்கொண்டிருந்தான். சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப். 8: 3, 4) என்று சொல்லப்படவில்லையா?

விடை. ஆம். பிரசங்கித்தார்கள்.

இந்தத் திருஷ்டாந்தம், பட்டாபிஷேகம்பெற ஏதுவிராதபடி பலத்த துன்பங்களுள்ள பகைஞரின் தேசத்தில், கிறிஸ்தவர்களாலே தனித்துச் செய்யப்படக்கூடியதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் ஸ்தாபிக்கப்பட்டதும், சமாதான நிலைமையிலிருக்கிறதுமான கிறிஸ்து சபைக்கு இப்படிப்பட்ட திருஷ்டாந்தம் உபயோகப்படமாட்டாது.

## The World's Birth.

## உலகப்பிறப்பு.

### VI. அதிகாரம்.

மூன்றாம் நாள் கிரியை.

ஆதி. 1: 9—13.

(தொடர்ச்சி.)

அவைகளின் இலக்கத்தைப்பற்றிப் பார்ப்போம். சுமார் 150-வருஷங்களுக்குமுன்னே தாபர சாஸ்திரத்துக்குப் பிதா என்று அழைக்கப்பட்ட லின்னியஸ் என்பவர் 8,000-விதமான தாபரங்களுண்டென்றும் அவைகள் 10,000-க்கு மிஞ்சாதென்றும் சொன்னார். நூறு வருஷங்களுக்குப்பின்பு வந்த ஒருவர் 40,000-விதமான தாபரங்களுண்டென்று எழுதினார். பின்பு 60,000-என்று கணக்கிட்டார். அப்பால் 80,000-என்று சொன்னார். லட்சம் விதமான தாயரங்களிருக்கலாம் என்பது அவர் அபிப்பிராயம்.

இந்த லட்சம் விதமான தாபரங்களும் அதினதின் விதையைக் கொடாமல் வேறே வகையான விதையைக் கொடுத்ததுண்டா? சுரை போட பாகல் உண்டானதா? இந்நாள்பரியந்தம் அந்தந்த விதை அந்தந்த ஜாதி தாபரங்களாக வளர்ந்து, அந்தந்த விதையையே பிறப்பித்துக்கொண்டு வருகிறது. அந்த விதைகளுக்குள்ள ஜீவசக்தியைப் பார்ப்போம்.

வருஷாவருஷம் அவைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. விதையை 60-வருஷம் பெட்டிக்குள் பூட்டிவைத்திருந்து பின்பு அதை எடுத்து விதைத்தாலும், அது உயிர்கொண்டு எழும்பி வளரும். சௌன்ற்று என்ற ஒருவர், 1835-௵ பெர்க்ரோக் என்னும் இடத்துக்குச் சமீபமாய்ச் சில பழைய செல்திக் கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டதாயும், அங்கே அடக்கம்பண்ணப்பட்டிருந்த ஒவ்வொரு பிரேதத்தின் தலையின் கீழ் துவாரம் அடித்திருந்த ஒரு சதுரக்கல் அல்லது செங்கலிருந்ததாயும், அந்தத் துவாரத்தில் சில விதைகளிருந்ததாயும், அந்த விதைகள் சுமார் 1500-அல்லது 1700-வருஷங்களுக்குமுன் அங்கே அஞ்ஞான இனத்தாரால் வைக்கப்பட்டிருந்ததாயும், அவைகளை எடுத்து விதைத்ததில் அவைகள் வளர்ந்து, நேர்த்தியான புஷ்பங்கள் பூத்ததாயும் எழுதியிருக்கிறார்.

உல்கின்சன் என்ற ஒருவர் எகிப்தில் பிரயாணம்பண்ணிக்கொண்டிருந்தபோது ஒரு பிரேதக்குழியில் முத்திரிக்கப்பட்ட ஒரு தாலத்தைக் கண்டெடுத்து, அதைப் பிரித்தானியா விநோதசாலைக்கு அனுப்பினார். அந்தச் சாலையைப் பார்த்துவந்தவர் அதை உடைத்தபோது சில கோதுமை விதைகளையும், நொந்து பழமையாயிருந்த இரண்டொரு பயற்றம் விதைகளையும் கண்டார். அந்த விதைகளை 1844௵ ஜூன்௴ 4௳ விதைத்தபோது ஒரு மாசத்துக்குப் பின்பு முளைத்தெழும்பினதாம். அவைகள் மூவாயிரம் வருஷங்களுக்குமுன்னே, மோசேயின் காலத்தில் வைக்கப்பட்டிருக்கலாம். விதைகள் முளைத்தெழும்புவது மரித்தோர் உயிர்த்தெழும்புவதற்கு அடையாளமாயிருக்கிறதல்லவா? பவுலஅப்போஸ்தலன் கொரிந்தியருக்கெழுதின முதலாம் நிருபம் 15-அதிகாரத்தில் மரித்தோர் உயிர்த்தெழும்பும் உபதேசத்தை விதைகள் முளைத்தெழும்புவதைக்கொண்டு ரூபித்திருக்கிறார்.



விதைகள் கனிகொடுப்பதைப்பற்றி, இப்போது பார்ப்போம். தேவனுடைய சர்வவல்லமை இதில் எவ்வளவு அதிசயமாய் விளங்குகிறது. ஒரு சோழவிதை 2,000 விதைகளையும், ஒரு சூரியகாந்திப்பூ விதை 4,000 விதைகளையும் ஒரு கசகசா விதை 32,000 விதைகளையும், ஒரு புகையிலை விதை 36 000 விதைகளையும் பிறப்பித்ததாக ரே என்ற தாபர சாஸ்திரி எழுதியிருக்கிறார்.

ஒரு கசகசா விதையிலுண்டாகிற விதைகளை நாலு வருஷம் விர்த்திசெய்தால் உலகத்தில் குடியிருப்பான இடங்கள் எல்லாம் விதைக்கப் போதுமானதாய் வந்துவிடும். முன் நாட்களில் எகிப்தில் நூறுமேனி விளையும் என்றும் பாபிலோனில் இருநூறு மேனி விளையும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவு நல்ல நிலத்தில் ஒரு கோதுமை விதை விதைத்து அதினால் வரும் பலனை எட்டுவருஷங்களாக விர்த்திபண்ணிக்கொண்டு வந்தால் உலகத்திலிருக்கிற எல்லாச் சனங்களுக்கும் ஒன்றரை வருஷத்துக்குப் போதுமான ஆகாரமுண்டாக்கலாம். சிருஷ்டி கர்த்தர் நமக்கு விருக்ஷ சாதிகளைக்கொண்டு எவ்வளவு நன்மைசெய்து வருகிறார். அவருக்கே கனமும் மேன்மையும் துதியும் தோத்திரமும் என்நாளுமுண்டாவதாக.

### VII. அதிகாரம்.

நாலாம்நாள் கிரியை.

ஆதி. 1: 14—19.

நாலாம்நாள் கிரியை முந்தினவைகளைவிட மாட்சிமையுள்ளது. நாலாம்நாளிலே இயற்கையையும், வெளிச்சத்தின் உருவத்தையும் மாற்ற தேவன் திருவுள சித்தங்கொண்டருளினார். அவர் சூரியனைச் சூழ வெளிச்சத்தைத் திரட்டி, அது சந்திரனில் படவும், சந்திரன் நமது பூமிக்கு வெளிச்சங்கொடுக்கவும் செய்தார். சூரியன் எப்போது எப்படி ஏன் உண்டாக்கப்பட்டிருந்ததென்பதை நாம் அறியோம். பூமிக்கு அப்பால் 95,00000 காதவழி தூரத்திலிருக்கிற சூரியன் நாலாம் நாளில் சிருஷ்டிக்கப்படாமல் அதற்குமுன்னமே சிருஷ்டிக்கப்பட்டிருந்தது. ஆதியில் தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோது சிருஷ்டிக்கப்பட்டிருக்கலாம். நாலாம் நாளில் பூமிக்கு வெளிச்சங் கொடுக்கும்படியாக அதற்கு வெளிச்சம் ஏற்றப்பட்டது. சந்திரன் சூரியனிடத்திலிருந்து வெளிச்சத்தை வாங்கி, நமது பூமிக்கு வெளிச்சந் தருகிறது.

நாலாம் நாளில் தேவன் சூரியனைச் சிருஷ்டித்தார் என்று சொல்லப்படாமல், தேவன் சுடர்கள் உண்டாகக்கடவது என்றும், சுடர்களை உண்டாக்கினார் என்றும் சொல்லியிருக்கிறது. ஒரு அறையில்

விளக்கு இருக்கலாம், ஆனால் அது கொழுத்தப்பட்டால் மாத்திரம் வெளிச்சங் கொடுக்கும். அப்படிப்போல சூரியனும் சந்திரனும் வெகு காலத்துக்குமுன்னே இருந்தது. வெளிச்சமாத்திரம் அவைகளுக்கு இன்னமும் ஏற்றப்படவில்லை. தேவன் தமது திருவுளத்தில் சித்தங் கொண்டபோது, அவைகள் பிரகாசிக்கும்படி செய்தருளினார். சூரியன் முதல் தடவையாக தன் மகிமையோடே ஆகாயத்தில் செல்வதையும், சந்திரன் தன் அயனத்தில் ஓடுவதையும், நீ பார்த்தால் உன் அகம் எவ்வளவாய் மகிழ்ந்திருக்கும். இப்போது அது வழக்கமாய்ப் போனதால் அதைப்பற்றி நாம் கவனிக்கிறதில்லை.

தேவனுடைய சர்வஞானம் சர்வவல்லமைமுதலிய இலக்ஷணங்களை பூவுலகில் அடங்கிய பொருட்களில் நாம் அறிந்துகொள்வதுபோலவே வானத்திலுள்ள ஜோதிகளினாலும் அறிந்துகொள்ளுகிறோம். வானஜோதிகளும் அவருடைய கரங்களின் மகிமையையும் அளவிறந்த ஞானத்தையும் வெளிப்படுத்துகின்றன.

சூரியனைச்சுற்றி அநேக கிரகங்கள் ஓடுகின்றன. பூர்வீக இந்துக்கள் ஒன்பது கிரகங்கள் மாத்திரம் உண்டென்று சொன்னார்கள். அந்தக் கிரகங்கள் மனுஷருடைய பலாபலன்களுக்குக் காரணமாயிருக்கிறதென்று சொன்னதால் ஜோஷியர் கிரக நிலையைக்கொண்டு ஜாதகம் வருத்துவார்கள். வெகுகாலத்துக்குமுன்னே ஐரோப்பாக் கண்டத்திலுள்ளவர்களும் சோதிட சாஸ்திரத்தை அனுசரித்துவந்தார்கள். பின்பு அவர்கள் கல்வியில் விர்த்தியடைந்து வரவே ஜோதிடர்கள் சொல்பவைகள் எல்லாம் பிசகென்று தள்ளிவிட்டார்கள். கிரகங்கள் நாம் வாசம்பண்ணுகிற பூமியைப்போலவே மண், கல் உள்ளவைகள். அவைகள் எப்படி மனுஷருடைய சுகதுக்கங்களையும் பலாபலன்களையும் அறிவிக்க தகுந்தவைகளாகும்?

கிரகங்களுக்குச் சத்தியிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இந்துதேச ஜோதிடர்களுக்கு அதைக் கண்டுபிடிக்கும் திறமையில்லவேயில்லை. ஏனென்றால் அவர்கள் அநுசரித்துவருகிற நூல்கள் வெகு காலத்துக்குமுன் எழுதப்பட்டவைகள். இப்போது கிரகங்கள் அதிகமாய் மாறுபட்டிருக்கலாம். மேலும் இப்போது அநேக கிரகங்கள் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியானால் அந்தக் கிரகங்களின் பலாபலன்களைவிட்டு, நவக்கிரகங்களின் பலாபலன்களை மாத்திரம் கணித்தால் எப்படி சரியாய் வரும். மேலும் நவக்கிரகங்களுக்குள் சூரியனும் இராகு கேதுக்களும் கிரகங்களல்ல. நமது தேசத்தார் இவ்விஷயத்தில் காட்டிய அவபக்தியையும், தப்பான எண்ணத்தையும் நாகரீகத்திலும், அறிவிலும், ஐசுவரியத்திலும் பேர்போன ஜாதியார் பார்த்து நகைக்கிறார்கள். நம்மையும் நம்முடைய காரியங்களையும் ஆண்டு நடத்துகிறவர் சர்வத்துக்கும் வல்ல தேவனே. சகலமும் அவர் ஆளுகைக்குட்பட்டது. கிரகங்கள் அவருடைய சித்தத்தின்படி ஓடுகிறது. அவைகள் உயிரற்றவைகள், தானாய் ஒன்றும் செய்யமாட்டாதவைகள். ஜோசியர் ஜனங்களை ஏமாற்றி பணம் பறிக்கும்படி செய்கிற எத்தை நம்பக்கூடாது.

சூரியனுடைய வெளிச்சத்தைப்பற்றிச் சில காரியங்களைப் பார்ப்போம். அது மிகவும் விரைவுள்ளது. அது ஒரு இமைப்பொழுதில் 19,200 காதவழி போகிறது. சூரியனிலிருந்து நமக்கு வெளிச்சம் வர எட்டேகால் நிமிஷம் மாத்திரம் செல்லுகிறது. ஒரு மனிதன் நாளொன்றுக்கு ஒன்பதரைக்காதவழி நடந்து சூரியமண்டலத்துக்குப்போனால் அங்கேபோய்ச்சேர ஏறக்குறைய 3,000 வருஷம் செல்லும்.



ஒரு கைநொடிக்குள் இப்பூமி முழுவதையும் ஒருமித்துச் சுற்றத்தக்க விசை ஒளிக்கு உண்டு. சாதாரண விசையோடு பறக்கிற ஒரு கொசுவின் சிறகுகள் ஒரு விநாடியில் நூற்றுக்கணக்கான அடி அடிக்கிறதென்பதையும், அநேக ஆயிரங் கூடி ஒரு அங்குல நீளமுதலாய் இருக்கமாட்டாததுமான நுண்ணிய சிற்றுப்பிராணிகள் சதாகோடியாய்ப் பூமியிலே இருக்கிறதென்பதையும் நாம் நம்புவது பிரயாசமல்லவா? இந்த அதிசயங்கள் நயனசாஸ்திர புதுமைக்கு ஒப்பிடத்தக்கதல்ல. எப்படியென்றால் ஒளிக் கிரணங்கள் அவை ஊடுருத்துச் செல்லும் எந்தப் பொருளையும் ஒரு விநாடியில் 5-கோடாகோடிவரையும் கம்பிக்கிறது. இக்கம்பிதங்கள் நயன நரம்புகளை ஊடுருத்துவருகிற காட்சிப் புலனுக்கு ஆதாரம். அன்றியும் இக்கம்பிதங்களின் தொகைக்குத்தக்கதாய் வஸ்துக்கள் பற்பல வர்ணங்களாகத் தோன்றுகிறது. திருஷ்டாந்தமாக சிவப்பு நிறம் தோன்றுவதற்கு நமது கண்ணின் தரிசயம் ஒரு விநாடியில் 4-கோடாகோடியே 82-லட்சம் கோடி விசையும், செந்நீலம் தெரிவதற்கு 7-கோடாகோடியே 7-லட்சம் கோடி விசையும், மஞ்சள் நிறம் புலப்படுவதற்கு 5-கோடாகோடி 42-லட்சம் கோடி விசையும் கம்பிக்கவேண்டுமென்று ஹர்சல் சாஸ்திரியார் சொல்லுகிறார். இவைகள் திட்டமான ஆராய்ச்சியினால் உண்டான துல்லிய கணக்கல்ல, பைத்தியக்காரரின் பிதற்றுதல் என்று சிலர் சொல்லத் துணிவார்கள்.

வெளிச்சத்தின் கதிர்கள் எவ்வளவு திரளாயிருக்கிறது. தலைமுறை தலைமுறைகளாய் எவ்வளவு திரள்திரளான கதிர்கள் சூரியனிலிருந்து போயிருக்கின்றன. இரவும் பகலும் வீசிக்கொண்டிருக்கின்றன. எத்தனை உலகங்கள் அதின் கதிர்களால் வெளிச்சமடைகின்றன. நம்முடைய பூமிக்கு அதின் கதிர்களால் ஒரு சிறிய பாகமாத்திரம் கிடைக்கிறது.

சூரியகதிர்கள் பிரகாசமுள்ள சுத்த வெண்மையுள்ளது. ஒரு சிறு அறையை நன்றாய் அடைத்து, அந்த அறைக்கதவில் ஒருமிகச் சிறிய துவாரம்விட்டால், அந்தத் துவாரத்தின் வழியாய்ச் சூரியகதிர் பிரவேசிக்க எதிரான சுவரில் ஒரு வட்டமான வெண்மை வெளிச்சத்தைப் பார்க்கலாம். அந்தத் துவாரத்துக்கு முன்பாக ஒரு பளிங்குக் கருவியை வைத்தால் அது ஏழு வகை வர்ணங்களைக் காட்டும்.

தேவன் வெளிச்சங் கொடுப்பதற்கு மாத்திரம் சூரியனையும் சந்திரனையும் படையாமல் இன்னொரு நோக்கத்துக்காகவும் படைத்தார். மனுஷன் தன் மனோதத்துவங்களையும், சுகானுபவங்களையும் ஒழுங்குப்படுத்துவதற்கு உதவியாயிருக்க அவைகளை உண்டாக்கினார். அவன் காலத்தை அளவிட்டு, அதைப் பிரயோசனப்படுத்திக்கொள்ள நோக்கமாய் அவைகளைப் படைத்தார். மேலும் அவர் "அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது" என்று கட்டளையிட்டார். சந்திரன் தன் கலைகளால், வாரங்களையும் மாதங்களையும் நமக்குக் காட்டுகிறது. சூரியன் தன் அயனத்தில் ஓடுகையில் நமக்குக் காலங்களையும் வருஷங்களையும் குறிப்பிக்கிறது. முற்காலத்தோர் பகலை மணித்திட்டங்களாய்ப் பிரிக்கும்படி சூரிய கடியாரம்செய்து அதை வழங்கிவந்தார்கள். கி. மு. 750-ல் ஆகாசின் காலத்தில் எருசலேமில் ஒரு சூரிய கடியாரமிருந்ததாய் நாம் வாசிக்கிறோம். 2 இராசா. 20: 11.

---

# விளம்பரம்.

இந்தத் திருநெல்வேலி நாட்டிலே கிறிஸ்தவர்களான சில பேர்கள் தங்கள் சுய இஷ்டப்படி ஏற்பட்டு ஊர்களிலும், பட்டினங்களிலும் போய், கிறிஸ்துநாதர் இந்த 1881-ம் ௵ செப்றெம்பர் ௴ 9௳யோ, 19௳யோ, இந்தப் பூமியில் பிரசன்னமாய் வருகிறாரென்று பிரசித்தப்படுத்தி, அநேகருடைய மனதுகளைக் கலங்கப்பண்ணி வருகிறார்களென்று தெரிய வருவதால், யாவருக்கும் பொதுச்சிநேகிதனான நான் எல்லாருக்கும் தெரியப்படுத்துகிறது என்னவென்றால்,

நம்முடைய கிறிஸ்து வேதத்தில் கிறிஸ்துநாதர் இவ்வுலகத்திலே மறுபடியும் பிரத்தியக்ஷமாய் வருவாரென்பது நிச்சயமாகவே சொல்லப்பட்டாலும், இன்ன வருஷத்தில் இன்ன நாளில் வருவார் என்பது ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. அவர் வரும் நாளும் நாழிகையும் தேவதூதர்களுக்குமுதலாய் தெரியாதென்று திட்டமாய் எழுதியிருக்கிறபடியால், இந்த ௴ 9௳யோ, 19௳யோ வருவாரென்று வேதத்தில் இப்படிச் சொல்லியிருக்கிறதென்று சாதிப்பார்களானால், அவர்கள் பொய் சொல்லுகிறவர்களென்றே அறிந்துகொள்ளுவீர்களாக.

வேதத்தில் இப்படிக் குறிப்பாய்ச் சொல்லப்படவில்லை. என்றாலும், தரிசனத்தினாலே அறிந்துகொண்டோமென்று இவ்விதமாய் தேதி குறித்துச் சொல்வார்களானால், அப்படிப்பட்ட பேச்சு முழு அபத்தமென்று தீர்மானிக்கவேண்டியது. தரிசன ஆதாரவினாலே வஞ்சனைக்காரன் தன் வஞ்சனையையும் நிறைவேற்றுவான். பேதமையானவன் தன் யோசனைக்கு அனுகூலமாயும் சொல்லுவான். நாம் நிதானமாய் சகலத்தையும் சீர்தூக்கிப் பார்த்து நடக்கவேண்டும். இவர்கள் பொல்லாதவர்களென்று நான் சொல்லவில்லை. பெரும்பாலும் சாதுவான நல்ல சனங்கள்தான். புத்தியும் பக்தியுமோ தவறியிருக்கிறது.

சில வருஷங்களுக்கு முன்பு ஒருநாள் ஓர் சந்நியாசி என்னிடத்தில் வந்து, இரண்டுநாளைக்குமுன், பாபநாசக்கோவிலில் தான் படுத்திருந்தாயும், அங்குள்ள சுவாமி தனக்குத் தரிசனமாகிப் பாளையங்கோட்டைக் கடுத்த முருகன்குறிச்சிக்குப்போய் அங்குள்ள இன்ன பேருடைய போதகரிடத்தில் உபதேசம் பெற்றுக்கொள் என்று சொன்னதாயும், அந்தத் தரிசனப்படி நான் வந்திருக்கிறேனென்றும் சொன்னான். அப்படிப்பட்ட தரிசனம் நான் நம்பத்தக்கதா? நீங்கள் நம்பத்தக்கதா? இல்லையே. அவனோ அதை நம்பி இவ்வளவு தூரம் வந்தான். இதெல்லாம் புத்தி மயக்கத்தினாலே உண்டான தரிசனமே.

அதுபோலவே இப்பொழுது கிறிஸ்துநாதர் இன்ன தேதியில் வருவாரென்று வேதத்தில் எழுதியதுபோலச் சொன்னாலும், தரிசனத்தில் கண்டோம் என்றாலும் நீங்கள் அவர்கள் சொல்வதை நம்பவேண்டாம், கலங்கவும்வேண்டாம், எல்லாரும் சுகமாய் வாழ்வீர்களாக.

முருகன்குறிச்சி.<br>1881௵<br>செப்றெம்பர் ௴ 5௳. }

ஈ. சார்ஜென்று<br>அத்தியக்ஷர்.



# சமாசாரத்திரட்டு.

**இந்தியா.**—சொத்தா உதயபுரி மகாராஜா 8-மாசக்காலம்
வியாதியாயிருந்து, ஜூலை ௴ 7௳ தேகவியோகமானார். மாட்சிமைபொ
ருந்திய இந்திய ராஜபிரதிநிதியவர்கள் நொவெம்பர் ௴ ஆகிரா்வைத்
தரிசித்து, அங்கே தர்பார் கூடுவிப்பார் என வதந்தி பிறக்கிறது. ஒரு
வேளை அவர் அங்கே 2-மாசம் தாமதிப்பார்போலும்.—சிலநாளுக்கு
முன் நடந்த பங்கித்தபாற்கொள்ளையில் சம்பந்தப்பட்டிருந்த தோஷத்
துக்காக ஜம்நகரின் இந்து மகாராஜாவுக்கு 2-வருஷ வெறும் சிறையி
ருப்பும் 2,000 ரூபாய் இடுதண்டமும் கட்டிவாடி மாகாணத்தின் உப
நீதியதிபராகிய மேஸ்தர் அஸ்தொன் துரையினால் விதிக்கப்பட்டது.
சென்னை துரைத்தன வானசாஸ்திரியின் புதல்வியாகிய ஐசிஸ் பொக்
ஸன் கன்னிகை மேற்படி சமஸ்தானத்திலுள்ள உற்கா சாஸ்திர வகுப்
பின் விசாரணைக்காரியாக நியமகம்பெற்றாள். கடந்த 6-வருஷமாக
அவள் உதவி சோதி சாஸ்திரி உத்தியோகத்தை வெகு சாமர்த்திய
மாய் நிர்வகித்தவள்.—மேஸ்தர் கிராண்டுடப் துரை அக்றோபர் ௴
5௳ இந்தியாவுக்குப் புறப்படுவார். ராஜரீக என்ஜினீர்கள் வகுப்பைச்
சேர்ந்த கப்றன் ஆந்ரி துரை சென்னை கவர்னரின் அந்தரங்க லிகித
ராக நியமிக்கப்பட்டார். ஜூலை ௴ 27௳ அப்கானிஸ்தானில் அமீர் சே
னைக்கும் அயூபின் தளத்துக்கும் ஒரு சண்டை நடந்ததில், அமீரின்
பட்டாளங்களில் ஒன்று அயூப் பட்சம் தாண்டிப்போகவே; அமீரின்
மற்றைய தண்டுகள் அப்பால சலைந்துபோனதாகவும், பீரங்கிகளும்
ரஸ்துக்களும் பறிபோனதாகவும் செய்தி எட்டியது. மேற்படி ௴
30௳ அயூப்கான் கந்தகாரில் பிரவேசித்தானாம்.

**ஐரோப்பா.**—கொரிந்து பூசந்தியினூடு கால்வாய் வெட்ட
யோசித்திருக்கிற சூழ்ச்சத்தின்பேரில் அவுஸ்திரியாவில் வெகு சிரக்
கைத் தோன்றியிருக்கிறது. கொ்ஸ்தர் என்ற சிவில் என்ஜினீர் துரை
கொரிந்துவில் தங்கியிருந்து, லெசெப்ஸ் துரைக்காக விபரப்படங்
கள் இயற்றிவருகின்றார். பூசந்தியைத் துளைக்க 4-வருஷத்துக்கு அதி
கம் செல்வதால், 5-வருஷத்துக்குள் மேற்படி கால்வாய் போக்குவரத்
துக்கு தயாராகும் என்று உத்தேசம்.—பிரான்ஸியாவின் கடன் 8-லட்
சம் பவுன். வேறெந்த ராச்சியத்தின் கடனையும் தாண்டின இப்பெருந்
தொகை 1876-ம் ஆண்டுக்குப்பின் 1-லட்சம் பவுன் அதிகரித்துவிட்
டது.—ஆகஸ்து ௴ 7௳ பிராட்லா துரை தமது நோக்கத்தை முன்
வெளியிட்டிருந்தபடியே ஜனப்பிரதிநிதிகள் சபையில் உட்கார வந்
தார். தலைவாசலில் சேரவும் அவரை வழிமறித்து, கடும்போராட்டத்
துக்குப்பின் வெளியே தாத்திவிட்டார்கள். 2-ம் அலெக்ஸந்தர் சக்க
ரவர்த்தியை வன்கொலைபுரிந்த தோஷத்தில் கைகலந்தவர்களாய் குற்
றஞ்சாற்றப்பட்ட கைதிகளில் ஒருவனாகிய ஜெசி ஹெல்ப்மான் என்ப
வனுக்காக எழுதப்பட்ட ஒரு மனுவை ருஷிய சக்கரவர்த்தி ஒப்புக்
கொண்டு, அவன்பேரில் விதிக்கப்பட்டிருந்த மரணாக்கினையை ஜீவபரி
யந்தம் அருஞ்சிறையிருப்பாக மாற்றிவிட்டார்.

செப்தெம்பர் நாள்-30. ஆவணிமீ 18உ முதல், புரட்டாசிமீ 16உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | கஅ | நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன். ஓசியா 11: 9. |
| வெ | 2 | ககூ | இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு. 12: 6. |
| ச | 3 | உ0 | மரணமே, உன் வாதைகள் எங்கே? 13: 14. |
| ஞா | 4 | உக | கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள். 14: 9. |
| தி | 5 | உஉ | கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது. யோவேல் 1:15. |
| செ | 6 | உங | அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். 2: 29. |
| பு | 7 | உச | கர்த்தர் சீயோனிலே வாசமாயிருக்கிறார். 3: 21. |
| வி | 8 | உரு | தேமானிலே தீக்கொளுத்துவேன். ஆமோஸ் 1: 12. |
| வெ | 9 | உசா | வேகமானவன் ஓடியும் புகலிடமில்லை. 2: 14. |
| ச | 10 | உஎ | அவர்கள் செம்மையானதைச் செய்ய அறியார்கள். 3: 10. |
| ஞா | 11 | உஅ | உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு. 4: 12. |
| தி | 12 | உகூ | கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! 5: 18. |
| செ | 13 | ங0 | சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ! 6: 1. |
| பு | 14 | ஙக | கர்த்தராகிய ஆண்டவரே, மன்னித்தருளும். 7: 2. |
| வி | 15 | க | தெய்வாலயப் பாட்டுகள் அலறுதலாக மாறும். 8: 3. |
| வெ | 16 | உ | இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன். 9: 14. |
| ச | 17 | ங | ராச்சியம் கர்த்தருடையதாய் இருக்கும். ஒபதியா 21. |
| ஞா | 18 | ச | உமக்குச் சித்தமாயிருக்கிறபடி செய்கிறீர். யோனா 1: 14. |
| தி | 19 | ரு | இரட்சிப்பு கர்த்தருடையது என்றான். 2: 9. |
| செ | 20 | சா | நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம். 3: 4. |
| பு | 21 | எ | மிகுந்த கிருபையுள்ள தேவன். 4: 2. |
| வி | 22 | அ | கர்த்தர் தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார். மீகா 1: 3. |
| வெ | 23 | கூ | இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல. 2: 10. |
| ச | 24 | க0 | தீங்கு எங்கள்மேல் வராது என்கிறார்கள். 3: 11. |
| ஞா | 25 | கக | நாம் அவர் பாதைகளில் நடப்போம் 4: 2. (அ. 5:2. |
| தி | 26 | கஉ | அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடைய |
| செ | 27 | கங | நன்மை இன்னது என்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். 6: 8. |
| பு | 28 | கச | அவர் திரும்ப நம்மேல் இரங்குவார். 7: 19. |
| வி | 29 | கரு | கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர். நாகூம் 1: 2. |
| வெ | 30 | கசா | உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து. 2: 1. |

## விசேஷ நாட்கள்.

4. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 12-ம் ஞாயிறு.
8. பௌரணமி.
11. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 13-ம் ஞாயிறு.
18. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 14-ம் ஞாயிறு.
21. பரி. அப். மத்தேயுவின் திருநாள்.
23. அமாவாசை.
25. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 15-ம் ஞாயிறு.
29. பரி. மிகாவேல் முதலான சகல தேவதூதர்களின் திருநாள்.

# நற்போதகம்.

ய. அக்டோபர்மீ. ௲அ௱அக௵.

## எண்ணாகமம்.

(தொடர்ச்சி.)

### 31. அதிகாரம்.

25. 17-ல் சொல்லிய தேவகட்டளையை நிறைவேற்ற இப்போ உத்தரவு பிறந்தது. அப்படியே மீதியானியரைப் பழிவாங்கும்படி யுத்தத்துக்குக் கச்சை கட்டினார்கள். உபாகமத்திற் காட்டியிருக்கிறபடி இஸ்ரவேலருக்கு மோசே தன் அந்திய காலப் பிரசங்கங்களைச் சொல்வதற்குச் சற்றுமுன்னதாக இந்த யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தினாலே யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள வாக்குத்தத்த தேசத்தை இஸ்ரவேலர் ஜெயித்துப் பிடித்துக்கொண்டார்கள்.

2. "மீதியானியர்." மோவாபியரைச் சேர்க்கவில்லை, இஸ்ரவேலரை கபடாகக் கெடுத்தது மீதியானியரென்று இத்தால் தெரியவருகிறது.

3. இந்த வாக்கியத்தின் வார்த்தைகளைக் கவனிக்கும்போதே இது வழக்கமான யுத்தமல்ல என்று காணப்படும். இது மீதியானியருக்கு விரோதமாய்க் கூறப்பட்ட தேவனுடைய தீர்ப்பை நிறைவேற்றுகிறதாயிருந்தது. மீதியானியர், இஸ்ரவேலருடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் கபடாய்க் கெடுத்துப்போட்டார்கள். இஸ்ரவேலரைச் சபிக்கும்படி பிலேயாம் செய்த பிரயத்தனங்களை தேவன் விலக்கிவிட்ட விபரங்களையெல்லாம் மீதியானியர் அறிந்திருந்தும் இப்படி சற்பனைசெய்ததினால் அவர்கள் பகிரங்கமான தேவதுரோகிகளானார்கள்.

இந்த யுத்தத்தில்:

12000-பேருள்ள சிறுபடை யுத்தத்திற்குப்போனதாலும். 4-வா.

ஒவ்வொரு கோத்திரத்திலும் சமதொகை தெரிந்தெடுக்கப்பட்டதாலும்;

மீதியானியர் செய்த சற்பனையை விலக்கும்படி பத்திவைராக்கியம் காண்பித்த பினெகாஸ் தளகர்த்தனாக நியமிக்கப்பட்டதாலும்;

"பரிசுத்த தட்டுமுட்டுகளும் தொனிக்கும் பூரிகைகளும்" ஆயுதமாகப் பிரயோகிக்கப்பட்டதாலும்; 6-வா.

இந்த யுத்தத்துக்குப்போன இஸ்ரவேலரெல்லாரும் தப்பாமல் காப்பாற்றப்பட்டதாலும்; 49-வா.

மீதியானியருக்கு விரோதமான இந்த யுத்தமானது தேவனுடைய நேரான பழிவாங்குதலாயிருந்தது. சமபூமியின் பட்டணங்களின்மேல் அக்கினியும் கந்தகமும் சோனாமாரியாய்ப் பெய்தது எப்படி தேவனுடைய நேரான ஆக்கினைக்கு அத்தாட்சியாயிருந்ததோ அப்படியே இதுவுமிருந்தது.

இஸ்ரவேலருக்கு விரோதமாகச் சூதுவாதுபண்ணினதில் சிலர் சேராதிருக்கலாம். சேராதிருந்தாலும் மீதியானியரின் தலைவர் இதில் முக்கியமானவர்களாயிருந்ததால், அந்த ஜாதியாரெல்லாரும் ஏகமாய் அழிக்கப்பட்டார்கள். "கர்த்தாவே, உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள்." நியா. 5: 31.

6. பரிசுத்த தட்டுமுட்டுக்களாகிய பூரிகைகள் என்றர்த்தம்.

8. யுத்தம் முடிந்தபின் இந்த (5) இராஜாக்களும் கொலைசெய்யப்பட்டார்கள். இவர்களல்லாமலும் மற்றும் மீதியானிய இராஜாக்களும் யுத்தத்தில் மடிந்ததாகக் காணப்படும். ஏனென்றால் எபிரேயு பாஷையில்: "யுத்தத்தில் விழுந்த இராசாக்களை அல்லாமல் மீதியானியரின் இராசாக்களைக் கொலைசெய்தார்கள்" என்றிருக்கிறது. யோசு. 13: 21.

பிலேயாம் யுத்தத்தில் மடியவில்லை. நியாயவிசாரணையின் பேரில் கொலைசெய்யப்பட்டான்.

12. எபிரேயுவில் "எரிகோ-யோர்தானுக்கு" என்றிருக்கிறது.

16. பிலேயாம் செய்தது பரமசூது. நேராய் தேவனோடு எதிர்த்தான். வாயினாலே என்னென்ன மதுரச்சொற்களையெல்லாம் மொழிந்தும், அவனுடைய உள்ளத் தன்மை இப்போ வெளிக்கு வந்துவிட்டது! "கர்த்தாவே உம்முடைய கண்கள் விசுவாசத்தையல்லவோ நோக்குகிறது."

19. "ஏழுநாள்." நியாயப்பிரமாணப்படி. 19: 12.

22. இவ்வகையான உலோகங்கள் அந்த ஆதிகாலத்திலேயே உபயோகிக்கப்பட்டதைப் பார்த்தால், இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்படுமுன்னதாகவே இவை சாதாரணமாய் வழங்கினதாகக் காணப்படும்.

32. இத்தனை ஏராளம், மீதியானியரிடத்திலிருக்கத்தக்கது. நியா. 6: 5. 8: 24.



50. "காப்புகள்." கழுத்தில் அணிகிற மணி, முத்துமாலை, அட்டியல், காறை இவற்றைக் குறிக்கும்.

52. 16,750-சேக்கல் நிறைபொன், 2-லட்சம் ரூபாய் விலையுள்ளது. 7: 84.

53. சேவகரும் யுத்தத்திற்குப் போயிருந்தார்கள். இவர்கள் செய்த கொள்ளை காணிக்கைக் கணக்குக்கு வரவில்லை. ஏனென்றால் சேவகர் செய்யும் கொள்ளை சொற்ப விலையுள்ளதாய்த்தானேயிருக்கும். ஆபீசர்கள் செய்த கொள்ளையோ மிகுதியாயும் விலையுயர்ந்ததாயுமிருக்குமாதலால், அவர்கள் காணிக்கைசெலுத்தினது சரியே.

---

## 32. அதிகாரம்.

முந்தின அதிகாரத்திற் சொல்லிய யுத்தமானது இந்த அதிகாரத்தின் பொருளுக்கு இடம்பண்ணினது.

1. "யாசேர் தேசம்." 21: 32. இந்த நாடு கிலேயாத் தேசத்துக்குள்ளே அடங்கினதாயிருந்தாலும், மனதை இழுக்கத்தக்க பயிர் பச்சையுள்ளதாயிருந்தது. அதினாலேதான் யாசேருக்கு வேவாட்களை அனுப்பி முந்தியே கட்டிக்கொண்டார்கள். அல்லாமலும் கிலேயாத் தேசத்தில் இஸ்ரவேலர் முதல் முதல் பிடித்துக்கொண்டது இந்த யாசேர் தான்.

"தகுந்த இடம்." தென்பக்கம் செழிப்புக்கும் வடபக்கம் நல் மரச்சோலைகளுக்கும் பேர்போன இடம். கிலேயாத்துக்கு தற்காலத்தில் "பெல்க்கா" என்று பேர்.

"நீ பெல்க்காவுக்குச் சமமான ஒரு தேசத்தைக் காணக்கூடாது" என்பது அரபருக்குள் பழமொழியாய் வழங்கி வருகிறது.

8. "உங்கள் பிதாக்களை" எகிப்திலிருந்து புறப்பட்டபோது இருந்த தலைமுறையார் இப்போ ஒருவருமில்லை. 26: 64, 65.

11. "கேனேசியன்." 13: 6. 1 நாளா. 4: 13.

34. "திபோன்." 21: 30. காதியர் இதை சுதந்தரித்துக்கொண்டதினிமித்தம் திபோன் காத் என்றும் பேர். 33: 45, 46. இது அர்னோனுக்கு வடக்கே 4-மயில் தூரத்திலிருக்கிறது. இதின் விஸ்தாரமான இடிபாடுகளுக்கு இப்பொழுதும் தீபான் என்று பேர் வழங்குகிறது. இந்த இடத்திலேதானே 1868-ல் கிலெயின் ஐயர் (Rev. T. Klein) மோவாபியக் கல்லைக் கண்டுபிடித்தார்.

"அதரோத்." கிரீடங்கள் என்றர்த்தம். திபோனுக்கு 7-மயிலுக்கு வடமேற்கே அதரோத் பரும்புகளின்மேற் கட்டப்பட்டது.

"ஆரோவேர்." திபோனுக்கும் அர்னோனுக்கும் ஊடேயிருக்கிறது. ரப்பாத் அம்மோனுக்கு எதிராக காதியருக்கு நிலையாய்க் கிடைத்த ஆரோவேர் இதல்ல. யோசு. 13: 25.

35. இந்த 4-பட்டணங்களும் இரண்டாம் வகுப்பாம்.

37, 38. ரூபனருக்கு மத்திய ஸ்தானம் எஸ்போன். பூர்வ ஏமோரியருக்கு இது தலைநகரி. 21: 25.

"எலெயாலெ" வடகிழக்கே ஒரு மயில்.

"நேபோ" தென்மேற்கே 3-மயில். 21: 20.

"பாகால்மெயோன்." தெற்கே 2-மயில்.

"கிரியத்தாயீம்" தெற்கே 3-மயில்.

39. ஆதி. 50: 23.

"கிலேயாத்" முக்கியமாய் வடபாகத்துக்குப் பேர். இதில் ஏமோரியர் குடியேறியிருந்தாலும் சரியானபடி ஓகின் இராச்சியத்தைச் சேர்ந்தது. 26: 29.

41. உபா. 3: 14.

42. நியா. 5: 14. 15—17. 8: 4—9.

---

## 33. அதிகாரம்.

1—49. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த சரித்திரத்துக்கு முடிவாக ஒரு டாப்பை எழுதி முடிக்கிறார். அந்த டாப்பானது, இஸ்ரவேலர் எகிப்தை விட்டதுமுதல் அவர்கள் யோர்தானில் சேர்ந்ததுவரையும், அவர்கள் பாளையமிறங்கின இடங்களைக் காட்டியது. இந்த டாப்பு, தேவகட்டளையினாலே மோசே எழுதினது (2-வா). இந்த நீண்ட சோதனைகாலத்தில் தேவன் தமது சனங்களுக்குக் காட்டின கவலையான பாரமரிப்பை ஞாபகப்படுத்தும்படி நோக்கமாய் இது எழுதப்பட்டது.

3. "ராமசேஸ்" யாத்தி. 1: 11. 12: 37.

---



## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

வியாக்கியானம்.

### ௬-ம் அதிகாரம்.

எ-ம் பிரிவு.

திருச்சபையின் பணிவிடைக்குரிய ஏற்பாடுகள்.

(தொடர்ச்சி.)

வினா. சபை ஆளுமுறையில், ஒரு சபை அப்போஸ்தலருடைய மாதிரியைப் பின்பற்றுவது ஏன் அவசியம்?

விடை. சபையானது ஒரு மாதிரியின்படி ஏறக்கட்டவேண்டியதாயிருக்கிறது. நம்மால் ஆகக்கூடாத விஷயந்தவிர, புதியஏற்பாட்டில் காண்பித்திருக்கிற மாதிரியை நாம் பின்பற்றாதிருப்பது நியாயமல்ல.

வினா. இந்த விஷயத்தைப்பற்றி வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்ன?

விடை. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறதாவது;

நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். பிலிப். 3: 17.

கிறிஸ்து சபையின் தலைவனாக அவருடைய மாதிரியைப் பின்பற்ற கற்பிக்கப்படுகிறதுபோல, அவருடைய நடக்கையும் நமக்கு முன்மாதிரியாயிருக்கிறது.

வினா. தேவன் ஒரு சபையிலுள்ள ஊழியக்காரரின் வேலைகளை ஆசீர்வதித்து வரும்போது, அதினாலே அந்தச் சபையின் ஆளுகைமுறை சரியானது என்று ரூபகாரப்படுமோ?

விடை. இல்லை. தப்பிதமானவைகளும் சில விஷயங்களில் சற்று சித்தி பெறாமல் போகாது. ஆனால் தேவகட்டளையை மனதார மீறினால் போக்குச்சொல்ல இடமில்லை. ஆதலால் நாம் நினைத்துக் கொள்ளவேண்டியதாவது.—

இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும். மத். 23: 23.

மேலும் தேவன் ஏற்படுத்தியிருக்கிற முறைமைகளை விட்டு விலகுவதினாலே, பிற்காலத்தில் மார்க்கமானது எப்படிப்பட்ட கெடுதிகளை விதித்திருக்கிறதென்று நாம் சொல்லக்கூடாது. நாம் நம்முடைய சுயசித்தத்துக்கு இணங்கி, நன்மை வரும்படி தீமைசெய்யலாம் என்று சொல்லவுங் கூடாது.

வினா. ஆனால் மார்க்கத்தையிட்டு அதிக விசுவாசமுள்ளவர்களில் நல்ல மனுஷரில்லையா?

விடை. உண்டு. ஆனாலும் மற்றவர்களுடைய மாதிரியை எடுத்துப் பேசுவதினாலே எந்தத் தப்பித்துக்காவது, அசட்டைக்காவது நாம் போக்குச்சொல்லக்கூடாது.—தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக. வேதஆகமத்தை தங்கள் வழிகாட்டியாக வைத்து அதைப் பின்செல்லும்படி அறிக்கைபண்ணுகிற மற்றவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்ப்பது நம்முடைய வேலையல்ல.

---

## தேவாராதனை முறை.

---

வினா. இங்கிலாந்துச் சபையில் வழங்கும்படியாக நியமிக்கப்பட்டிருக்கிற சுருக்கசெபங்கள் எவ்வளவு காலமாய் கிறிஸ்து சபையில் உபயோகிக்கப்பட்டு வருகிறது?

விடை. 1300-வருஷங்களுக்குக் குறையாமல் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

வினா. உண்டுபண்ணப்பட்ட ஜெபங்களும், ஸ்தோத்திரங்களும் வழங்கிவந்திருக்கின்றனவென்பதற்கு வேதத்தில் என்ன திருஷ்டாந்தங்களுண்டு?

விடை. பூர்வீக யூதர்கள் எப்போதும் தங்கள் ஜெபஆலயங்களில், முன்னதாகவே உண்டாக்கிவைத்திருந்த ஜெபமுறைகளை உபயோகித்து வந்தார்கள். நம்முடைய கர்த்தரும் ஜெபஆலயங்களில் நடந்த ஆராதனைக்கு ஒழுங்காய்ப் போய், அவைகளை உபயோகிப்பது சரிதான் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். லூக். 4: 16.

யோவான்ஸ்நானன் தன்னுடைய சீஷருக்கு ஒரு ஜெபம் படிப்பித்திருந்தானென்று தோன்றுகிறது.

ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்குச் செபம்பண்ணப் போதித்ததுபோல நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும். லூக். 11: 1.



சங்கீத ஆகமமும் உண்டுபண்ணப்பட்ட ஜெபங்களாம்.

நம்முடைய இரட்சகரும் தம்முடைய சீஷருக்கு ஜெபம்பண்ணும் முறையைப் போதித்திருந்தார்.

நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது; மத். 6: 9.

பரி-பவுல், கிறிஸ்தவர்கள் தனிமையாயும், சேர்க்கையாயும் ஆராதனைசெய்வதில், சங்கீதங்களும், ஞானப்பாட்டுகளும், ஞானகீர்த்தனைகளும் வழங்குவதாகச் சொல்லுகிறார்.

சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடுங்கள். கொலோ. 3: 16.

பாட்டுகள், கவியாக உண்டாக்கப்பட்ட ஜெபமுறைகளே.

ஆதிக்கிறிஸ்தவர்கள், பூர்வீகத்திலேயே பொதுவான ஜெபங்கள் என்று அவர்கள் புஸ்தகங்களில் சொல்லப்படுகிறவைகளையே பொதுவான ஆராதனை முறையில் வழங்கிவந்தார்கள்.

வினா. இங்கிலாந்துச் சபையின் ஜெபபுஸ்தகத்தினுடைய மாட்சிமை என்ன?

விடை. 1. அது அதிகப் பொருளடங்கியது. பொதுவாகக் கேட்கவேண்டிய விண்ணப்பங்களில் ஒன்றும் விடப்படவில்லை. மேலும் நாம் தனிமையாய்க் கேட்கவேண்டிய அநேக காரியங்கள் திட்டமாய் அடங்கியிருக்கிறது.

2. ஒவ்வொரு செபங்களும் கவனத்தாழ்ச்சியை உண்டாக்காதபடி சுருக்கமாயிருக்கிறது. ஆனாலும் அதிகப் பொருளடங்கினதாயும், இயேசுக்கிறிஸ்துவின் மத்தியஸ்தத்தை அடிக்கடி ஞாபகப்படுத்தி முடிக்கிறவைகளாயும் இருக்கின்றன.

3. ஒரேவித உபதேசக்கொள்கையைக் காத்துக்கொள்ளுகிறதாயும் இருக்கின்றன. குருவானவரும் சபையாரும் மாற்றி மாற்றி சொல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிற ஆராதனை முறை கவனத்தைக் காத்துக்கொள்ளவும், பக்தியான உணர்வை எழுப்பவும்தக்கதாக நன்றாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

4. நாம் தேவனுக்குச் செலுத்தவேண்டிய செபங்களையும் ஸ்தோத்
திரங்களையும் முன்னமே அறிந்துகொள்ளுவதற்கு அனுகூலமா
யிருக்கிறது. இந்த ஏதுவினாலே நாம் செய்யப்போகிற விண்
ணப்பத்தின் தன்மையையும், நாம் கேட்கப்போகிற காரியத்
தின் அவசியத்தையும் சிந்திக்க ஏதுவாகிறது. மேலும் ஒரே
விதமான காரியங்கள் நமக்கு நாள்தோறும் அவசியமாயிருக்
கிறது. அதுபோல அடிக்கடி வித்தியாசமான காரியங்கள்
நமக்கு அவ்வளவு அவசியமில்லை.

அதுவுமல்லாமல் உண்டுபண்ணப்பட்ட ஜெபங்கள், தேவனுடைய மகத்துவத்துக்கு ஏலாதவைகளும் பாவஜென்மிகளுடைய நிலைமைக்குத் தகாதவைகளுமான வார்த்தைகளை உபயோகிக்காதபடி செய்கின்றன.

5. எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய பரிசுத்த வசனங்கள் செபங்களில் அடங்கியிருப்பதால், தேவனுடைய வார்த்தைகள் பக்திக்கடுத்த விஷயமாய் மாற்றப்பட்டிருக்கிறது என்று சொல்வதே அதன் மாட்சிமையைக் காட்டுகிறது.

வினா. நீ இங்கிலாந்துச் சபையின் அவயவமாயிருப்பதேன்?

விடை. 1. அது எப்பிஸ்கோப்பால் ஆளுகையுள்ளது. அதாவது அத்தியக்ஷர்களால் ஆளப்படுகிறது.

இவ்வகையான சபை ஆளுகை பூர்வீகச் சபைகளில் இருந்ததும், நம்முடைய கர்த்தரின் அப்போஸ்தலரால் ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்கிறது.

2. அதின் உபதேசங்கள் வேத உபதேசங்களாயும் தெய்வபக்திக்கு ஏற்றவைகளாயுமிருக்கிற வேதசித்தாந்தப் பிரமாணங்களினாலே உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

3. அதின் ஆராதனை முறைகள் பூர்வீகமானதும், வேதத்திற்கிசைந்ததும், பக்திவிருத்தியை உண்டாக்குவதற்கு ஏற்றதுமானவை. அதின் செபபுஸ்தகம் உபதேசத்தில் வேதத்திற்கிசைந்திருந்து, கிருபாசனத்தை நோக்கி நாம் செய்யவேண்டிய விண்ணப்பங்களுக்கு போந்ததுமாய் இருப்பதினாலே பொதுவான உபயோகத்திற்குத் தகுதியானது.

4. தகுதியான முகாந்தரமின்றி அதைவிட்டுப் பிரிந்துபோவது கிறிஸ்துவினுடைய சபையில் பிரிவினை உண்டாகச் செய்கிறது; அது சந்தேகமில்லாமல் தேவனுடைய வசனத்திற்கு எதிரிடையாயிருக்கிறது.

நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டுவிலகவேண்டும். ரோ. 16: 17.

வினா. அப்படியானால் இங்கிலாந்துச் சபைக்கு நீ செய்யவேண்டிய கடமை என்ன?

விடை. திருச்சபையின் பிரதான தலைவராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய உபதேசத்தினாலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாகக் காணப்படுகிற அதிகாரிகளை கனம்பண்ணுவதும், அந்த அதிகாரம் அவருடைய சபையின் அனுகூலத்திற்காக எப்பொழுதும் நிலைத்திருக்கும்படி ஜெபம்பண்ணவேண்டியதுமே.



தயவுள்ள கர்த்தாவே! எங்குமுள்ள உமது பரிசுத்த சபையை சத்தியமார்க்கத்தில் நடத்தி ஆளவேண்டுமென்று, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

தேவரீர் பொதுவாயிருக்கிற திருச்சபைக்கு நற்சீரைத் தந்து, அந்தச் சபையை உம்முடைய நல்லாவியினாலே நடத்தியருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆண்டவரே, உமது வீட்டாராகிய சபையாரை உமது சத்தியமார்க்கத்திலே இடைவிடாமல் நிலைப்படுத்தி எப்பொழுதும் காப்பாற்றியருளும்.

ஆண்டவரே, உமது திருச்சபையை இடைவிடாத உமது இரக்கத்தினாலே சுத்திகரிக்கவும் பாதுகாக்கவும் வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

---

## இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

தேரிற் ஜீவனைக் கொன்று தினந்தொறும்
வாரிவாரி மடுத்த இம்மாநிலப்
பேரி யாக்கைப் பிணந் தின்னி ஈமவெஞ் 455
சேரி வாயுங் கிழிந்து திறந்தவால்.

தொன்றுதொட்டுயிர் சோர்ந்து சமாதியின்
மன்றுறங்கிய மானிடர் யாவரும்
பொன்றி நீத்த புராதன யாக்கை யோட் 456
இன்றுயிர்த் தெழுந்தார் உலகெங்கணும்.

யாது மின்மையிலே உலகியாவுமோர்
ஏதுவின்றி இயற்றிய ஈசற்குப்
பூதிசாதனங் கொண்டு முன்போலுரு 457
ஆதியென்ன அடாதுகொல் ஆவது.

பொருப்பிற் கானிற் புதரில் தூரவினில்
நெருப்பில் ஆற்றில் முந்நீரில் நிலத்தினில்
விருப்பிற்றுருயிர் வீடிய யாவரும் 458
உருப்பெற் றீண்டியிரோடெழுந் தற்றனர்.

வெள்ள வாரிதி மீக்கிளர்ந்தாலெனக்
கொள்ளை மானிடமெங்கும் குழீஇ யினைத்

எள்ளிடற்கும் இடமிலை யென்னவே
தொள்ளைப் பூமி முழுதுந் துதைந்தவே. 459

கூயபோது பிரேதக்குழி விண்ட
வாயினின்று வல்லே மரிமானிடம்
மேய புற்றிடை நின்று விரைந்தெழூஉம்
ஈயல்போல் மொய்த்திரைத் தெழுந்தாரரோ. 460

மண்ணில் நின்றங்குயிர்த்த மனுக்கணம்
எண்ணில் கோடியொன்பதை யல்லது
விண்ணிலாவு விபுதர் கணிப்பினும்
ஒண்ணுமோ அதனுண்மை தெரிக்கவே. 461

தூக்கம் நீங்கிய வாமெனத் துளிநின்ற்
ஆக்கை பெற்றுயிர் பெற்றவர் அந்தரம்
நோக்கி வானவர் போற்றிய நோன்கழற்
கோக்குமாரனைக் கண்டனர் கோதற. 462

கண்ட போதிருகைத்தலஞ் சென்னியிற்
கொண்டிறைஞ்சிப் பரவசக் கூத்தராய்
மண்டு பேரன்பு மல்கி வழிந்தெனப்
பண்டருந் துதிபாடினரோர் சிலர். 463

பேயுங் கண்டறியாப் பெருவஞ்சக
மாயங் கண்ட மனத்தெமை வாழ்வித்த
நேயங் கண்ட நிரஞ்சன மேனி ஐங்
காயங் கண்டு கரைந்திடுவார் சிலர். 464

தொத்திருக்கும் நறுமலர்ச் சோலைவாய்
மெய்த்திருக் குருதித்துளி வேர்த்ததும்
முத்திரைக் குருசேறிய மூர்த்தமும்
இத்திருப் படிவங் கொல் என்பார் சிலர். 465

பால சூரியன் போல் ஒளிபம்பிய
சீலம் ஆர்ந்த திருமுகச் சேவையே
சாலும் நித்திய சாமியர்க் கானந்தம்
போது மென்றுளம் பூரிப்பரோர் சிலர். 466

கண்ணிலாரிற் கவிழ்ந்து கடுஞ்சிறை
நண்ணி நின்ற நமையுந் திருவுளத்
தெண்ணி மீட்டிங் கினிதி னீடேற்றிய
புண்ணியத்தைப் புகழ்ந்துரைப்பார் சிலர். 467

தொழுவரோர் சிலர் தோத்திரம் பாடிநின்ற்
அழுவ ரோர் சிலர் அண்ணல் பதாம்புஜத்த்



உழுவலன் பருச்சித் துயிரார்ப் பணக் 468
கிழமை பூண்ட கிறிஸ்தவராயினார்.

ஏனையோர் நிலையென்னென்று விள்ளுவல்
வானிலா மழை மூன்றில் வயங்கிய
ஞான பானுவின் சந்நிதி நாடிய 469
ஈனகீட மெனத்துடித் தேங்கினார்.

தெய்வம் இன்று சிருட்டியும் இன்றெலாம்
ஐவகைப் பெரும் பூதத்தில் ஆய்த்தெனப்
பொய்வம் போதிய புல்லியரும் இனிச் 470
செய்வ தென்னென்றலைந்து தியங்கினார்.

மாறி மாறிப் பிறவி வருமெனக்
கூறியெங்குங் குரைத்த அக்கொள்கையோர்
ஈறில் துன்பத்துக் கெங்ககல் வேமெனாப் 471
பாறிப் பாறி நின்றுள்ளம் பதைத்தனர்.

அஞ்சிடாமல் அகம் பிரமமென்றுரைத்த்
எஞ்சிடாது மண்ணானவர் ஈசனைச்
செஞ்சவே கண்டு தீவிட நாகத்தின் 472
நஞ்சுண்டாரிற்றியங்கி நடுங்கினார்.

உலகிற் பலவகைப் பொய்மதத்துற்றுழன்
றலகில் தீவினை ஆத்த அமரார்க்கர்கள்
இலகு நீதியெதிர்ந்தமை கண்டெங்கும் 473
விலகுமார்க்கம் இன்றாகி வெருண்டனர்.

குன்றமே மலையே குகையே புதர்
துன்று சூழல்களே யெமைத்தோன்றுறுத்
இன்று காக்க ஒல்லாது கொலோவெனா 474
நின்று கூவி நெடிதுயிர்த்தாரரோ.

வேறு.

ஆயகாலை அருள்துற்று கிருபாசனம் ஓரீஇத்
தூய நீதியழல்காலு மணி துற்றரியணை
மீயெழுந்தருளி வீற்றினி திருந்த விமலன் 475
சேய் அவிழ்த்தன ரோர் செம்முறை ஜெகங்குலையவே.

புத்தகச் சுருள் விரித்துலகு பூத்த எவரும்
இத்தலத் தருகெமக்கெதிரி லெய்துகவெனா
எத்தலத்தவர் செவித்தொளையிலும் எளிதுற 476
வித்தகத்திரு விதழ்ப்பவளம் விண்டனரரோ.

வார்த்தை யங்கதுதிகழ்ந்திட வயங்குபுனித
மூர்த்தி சந்நிதியினின்றுடன் மூலைத்து முடுகித்

திர்த்தனுக்கும் நரருக்கும் இடை தீத்திரள் செறுத்
தார்த்து நின்றது லகத்தவர் அகங்கருகவே. 477

கோரவெங்கனல் தழைத்தெதிர் கொளுத்த அதனால்
பாரகங் குழுமு மன்பதை பதைத்துளம் வெரீஇத்
தாரநின்று பரிவுற்றுயிர் துடித்தனர் இனிச்
சாரவோர் புகலுமின்றென மனந் தளரவே. 478

அக்கணத் தகிலலோக சரணுலையர்தம
பக்க நின்றவரை நோக்கி முதிர்கோதுமை பயன்
மிக்க நன்மணி திரட்டி நமமேனிலைய சேர்
தொக்குவைம்மின் அஃதேதையும் நீர் சோர விடலீர். 479

வறிய புன்பதரை வன்களையை வைத்திரள்களைச்
செறிய வாரியடையக் கொதிகொள் செந்தழலிடை
யெறியுமின்னென இசைத்தனர் இசைத்த பொழுதே
பொறியெழுந்தன கரிந்தன பொரிந்த புவனம். 480

வனசரோருக மலர்ப்பத மிறைஞ்சி மகிழ்பூத்
தனகனேவு பணியைச் சிரமணிந்துழையராம்
பனவரோர் சிலர் இழிந்த அது பார்த்தனன் உளம்
சினவி வந்தவர் புரிந்தமை யெதுந் தெரிகிலேன். 481

பழுதறுங் குணமெய் யன்பினொடு பத்திகனியத்
தொழுது நின்றவரொலாரையும் விசும்புகலவிக்
குழுமி நின்று ரறுகொண்டல் கொடுபோயதிவண் மற்
றழுது நின்ற அனைவோரும் விடுபட்டனர் அவம். 482

பூதலத்து விடுபட்டயர் பொலாதகுழுவைக்
காதலித்துடன் விழுங்குவலெனக் கடுகிவாய்
மேதினித் திடர்பிளந்த விடருடு விரவிப்
பாதலத் தெரிதவழ்ந்து புகைபம்பியதரோ. 483

இன்னவாறு விடுபட்டவரிலே யொருவன் யான்
மன்னிரும்புவி பிளந்தது மருங்கென் அடியின்
இன்னல்கூர் நரகபாதலமும் எட்டிய தெனக்
உன்னருந்திகில் பிடித்ததுடன் உண்மை உரவோய். 484

மீக்கிளர்ந்த மழை முன்றிலின் விளங்கிய பிரான்
நோக்கினர் இடையறுதெனை அந்நோக்கயில் கொள்வேல்
தாக்கினுலென இனைந்துயிர் தளர்ந்து தமியேன்
ஆக்கையுங் குலைகுலைந் தறிவழிந்தனனரோ. 485

என்னிரும் பெரிய தீவினைகள் யாவுமிருள்போல்
முன்னனைந்துளம் வெருட்டுவன முற்றுமுரணிப்



பின்னிடைந்த என் அகக்கரிபிறங்கி யெரிபோல்
துன்னி நின்று சுடுவாதை புகலுந்தரமையதோ. 486

(இன்னும் வரும்.)

---

## The World's Birth.

# உலகப்பிறப்பு.

## VII. அதிகாரம்.

நாலாம்நாள் கிரியை.

ஆதி. 1: 14—19.

(தொடர்ச்சி.)

---

மனுஷன் தன் நாட்களை எண்ணுவதற்கும், காலத்தை அளவிட்டு உபயோகப்படுத்திக்கொள்வதற்கும் வானசுடர்கள் அவனுக்குஎவ்வளவு பிரயோசனமுள்ளவைகளாயிருக்கின்றன. செபத்தியானத்து வேளையைக் குறிக்கவும், பகலின் வேலைக்கும் இரவில் இளைப்பாறுதலுக்கும் போகவும், காலத்தைத்திட்டம்பண்ணவும், ஜீவகாலம் எவ்வளவு சுருக்கமாயிருக்கிறதென்று உணர்த்தவும் எவ்வளவு அநுகூலமுள்ளவைகளாயிருக்கின்றன. காலத்தைச் சரியானபடி மதித்து அதைச் செலவிடுவதற்குத்தக்கதாய் ஜனங்கள் நாகரீகத்தில் முன்னுக்கு வந்திருப்பதாய் உள்ளபடி சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்தார் காலத்தை ஆதாயப்படுத்திக்கொண்டால் கிறிஸ்தவர்கள் எவ்வளவுக்கதிகமாய் அதை ஆதாயப்படுத்தவேண்டியவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்தவன் உண்மையுள்ள உக்கிராணக்காரனாய்த் தன்னைக் கொண்ட கிருபையுள்ள ஆண்டவருக்கு நன்றாய் ஊழியஞ்செய்யும்படிக்கும் இன்னொருநாளில் நல்ல கணக்கு ஒப்புக்கொடுக்கும்படிக்கும் காலத்தைச் செம்மையாய்ச் செலவிடவேண்டியவனாயிருக்கிறான். ஜீவகாலஞ் சுருக்கமாயிருக்கிறது. இதுதான் இரக்ஷண்ய நாள். இதுதான் அநுக்கிரககாலம். மோசே, நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினான். சங்கீதம் 90: 12. தாவீது, கர்த்தாவே காலையில் என் சத்தத்தைக் கேட்டருளுவீர், காலையிலே உமக்கு நேரே வந்து, ஆயத்தமாகி காத்திருப்பேன் என்றும், அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன். அவர் என் சத்தத்தைக் கேட்பார் என்றும், அதிகாலையில் நான் எழுந்து, சத்தமிட்டேன் என்றும் ஒருநாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன் என்றும் சங்கீதம் 5: 3. 55: 17. 119: 147, 164.
சொல்லியிருக்கிறான். சங்கீதம் 5: 3. 55: 17. 119: 147, 164.
தானியேல் மூன்றுதரம் முழங்காற்படியிட்டு, ஜெபம்பண்ணி ஸ்தோத்திரஞ்செய்தான். தானி. 6: 10. வீண்வார்த்தைகளை அலப்பியும்

பொல்லாத காரியங்களைச் செய்தும் ஆகாத சிந்தனைகளைச் சிந்தித்தும்
அதிகமான காலத்தைச் செலவழித்திருக்கிறோம். ஜெபஆராதனையில்
நமது மனம் அதைப் பற்றாதிருந்ததுண்டு. வேதவசனம் வாசிக்கப்படு
கையில் அதற்குச் செவிகொடாமற்போனதுண்டு. ஜெபம் நமது ஆத்
துமாவுக்குச் சீவனாயிருக்கிறது. கர்த்தருக்கென்று பிழைப்போமாக.
நம்முடைய ஜீவனாகிய சூரியன் அஸ்தமிக்கும்போது, உமது கைகளில்
என் ஆவியை ஒப்புவிக்கிறேன். சத்தியபரனாகிய கர்த்தாவே நீர் என்
னை மீட்டுக்கொண்டீர் என்று சொல்லத்தக்கதாய் நடந்துகொள்ளு
வோமாக. இரவில் சந்திரன் பிரகாசிக்கையில் நம்முடைய ஆண்டவ
ராகிய இயேசு, கெதசமனேயில் பட்ட பாடுகளை நினைப்போமாக.
கடைசியாக காலத்துக்கு அவர் முடிவை உண்டாக்க மேகங்களோ
டே வருவதையும் ஞாபகத்தில் வைப்போமாக. மாலையிலோ நடு
இராத்திரியிலோ சேவல் கூவும் நேரத்திலோ காலையிலோ எப்போ
து வருவாரென்று தெரியாததால் ஆயத்தமாய் விழித்திருப்போ
மாக. அப்போது இராக்காலமிராததும் விளக்கும் சூரியனுடைய வெ
ளிச்சமும் வேண்டாததுமான பேரின்ப உலகத்தில் பிரவேசிக்கும்
சலாக்கியத்தைப் பெறுவோம். அங்கே தேவன் நம்மேல் பிரகாசிப்
பார்.

---

## VIII. அதிகாரம்.

### ஐந்தாம் நாள் கிரியை.

ஆதி. 1: 20—23.

"நீர்தும் ஜெந்துக்களையும், ஆகாயவிரிவிலே பறக்கும் பறவை
களையும் ஜலமானது திரளாய் ஜெனிப்பிக்கக் கடவது" என்று தேவன்
திருவுளம்பற்ற அப்படியே ஆயிற்று. மச்சங்களுக்கும் பறவைகளுக்
கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இரண்டும் முட்டையினால் உண்டா
கின்றன. இரண்டுக்கும் செட்டைகளுண்டு. அதுவுமல்லாமல் பறவை
கள், மீன்களுடைய இரததமானது ஒன்றுபோலிருப்பதாக சாஸ்திரி
கள் சொல்லுகிறார்கள். மீன்களுடைய இரத்தம் மிருகங்களின் இரத்
தத்துக்கு எவ்வளவும் பொருந்தினதில்லையாம். மச்சத்தில் 4,000-
வகையும் பறவையில 3,000-வகையும் இருப்பதாய் டிக் என்னும் சாஸ்
திரியார் சொல்லுகிறார். ஒவ்வொரு வகையில் எத்தனை கோடி வஸ்துக்
களிருக்கிறதோ அது மனுப்புத்திரருக்குத் தெரியாது. ஒரு துளி தண்
ணீரில் ஆயிரக்கணக்கான நுண்ணிய பூச்சிகள் வாழுகின்றன. அவை
ஒவ்வொன்றும் பிழைக்கும்படிக்கான கருவிகள் அமைந்த உடம்புடை
யதாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஒரு திவலை தண்ணீரில் 30,000-
பூச்சிகளிருக்கிறதாக சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். "தேவன்
மகா மச்சங்களைச் சிருஷ்டித்தார்." கடலில் பிரமாண்டமான மச்சங்
களும் திரளாயிருக்கின்றன. அவைகளில் திமிங்கல மச்சத்தைப்பற்
றிச் சில காரியங்களைச் சொல்லுகிறேன். பாளையங்கோட்டை திரித்
துவ ஆலயத்தின் கோபுரத்தை உங்களில் சிலர் பார்த்திருக்கலாம்.
அதின் உயரம் 120-ஜாதி அடி. அந்தக் கோபுரத்தின்மேல் இன்னமும்
ஒன்றரை கோபுரங் கட்டினால் திமிங்கலத்தின் நீளத்துக்குச் சரியா



கும். சில திமிங்கலங்கள் 300-ஜாதி அடி நீளமாயிருக்கிறதென்று லேசி
பீட் என்ற ஒருவர் சொல்லுகிறார். திமிங்கலம் அவ்வளவு பிரமாண்டப
யிருப்பதால் சிலவேளை பெரிய கப்பல்களும் அதால் கவிழ்க்கப்பட்
சமுத்திர ஆழத்தில் அமிழ்ந்தினதுண்டு. இந்த மச்சங்களை வேட்டை
காரர் பிடித்து, எண்ணெய் எடுப்பார்கள். சில மச்சங்களில் 1000-ப
ணும், சிலவைகளில் 1800 பவுணுமாக எண்ணெய் எடுக்கப்படும். "தி
ளாய் ஜெனிப்பிக்கக் கடவது" என்று தேவன் கட்டளையிட்டார். ம
சங்களின் திரளைக் கணக்கிட, மனிதனுடைய கணிதம் உதவாது. ஓ
வகை மீன் 10,000 முட்டைகளும், ஒருவகைக் கெண்டை மீன் 20,00
முட்டைகளும் இடுமாம். ஈளை, இளைப்பு, க்ஷயம்முதலிய வியாதிஸ்
ருக்கு ஐரோப்பிய வைத்தியர்கள் ஓர்வகை மீன் எண்ணெய் கொடு
பார்கள். அதற்குக் காட் மீன் என்று பேர் வழங்குகிறது. அது ல
சக் கணக்காக முட்டைகள் இடும் என்று சொல்லுகிறார்கள்.

மச்சங்கள் நீரில் வாழும் ஜெந்துக்களாகத் தேவஞானத்தா
சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் அநேகம் பெலமான செ
திளுள்ளவைகள். பாதுகாப்புக்காக அவைகள் அப்படியே மூடப்ப
டிருக்கின்றன. அவைகள் முள்ளுகள் லேசானதும் அவைகள் பொரு
துக்கள் லகுவாய் வளையக்கூடியதாயுமிருக்கின்றன. அவைகள் தார
ளமாய் எங்கும் செல்வதற்கு அவைகளின் செட்டைகள் இயற்கை
யான நல்ல துடுப்புப்போலிருக்கிறது. அவைகளுக்குள்ளிருக்கிற ஒ
வகையான ஜலப்பையினாலே தங்களைப் பாரமாக்கி ஆழத்தில் அமிழ
தவும், தங்களை லகுப்படுத்தித் தண்ணீரில் மிதக்கவும் செய்ய ஏலும்
அவைகள் பலவகையான மாதிரியும் பருமனும், நிறமுமானவைகள்
இவைகள் மனிதனுக்கு ஆகாரமாகவும், உபயோகமாகவும் சருவதய
ளமுள்ள தேவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைப் பார்
கையில், கர்த்தாவே உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது
அவைகளை எல்லாம் ஞானமாய்ப் படைத்தீர். பூமி உம்முடைய பெ
ருட்களால் நிறைந்திருக்கிறது என்று தோத்திரிக்கவேண்டியவர்கள
யிருக்கிறோம்.

"வானம் என்ற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும் ஜல
மானது திரளாய் ஜெனிப்பிக்கக் கடவது" என்று தேவன் கட்டளை
யிட்டார். அவர் ஜாதிஜாதியான சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார்

பூமியில் தற்காலத்தில் 3,000 வகையான பறவைகளிருக்கிறது
அவைகளில் தண்ணீரில் சஞ்சரிப்பவைகளுமுண்டு. தரையில் சஞ்சரிப்
பவைகளுமுண்டு. தண்ணீரில் வாழுகிறவைகள் வாத்து அன்னப்பட்சி
முதலியவைகளுக்கு இருக்கிறதுபோல தோலடிப்பாதமுண்டு. சகதி
யுள்ள இடங்களில் இரைபொறுக்கிச் சாப்பிடுகிற பட்சிகளுக்கு நீண்ட
கால்களும், நீண்ட அலகுகளுமுண்டு, மாம்ச பட்சணியான பறவை
களுக்குப் பெரிய சிறகுகளும் பலமுள்ள நகங்களும் பெலனான அலகு
களுமுண்டு. பட்சிகளுக்குப் பல்லில்லை. அவைகள் அலகைக்கொண்
டும், வாயைக்கொண்டும் இரையைப் பொறுக்கித் தின்னும். பட்சிகளுக்
குள்ளிருக்கிற கல்லீரல் இரையைப் நொறுக்கி அரைக்கிறது. அந்தக்
கிரியைக்கு உதவிசெய்யும்படி பட்சிகள் சிறுமணலையும், சிறு கற்களை
யும் தின்னும். கல்லீரலின் சத்துவத்தை நிச்சயித்து அறியும்படி இத்
தாலியாவிலுள்ள ஒரு ஞானி சில குரூரமான பரீட்சைகளைச் செய்
தான். ஒரு சேவல்கோழி வயிற்றுக்குள் கருக்குள்ள ஒரு கண்ணாடித்
துண்டைச் செலுத்தினான். இருபத்துநாலு மணிநேரத்துக்குள்ளாக
அந்தக் கண்ணாடியின் கருமுனைகள் தேய்ந்துபோக பட்சி யாதொரு

சேதமின்றி பிழைத்தது. இன்னொருதரம் ஒரு தகரக்குழாய்க்குள் தானியத்தை அடைத்து ஒரு வான்கோழி வயிற்றுக்குள் செலுத்த இருபத்துநாலு மணிநேரத்துக்குப்பின்பு அது நசுங்கி திரிக்கப்பட்டுப்போயிற்று. இரண்டாம்தரம் ஒரு ஈயக்குண்டில் பன்னிரண்டு ஊசிகளைப் பலமாய் ஏற்றி காகிதத்தினால் அதைச் சுருட்டி வான்கோழி தொண்டை வழியாய் உள்ளுக்குள்போகவிட ஒன்றரை நாளுக்குப்பின் அந்த ஊசிகள் ஈயக்குண்டோரமாய் முறிந்துபோயிருந்தன. மூன்றாந்தரம் ஊசிக்குப் பதிலாக பன்னிரண்டு சிறிய சத்திரக்கத்திகளை ஈயக்குண்டில் பலமாய் ஏற்றி, உள்ளேபோகவிட சில மணிநேரங்களாக அவைகள் துண்டுதுண்டுகளாக முறிக்கப்பட்டுப்போயின, வான்கோழிக்கு யாதொரு சேதமும் நடக்கவில்லை. அந்தந்த ஜெந்துவைப் பிழைப்பூட்ட தமது ஞானத்தில் எத்தனை நேர்த்தியான சீரணக்கருவிகளை அமைத்திருக்கிறார்.

பட்சிகளில் பெரியது தீக்குருவி. அதற்குச் சிறகு இருந்தும் பறக்கமாட்டாது. மகா வேகமாய் ஓடும். அது செட்டை விரித்து எழும்பும்போது குதிரையையும் அதின்மேல் ஏறியிருக்கிறவனையும் அசட்டைபண்ணும். யோபு 39: 18. அது ஏழரை அடி உயரமுள்ளது. அதற்கு ஒட்டக பட்சி என்றும் பேர் சொல்லுவார்கள். கல், பளிங்குமுதலியவற்றை விழுங்கும்.

பட்சிகளுக்குள் இராசபட்சி, கழுகு அது உயரப் பறந்து கன்மலையிலும், கன்மலையின் சிகரத்திலும், அரணான ஸ்தலத்திலும் தங்கி வாசம்பண்ணும். அங்கேயிருந்து இரையை நோக்கும். அதின் கண்கள் தூரத்திலிருந்து அதைப் பார்க்கும். தீட்சணமாய் எரிக்கிற சூரியனையும் கண் கூசாமல் நெறித்துப் பார்க்கும், நூறு வருஷம் உயிரோடிருக்கும். மாம்ச பட்சண பட்சிகளுக்குக் கல்லீரலில்லை.

வீட்டு ஈக்களைபபற்றிப் பார்ப்போம். வீட்டில் ஈக்கள் அழுக்கான இடங்களில் மொய்த்திருக்கும். ஊத்தையும் அழுகின வஸ்தும் கிடக்கிற இடங்களிலுள்ள ஆகாயத்தில் சிற்றுயிர்ப்பிராணிகள் லட்சக்கணக்காய் நிறைந்திருக்கிறது. அவைகளை ஈக்கள் பிடித்துத் தின்கிறது. அசுத்தத்தினால் வியாதிக்கு மூலமாக எழும்புகிறவற்றை பக்ஷித்துப்போடுகிறது. நமக்கு அதிகக் கெடுதி உண்டாக்க ஏதுவானவைகளை எல்லாம் சுத்திகரிக்கிறது. ஈக்களைத் தொலைக்கவேண்டுமானால் முந்தி அவைகளுக்கு ஆகாரமாயிருக்கிற அழுக்குமுதலியவற்றை நீக்கிப்போடவேண்டும்.

சில பட்சிகள் சிறகு விரித்து சோபிதமாய் ஆடும். சில பட்சிகள் இனிமையான இராகங்களைப் பாடும். சில பட்சிகள் படிப்பித்தால் பேசும். பட்சிகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார். பறவைகளைப் பார்க்கிலும், மனிதர் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறார்கள். நாம் என்னத்தை உண்போம் என்று நமது ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று நமது சரீரத்துக்காகவும் கவலைப்படவேண்டாம். இவைகள் நமக்கு வேண்டியதென்று நமது பரமபிதா அறிந்திருக்கிறார். தேவனுடைய இராச்சியத்தையே தேடுவோமாக. அப்பொழுது இவைகளெல்லாம் நமக்குக் கூடக் கொடுக்கப்படும்.

---



**Bible Prayer & Union.**

# ஐக்கிய வேதவாசிப்பு ஜெபம்.

நற்போதகத்தைக் கிரமமாய் வாங்கி வாசித்து வருகிறவர்கள், அதின் கடைசிப் பக்கத்திலிருக்கும் அன்றாடக தியானத்தை வாசியாதிரார். மாதத்தின் அந்தந்த தேதிகளுக்குரிய வாக்கியங்கள், நாளது வருஷமுதல் ஐக்கிய வேதவாசிப்பு ஜெபமுறையின் அதிகாரங்களிலிருந்து எழுதப்பட்டு வருகிறதென்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம்.

## ஐக்கிய வாசிப்பு ஜெபமுறையின் விபரமாவது:

1. இந்த ஐக்கியத்தைச் சேர்ந்த மெம்பர்கள் நாள்தோறும் வேதாகமத்தில் ஒவ்வொரு அதிகாரமாக ஒழுங்காய் வாசித்து, தேவாசீர்வாதத்துக்காக வேண்டிக்கொள்வதும்;

2. ஓய்வுநாளில், ஒவ்வொருவரும் மற்றெல்லா மெம்பர்களுக்காக ஜெபம்பண்ணுவதுமே.

இந்த முறைப்படி வேதத்தை வாசிப்பது எவர்களும் கைக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. மற்ற ஒழுங்குப் பிரகாரமாகவும் வேதத்தை வாசிக்கிறவர்களுக்கு, இம்முறை ஒருவிதத்திலும் பிரதிகூலமாகாது. இதுவரையும் வேதபுஸ்தகத்தில் இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாய் மாத்திரம் வாசிக்கிறவர்கள் இதை வழங்குவதால், அதிகப் பிரயோஜனமடைவார்கள். மேலும் பரிசுத்த வேதாகமம் தேவனிடத்திலிருந்து மனிதருக்கு அனுப்பப்பட்ட நிருபமாகையால், நாம் அதில் ஒன்றையும் விடாமல், எல்லாவற்றையும் வரிசையாய் வாசிப்பது நமது கடமையாயிருக்கிறது.

இந்த அருமையான ஐக்கியத்தின் மெம்பர்கள் நாளது அக்டோபர்மீ 28உயில் புதியஏற்பாட்டில் பரி. மத்தேயு 1-ம் அதிகாரத்திலிருந்து வாசிக்கத் தொடங்குகிறார்கள். ஆகையால் அநேகர் ஷை ஐக்கிய வாசிப்பிற் புதிதாய்ச் சேரக் கேட்க, அவர்களைத் தூண்டிவிடுகிறதற்கு இது தகுதியான காலமாயிருக்கிறது. இந்த ஐக்கிய முறையின்படி வாசிக்கவேண்டிய அதிகாரங்களை இப்பத்திரிகையில் மாதத்தின் அந்தந்தத் தேதிகளுக்கு நேரே கண்டுகொள்ளலாம். இந்த நல்ல முறையைக் கையாடி, வேதத்தை ஆராய்கிறவர்கள் இதினால் மிகுந்த பலனை அடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆஸ்திரேலியாவிலிருக்கிற கனம்: மக்கார்ட்னி ஐயரவர்கள் இந்த ஐக்கிய வேதவாசிப்பு ஜெபத்தைப்பற்றி எழுதியிருக்கிறவைகள் மிகுந்த எழுப்புதலைக் கொடுக்கத்தக்கது.

"கிறிஸ்தவர்கள் வேதகாரியங்களைக்குறித்து ஒருவரோடொருவர் சம்பாஷித்துக்கொள்ளும்படி, அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வேதத்தை வாசிப்பது நலம். இருவர் அல்லது பலர் அதிலுள்ள ஒரே அதிகாரத்தின் பேரில் தியானஞ்செய்வதால், நூதனமான பல கருத்துகள் தோன்றும். வேதவாசிப்புக் கூட்டத்தாருடன் நாமுஞ் சேர்ந்துகொள்வதற்கான நல்ல சமயம் நமக்குக் கிடைத்திருக்கிறது. தேவாசீர்வாதத்துக்காக ஜெபம்பண்ணி, வேதத்தைத் தினந்தோறும் ஒவ்வொரு அதிகாரமாக ஒழுங்காய் வாசிக்கவேண்டுமென்ற நோக்கமாய், லண்டன் பட்டணத்திலுள்ள கனம்: தோமாஸ் ரிச்சார்ட்ஸன் ஐயரவர்கள் 1876 ஜனுவரி 10உல் ஓர் ஐக்கிய வாசிப்பு முறையைத் தொடங்கினார்கள். முதலில் அதில் 50-பேர் சேர்ந்திருந்தார்கள். இப்பொழுது லக்ஷத்திற்கு அதிகமானவர்கள் அதின் மெம்பர்களாயிருக்கிறார்கள். (1881 ஆகஸ்துமாசத்தில் ஷை மெம்பர்களின் தொகை 12,6010). இந்தக் காரியம் நெருப்பைப்போல எங்கும் பற்றிப் பிடித்திருக்கிறது. எல்லாத் தேசங்களிலும் எல்லா மனிதருக்குள்ளும் அறியப்பட்டிருக்கிறது. இது வேதஅறிவைப் பெருகச்செய்து, அதைப் பிறருக்குப் போதிக்க எழுப்பிவிடுகிறது. தேவகிருபையால் அநேகர் உணர்வடைந்து மனந்திரும்புகிறதற்கு ஏதுவாயிற்று. மேலும் இது நிமிஷந்தோறும் விர்த்தியடைகிறது. இயேசுவின் வருகை மட்டும் பரவும். ஒவ்வொருவரும் இதிற் சேரவேண்டும். தேவன் இதை ஆசீர்வதித்து வருகிறார். எல்லாச் சபைகளிலும் ஜனங்களிலுமிருந்து எவர்களும் யாதொரு தடையின்றி இந்த ஐக்கியத்தின் மெம்பர்களாகக் கூடும்" என்பதே.

ஆகையால் "மூத்தோர் சொல்லும் வார்த்தை யமிர்தம்" என்பதின்படி பெரியோர் நமது நன்மையை விரும்பிச் சொல்லும் ஆலோசனைக்குச் செவிகொடுத்து, இந்த ஐக்கிய வாசிப்பு முறையை நாம் உபயோகப்படுத்திக்கொள்ளும்படி பிரயாசப்படுவோமாக.



## சமாசாரத்திரட்டு.

**இந்தியா.**—இந்து பெருமாட்டிகளான ஆறுபேர் வங்காளத்திலிருந்து இங்கிலாந்தைப் பார்க்கப்போகிறார்களாம்.—முன்னே இந்திய கவர்னர் ஜெனரலாயிருந்த பிரபு ஒருவரின் புதல்வனாகிய லாரென்ஸ்பிரபு தமது பத்தினியார் சகிதம் இந்தியாவைத் தரிசிக்க வருகிறதாகவும், நொவெம்பர்மீ ஆரம்பத்தில் இங்கே கரைசேர்வதாகவும் வதந்தியுண்டு.—கிஷூரின் மகாராஜா ஸ்ரீ ஜொய்முங்கல் ஸிங்கு பஹுதர் ஆகஸ்துமீ 25உ சடுதி மரணமடைந்தார் என வர்த்தமானம் எட்டியது.—ஜோகூர் மகாராஜா தேயிலை, காப்பிமுதலியவற்றைப் பயிரிடும் மாதிரியை அனுபவசித்தியாய்க் கண்டறியுமாறு யாவாதீவில் யாத்திரைபோயிருந்தார்.—காசி நகரத்தண்டை கங்காநதிமேல் கட்டப்படப்போகிற புதிய வாராவதி இந்தியாவிலெங்கும் இயற்றப்பட்ட அவ்வித கட்டுவேலைகள் யாவிலும் அதிபிரமாண்டமாயிருக்கும். அது தனித்தனியே 146-அடி வீதியும் செங்கற்கட்டுவேலையுமான 7-கமான்களுள்ளதாக எடுப்பிக்கப்படுமாம். மேற்படி பாலத்தின்மேல் இருப்புப்பாதையன்றி, பாதசாரிகளுக்கு ஒரு ரஸ்தாவும் சமைக்கப்படும். அதின் செலவு மொத்தம் 42½-லட்சம் ரூபாயாக மதிப்பிட்டிருக்கிறது.—ஆப்கானிய யுத்தத்தில் சுதேச பிரபுக்களும் உத்தியோகஸ்தரும் புரிந்த உதவிக்காக சென்ற நொவெம்பர்மீ லாகூர் நகரத்தில் கூடின இந்திய ராஜபிரதிநிதி அவர்களின் தர்பாரில் அவர்களுக்கு வெகுமதி பண்ணின 32-வெகுமதிப் பொருட்களின் முழுக் கிரயமும் கூடி 34,700-ரூபாயாம்.

**ஐரோப்பா.**—எகிப்திய சைனியம் கலாபனைக்கு எழும்புவதைத் தடுப்பதற்காக அலெக்ஸந்தரியாவுக்கு ஒரு தளமும் யுத்தக் கலங்களும் அனுப்ப துர்க்கிய அரசாட்சியாரைக் கேட்கும்படி மாலட் துரை கொன்ஸ்தந்தீன்புரிக்கு அனுப்பப்பட்டார். இதின்பேரில் மேற்படி கலகம் தணிகிறதாம்.—ஜர்மானிய ருஷிய சக்கரவர்த்திகள் இருவரும் டந்திஸிக் துறைமுகத்தில் நின்ற பிந்தினவரது மரக்கலம் ஒன்றில் கண்டு சம்பாஷித்தனர்.—பார்லிமெந்து சபை நொவெம்பர்மீ 12உ மட்டும் ஒய்ந்திருக்க ஆகஸ்துமீ 27உ கலைந்துவிட்டது.

**அமெரிக்கா.**—ஐக்கிய பிரதேசத்துச் சேனையின் குதிரைப் பட்டாளத்தைச் சேர்ந்த கார் தளபதியும் 117-உத்தியோகஸ்தரும் இந்தியரால் கொலையுண்டதாகச் செய்திவந்தது. இந்தியர் அனைவரும் கலகத்துக்கு வருவார்கள் எனத் திகிலுண்டாயிருக்கிறது.—பிரஜாதிபதியாகிய கார்பீல்ட் துரை மரணத்துக்கேதுவான கஷ்ட திசையிலிருந்து சற்றே லகுவடைந்தபின்பு உவாஷிங்தொன் நகரத்திலிருந்து தமது சொந்த வாசஸ்தானத்துக்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் மரித்துப்போனதாக பிந்தி சமாசாரம் வந்தது.

**அக்டோபர் நாள்-31. புரட்டாசிமீ 17௨-முதல், ஐப்பசிமீ 17௨-வரை.**

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அனுதினத் தியானம். |
| --- | --- | --- | --- |
| ச | 1 | ௧௭ | இரத்தப்பழிகளின் நகரத்திற்கு ஐயோ! நாகூம் 3:1. |
| ஞா | 2 | ௧௮ | நியாயம் புரட்டப்படுகிறது. ஆபகூக் 1: 4. |
| தி | 3 | ௧௯ | தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். 2: 4. |
| செ | 4 | ௨0 | என் ரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். 3:18. |
| பு | 5 | ௨௧ | ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள். செப்பனி. 1:7. |
| வி | 6 | ௨௨ | நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள். 2: 3. |
| வெ | 7 | ௨௩ | உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன். 3: 20. |
| ச | 8 | ௨௪ | உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள். ஆகாய் 1: 5. |
| ஞா | 9 | ௨௫ | என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார். 2: 5. |
| தி | 10 | ௨௬ | இன்னும் எருசலேமைத் தெரிந்துகொள்ளுவார். சகரியா 1: 17. |
| செ | 11 | ௨௭ | உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகி(றான். 2: 8. |
| பு | 12 | ௨௮ | என் தாசனை நான் வரப்பண்ணுவேன். 3: 8. |
| வி | 13 | ௨௯ | என்னுடைய ஆவியினாலேயே ஆகும். 4: 6. |
| வெ | 14 | ௩0 | பறக்கிற ஒரு புஸ்தகச்சுருளைக் காண்கிறேன். 5: 2. |
| ச | 15 | ௧ | அவருடைய நாமம் கிளையென்னப்படும். 6: 12. |
| ஞா | 16 | ௨ | நீங்கள் உண்மையாய் நியாயந்தீர்த்து. 7: 9. |
| தி | 17 | ௩ | சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள். 8: 19. |
| செ | 18 | ௪ | இரட்டிப்பான நன்மையைத் தருவேன். 9: 12. |
| பு | 19 | ௫ | தங்கள் பிள்ளைகளோடுங்கூடப் பிழைத்துத் திரும்புவார்கள். 10: 9. |
| வி | 20 | ௬ | எனக்குக் கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள். 11: 12. |
| வெ | 21 | ௭ | எனக்காக மனங்கசந்து அழுகிறார்கள். 12: 10. |
| ச | 22 | ௮ | திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும். 13: 1. |
| ஞா | 23 | ௯ | கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும். 14: 20. |
| தி | 24 | ௧0 | என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும். மல்கி. 1: 11. |
| செ | 25 | ௧௧ | நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையா? 2: 10. |
| பு | 26 | ௧௨ | இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன். 3: 1. |
| வி | 27 | ௧௩ | உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும். 4: 2. |
| வெ | 28 | ௧௪ | அவருக்கு இயேசு என்று பேரிட்டான். மத்தேயு 1: 25. |
| ச | 29 | ௧௫ | யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? 2: 2. |
| ஞா | 30 | ௧௬ | மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். 3: 8. |
| தி | 31 | ௧௭ | பரலோகராச்சியம் சமீபித்திருக்கிறது. 4: 17. |

## விசேஷ நாட்கள்.

2. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 16-ம் ஞாயிறு.
7. பௌர்ணமி.
9. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 17-ம் ஞாயிறு.
16. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 18-ம் ஞாயிறு.
18. பரி-லூக்கா சுவிசேஷகன் திருநாள்.
23. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 19-ம் ஞாயிறு.
அமாவாசை.
28. பரி-அப். சீமோன் யூதா திருநாள்.
30. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 20-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௧௧. நவம்பர்மீ. ௲௮௮௧௵.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை

### வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### ௮-ம் பிரிவு.

### பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைப் பற்றி.

**வினா.** விசுவாசப்பிரமாணத்தில் அடுத்த வாக்கியமென்ன?

**விடை.** பரிசுத்தவான்களின் ஐக்கியமும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

**வினா.** பரிசுத்தவான்கள் ஆர்?

**விடை.** புதியஏற்பாட்டில், கிறிஸ்தவர்கள் பொதுவாக அந்தப் பேரால் அழைக்கப்படுகிறார்கள்.

இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தான். அப். 9: 13.

அவன் லித்தாவூரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்குப் போனான். அப். 9: 32.

அவன் பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்தான். அப். 9: 41.

கிறிஸ்து சபையானது பரிசுத்த ஆட்கள் அல்லது பரிசுத்தவான்களின் கூட்டமாயிருக்கிறது. அதில் சேர்ந்திருக்கிற ஒவ்வொரு

வரும் இருதயத்திலும் செய்கையிலும் உண்மைப்படி பரிசுத்த
ரல்ல; ஏனென்றால் வெளியரங்கமான சபையில் அநேக மா
யக்காரரும் பொல்லாதவர்களும் இருக்கிறார்கள் என்பதை
நாம் அறிவோம். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் விருத்தசேத
னத்தினால் யூதச்சபைக்குள் சேர்ந்ததுபோல, இவர்களும் ஒரு
வகையாய் ஞானஸ்நானத்தினால் இந்தச் சபையில் சேர்ந்திருக்
கிறார்கள். அந்த முகாந்தரத்தினால் புதியஏற்பாட்டில் அவர்க
ளெல்லாரும் பரிசுத்தவான்களென்று சொல்லப்படுகிறார்கள்.

வினா. பரிசுத்தவான்களுக்கும் மற்ற ஜனங்களுக்குமுள்ள வித்தியா
சமென்ன ?

விடை. பரிசுத்தவான்கள் தேவனுக்கென்று நியமிக்கப்பட்டு, அசுத்தமா
னவர்களும் பரிசுத்தமற்றவர்களுமானவர்களிலிருந்து புறம்
பாகமாத்திரமல்ல உள்ளாகவும் பிரித்தெடுக்கப்பட்டவர்கள்.
அவர்கள் சுவிசேஷத்தை அறிக்கையிடுகிறவர்களாக மாத்திர
மல்ல, அதினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள். நீதியின்
மேல் பசியும் தாகமுமுள்ளவர்கள், அவர்கள் இருதயம் தேவ
னோடு இருக்கிறது. அவர்கள் பரலோக இராச்சியத்துக்கென்
று பிழைக்கிறார்கள்.

நீங்கள் எனக்கு ஆசாரிய இராச்சியமும், பரிசுத்த ஜாதியு
மாயிருப்பீர்கள். யாத். 19: 6.

நசரேயர் தங்களைக் கர்த்தருக்கென்று பிரித்துவைத்தார்
கள். எண். 6: 2.

தேவரீர் பூமியின் சகல சனங்களிலும் அவர்களை உமக்குச்
சுதந்தரமாகப் பிரித்தெடுத்தீரே. 1 இரா. 8: 53.

பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்
டார். சங். 4: 3.

அப். 13: 2. ரோ. 1: 1. 12: 1. 1 கொரி. 6: 19, 20. 2 கொ.
6: 17. 1 பேது. 2: 9.

வினா. அவர்கள் எப்பொழுது இப்படி பிரித்தெடுக்கப்படுகிறார்கள் ?

விடை. ஞானஸ்நானத்திலும் திடப்படுத்தலிலுமே. தேறின பரிசுத்த
வான்களும் ஒருகாலத்தில் மற்ற மனுஷரைப்போலவே இருந்
தார்கள்; ஆனால் இந்தச் சடங்காசாரங்களில் தாங்கள் செய்த
வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும்படிக்கான மனந்திரும்பு
தலும் விசுவாசமுமுள்ள அவர்கள், சபையில் சேர்க்கப்பட்ட
வர்களாகவும் வெளியரங்கமாய் தேவனுடைய சனங்களோடு
எண்ணப்பட்டவர்களாகவும் இருக்கிறது மாத்திரமல்ல, கிறி
ஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தஆவியினாலே பரிசுத்தமாக்கப்



பட்டவர்களாயும், உள்ளாக பாவக்கறையினின்று சுத்திகரிக்
கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்.

கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும்,
பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்
கிற தேவனுடைய சபையார். 1 கொரி. 1: 2

உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயி
னும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனு
டைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்
டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். 1 கொரி. 6: 11.

வினா. பரிசுத்தவான்கள் பின்பற்றத்தக்கதாக, ஏதாவது முன் மாதிரி
வைக்கப்பட்டிருக்கிறதா ?

விடை. ஆம். அவர்களுக்கு முன்மாதிரி உண்டு. தேவனுடைய மாசில்
லாத பரிசுத்தமே அவர்கள் பின்பற்றவேண்டிய மாதிரி. அவர்
கள் தேவனுடைய சித்தத்துக்கும், நியமத்துக்கும் தங்களை
ஒப்புக்கொடுத்து, பரிசுத்தத்தையே முயற்சிக்கவேண்டும்.

நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்
பீர்களாக. லேவி. 11: 45. 20: 7. 1 பேது. 1: 15, 16.

நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி
உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். 1 பே. 2: 21.

அவர்கள் தேவனுடைய பூரண பரிசுத்தத்தை அடையவேகூடாது.

கர்த்தரைப்போல பரிசுத்தமுள்ளவர் இல்லை. 1 சாமு. 2: 2.

தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே.
மத். 19: 17.

ஆனாலும் அவர்கள் பாவமறியாத கிறிஸ்துவாகிய தலையினுடைய மகி
மையான சரீரத்தின் அவயவங்களாக எப்போதும் முயற்சித்
துக்கொண்டே இருக்கவேண்டும். பரிசுத்தத்தில் வித்தியாச
மான அளவுகளுண்டு. ஆனாலும் எல்லா மெய்யான பரிசுத்த
வான்களும் அதில் பங்குடையவர்களாயிருந்து, மற்றவர்களி
டத்திலும் அந்தப் பரிசுத்தமுண்டாகும்படி உண்மையாய்
விரும்புவதோடு, தங்களில் தானே அந்தப் பரிசுத்தம் அதி
கரிக்கும்படி ஆசையோடு பிரயாசப்படுகிறார்கள். பசும்பொன்
பல அளவுகளாய் பிறுக்கப்பட்டாலும் அவைகளெல்லாம்
முக்கிய பொருளாகிய பொன்தான்.

தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. 1 கொ. 3: 17.

பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். 2 தீமோ. 1: 9.

பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோ
தரரே. எபி. 3: 1

நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தி
யும் உள்ளவர்களாயிருக்கவேண்டும். 2 பேது. 3: 11.

இந்தப் பரிசுத்தம் திவ்விய காரியங்களை விரும்புவதாலும், அவைகளுக்கு எதிரிடையானவைகளை வெறுப்பதினாலும் விளங்கும். இந்தப் பரிசுத்தமுடையவர்கள் தேவனையும், அவருடைய வசனத்தையும், அவருடைய ஏற்பாடுகளையும் விரும்புவார்கள். அவர்கள் அவருடைய பரிசுத்த ஓய்வுநாளை ஆசரித்து, அவருடைய ஊழியக்காரரை கனம்பண்ணுவார்கள். அவருடைய ஆலயத்துக்கு அடிக்கடி போவதும், அவருடைய ஜனங்களோடு சாவகாசம்செய்வதும் அவர்களுக்குப் பிரியமாயிருக்கும். அவர்கள் கிறிஸ்துநாதரை அடைந்துகொள்ளும்படி விரும்பி, ஜெபத்தினால் தங்கள் பரமபிதாவோடு ஐக்கியப்பட இடங்கிடைத்திருக்கிறதை பெரிய சலாக்கியமாக எண்ணுகிறார்கள். அதுவுமல்லாமல் மறு பக்ஷத்தில் அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் பாவத்தை வெறுத்து, உலகத்தை விட்டு பிரிந்து, தங்களைத் தேவனுக்கென்று பிரதிஷ்டைசெய்கிறார்கள்.

வினா. அவர்களைப் பரிசுத்தராக்குகிறது ஆர்?

விடை. தேவனே:—நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் தேவனிடத்திலிருந்தே வருகிறது.

அவரோ தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். 1 கொரி. 1: 30.

ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினால், 2 தெச. 2: 13; 1 பேது. 1: 2.

வினா. இருதயத்தில் பரிசுத்தம் தரித்திருக்கிறதெப்படி?

விடை. விழிப்பினாலும், ஜெபத்தினாலுமே. பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளவும், அவர் நம்மில் தங்கியிருக்கவும் தேவன் நியமித்திருக்கிற எத்தனங்கள் இவைகளே.

வினா. அவர்கள் பரிசுத்தராயிருக்கவேண்டிய அவசியமென்ன?

விடை. ஏனென்றால் தேவனோடு அவர்கள் இருக்கவேண்டிய ஐக்கியம் பரிசுத்தமாயிருக்கிறது. ஒன்றுக்கொன்று முழுவதும் எதிரிடையான பழக்கமும் விருப்பமுள்ளவர்களுக்குள் ஐக்கியமிருப்பது கூடாத காரியம். பாவம் தேவனுக்கும் நமக்கும் இடையில் பிரிவினை உண்டாக்குகிறது.

இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ? ஆமோ. 3: 3.

கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? 2 கொரி. 6: 15.

வினா. பரிசுத்தவான்கள் யாரோடு ஐக்கியமாகிறார்கள்?

விடை. 1. பிதாவோடு ஐக்கியமாகிறார்கள்.



எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. 1 யோவா. 1: 3.

1 யோவா. 3: 1. 2 பேது. 1: 4. யோவா. 14: 23.

2. குமாரனோடு ஐக்கியமாகிறார்கள்.

தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். 1 கொரி. 1: 9.

யோவா. 14: 19. 15: 1, 4. 17: 20, 23. 1 கொரி. 12: 27. 2 யோவா. 9.

கிறிஸ்து நம்முடைய தன்மையையும் பலவீனங்களையும் ஏற்றுக்கொண்டு, நம்முடைய பாவங்களையும் சாபத்தையும் சுமந்தார்.

பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். எபி. 2: 14.

கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். ஏசா. 53: 6.

அதற்கு மாறாக நாம் அவருடைய சுபாவத்துக்கும், அவருடைய இரத்தத்தின் கிரயத்துக்கும் பங்காளிகளாகிறோம்.

அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம். யோவா. 1: 16.

1 கொரி. 12: 13. கலா. 3: 28. எபே. 2: 22.

1. அவருடைய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகிறார்கள்.

திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு. 2 பேது. 1: 4.

2. அவருடைய ஆவிக்குப் பங்குள்ளவர்களாகிறார்கள்.

நீங்கள் தேவனுடையஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம். 1 கொரி. 3: 16, 17.

3. அவருடைய பாடுகளுக்கு ஐக்கியமாகிறார்கள்.

நான் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கு ... பிலி. 3: 10.

4. அவருடைய மகிமையில் பங்கடைகிறார்கள்.

அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். 2 தீமோ. 2: 12.

5. பரிசுத்தஆவியானவரோடு ஐக்கியமாகிறார்கள்.

பரிசுத்தஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்னதெல்

லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். யோவா. 14: 26.
2 கொரி. 13: 14. பிலிப். 2: 1.

நாம் பரிசுத்தஆவியினாலே சுத்திகரிக்கப்பட்டு, அந்த ஆவியானவரா லே பிதாவோடும் குமாரனோடும் ஐக்கியமாகிறோம். இதினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாகி, புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறோம்.

எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். ரோ. 8: 14.
1 கொரி. 3: 16.

இப்பொழுது தேவனோடு இருக்கிற எல்லா ஐக்கியமும் எழுதப்பட்டிருக்கிற வசனத்தின் மூலமாகவே உண்டாயிருக்கிறது. பூர்வகாலத்தில் தேவன் தீர்க்கதரிசிகளிடத்திலும் பரிசுத்த மனிதரிடத்திலும் தரிசனைகளினால் பேசினார். ஆனால் இந்த வகையான ஐக்கியத்தை வழங்குவதை வெகுகாலமாய் விட்டுவிட்டார்.

அப்பொழுது நீர் உம்முடைய பக்தனுக்குத் தரிசனமாகி பேசினீர். சங். 89: 19.

பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசிநாட்களில் குமாரன்மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். எபி. 1: 1, 2.

நாம் பாவத்தை விட்டுவிட தீர்மானம்பண்ணி, கிறிஸ்துவில் உறுதியான நம்பிக்கை வைத்து, துன்பத்தை தாழ்மையும் பொறுமையும் அமைதலுமுள்ள ஆவியோடு சகிக்கும்பொழுது தேவனோடு ஐக்கியமுள்ளவர்களாக விளங்குகிறோம். இந்த ஐக்கியம் திவ்விய எழுப்புதலினால் உண்டாகி, தேவவசனத்தினாலே சாட்சியிடப்பட்டு, அதிகம் அதிகமாக உன்னதமாகிறது.

தேவனுடைய ஆவிக்குப் பதிலாக தற்புகழ்ச்சியும் பெருமையுமுள்ள ஆவியை உண்டாக்குகிற ஒரு பெரிய மோசமுண்டு. அப்படிப்பட்ட மோசமான தப்பிதத்துக்கு நம்மைக் காத்துக்கொள்வோமாக.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி)

சகல லோகமும் நிறைந்த சருவேசர் சந்நிதிக்
அகல நடவெளில் எங்ஙனம் அடுக்கும் அலதோர்



புகலு மில்லை உயிர் பொன்றலு மின்றென்று பொருமி
இகலி யேகிய கனா நனவெதிர்ந்த தென்னையே. 487

கனவுறழ்ந்த பயபீதி யுறுகாட்சி கணமும்
நினைவில் வந்துமுன் நிகழ்ந்திடுதல் போலவிலவும்
மனது புண்பட இனைந்துயிர் வருந்தி வசமில்
தனுவு மிவ்வணம் நடுங்குமிது காண்டி தகவோய். 488

என்றிவாறு கனவன் சொலி யிறுத்தலும் எதிர்
நின்ற வேதியனும் என்னைகொல் பயப்படுதல் நீ
மன்றல் நாயகன் மகாகருணை வாரிதியை யென்
சென்று கூடலை யிதென்னுன் மதி செப்புதியெனா. 489

ஐயகேள் அளியன் எத்தனமிலா அமைதியில்
வையகத்திறுதி நாள் குறுகி வந்துபிடியாக்
கைய ரோடென்னை விடுத்த தென்காலருகிலே
வெய்ய பாதலம் விழிப்பட வெடித்ததுபுவி. 490

நீனிறக் கருமுகிற் கிடைஅமர்ந்த நிருபர்
ஆனனக்கதிர் அலர்ந்த இருநேத்திரமும் என்
ஊனகத்துருவ நோக்கிய உருத்தமுகவெங்
கானகத்து வயமாவின் இருகட்பொறிகள்போல். 491

ஆதலால் இனி அசாத்தியம் இரக்ஷை அளியேற்க்
ஓதலாவ துளதொன்றுமிலை யென்றுமுலவாப்
பாதலாக்கினி யெனக்குரிய பங்குபரிவென்
ஈதெலாம் அயதி யீட்டுபய னென்றுரை செய்தான். 492

வேறு.

கடின சித்தன் கனாத்திறம்
முடியக் கேட்டனை முன்னவற்க்
அடிய நின்மனத் தாயதென்
னொடிதி யென்றனன் நூல்வலான். 493

மற்றிவன் புகல் வாய்மையால்
உற்றதென்னுளத் தோர் பயம்
அற்றதாயினும் ஆரிய
முற்றும் நம்பினன் முதல்வனை. 494

தீக்கவல்ல வெந்தீவினை
போக்கவல்லதும் புண்ணியம்
ஆக்கவல்லதும் அறுதிநாட்
காக்க வல்லதுங் கருணையே. 495

என்னுளத்தியல் பீதெனப்
பன்னினான் பரமார்த்திகன்

அன்ன தோர்ந்தருளாளனும்
பின்னர் மற்றிது பேசுவான். 496

கடை யுகத்தெழு காட்சிகண்ட்
உடையு நெஞ்சன் உறுந்துயர்
அடைய நன்கறிந்தாய் வழிக்க்
இடை மறந்திடல் எம்பி நீ. 497

காட்சி தொக்க இக்கடிமனை
மாட்சி கண்டு மனத்துள் வைத்த்
ஆட்சி செய்பவர் அருள்வழி
நீட்சி யென்று நினைத்திடார். 498

அனையதாதலின் அன்ப இம்
மனையின் மாட்சி மதித்து நல்
நினைவில் நேரும் நெறிச்செலீஇ
முனைவன் நாட்டை மொய்ம்பினோய். 499

பத்த பாலனராம் பரி
சுத்த ஆவியின் துணையுனக்க்
எத்திறத்தினு மியையு மால்
சித்த சஞ்சலந் தீர்தி நீ. 500

ஈசநேசம் இயைந்த மெய்த்
தேசிகன் இவை செப்பியே
ஆசிகூறி அனுப்பினன்
மாசிலானும் வழுத்துவான். 501

வேறு.

அகத்திருள் இரிந்தோட அருள்மொழிச் சுடரேற்றி
மகத்துவ நெறிகாட்டும் வலவ இம்மனைமுன்றில்
இகத்தையும் இனிதாகப் பரத்தையு மெதிர்காட்டி
மிகத் தெருட்டினை ஐய விள்ளுவதறியேனே. 502

பேர் உதவியை உள்ளும் பெற்றிமையலதியானோர்
நேர் உதவிடு கைம்மா றுளதுகொல் நினக்கென்று
ஆருயிரனையானுக் கன்பின் அஞ்சலிசெய்து
சீருயர் கதிசேரும் செந்நெறிக் கொடுபோனன். 503

விதிவிலக் கிகந்திட்டு வினைச்சுமை சுமந்தொல்கி
முதுகுளுக் குறுமேனும் இடுகிய முடுக்கேனும்
சதியெதும் அணுகாமல் சமைத்துள ஈடேற்ற
மதிலிரு மருங்காக வழியினியன போனன். 504

காவலன் அருள்சேய் செங்கமல மெல்லடி தோய்ந்த
தாவரு நெறியூடு தனிவரு மறைவாணன்



பாவரு திருநாமப் பதிகம் இங்கிதமாக
மேவர இனிதோதி விரைகுவ லெனவுன்னு. 505

தேவாரம். திருநாமப் பதிகம். பண். காந்தாரம்.

மன்னுயிர்த் தொகுதி ஈடேற வானினும்
இந்நிலத்தினும் பிறிதிலையென்றே மறை
பன்னியேத் தெடுப்பது பாவஜீவருக்க் 1
இன்னமு தாயது யேசுநாமமே.

தெருளெலாந் தனதெனும் தெய்வமாமறைப்
பொருளெலாம் தனதெனப் பொலிந்திலங்குவத்
அருளெலாம் அன்பெலாம் அறனெலாம் வளர்த்த் 2
இருளெலாம் தொலைப்பது யேசுநாமமே.

பன்னருங் குணத்ததும் பவித்திரத்ததும்
துன்னரும் பொருளதும் தூய்மையுண்டுளோர்
நன்னர் நெஞ்சத்திடை நடித்து நிற்பதும் 3
என்னுயிர்த் துணையதும் யேசுநாமமே.

நித்திய ஜீவனும் நெறியும் போதமும்
சத்திய நிலையமுந் தானென்றுள்ளது
பத்தியிற் பரவுவோர் பரமவீடுற 4
இத்தலத் திறுத்தது யேசுநாமமே.

பொன்னுலகத்துளோர் புணரிசூழ்புவி
தன்னிலுள்ளோர் தலைதாழ்ந்து போற்றிட
மன்னிய தகையது மருவிவானிழிந்த் 5
இந்நிலம் புரப்பது யேசுநாமமே.

நன்னெறி புகுத்திடும் நவையி னீக்கிடும்
இன்னலை யகற்றிடும் இகல் செகுத்திடும்
உன்னதத் துய்த்திடும் ஒருங்கு காத்திடும் 6
எந்நலத்தையும் தரும் யேசுநாமமே.

அன்பினுக் குருவம் நல்லறத்துக் காலயம்
மன்பதைக் கருள்மழை வழங்குபைம்புயல்
நின்பர மென்றினை வோர்க்கு நித்ய பேர் 7
இன்ப சஞ்சீவிதம் யேசுநாமமே.

வஞ்சகக் கூளியை மடிக்கு மந்திரம்
பஞ்ச இந்தியங்களைப் படுக்குமந்திரம்
செஞ்செவே ஜெகமருள் தீர்க்கு மந்திரம் 8
எஞ்சலில் மந்திரம் யேசுநாமமே.

கூறுமந்திரம் மறை குணித்த வேதியர்
தேறுமந்திரம் ஜெபத்தினுக்குச் செவ்விதான்

வேறுமந்திரமில்லை வேதனுர் செவிக்க்
ஏறுமந்திரம் கிறிஸ்தியேசு நாமமே. 9

தருமமும் ஒழுக்கமுந் தவமும் ஞானமும்
கருமமும் ஈதலாற் கருதில் யாதுமோர்
அருமையும் பயனும் ஒன்றில்லை யாதலால்
இருமையும் துணையெனக்கியேசு நாமமே. 10

நஷ்டமே தருஜெகம் நகைக்க நாளெலாம்
கஷ்ட ஜீவனஞ்செய்து கழிப்பமாயினும்
துஷ்ட வல்வினையெலாம் தொலைக்கும் தூமன
இஷ்ட காமியந் தரும் யேசுநாமமே. 11

---

கண்ணிய நறுந்தேனிற் கன்னலில் மதுரிக்கும்
பண்ணிலவிய கீதம் பயிலிசை யொடுபொடிப்
புண்ணிய குருநாதன் பொன்னடி விழிநீரால்
மண்ணி அன்பலர் தூவியேகினன் வழிபட்டே. 506

(இன்னும் வரும்.)

---

# The World's Birth.

# உலகப் பிறப்பு.

## IX. அதிகாரம்.

### ஆறும் நாள் கிரியை.

ஆதி. 1: 24, 25.

"தேவன் பூமியிலுள்ள ஜாதி ஜாதியான நாட்டுமிருகங்களையும் ஜாதி ஜாதியான காட்டுமிருகங்களையும், பூமியில் ஊருகிற சகல ஊர்வனவற்றையும் உண்டாக்கினுர்."

பூமியிலே 600-வகையான நாற்கால் ஜீவன்களும் 700-வகையான ஊர்வனங்களும் இருக்கின்றன. தரிசிக்கக்கூடிய 44,000-வகையும் தரிசிக்கக்கூடாத எண்ணிறந்த வகையுமான பூச்சிகளும் இருக்கின்றனவாம்.

மிருகங்களில் அதிக வீரியமுள்ளது சிங்கம். பெரிய குதிரை, நாய், பீவர், எறும்பு, ஈ, வானரம், ஓரான் ஒட்டாங் என்ற மிருகங்கள் புத்திக்கூர்மையுள்ளது. பெலமுள்ளது யானை. மகா தந்திரமுள்ளது நரி. நாய் மிகுந்த பட்சமுள்ளது. ஒட்டகமானது ஒரு நாழிகை வழி தூரத்திலிருக்கிற தண்ணீரை மோப்பத்தால் அறியும். பூனைக்கு இருட்டிலே கண் தெரியும். முதலையின் முதுகில் துப்பாக்கிக் குண்டுக்கும் அசையாத பெலனுள்ள செதிள்கள் உண்டு. காண்டா மிருகத்தின்



உடல், தோலும் இப்படியே குண்டுக்கும் அசையாதபடி உறுதியாயி
ருக்கும். குதிரைகள், மாடாடுகள் முதலியவைகள் மனுஷனுக்கு மிக
வும் உபயோகமுள்ளவைகள்.
அநேக மிருகங்களுடைய மாம்சத்தை மனிதர் போசனமாக உப
யோகிக்கிறுர்கள். ஜலப்பிரளயத்துக்குப்பின்பு தேவன் அதற்கு உத்தர
வுபண்ணினுர். மனிதனுடைய பாவத்தினுலே மிருகங்கள் அநேக உபத்
திரவங்களை அடைகின்றன. அவைகள் அழிவுக்குரிய அடிமைத்தனத்தி
னின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமை
யான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளுங்காலம் இனி அவைகளுக்கு
வரும். தேவன் இனிமேல் உலகத்தை ஜலத்தால் அழிக்கமாட்டேன்
என்று மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்
என்று சொல்லியிருப்பதையும் ஆதி. 9: 10., ஓய்வுநாளில் அவைகளை
இளைப்பாறச்செய்ய உத்தரவுகொடுத்திருப்பதையும் யாத். 20: 10., நினி
வே பட்டணம் அழிக்கப்படாதிருப்பதற்கு அதில் அநேக மிருகஜீவன்
களிருப்பதினுலும் என்று முகாந்தரம் சொல்லியிருப்பதையும் யோனு
4: 11., அவைகளுக்குக் குரூரம்செய்யப்படாதென்று கட்டளையிட்டிருப்
பதையும் யாத். 23: 5—19. உபா. 22: 6, 7. பார்க்கும்போது தேவன்
மிருகஜீவன்களுக்காக கவலையுள்ளவராயிருக்கிறுர் என்று அறியலாம்.
எகிப்தியர் முதலான ஜாதியார் மிருகங்கள் மனிதரைவிட மேன்
மையானவைகளென்றெண்ணி, அவைகளில் அநேகத்துக்குத் திவ்ய
வணக்கம்செய்து வந்தார்கள். நம்முடைய தேசத்தார் கருடனையும்,
நாகத்தையும் வணங்கிவருகிறுர்கள். கிழக்குத் தேசத்தாரில் சிலர் மனி
தனைவிட்டுப் பிரிந்துபோன ஆத்துமா மிருக உடலில் புகுந்து, கிரியை
களை நடப்பிக்கிறதாக எண்ணுகிறுர்கள். பிரான்சியரில் சிலர் பிசாசுக்
கள் மிருகங்களுக்குள் புகுந்திருப்பதால், அவைகள் கெடுதிகள் செய்
கின்றன என்று சொல்லுகிறுர்கள்.
"தேவன் பூமியில் ஊருகிற சகல ஊர்வனவற்றையும் உண்டாக்
கினுர்." உலகத்தில் ஊர்ந்து, நகர்ந்து, பறந்து வாழும் புழு, பூச்சி
கள் அநேகவிதமுண்டு. அவைகளில் விஷஜெந்துக்களான நாகம், விரி
யன் முதலியவை வருஷத்துக்கொருதரம் தோலுரிக்கும். சர்ப்பம்
கண் மூடாமல் தூங்கும். சர்ப்பம் சகல காட்டுமிருகங்களைப் பார்க்கி
லும் தந்திரமுள்ளது. பசாசு சர்ப்பத்தைக்கொண்டு முதல் மனுஷியை
பாவத்துக்குள்ளாக்கிற்று. நாகம் இராகங்களை இனிமையாய்க் கேட்
கும். விரியன், பாம்பாட்டி எவ்வளவு விந்தையாய் ஊதினுலும் தன்
காதை அடைத்துக்கொள்ளும்.
பல்லி ஜாதி மனிதர் வாசஞ்செய்யும் வீடுகளில் அதிகமாய்த் தங்
குவதுண்டு. அது சப்திப்பதைப்பற்றி ஒரு சாஸ்திரங் கட்டி அதற்கு
கெளளி சாஸ்திரம் என்று பேரிடப்பட்டிருக்கிறது. அதை நம்பவே
கூடாது. "ஊருக்கெல்லாம் சாஸ்திரம்சொல்லும் பல்லி கூழ்ப்பானை
யிலே விழுந்ததாம்" என்பது பழமொழியல்லவா?
தேனீயானது மெத்த சுறுசுறுப்புள்ளது. தேனீக்கூட்டிலே 30,000
ஈக்கள் மொய்த்திருக்கும். தேனீக்கு வல்லயம்போன்ற இரண்டு கொ
டுக்குண்டு. ஒவ்வொரு கொடுகின் பக்கத்திலும் தூண்டில்போன்ற
எட்டு தும்பிகளுண்டு. அது கொட்டும்போது வேதனையைக் கொடுக்
கும். ஆண் ஈக்களுக்கு கொடுக்கில்லை, தேனீக்கள் பூக்களிலுள்ள மது
வையுண்டு அதைத் தேனுக்கும். அவைகளுக்குள் இராஜாத்தியாய்
ஒரு ஈ உண்டு. அது எங்கே போகுமோ அங்கே மற்ற ஈக்கள் போம்.
இராஜ ஈயின் வால் மற்றவைகளைவிட சிறியதாயிருக்கும். ஆனுல் நீண்டு

பருத்திருக்கும். அதின் வயிறும் கால்களும் அபரஞ்சிபோல சுத்த மஞ்சள் நிறமாயிருக்கும். இராஜாத்தியாகிய ஈ மாத்திரம் இரண்டு மாசங்களுக்குள் 10,000 அல்லது 20,000 முட்டைகளிடும். அவைகள் கொஞ்சக்காலத்துக்குள்ளாக குஞ்சுகளாக மாறும். தேனீக்கள் மெத்த ஜாக்கிரதையாய் வேலைசெய்யும். சில, காற்றாவது பூச்சிகளாவது உள்ளே வராதபடி கூட்டிலுள்ள வெடிப்புகளை அடைக்கும். சில, கூட்டுக்குள் ஏதாவது போயிருந்தால், அதை வெளியே இழுத்துக்கொண்டு போட்டுவிடும். அதை வெளியே தூரத்தத் திராணியில்லாதிருந்தால் மெழுகை வைத்து அடைத்துப்போடும். மற்றவைகள் குளிர்காலத்துக்காகத் தேனைக் கூட்டிச் சேர்க்கும்.

தேன் காட்டிப்புள் என்ற ஒரு பட்சி ஆப்பிரிக்காவிலுண்டு. அது தேனைத் தேடுகிற யாரையாவது கண்டால், ஒருவித சில்லோசையிட்டு, அவனுக்கு முன்பாக பறந்து, தேன் ஈ இருக்கிற மரத்திலே போய்த் தனக்கும் கொஞ்சங் கிடைக்குமென்று காத்திருக்கும். ஆப்பிரிக்கானர் அதின் சகாயத்தினாலே, தேன் எடுத்துச் சாப்பிட்டு, அதற்குங் கொஞ்சம் கொடுப்பார்கள்.

தேனீக்களைப்போல மனிதர் வருங்காலத்துக்கென்று ஆயத்தப்படுத்திக்கொண்டால் எத்தனை நன்மையாயிருக்கும். தேன் மதுரமுள்ளது. கர்த்தருடைய வேதமோ தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளது.

சிலந்திப்பூச்சி தன் நூலால் வலைபோல கோட்டை கட்டி தனக்கு ஆகாரமான பூச்சிகளைப் பிடிக்கும். சிலவேளை பெரிய தேளையும் பிடித்துத் தின்னும். சிலந்தி அற்பப் பூச்சியாயிருந்தும் அது அதிக விவேகமுள்ளது என்று சாலோமோன் சொல்லியிருக்கிறான்.

வண்டு ஜாதிகளில் மாத்திரம் லட்சத்துக்கு மேற்பட்ட வகையுண்டு. வண்டுகளுக்கு அநேக கண்களுண்டு. சில வண்டுகள் புஷ்பங்களிலிருக்கிற தேனைக் குடிக்கும்.

இந்தப் பூமியிலே மாத்திரம் நடமாடுகிற ஜெந்துக்களைக் கணக்கிட யாரால் கூடும். அவைகள் எல்லாவற்றுக்கும் தேவன் தமது கையைத் திறந்து, இரம்மியமாய்ப் போஷித்து வருகிறார். அவருடைய ஆளுகை சருவத்தின்மேலும் சென்று வருகிறது. பூமியையும் அதின் நிறைவையும் நாம் கவனிக்கையில், சர்வவல்லமையுள்ள கடவுளுக்கு நாம் எவ்வளவாய் நன்றியறிதலையும், தோத்திரத்தையுஞ் செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். கர்த்தருடைய தூதர்களே நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள். அவருடைய சேனைகளே நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள். சூரிய சந்திரரே நீங்கள் அவரைத் துதியுங்கள். பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே அவரைத் துதியுங்கள். வானாதி வானங்களே அவரைத் துதியுங்கள். ஆகாயமண்டலத்தின்மேலுள்ள தண்ணீர்களே அவரைத் துதியுங்கள். அவைகள் கருத்தரின் நாமத்தைத் துதிக்கக் கடவது. அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது. பூமியிலுள்ளவைகளே கர்த்தரைத் துதியுங்கள். மகா மச்சங்களே, சகல ஆழங்களே, அக்கினியே, கல்மழையே, உறைந்த மழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே, மலைகளே, சகல மேடுகளே, கனிமரங்களே, சகல கேதுருக்களே, காட்டு மிருகங்களே, நாட்டுமிருகங்களே, ஊரும்பிராணிகளே, இறகுள்ள பறவைகளே அவரைத் துதியுங்கள். அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது. அவருடைய மகிமை பூமிக்கும் வானத்துக்கும் மேலானது.

---



# X. அதிகாரம்.

## பூலோக புராதனம்.

பூமியானது ஏறக்குறைய 6,000-வருஷத்துக்குமுன்னே சிருஷ்டிக்கப்பட்டதென்று சில ஆண்டுகளுக்கு முன்வரையும், கிறிஸ்தவர்கள் பொதுப்பட எண்ணங்கொண்டிருந்தார்கள். பூவக சாஸ்திரத்தைப் பார்க்கையில் அந்த எண்ணம் தப்பிதம் என்று தெளிவாயிருக்கிறது. மனுஷன் உண்டாக்கப்பட்டதற்கு அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே, உலகம் உண்டாயிருந்ததென்றும்; அநேக வகைப் பிராணிகளும், தாபரங்களும் அதிலே இருந்ததென்றும் பிரத்தியக்ஷமாய் விளங்குகிறது. பூமியின் வெளித்தரையாகிய பூகியத்துக்குக் கீழ் 7-அல்லது 8-மைல் கனதியான பாரடுக்குகளிருக்கிறது. அவைகள் பல வகையான தாபரங்கள், இப்பிகள், மச்சங்கள், ஊர்வனங்கள், பட்சிகள், விலங்குகள் என்பவற்றின் சேடங்களாகிய உடல்களால் நிறைந்திருக்கிறது. மனிதசிருஷ்டி அவற்றில் இல்லை. தற்கால விலங்குகளின் உடலுமில்லை. மேலாக பரவியிருக்கிற வெளித் தரைப்படலமானது 200-அடி ஆழமுள்ளது. அதில் நரசேடங்கள், நாணயங்கள், யுத்த தளவாடங்கள், கிருஷிபணிமுட்டுகள் முதலியவைகளால் நிரம்பியிருக்கிறது.

அந்தந்த அடுக்குகள்தோறும் நிரசவஸ்துவாய்ப் புதையுண்டிருக்கும் மிருகங்கள், மச்சங்கள், தாவரங்கள் முதலியவற்றின் சேடங்களின் விபரத்தைப் பார்க்கையில், பூமியின் பாரடுக்குகள் ஒன்றின்பின் ஒன்றாய் உருவாகி வருகையில் உலகத்திலே உண்டாயிருந்து பின்பு வர்க்கமற்றுப்போயிற்றென்று துலங்குகிறது.

அந்தப் பழைய காலத்து வஸ்துக்கள், இக்காலத்திலுள்ளவைகளுக்கு சில காரியங்களில் ஒற்றுமையாயிருந்தாலும், பெரிய காரியங்களில் வேற்றுமைப்பட்டிருக்கிறது. அவைகள் தற்கால வர்க்கங்களைவிட அநேக மடங்கு பருமனுள்ளவைகள். பிலீசியோசாரஸ் என்று பேருடைய பல்லியைப்போன்ற ஒரு மிருகம் 18-அடி நீளமுள்ளது. அதின் கழுத்து 8-அடி நீளம். அதின் தலை சிறுத்துப் பல்லியின் தலை ஒத்ததாயும், அதின் கழுத்து நீண்டு பாம்பின கழுத்துப்போலவும், கழுத்துக்குக் கீழுள்ள அதின் உடல் மீன்வடிவமாயும, அதின் முதுகும் வாலும் நாற்கால் ஜெந்தின் சாடையாயுமிருந்தது. அது தண்ணீரிலும், தரையிலும் சஞ்சரிக்கக் கூடிய சத்துவமுடையது.

பலாயியோதீரியம் என்னப்பட்ட ஒரு மிருகம் இருந்தது. அதைச் சேர்ந்த வர்க்கங்களில் 12-வகை நிரசவஸ்துவாய்க் கண்டெடுக்கப்பட்டது. அவைகளில் சில யானை அம்மாத்திரம் பெரிதாயும், மற்றவை குதிரை அவ்வளவு பருமனாயுமிருக்கிறது.

மெக்லோசாரஸ் என்றழைக்கப்பட்ட பெரும்பல்லி என்ற ஓர் வகை மிருகமிருந்தது. அது 40-முதல் 70-அடி வரையும் நீளமுள்ளது. அதின் முன்னங்கால்கள் 3-அடியும் பின்னங்கால்கள் 6-அடியும், தலை 5-அடியும், வால் 15-அடி நீளமும், உடல் 22-அடி சுற்றளவுள்ளதாயுமிருந்தது. அதின் கால்கள், பாதங்கள் கரடியின் சாடையும், உடல் பன்றியின் உருவமும், தலை முதலை வடிவமாயுமிருந்தது. அது தண்ணீரிலும் தரையிலும் தாபரிக்கச் சத்துவமுள்ளது. அது அளவிறந்த தேக

பராக்கிரமமுள்ளது. அதின் பற்கள் மாம்சம் பட்சிக்கும்படிக்கேற்ற தாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்க்கையில் அது மற்றும் ஜீவபிராணிகளுக்கு வெகு தீமைசெய்திருக்கும் என்று தோன்றுகிறது. அதற்கு ஒப்பான மிருகம் ஒன்றும் இப்போது உலகத்தில்இல்லை.

நாம் நடமாடுகிற தரையில் முக்கால் பங்குக்குமேல் முன்னொரு காலத்தில் சின்னம் சிறிய ஜீவிகளாயிருந்ததென்று எண்ணப்படுகிறது. இப்பிராணிகள் மகா நுட்பமானவைகளாதலால் ஒரு அங்குல கனத்துக்கு பதினாயிரம் கோடி பிராணிகள் வேண்டும். அவைகள் பெரும் பாளமாக நெருக்குண்டு அநேக யுகங்களுக்குப் பின் கல்லாய் மாறிப் போயிற்று.

கடவுளின் கிரியை எவ்வளவோ அற்புதமானது. எவ்விடங்களும் பிராணிகளால் நிரம்பியிருக்கிறது. நமது போசனபானதிகள் மாத்திரமல்ல, கட்டுவேலைகளுக்கு வழங்கும் உபகரணங்களும் ஒருகாலத்தில் சிற்றுயிர்க் கூட்டங்களாய் இருந்ததென்று நாம் சிந்திக்கும்போது எவ்வளவோ ஆச்சரியமாயிருக்கிறது.

பூவக சாஸ்திரத்தை ஆராயுமளவில் இந்தப் பூமியானது மனிதர் வாசஞ்செய்வதற்கென்று பலதரம் மாறிமாறி உருவாக்கப்பட்டு ஆயத்தப்படுத்தப்பட்டதாய்த் தோன்றுகிறது.

---

## தாவீதரசன் சரிதை.

*தாவீது இரகசியமாய் பெத்லெகேமில் அபிஷேகம் பண்ணப்படல். கி. பி. மு. 1063.*

**1 சாமு. 16-அதி.**

தேவன் சவுல் இராசாவை அவன் செய்த பல பாவங்களினிமித்தம் இஸ்ருவேலின்மேல் இராசாவாயிராதபடிக்கு அவனைப் புறக்கணித்துப்போட்டதற்காகவும், சாமுவேல் தீர்க்கதரிசியும் மற்றும் பக்தியுள்ள பிரபுக்களும், சவுல் இராசா சீக்கிரம் இறந்துபோவார். அவருக்குப்பின் இராசாவாயிருப்பவர் யாரென்பதைக் குறித்தும் பயமும் கவலையுமாயிருந்ததற்காகவும், ஆறுதலுண்டாக தாவீதை இராசாவாக்க தேவன் தெரிந்துகொள்ளுகிறார். சாமுவேல் தீர்க்கதரிசியும் சீக்கிரம் மரிக்கப் போகிறவரானபடியினாலே, அவர் சாகுமுன், ஏற்றவேளையில் தாவீதை அபிஷேகம்பண்ண அவசியம் நேரிட்டது. சவுல் இராசாவாகத் தெரிந்துகொள்ளப்பட்டதற்கும், தாவீது தெரிந்துகொள்ளப்பட்டதற்கும் அதிக வித்தியாசமுண்டு. சவுலை சனங்கள் தாமே தேவஉத்தரவுக்கு மிஞ்சி, தங்களுக்கே மகிமையும் சௌக்கியமுமுண்டாகும்படி தங்களுடைய கெட்ட விருப்பத்தின்படியே தெரிந்துகொண்டார்கள். தாவீதையோ தேவன் தமது சித்தத்தை நிறைவேற்றத்தக்கதாகவும்



(அப். 13: 22.) இராஜ கோத்திரத்திலுள்ளவனை (ஆதி. 49: 10.) தெ
ரிந்துகொண்டார். சவுல் தள்ளப்பட்டாலும் இஸ்ருவேலரோ மேய்ப்
பனற்ற ஆடுகளைப்போல் கைவிடப்படுவதில்லையென்பதாய் தேவன்
சாமுவேலுடைய துக்கத்தை தாவீதின் அபிஷேகத்தால் மாற்றுகிறார்.
சவுல் இராசாவாகும்போது தைலக்குப்பியால் அபிஷேகம்பண்ணப்
பட, 1 சாமு. 10: 1. தாவீதோ தைலக்கொம்பினால் அபிஷேகம்பண்
ணப்பட்டார். 1 இரா. 1: 39. குப்பியிலுள்ள தைலம் கொஞ்சமும், சா
டையுமானது. கொம்பிலுள்ள தைலமோ அதிகமும் நிலையுமுள்ளதாம்.
ஆகையினால் லூக். 1: 75. “தேவன் தம்முடைய தாசனாகிய தாவீதின்
வம்சத்திலே நமக்கு இரட்சண்ணிய கொம்பை ஏற்படுத்தினார்” என்று
சொல்லியிருக்கிறது. சாமுவேல் தீர்க்கதரிசி தேவஉத்தரவுப்படி பெத்
லெகேமுக்குப் போனபோது, அவ்விடத்து மூப்பர்கள் தங்கள் கிரா
மம் மிகவும் சிறியதாயிருக்கிறபடியால் (மீகா. 5: 2.) தீர்க்கதரிசி விசே
ஷித்த முகாந்தரத்துக்காகத்தான் அனுப்பப்பட்டிருக்கிறாரென்ற எண்
ணத்தாலும், தங்கள்மேல் தேவகோபாக்கினை கூறும்படி வந்திருக்கிறா
ரென்ற நினைவாலும், சாமுவேல் தீர்க்கதரிசியின்பேரில் சவுல் இராசா
இப்போது வெறுப்படைந்திருப்பதை அறிந்திருந்தபடியாலும் பயந்
தார்கள். தீர்க்கதரிசியோ அவர்களுக்கு சமாதானஞ்சொல்லி, உங்க
ளைப் பரிசுத்தம்பண்ணிக்கொண்டு, யாத். 19: 14, 15. தேவனால் பெற்
றுக்கொண்ட நன்மைகளுக்கு தோத்திரஞ்செலுத்தவும், வேண்டிய நன்
மைகளுக்காக தேவனிடத்தில் கேட்கவும் நான் தேவனுக்குப் பலியிட
வந்தேன், என்னோடே பலிவிருந்துக்கு வாருங்கள் என்றார். பலிவிருந்
துக்குப்போகுமுன் தீர்க்கதரிசி தாம் வந்த நோக்கத்தை ஈசாயுக்கு
மாத்திரம் சொல்லியிருந்தபடியால், தேவன் பலியிடும்படி குறித்த
இடத்தில், பலிபீடத்துக்குச் சமீபமாக தன் மக்களை ஒருவன்பின்
ஒருவனாக சாமுவேல் தீர்க்கதரிசிக்கு முன்பாக கடந்துபோகச் செய்
யவே, தேவன் அவர்களைத் தெரிந்துகொள்ளாமல் தாவீதைத்தான்
தெரிந்துகொண்டார். மனுஷன் பார்க்கிறபடி தேவன் பார்க்கமாட்
டார். அவரோ இருதயத்தை பார்க்கிறவரென்று காண்பித்தார். 1 இரா.
8: 39. 1 நாளா. 28: 9. சங். 7: 9. எரேமி. 11: 20. அப். 1: 24. தாவீதோ
ஈசாயின் மக்களில் எல்லாரிலும் இளையவன். தாவீது என்பதற்கு அர்த்
தம் சிநேகிக்கப்பட்டவன். கிறிஸ்துநாதருக்கு முன்னடையாளமான
வன். அவன் சகோதரின் நடுவில் தெரிந்துகொள்ளப்பட்டான். அந்நாள்
முதல் கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்திறங்
கினார். ஞானம், அறிவு, பலம், தைரியம், பிரபுத்துவத்துக்குரிய
சகல ஆவியின் வரங்களையும் பெற்றுக்கொண்டார். 1 சாமு. 16: 18.
17: 34. 2 சாமு. 23: 1. சவுல் இராசாவுக்கு ஞானம், பலம், தைரிய
மிழந்து, பயமும், கலக்கமும், சந்தேகமும், மனக்குழப்பமுமாகிய
பொல்லாத ஆவி வந்திறங்கினது. கோபம், மூர்க்கம், பொறாமை, வர்

மம், பயமுதலிய தீயகுணங்களால் உபத்திரவப்பட்டான். இப்படிப் பட்ட பொல்லாத ஆவியை நீக்கும்படி தாவீது சுரமண்டலம் வாசிக்கத் தெரிந்தவனானதால் அரண்மனைக்கு வரவழைப்பிக்கப்பட்டு சவுல் இராசாவுக்கு ஆயுததாரியானான். சுரமண்டல வாசிப்பினால் நல்ல ஆவியும் இறங்குவதாய் 2 இராசா 3: 15-சொல்லியதுபோல பொல்லாத ஆவியும் அதினால் நீங்கிற்றென்கலாமே. தாவீது ஆயுததாரி வேலையை கோலியாத்தை ஜெயித்தபின்பு தான் ஒழுங்காய், நிலையாய்ப் பார்த்திருப்பார். அதற்கு முந்தி அவர் அரண்மனையில் வெகுநாளாயிராமல் ஜெனன ஊருக்கு அடிக்கடி போயிருப்பதால் சவுலுக்கு தாவீது இனம் தெரியாமற் போயிற்று. தாவீது பின் இராசாவாகிறதற்கு இதெல்லாம் எத்தனமாயிருந்தது.

## கேள்விகள்.

1. தாவீது இராசாவாக அபிஷேகம்பண்ணப்படுவதற்கு நியாயங்களென்ன?

2 தாவீது இராசாவாக்கப்பட்டது தேவனாலென்று காண்பியும்?

3. தாவீதுடைய குணுகுணங்களென்ன? அதை ருபியும்.

4. தாவீது கிறிஸ்துநாதருக்கு எப்படி முன்னடையாளமானவர்?

5. அபிஷேகம்பண்ணப்படுகிறவர்களார்? எப்படி? ஏன்? எதற்குக் குறிப்பு.

6. தாவீது பெற்ற ஆவியின் வரங்களென்ன?

7. கர்த்தர் தமது ஆவியை சவுலைவிட்டு எடுத்துக்கொண்டார் என்பதின் பொருள்.

---

## 2. தாவீது கோலியாத்தை ஜெயித்தல்.

1 சாமு. 11-அதி. கி. பி. மு. 1062.

பெலிஸ்தர், சாமுவேல் தீர்க்கதரிசி சவுல் இராசாவின்மேல் முற்றும் வெறுப்படைந்து, இனி அவருக்கு நல்லாலோசனை கொடுத்து உதவிசெய்யமாட்டாரென்று அறிந்தபடியாலும், சவுல் இராசாவும், மனக்கலக்கமுள்ளவராயிருப்பதினால், யுத்தஞ்செய்ய வரமாட்டாரென்ற எண்ணத்தாலும், 14-ம் அதிகாரத்தில் அவர்களடைந்த அபஜெயத்துக்குப் பழிவாங்கும் நோக்கத்தாலும், சேனைகளைச் சேர்த்துக்கொண்டு இஸ்ரூவேலருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய வந்தார்கள். சவுல் இராசாவுக்கும் தாவீதுடைய சுரமண்டல வாசிப்பினால் பைத்தியம் சௌக்கியமாகி, யுத்தத்துக்கு வந்திருந்தார். காத் ஊரானும், பெலிஸ்தியருடைய 5-அதிபதிகளில் ஒருவனும், ஆனாக்கின் புத்திரனுமான



கோலியாத் (தேசத்துக்குப் புறம்பாக்கப்பட்டவன்) என்ற வீரன்
பெலிஸ்தரின் பாளையத்திலிருந்து வந்து, 40-நாளாய் தன்னோடு யார்
தனியுத்தஞ்செய்ய வரத்தக்கவனென்பதாய் சபதங் கூறிக்கொண்டு
வருவான். இந்த சமயத்தில் பெலிஸ்தரிலும் இஸ்ரூவேலர் அதிகமாயி
ருந்தபடியினாலோ, வேறெதினாலோ நேராய் யுத்தஞ்செய்யாமல் தனி
யுத்தத்துக்கு வரும்படி வீம்புபேசுகிறான். இவனுடைய முற்பிதாக்களை
யோசுவா துரத்திப்போட்டார். 11: 21—23. அவன் தலை உயரமாக
வும், அவனுடைய பலம், வளர்த்திக்குத்தக்கபடி அதிகமாயும், அவனு
டைய ஆயுதங்கள் பருமனாயும், பட்டயமும் ஈட்டியும் பெரிதாயும்,
அவனுடைய கேடகம் கனமாயுமிருந்தபடியினால் பெருமைகொண்டு
பாளையங்களுக்கு நடுவே வந்து வீரியம்பேசுவான். இஸ்ரூவேலர் அவ
னுடைய வார்த்தைகளைக் கேட்டு மிகவும் பயந்து கலங்குவார்கள்.
சவுல் இராசாவுக்கு 11: 6-ல் காட்டிய பலமும் தைரியமுமில்லை. பெ
லிஸ்தியரை முறியடித்ததில் 14-ல் யோனத்தானுக்கிருந்த தைரியமும்
போயிற்று. தேவாவி அவர்களைவிட்டுப் போய்விட்டதால் இப்படி நடந்
தன. தாவீதும் மேன்மையடைவதற்கு இப்படி சம்பவித்தன.

தாவீதோ பெத்லெகேமில் தன் தகப்பன் ஆடுகளை மேய்த்துக்
கொண்டிருந்தார். இவர் யோசேப்பைப்போல, தன் தகப்பனால், யுத்
தத்துக்குப் போயிருக்கிற தன் மூத்த மக்களுடைய சுகசெய்திகளை
விசாரித்து வர அனுப்பப்பட்டார். கோலியாத் முன்போல இஸ்ரூவே
லரை நிந்திக்கையில் இவர்கள் ஓடிப்போகிறதைக் கண்டு தேவாவி
யினால் தைரியமும் விசுவாசமுமுள்ளவராயும் பேசி, மூத்த சகோ
தரர் கண்டிதத்தையும் பொறுமையாய் சகித்து, ஜெயிக்கிறவனுக்
குக் கிடைக்கிற வெகுமானத்தையுங் கேட்டு, சவுல் இராசாவிடத்தில்
போய் உத்தரவுபெற்று, யுத்த ஆடைகளையும் ஆயுதங்களையுங் களைந்து
போட்டு, தேவனைப் பற்றும் விசுவாசத்தினாலும், நம்பிக்கையினாலுமே
போய் அவனை ஜெயித்தான். அநேகர் பட்டயம் ஈட்டிகளைக்குறித்தும்,
அநேகர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்
மைபாராட்டுகிறார்கள். நாமோ நம்முடைய தேவனாகிய கர்த்தரு
டைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவோம். சங். 20:
7. சங். 118: 10, 11. தாவீது கோலியாத்துடைய தலையை வெட்டி,
எல்லா பட்டினங்களுக்கும் கொண்டுபோய் ஜெயத்துக்கடையாள
மாக காட்டி, எபூசியருக்குப் பயமுந் திகிலுமுண்டாகும்படி எருசலே
மில் தூக்கிவைத்தார். அவனுடைய பட்டயமோ முந்தி தாவீதின் கூடா
ரத்திலும் பின்பு ஜெயத்துக்கும், அவருடைய கனத்துக்கும் அடையாள
மாக ஆசரிப்புக் கூடாரத்திலும் வைக்கப்பட்டது. 21: 9.

இந்த ஜெயத்தால் தாவீதுக்கு அதிக கனமும் மேன்மையுங்
கிடைத்தது. முதலாவது, பட்டத்துக்கு சுதந்தரவாளியான யோனத்
தான் தாவீதை அதிகமாய் நேசித்தான். தாவீதுடைய பேச்சிலும் செய்

கையிலும் காணப்பட்ட மேன்மையான வரங்களினாலும், தேவனுக்
கும் சனங்களுக்கும் அவன் செய்த நல்ல வேலைகளினாலும், இருவரும்
ஒரே வயதும், இலட்சணமுமாயிருந்தபடியாலும் அதிகமாய் நேசித்
தான். அவன் இனி ஆட்டுமேய்ப்பனாகவல்ல, பிரபுவாகவிருக்கும்படி
தான் போர்த்துக்கொண்டிருந்த வஸ்திரத்தையும், அவர் யுத்த சேவக
னாயிருக்கும்படி, தடிக்கும் கவணுக்கும் பதிலாக தன்னுடைய பட்டயத்
தையும் வில்லையுங் கொடுத்தான். மேய்ப்பனுடைய அடப்பைப் பைக்
குப்பதிலாக, தன் சால்வையையுங் கொடுத்தான். இதெல்லாம் யோனத்
தானுடைய அதிக பட்சத்துக்கும், தாவீதுடைய மேன்மைக்கும் அடை
யாளம். இரண்டாவது, தாவீது முன்போல் அரண்மனையை விட்டுப்
போகிறவனாயிராமல் அன்றுமுதல் சவுல் அரண்மனையில் நிலையாயிருக்
கும்படி தயவுபெற்றான். மூன்றாவது, எல்லாச் சனத்தின் கண்களுக்
கும் பிரியமாயிருந்தான். ஸ்திரீகள் சகல பட்டினங்களிலுமிருந்து தாவீ
துக்கு அதிக கனமான பாட்டுப் பாடினார்கள். நாலாவது, சவுல் இரா
சாவும் தாவீதை 1,000-பேருக்கு அதிபதியாக்கினான்.

## கேள்விகள்.

1. இஸ்ரவேலருக்கு எப்போதும் பக்கத்தில் துன்பமாயிருந்த
சாதியார் யார்? அவர்கள் யார்யார் காலத்தில் எப்படி முறியடிக்கப்
பட்டார்கள்?

2. கோலியாத் யார்? அவன் பின்வைக்கப்பட்ட முகாந்தர
மென்ன?

3. தாவீது கோலியாத்தை ஜெயித்ததில் அவருக்கிருந்த சிறந்த
இலட்சணங்களென்ன? இதினால் விசுவாசிகளுக்கு கிடைக்கிற தைரி
யமென்ன?

4. "நான் நாயோ" என்று யார்யார் எந்தெந்த சமயங்களில்
சொன்னார்கள்.

5. இஸ்ரவேலில் தேவன் இருக்கிறாரென்பதை உலகத்தார் அறி
யும்படிக்கு என்னென்ன அற்புத செய்கைகள் நடந்திருக்கின்றன.

6. தாவீது செய்த பலத்த செய்கைகளைச் சொல்லும்? இவரைப்
போல் வல்லவர்களார்?

7. கோலியாத்தை ஜெயித்ததால் தாவீதுக்குக் கிடைத்த மேன்
மைகளென்ன?

8. இஸ்ரவேலில் ஸ்திரீகள் பாடுவதுண்டென்பதற்கு இதுபோல்
வன வேறு திருஷ்டாந்தரங்களுண்டா?

9. தாவீது பாடகரும், தீர்க்கதரிசியுமாயிருந்தாரென்பதற்கு
குறிப்புகள்.



## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**—ஆல்பஸ் மலையின் ஊடே ஒரு புதிய பாதை
உண்டாக்கும்படிக்கான யோசனை நடக்கிறது. பிளாங்கு என்னும் சிக
ரத்துக்கு குறுக்கே 44,292-அடி நீளத்தில் அந்தப் பாதை குடையப்
படும். இதினால் பரீசுக்கும் பிரிண்டிசிக்கும் உள்ள தூரம் 24-மைல்
குறைவதுமன்றி, பிரான்சுக்கும் இத்தாலியாவுக்கும் உள்ள வியாபா
ரப் போக்குவரவுகள் விருத்தியாவதற்கும் அனுகூலமுண்டாயிருக்கும்.
தெசலி நாட்டெல்லையையிட்டு துர்க்கிய அரசாட்சிக்கும் கிரேக்கை
ராஜாங்கத்தாருக்கும் விவாதமுண்டாயிருக்கின்றது. அயர்லாந்தின்
காணியாட்சிக்குரிய நூதனச் சட்டத்தின் முக்கிய தாற்பரியம்:-நிலச்
சுவான்கள் இனி தங்களிஷ்டப்படி குடிகளை நீக்கவாவது நிருவையை
அதிகப்படுத்தவாவது கூடாதென்பதும்; பூஸ்திதியின் விருத்திக்காக
குடிகளுக்குக் கொடுக்கவேண்டிய கழிவைக் கொடுத்து வரவேண்டு
மென்பதுமாம். விசூவியஸ் என்னும் அக்கினி மலையில் வெடிப்பும் லா
வா என்னும் கிட்டமும் காணப்படுகிறது.

**ஆப்கான்.**—சீமை பார்லமெந்தார் வெளியிட்ட கணக்கின்
படி ஆப்கானிய யுத்தத்தில் மடிந்த ராணுவ உத்தியோகஸ்தர் 99. ரா
ணுவ சேவகர் 1524-பேர். காயப்பட்ட உத்தியோகஸ்தர் 111. சேவ
கர் 1252-பேராம். கந்தகாரில் இப்போது எல்லாம் அமைதியாயிருக்
கிறது. சமாதானமும் நம்பிக்கையும் அங்கே உண்டாகும்படி அதிகம்
மாலான பிரயத்தனங்களை நடப்பிக்கிறாராம்.

**இந்தியா.**—ராஜபிரதிநிதியாகிய கவர்னர் ஜெனரல் அவர்கள்
பத்தினியார் சகிதம் வருகிற மாசம் 20உ-யடுக்க ராங்கூனுக்கு யாத்தி
ரை போய் ஜனுவரி மாசாரம்பத்தில் கல்கத்தாவுக்குத் திரும்புவார்க
ளாம். உதயபுரி மகாராஜாவுக்கு சிற்றூரில் கவர்னர் ஜெனரல் அவர்
களால் உயர்தர இந்திய நட்சத்திரப் பட்டம் சூட்டப்படும்.

**அமெரிக்கா.**—ஐக்கியதேச பிரஜாதிபதியாகிய கார்பீல்ட்
துரை மரித்துப்போன செய்தி முன் தெரிவிக்கப்பட்டதே. அவரது
இழவுப்பவனி மிக விசேஷித்ததும் ஆடம்பரமுமாயிருந்தது. பழைய பிர
ஜாதிபதியாகிய ஹேயிஸ் துரையும் மந்திரிகள் கூட்டமும் மகா நாட்
டுச் சபை சங்கத்தாரும் கண்ணியவான்களான 1500-பேரும் அதில்
கூடிப்போனார்கள். சாமானிய ஜனங்களில் 70ஆ-பேர்வரையும் ஷெயார்
பிரேத க்ஷேமிப்பில் கூடிக்கொள்ள கிளீவ்லாந்துக்குப் போயிருந்தனர்.
தேசமெங்கும் அலுவல்கள் சோலிகள் நிறுத்தப்பட்டன. நமது கா
ருண்ய மகாராணியவர்களும் கார்பீல்ட் துரையவர்கள் பத்தினியா
ருக்கு தந்தி சமாசாரம் போக்கி தம் துக்கத்தை வெளியிட்டார்கள்.

நவம்பர் நாள்-30. ஐப்பசிமீ 18உ-முதல், கார்த்திகைமீ 17உ-வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௧௮ | ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். மத்தேயு 5: 3. |
| பு | 2 | ௧௯ | எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். |
| வி | 3 | ௨௰ | கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். 7: 7. |
| வெ | 4 | ௨௧ | ஆண்டவரே! எங்களை ரட்சியும், மடிந்துபோகிறோம். 8: 25. |
| ச | 5 | ௨௨ | உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது. 9: 22. |
| ஞா | 6 | ௨௩ | தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான். 10: 39. |
| தி | 7 | ௨௪ | தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. 11: 5. |
| செ | 8 | ௨௫ | தேவனுடைய ராச்சியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. 12: 28. |
| பு | 9 | ௨௬ | இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். 13: 29. |
| வி | 10 | ௨௭ | இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். 14: 29. |
| வெ | 11 | ௨௮ | அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார். 15: 30. (26: |
| ச | 12 | ௨௯ | மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான். 16: |
| ஞா | 13 | ௩௰ | மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார். |
| தி | 14 | ௧ | மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார். 18: 11. |
| செ | 15 | ௨ | தேவனாலே எல்லாம் கூடும். 19: 26. |
| பு | 16 | ௩ | தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார். 20: 16. |
| வி | 17 | ௪ | இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான். 21: 44. |
| வெ | 18 | ௫ | எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது, கலியாணத்துக்கு வாருங்கள். 22: |
| ச | 19 | ௬ | தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். 23: 12. (4. |
| ஞா | 20 | ௭ | என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. 24: 35. |
| தி | 21 | ௮ | இதோ! மணவாளன் வருகிறார். 25: 6. |
| செ | 22 | ௯ | இவள் செய்ததும் சொல்லப்படும். 26: 13. |
| பு | 23 | ௰ | மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன். 27: 54. |
| வி | 24 | ௧௧ | தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். 28: 6. |
| வெ | 25 | ௧௨ | மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். மாற்கு 1: 15. |
| ச | 26 | ௧௩ | உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. 2: 5. |
| ஞா | 27 | ௧௪ | நீர் தேவனுடைய குமாரன் என்று சத்தமிட்டன. 3: 11. |
| தி | 28 | ௧௫ | ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். 4: 40. |
| செ | 29 | ௧௬ | பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு. 5: 36. |
| பு | 30 | ௧௭ | அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள். 6: 56. |

## விசேஷ நாட்கள்.

1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
6. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 21-ம் ஞாயிறு. பௌரணமி.
13. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 22-ம் ஞாயிறு.
20. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 23-ம் ஞாயிறு.
21. அமாவாசை.
27. அட்வெந்தென்னும் நாட்களில் 1-ம் ஞாயிறு.
30. பரி-அப். அந்திரேயாவின் திருநாள்.

# நற்போதகம்.

௧௨. டிசம்பர்மீ. ௲௮௮௧௵.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை வியாக்கியானம்.

### ௬-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### ௮-ம் பிரிவு.

### பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைப் பற்றி.

(தொடர்ச்சி.)

வினா. பரிசுத்தவான்கள் இன்னும் யாரோடு ஐக்கியமாகிறார்கள் ?

விடை. (6) பரிசுத்த தேவதூதரோடு ஐக்கியமாகிறார்கள்.

கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி, அவர்களை விடுவிக்கிறார். சங். 34: 7. எபி. 1: 14. இப்படியே ஒரு தூதன் லோத்தை சோதோமிலிருந்து வெளியே கொண்டுவந்தான், மற்றொரு தூதன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே நடத்தினான். தானியேல் ஒரு தூதனால் காப்பாற்றப்பட்டான், அவன் சிங்கங்களுடைய வாயை அடைத்தான்.

அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார். ஏசா. 63. 9.

மத். 13: 39, 49. லூக். 1: 13, 30. 2: 13. 15: 10. 16: 22. 22: 43. 25: 5. அப். 1: 10. (5: 19. 12: 8.) 10: 3.

(7) பூமியிலிருக்கிற மற்ற பரிசுத்தவான்களோடு அன்பினால் ஐக்கியப்படுகிறார்கள். பரிசுத்தவான்களோடு அவர்கள் அனுபவிக்

கிற மகிமையிலும், பாக்கியமடைவோமென்கிற நம்பிக்கையி
லும் ஐக்கியமடைகிறார்கள்.

நீங்களோ சீயோன்மலையினிடத்திற்கும், சீவனுள்ள தேவ
னுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம்
பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில்
பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய
சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவ
னிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவி
களினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய
இயேசுவினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். எபி. 12: 22, 23.

அவர்களுக்கு ஒரே நியமங்களும், ஒரே வாக்குத்தத்தங்களும் உண்டு.
ஒரே செடியோடு இணைக்கப்பட்டவர்கள், ஒரே மூலத்திலிருந்
து ஜீவனைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஒரே மகிமையின்
சுதந்தரராயிருக்கிறார்கள்.

ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமு
முண்டு. எபே. 4: 5.

அவர்கள் கிறிஸ்துவின் உயிருள்ள அவயவங்களாய், பூமியிலிருக்கிற
எல்லா பரிசுத்தவான்களோடும் அந்நியோந்நிய ஐக்கியமுள்
ளவர்களாயிருக்கிறார்கள்.

வினா. பரிசுத்தவான்களின் ஐக்கியமுண்டு என்பதை விசுவாசிப்பதி
னாலுண்டாகும் பிரயோசனங்களெவை?

விடை. 1. பரிசுத்தம் அதிகரிக்கும்படியாகவும்.
பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெ
ற்றுக்கொள்ளும்படியாக. அப். 26: 18.
2 கொரி. 6: 14, 15. கொலோ. 1: 12. 1 யோவா. 1: 6, 7.

2. நன்றியறிதலையுண்டுபண்ணவும்.
இராசாவுக்கு மருமகனாகிறதற்கு நான் எம்மாத்திரம்?
1 சாமு. 18: 18. 2 பேது. 1: 4.

தேவதூதரோடும், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், இரத்தச்சாட்சி
களோடும், பிதா குமாரன் பரிசுத்தஆவியாகிய தேவனோடும்
ஐக்கியமாகும்படி அழைக்கப்பட்டிருக்கிற கிறிஸ்தவர்களு
டைய அழைப்பு எவ்வளவு மேன்மையாயிருக்கிறது! பரிசுத்த
வான்களின் பேரை இகழுவதும், இந்தப் பரம அழைப்பை
அவமதிப்பதும் எவ்வளவு மூடத்தனமாயும், பொல்லாங்
காயுமிருக்கிறது! நீ அவர்களுடைய மாதிரியைப் பின்பற்ற
வில்லையா? அப்படியானால் இந்த மேலான ஐக்கியத்தைச்
சேரும்படியாகவும், நீதியிலும் மெய்யான பரிசுத்தத்திலும்
தேவசாயலைத் தரித்துக்கொள்ளவும, பூமியிலுள்ள சிறந்த
கூட்டத்தில் சேர்ந்தவனாயிருக்கவும், ஒளியிலுள்ள பரிசுத்த



வான்களின் சுதந்தரத்துக்குப் பங்காளியாகச் சேரும்படியா
கவும் பரிசுத்தஆவியானவருக்காகச் செபம்பண்ணுவாயாக.

அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்.
1 சாமு. 2: 9.

ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்த
வான்களுக்காக வேண்டுதல்செய்கிறார். ரோ. 8: 27.

சர்வவல்லமையுள்ள தேவனே! நீர் தெரிந்துகொண்டவர்களை உம்
முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்து
வின் ஞானசரீரத்திலே ஒரே அந்நியோந்நிய ஐக்கியமாக
இணைத்திருக்கிறீரே. உண்மையாய் உம்மில் அன்புகூருகிறவர்
களுக்காகத் தேவரீர் ஆயத்தம்பண்ணியிருக்கிற சொல்லிமுடி
யாத சந்தோஷங்களை அடையும்படிக்கு, நாங்கள் சன்மார்க்
கமும், தேவபக்தியுமுள்ளவர்களாய் நடந்து, ஆசீர்வதிக்கப்
பட்ட உம்முடைய பரிசுத்தவான்களைப் பின்தொடரும்படி,
எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்களுக்கு
கிருபைசெய்தருளும். ஆமென்.

---

கூ-ம் பிரிவு.

---

## பாவமன்னிப்பைப் பற்றி.

---

வினா. விசுவாசப்பிரமாணத்தில் அடுத்த வாகியமென்ன?

விடை. பாவமன்னிப்பு உண்டென்று விசுவாசிக்கிறேன்.

வினா. பாவமாவதென்ன?

விடை. நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். 1 யோவா. 3: 4.
தேவனுடைய பிரமாணத்துக்கு விரோதமான எவ்விதமான நினை
வும், விருப்பமும், பேச்சும், செய்கையும்; தேவனுடைய கற்
பனைகளின்படி நடக்கவேண்டிய எந்தக் கடமையையும் செய்
யாமல் விட்டுவிடுவதும்; இருதயத்திலுள்ள எல்லா கெட்ட
இச்சையும், எல்லா பொல்லாத பழக்கங்களும் பாவமாம்.

இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாத
கங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும்,
பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். மத்.
15: 19.

தியநோக்கம் பாவமாம். நீதி. 24: 9.
மத். 12: 36. 1 யோவா. 5: 17. யாக். 4: 17. ரோ. 14: 23.
நம்முடைய பழைய சீர்கெட்ட சுபாவம் பாவமே. சங்.
51: 5.

தேவன் நம்மேல் மட்டற்ற பாத்தியமுடையவர். நம்மு

டைய நடக்கைக்குச் சட்டமாக பரிசுத்த பிரமாணங்களைக் கொடுத்திருக்கிறார். அவைகளைக் கைக்கொள்பவர்களுக்கு நன்மையான வாக்குத்தத்தங்களையும், மீறுகிறவர்களுக்கு தண்டனைக்குரிய பயமுறுத்தல்களையும் அறிவித்து, அந்தப் பிரமாணங்களை உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆகையால் நாம் செய்கிற ஒவ்வொரு பாவமும் குற்றத்துக்கு ஏதுவானது. ஒவ்வொரு பாவியும் தன் குற்றத்துக்குத்தக்க தண்டனையடைய பாத்திரனாயிருக்கிறான். மனிதன் தப்பிதம்செய்யும்போது அவனைத் தண்டிக்கும்படி, தேவன் அதிக பாத்தியமுடையவராயிருக்கிறார். மேலும் இரட்சகர் நியாயப்பிரமாணத்தை வியாக்கியானம்செய்திருக்கிறதை நாம் கவனிக்கும்பொழுது அவருடைய கற்பனைகள் எவ்வளவு விஸ்தாரமானது என்று தீர்மானிக்கலாம். மத். 5: 21, 27, 33, 38, 43.

தப்பிதமாயிருக்கலாமென்று நாம் சந்தேகிக்கிறவைகளைச் செய்யாதபடி நல்மனச்சாட்சியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

உம்முடைய கற்பனையோ மகா விஸ்தாரம். சங். 119: 96.

ஆனாலும் எப்படியும் தேவனுடைய கற்பனைகள் விஸ்தாரமாயிருக்கலாம்.

மூடர் பாவத்தைக்குறித்துப் பரியாசம்பண்ணுகிறார்கள். நீதி. 14: 9.

ரோ. 7: 13. யோவா. 16: 8, 9.

**வினா.** பாவியின்மேல் கூறப்பட்டிருக்கிற தீர்ப்பென்ன?

**விடை.** மரணமே.

அதை நீ புசிக்கும்நாளில் சாகவே சாவாய். ஆதி. 2: 17.
பாவம்செய்கிற ஆத்துமாவே சாகும். எசே. 18: 4, 20.
பாவத்தின் சம்பளம் மரணம். ரோ. 6: 23.
யாத். 32: 33. சங். 9: 17. ரோ. 5: 12.

**வினா.** எல்லா மனுஷரும் பாவிகளா?

**விடை.** ஆம். எல்லா மனுஷரும் பாவிகளாகவே இருக்கிறார்கள்.

பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே. 1 இரா. 8: 46. 2 நாளா. 6: 36. பிர. 7: 20. ரோ. 3: 23. 5: 12. கலா. 3: 22.

ஆதலால் எல்லா மனிதரும், சுபாவத்தினாலும் நடத்தையினாலும் பாவிகளாயும், தேவனுடைய நித்திய கோபத்துக்கு ஏதுவானவர்களாயும் இருக்கிறார்கள். மேலும் அவர்கள் தங்கள் ஜீவகாலமெல்லாம் ஒரு பாவத்துக்கதிமாகச் செய்யாவிட்டாலும்,

ஒருவன் நியாயப்பிரமாண முழுவதையுங் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். யாக். 2: 10.

---



The World's Birth.

# உலகப் பிறப்பு.

## XI. அதிகாரம்.

### மனிதன் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்டது.

ஆதி. 1: 26—28.

தேவன் இந்தப் பூமியை அநேக சகஸ்திராண்டுகளாக மனுவுக்கு
ஆயத்தப்படுத்தி கடைசியாக தற்காலத்தில் அவனுக்கு உபயோகமாக
காணப்படுகிறவைகளையும் உண்டாக்கினபின்பு மனிதனைச் சிருஷ்டித்
தார். மனிதனே அவருடைய கிரியைகளில் சிறந்த சிருஷ்டி. பூமியை
யும் அதிலுள்ளவைகளையும் அனுபவிக்கும்படி அவனை உருவாக்கி மகி
மையினால் முடிசூட்டி சகலத்தின்மேலும் அவனுக்கு ஆளுகையைக்
கையளித்தார்.

தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை மாசற்றவனாய் உண்டாக்கி,
சிறந்த உன்னதமான நிலைமையில் வைத்தார். அவன் பரிசுத்தமும்
பாக்கியமும் உள்ளவனாக இருந்தான்.

ஆதாமை உண்டாக்குமுன்னே திரித்துவ தேவன் "நமது சாய
லாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக"
என்றார். இந்த வாக்கியத்தைப் பார்க்கையில் மனித ஜாதி யாவரும்
ஒரே அனாயிலிருந்து உண்டானவர்களென்று அறியலாம். சீதளதேசத்
திலுள்ளவர்களும் உஷ்ண தேசத்திலுள்ளவர்களும் அவர்கள் கருப்பு,
வெள்ளை, மஞ்சள், சிவப்புத் தோலுடையவர்களாயினும் பலவகை வர்
ணத்தாராயினும் 5800-வருஷங்களாய் பூமியில் பிழைத்து மரித்துப்
போனவர்கள் எல்லாரும் ஆரும்நாளில் தேவசாயலின்படி சிருஷ்டிக்
கப்பட்ட மனிதரிலிருந்து உண்டானவர்கள் என்பது மறுக்கப்படாத
சத்தியமாய் இருக்கிறது.

பூர்வீக சாஸ்திரிகள் மனித ஜாதியார் யாவரும் ஒருவனிலிருந்து
தோன்றினவர்கள் என்ற சத்தியத்தை மறுத்துப் பேசினார்கள். பூமி
யில் அநேக பூதப்பிறவியான ஜாதியார் இருந்தார்கள் என்று நம்பின
துமல்லாமல் பற்பல கோத்திரத்தார் உருவாக்கப்பட்டிருப்பதில் அஸ்
திபாரமான பொது விஷயத்தில் வித்தியாசமுண்டென்று எண்ணி வந்
தார்கள். ஆனால் தற்கால சாஸ்திரிகள் பூமிசாஸ்திரப்படியேயும் கல்வி
வித்தைப்படியேயும் மனிதரெல்லாரும் சரித்திர சம்பந்தமாயும் அங்க
ஜீவசாஸ்திர சம்பந்தமாயும் சன்மார்க்க சம்பந்தமாயும் ஒத்திருக்கி
றார்கள் என்று சொல்லுகிறார்கள்.

பூர்வ சாஸ்திரிகள் உலகம் உற்பத்தியானபோதே மனிதரும்
இருந்தார்கள் என்று சொன்னார்கள். சில ஜாதிகள் தாங்கள் நாகரீகத்
தில் சிறந்து இலட்சக்கணக்கான வருஷங்களாய் நிலைபெற்றிருந்ததாய்
ஆச்சரியமான கதை சொல்லிவந்ததுண்டு. தற்கால சாஸ்திரிகள் மனித
ஜாதியாரின் ஆரம்பம் சில ஆயிரவருஷங்களுக்கு முன்னுள்ளதென்று

அறிக்கைசெய்திருக்கிறார்கள். வேதாகமம் இல்லாமலும் அதை ரூபிக்கிறார்கள்.

பூர்வ சாஸ்திரங்களும் கலைஞானங்களும் பற்பல தேசங்களுக்குரிய காலபேதங்களினாலும் மார்க்க வித்தியாசங்களினாலும் யுத்தங்களினாலும் அததற்குரிய தேர்ச்சியினாலும் மனிதர் என்றும் பிரிந்திருப்பார்கள் என்று சாதித்து வந்தார்கள். கர்த்தனை அறிகிற அறிவிலே மனிதரெல்லாரும் ஒன்ருக்கப்படுவார்களென்றும், சகலரும் தங்கள் தேவனோடே ஒப்புரவாகும்படி அழைக்கப்படுவார்கள் என்றும், மனித ஞானம் கண்டுபிடிக்கவேயில்லை. ஆனால் அப்படியாகும் என்று காட்டுவது பரிசுத்த வேதாகமத்துக்குரிய விசேஷித்த மேன்மையாயிருக்கிறது.

ஆதியாகமத்திலும், தீர்க்கதரிசனங்களிலும், சங்கீதத்திலும், பழைய, புதியஏற்பாடுகளெங்கும் மனிதகுலம் ஒன்றென்று விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறது. ஆதி. 1: 26-ல் தேவன் பூமியை ஆளவும், தம்மை மகிமைப்படுத்தவும், தமது சாயலின்படி மனிதனை சிருஷ்டித்தார் என்று சொல்லியிருக்கிறது. அவன் தேவனுக்கு விரோதமாக கலகம்பண்ணினபின்பு, ஒரே மனிதனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோல எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது என்றும், ரோமர் 5: 12. நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களானார்கள் என்றும், ரோமர் 3: 10, 23. எல்லாரும் சுபாவத்தினாலே கோபாக்கினையின் பிள்ளைகள் என்றும், எபேசி. 2: 3. சாட்சியிடுகிறது.

மனிதன் பாவத்தில் விழுந்தபின்பு மீட்பைப்பற்றிச் சொல்லிய வாக்குத்தத்தத்தில் "அவருக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும், பூமியின் எல்லைகளிலுள்ளவர்கள் எல்லாரும் தேவனுடைய இரக்ஷிப்பைக் காண்பார்களென்றும், சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோலவே பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் என்றும் எழுதப்பட்டிருக்கிறது." ஆதி. 22: 18. ஏசா. 52: 10. 11: 9.

நீங்கள் உலகம் எங்கும் போய்ச் சகல சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம்பெற்றவன் இரக்ஷிக்கப்படுவான். விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று நமது மீட்பர் கட்டளையிட்டிருக்கிறார். மாற். 16: 15, 16.

வேதாகமம் எவ்வளவு அதிசயமான புத்தகம். அது மனிதரால் எழுதப்பட்ட புத்தகங்களைப்போலுள்ளதல்ல. ஒரு ஜாதியார் ஒரு குலத்தாருக்காக எழுதப்பட்டதுமல்ல, உலகத்தார் எல்லாருக்காகவும், எக்காலத்தோருக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. அது மனித ஜாதியாரின் சரித்திரப் புத்தகம், எல்லா ஜனங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி. தேவன்பை வெளிப்படுத்துகிற ஜீவவாக்கியம். இந்த அதிசயமான புத்தகம் யாரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்தது? அதற்குச் சொல்லப்படுகிற உத்தரவு அந்தப் புத்தகம் தேவஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்டதென்பதை ரூபிக்கிறதாயிருக்கிறது.

முதல் ஐந்து புத்தகங்களும் அஞ்ஞான தேசமாகிய எகிப்தில் கல்வியைக் கற்றுக்கொண்ட மோசேயினால் எழுதப்பட்டு, யூத ஜாதியார் வசம் ஒப்புவிக்கப்பட்டது. அந்த யூதர் மிகவும் பிடிவாதமுள்ள



வர்களும், தங்களுக்குரிய விசேஷித்த சலாக்கியங்களினிமித்தம் வெகு
வைராக்கியம் ஜாதிக்கிறவர்களாயும், மற்ற ஜாதியார் அந்தச் சலாக்கி
யங்களில் பங்குபெற எவ்வளவும் பிரியமில்லாதவர்களாயும் இருந்தார்
கள். அவர்களில் யாராவது மற்றச் சாதியாரோடே சாப்பிடவும் மாட்
டார்கள். அப்படியிருந்தும் அந்தச் சனங்களே பூமியின் எல்லைபரியந்
தம் நற்செய்தியை அறிவிக்கும்படியாகத் தெரிந்துகொள்ளப்பட்டார்
கள். ரோமாபுரி கட்டப்படுவதற்கு 200-வருஷங்களுக்கு முன்னே எரு
சலேம் தேவாலயத்தில் அந்தச் சனங்கள் புறச்சாதியார் வரவழைக்
கப்படுவதைப்பற்றிப் பாடி வந்தார்கள். "தேவனே பூமியில் உம்மு
டைய வழியும் எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரக்ஷண்ணிய
மும் விளங்கும்படியாய் தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்
வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.
தேவனே ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக. சகல ஜனங்களும்
உம்மைத் துதிப்பார்களாக. தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்
தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர். ஆதலால் ஜாதிகள் சந்
தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள். தேவனே ஜனங்
கள் உம்மைத் துதிப்பார்களாக. சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்
களாக. பூமி தன் பலனைத் தரும். தேவனாகிய எங்கள் தேவனே எங்
களை ஆசீர்வதிப்பார். தேவன் எங்களை ஆசீர்வதிப்பார். பூமியின் எல்லை
களெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்." சங்கீதம் 67.

வேதபுத்தகத்தில் பின்வரப்போகிற மகிமையைப்பற்றி, எவ்வளவான வாக்குத்தத்தங்களும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது. முற்காலத்தோருடைய நூல்களில் இதைப்பற்றி வாசிக்கிறோமா? இதைக் கவனிக்கையில் அந்தப் புத்தகம் தேவனால் கொடுக்கப்பட்டதென்றே சொல்லத் தகுமானதாயிருக்கிறது. அது தேவஆவியானவரின் ஏவுதலால் எழுதப்படாதிருந்தால், அது எழுதப்பட்டபோது எந்த மனிதனுடைய எண்ணத்திலும் இப்படிப்பட்ட மாட்சிமையான காரியம் தென்படமாட்டாது. வேதபுத்தகம் தேவனால் கொடுக்கப்பட்டிருப்பதால் அதை நாம் எவ்வளவாய் மதிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அதை வைத்துக்கொண்டு, அதைத் தியானித்து அது கற்பிக்கிறதின்படி நடக்கிறவர்கள் மெய்யாய் பாக்கியவான்கள்.

"நாம் மனுஷனை உண்டாக்குவோமாக" என்பது எவ்வளவு கனத்தியும், இரகசியமுமுள்ளது. நாம் என்பதில் மனித சிருஷ்டிப்பில் திரித்துவத்தில் மூவருடைய ஆலோசனையைக் காட்டுகிறது. சிருஷ்டிப்பில் மனிதன் மேன்மைபொருந்தினவன். அவனுக்காக மற்றதெல்லாம் உருவாக்கப்பட்டது. தேவதூதரும் சந்தோஷத்துடன் பணிவிடைசெய்யும்படிக்கான ஜென்மமுள்ளவன். அந்தச் சென்மத்திலே தேவன் சமஸ்த உலகங்களுக்கும் தமது மகிமையை வெளிப்படுத்த சித்தம்கொண்டருளினார். அந்தச் சென்மத்திலே தேவகுமாரன் இப்பூமிக்கு வந்தார். திரித்துவத்தில் இரண்டாவதானவர், காலங்கள் தோன்றுமுன் தேவனோடே தேவனாயிருந்தவர். சகலத்தையும் உண்டாக்கினவர். மனுஷன் சிருஷ்டிக்கப்பட்ட 4,000-வருஷங்களுக்குப் பின்பு மனிதனாய் அவதரித்தது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது. அவர் மனிதனாய் ஜீவனம்பண்ணினார், மனிதனாக மரித்தார், மனிதனாக பரலோகத்துக்கெழுந்தருளியிருக்கிறார். மனிதனாக இப்பூலோகத்துக்குத் திரும்பவும் வந்து, தேவாசனத்தில் வீற்றிருந்து, மரித்தோரையும் உயிருள்ளோரையும் நியாயம் விசாரிப்பார்.

# தாவீதரசன் சரிதை.

## 3. சவுல் இராசாவால் தாவீதுக்கு நேரிட்ட துன்பங்கள்.

1 சாமு. 18—20-அதி. கி. மு. 1061.

தாவீது எல்லாருக்கும் பிரியமாயிருந்தபடியினாலும், அவர் போன இடங்களெல்லாம் ஜெயங்களும், காரிய சித்தியுமாயிருந்தபடியினாலும், ஸ்திரீகள் பாடின பாடலினாலும், பொறாமையும் எரிச்சலுமடைந்து, இராச்சியமும் தாவீதின் வசமாகுமென்ற பயத்தாலும், சாமுவேல் தீர்க்கதரிசி சொன்னபடி, தேவனுக்குப் பிரியமான தாவீதுக்கே தன் கிரீடம் கொடுக்கப்படுமென்ற அச்சத்தாலும் சவுல் இராசா தாவீதை காய்மகாரமாய்ப் பகைத்தான். தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி அவன் மேலிறங்கினபோது அவன் வழக்கப்படி சுரமண்டலம் வாசிக்கையில், தாவீதை சுவரோடே சேர்த்துக் குத்திப்போடுவேனென்று சொல்லி அவன்மேல் ஈட்டியை எறிந்தான். தாவீதோ தப்பிக்கொண்டார். 18: 11. மறுபடியும் அந்தப்படி செய்ய தேவசெயலினால் தப்பினார். 19: 10. இதற்குப் பின்பு பதில் செய்ய தாவீதுக்கு நியாயமும், தைரியமுமிருந்தும் தன்னை தேவசெயலுக்கு ஒப்புக்கொடுத்தார்.

பின்பு தாவீதோடே தேவனிருக்கிறாரென்றறிந்து, தன் அரண்மனையிலிருந்தால் தாவீது தன்னைக் கொல்ல சமயந் தேடுவான்; அல்லது பெலிஸ்தியர் கையில் தன்னை ஒப்புக்கொடுப்பானென்று பயந்து, தன்னைப்போல தாவீதுமிருப்பானென்று நினைத்து, தன்னைவிட்டு அப்புறப்படுத்தி பெலிஸ்தியரால் மடியச்செய்யும்படி அவனை சவுல் 1,000-பேருக்கு அதிபதியாக்கினான். அவன் போன இடமெல்லாம் தேவன் அவனுக்கு ஜெயத்தையும் மேன்மையுங் கொடுக்கிறாரென்றும் பயந்தான். தேவன் தாவீதோடிருந்தார். சவுலுடைய வினைகள் யாவும் தாவீதுக்கு நன்மையாக மாறின.

17-அதி. 25-ல் சொன்ன வாக்குப்படி தன் மகள் மேரோபை (பெருக்கம்.) தாவீதுக்கு கொடுக்கும்படி மாயமாலமாய் வாக்குக் கொடுத்தான். 18-அதி. 17—19. விவாக காலம் வந்தபோது அவள் பர்சிலாயின் மகனாகிய ஆதரியேலுக்கு (தேவனுடைய மந்தை) கொடுக்கப்பட்டாள். இது தாவீதுக்கு அநியாயமும் அரோசகமுமாயிருந்தது. இந்த விவாகம் தேவனால் சபிக்கப்பட்டபடியினால், இந்த விவாகத்தால் பிறந்த பிள்ளைகளும் தேவஉத்தரவால் கொல்லப்பட்டார்கள். 2 சாமு. 21-அதி.



தாவீது பெலிஸ்தியரால் கொல்லப்படும்படி சவுல் தன் மகள்
மீகாளை விவாகஞ்செய்து கொடுக்க, பரிசத்துக்கு பெலிஸ்தியருடைய
100-நுனித்தோலைக் கேட்டான். 18-அதி. 20—30. பெலிஸ்தியருடைய
தலைகளைக் கொய்வது லேசாக எண்ணி, பெலிஸ்தியரால் அதிகமாய்ப்
பகைக்கப்படும்படி நுனித்தோலைக் கேட்டான். கேட்டதற்கு அதிக
மாய், 200-கொடுத்து மீகாளை (சின்ன ஊற்றுதண்ணீர்) விவாகஞ்செய்
தான்.

பின்பு வெளியரங்கமாய் தாவீதைக் கொன்றுபோடும்படிக்கு
சவுல் யோனத்தானோடும், தன் ஊழியக்காரரோடும் பேசினபோது,
யோனத்தான் தாவீதுக்காக பரிந்து பேசி, சவுல் சமாதானமாயிருக்
கச் செய்தான். 19-அதி. 1—7. இந்தச் சமயத்தில் 11-சங்கீதம் பாடி
யிருக்கிறார். மறுபடியும் பெலிஸ்தியரோடே தாவீது யுத்தஞ்செய்யப்
போய் ஜெயமடைந்ததால் சவுல் அதிகமாய் தாவீதைப் பகைத்து அவ
னைக் கொல்ல ஈட்டியை எறிந்தான், சற்று தப்பினார். தாவீது தனக்கு
செய்யுந்தீமைக்குப் பதிலாக சவுலுக்கு நன்மைசெய்தார்.
ஈட்டிக்குத் தப்பி, வீட்டுக்கு ஓடவே பிறகாலே சேவகரை அனுப்
பி கொல்லும்படி உத்தரவுசெய்கிறான். 19-அதி. 7—17. சேவகர் வீட்
டை வளைந்திருக்கையில் 69-ம் சங்கீதத்தை பாடினார். சவுல் தன் மகள்
பிடித்துக்கொடுப்பாளென்று நம்பியிருக்க, அவள் தயவாய் புருஷன்
மேற் பட்சமாய் அவனைக் காப்பாற்றினாள்.

இவர் உயிர் தப்பும்படி பெத்லெகேமுக்கு ஓடிப்போகாமல் ரா
போத்திலிருக்கிற சாமுவேல் அண்டைக்கு ஓடினார். சாமுவேல் தா
னே தாவீதை இராசாவாயிருக்க அபிஷேகம்பண்ணினவர். இப்போது
அதினிமித்தம் அதிக துன்பமிருக்கிறபடியினாலே ஆலோசனைக்காகவும்,
சங். 116: 11. அவர் தீர்க்கதரிசியாயிருந்தபடியால், தேவனால் போத
னையடையவும், அங்கே [illegible] பள்ளிக்கூடமிருந்தது, அங்
கே அவர்களுடனே சேர்ந்து தேவனை [illegible] தன் உயிர் தப்ப
ஒருவகையாயிருக்குமென்றதாலும் அங்கே போனார். சங். 37: 4—6.
சவல் அங்கேயும் தாவீதைப் பிடிக்க 3-தரம் ஆட்களை அனுப்பவே
அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள். அவர்கள் மறுசெய்தி கொ
ண்டு வராததால் தானே போய் தாவீதைக் கொல்லும்படி சவுல் போ
னான். தேவன் அவன் மனதை மாற்றி, மூலேயாமைப்போல தீர்க்கதரி
சனம் சொல்ல ஏவினார். சவுல் தன் இராச வஸ்திரங்களைக் களைந்தும், (ஏசா.
யுத்த ஆடையைக் களைந்தும், மேல் வஸ்திரங்களைக் களைந்தும்
20: 2. மீகா. 1: 8. 2 சாமு. 6: 10. யோவான் 21: 7.) தாவீது தப்பிக்
கொள்ளத்தக்கதான சமயமிருக்கத்தக்கதாக தீர்க்கதரிசனஞ் சொன்
னான். 19-அதி. 18—24.

சவுல் ராபோத்திலிருக்கையில் தாவீது இபியாவுக்கு ஓடிப்போய்
[illegible]
இவ் உயிர் தப்பிக்கொள்ள [illegible]

போகவேணுமென்று யோசித்து, தாவீது யோனத்தானோடே பேசி, தன்னை சவுல் கொல்லத் தீர்மானித்திருப்பது நிச்சயமென்றறிந்து தாவீதும் யோனத்தானும் தங்கள் உடன்படிக்கையை உறுதிபண்ணிக்கொண்டார்கள். 20-அதி.

## கேள்விகள்.

1. தேவன் தாவீதோடிருந்தாரென்பதற்கு அத்தாட்சிகள்.
2. பொல்லாதவர்கள் நல்லவர்களுக்கு தீமையாகச் செய்கிற எத்தனங்களே அவர்களுக்கு நன்மையாக முடிகிறது என்பதற்கு ருசு.
3. "கர்த்தர் உம்மோடிருப்பாராக" என்று யார்யார் எந்தெந்த சமயங்களில் சொன்னார்கள்?
4. தாவீது யோனத்தானோடே செய்த உடன்படிக்கை எப்படிப்பட்டது? யோனத்தான் தாவீதோடு உறவானது ஆச்சரியமென்றும் அவ்வுடன்படிக்கையின் தன்மை நமக்கெப்படி படிப்பினையென்றும் காண்பியும்?
5. தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடத்தைப்பற்றி விபரமெழுதும்.
6. பக்தியுள்ள தாவீது வீட்டில் சுரூபமிருப்பது சரியா?

---

## 4. தாவீது அரண்மனையைவிட்டு தன் உயிர் தப்பும் படியாக ஓடிப்போகல்.

1 சாமு. 21, 22-அதி. கி. மு. 1060.

---

தாவீது சாமுவேல் தீர்க்கதரிசியண்டை ஓடிப்போக, அவர் அவனைத் தப்புவிக்கக் கூடவில்லை. அதைவிட்டு இராசனுடைய மகனிடத்தில் வருகிறான். அவனுங் காப்பாற்றக் கூடவில்லை, இப்போது நோபிலிருக்கிற ஆசாரியனிடத்தில் தன் பயணத்துக்கு வேண்டிய ஒத்தாசை அடையவும், தேவனிடத்தில் ஆலோசனை கேட்கவுமாகப் போனான்.

உடன்படிக்கைப்பெட்டி கீரியாத் யாரீமிலிருக்க ஆசரிப்புக்கூடாரம் நோபிலிருந்தது. இஸ்ரவேலின் இராசாக்கள் தங்களுக்கு வருத்தமான காலங்களில் தேவனைக் கேட்கும்படிக்கு ஆசரிப்புக்கூடாரத்தைத் தங்களுக்குச் சமீபமாய் வைத்துக்கொள்வது வழக்கம். யோசுவா, தன் கோத்திரத்தில் ஷீலோவிலிருக்கும்படி செய்தான். பின்பு தாவீது தன் கோத்திரத்திலும், தன் பட்டினத்திலுமிருக்கும்படி செய்தான். அப்படியே சவுல் இராசாவும் பென்யமீன் கோத்திரத்தில் ஆனதோத்துக்கு 1 இரா. 2: 26. சமீபமான நெகே. 11: 32. நோபில் (உயர்ந்த மேடு) வைக்கும்படி திட்டஞ்செய்திருப்பான். அங்கே அகித்தூபின் குமாரனும் 1 சாமு. 14: 3. 22: 11. அகியாவின் சகோதரனுமாகிய அகிமேலேக் (இராசாவின் சகோதரன்) பிரதானஆசாரியன். தாவீது



தன்னோடு வந்தவர்களை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு மத். 12: 10, 14.
தனிமையாய்ப் போனான். ஆசாரியனோ அரண்மனையிலிருந்தும், பாளை
யங்களிலிருந்தும் ஒருவரும் தாவீதோடே கூட வராததால் பயந்து,
என்னவென்று கேட்க, பயத்தினாலும் அவசரத்தினாலும் பொய்சொன்
னான். 21-அதி. 2. இந்தப் பொய்க்காக தாவீது பின்பு மனஸ்தாபப்
பட்டார். சங். 109: 29. தாவீது ஆசாரியனிடத்தில் அப்பங் கேட்கவே,
ஆசாரியர் மாத்திரம் புசிக்கத்தக்க பரிசுத்த அப்பங்களை 22: 10-ல்
தேவஉத்தரவுப்படி, யாத். 19: 15-ல் காட்டிய பிரமாணத்தின்படி சாப்
பிடச் சொன்னான். அந்தப்படி (5) அப்பத்தையுங் கோலியாத்தின் பட்
டயத்தையும் வாங்கிக்கொண்டுபோனான். இங்கே தாவீது வந்த விசே
ஷத்தையும், ஆசாரியன் கொடுத்ததையும் ஏதோமியனாகிய தோவேக்
(பயங்காலி) அறிந்திருந்தான். அவன் அங்கே பொருத்தனையை நிறை
வேற்றவோ, அல்லது ஓய்வுநாளானதால் தேவனை ஆராதிக்கவோ
வந்திருப்பான். இவன் பிறப்பில் ஏதோமியன், மார்க்கத்தில் யூதன்.

தாவீது நோபைவிட்டு காத்தின் இராசாவாகிய ஆகீஸ் அண்டை
அடைக்கலம் புக ஓடுகிறான். அவன் பெலிஸ்தியரை அடிக்கடி முறி
யடித்து சேதம்பண்ணினவனானாலும், இப்போது சவுல் இராசாவால்
பகைக்கப்பட்டிருப்பதை அறிந்து தன்னை ஏற்றுக்கொள்வானென்று
எண்ணியிருக்கலாம். தாவீதை இஸ்ரவேலர் நேசித்தாலும் சவுல் இரா
சன் பகைத்தான். பெலிஸ்தியர் தாவீதைப் பகைத்தாலும் காத்தின்
இராசா அவனை நேசித்தான். 27-அதி. 2, 3. ஆகீஸ் தன் சனங்களுக்குப்
பயப்படாவிட்டால் எப்படியும் தாவீதை காப்பாற்றுவான். ஆகீசின்
வேலைக்காரர் தாவீதைப்பற்றி மிகை பேச தாவீது அதிகமாய்ப் பயந்
து தன்னை பைத்தியகாரனாக மாரீசம்பண்ணினான். கர்த்தரை நம்புகிற
தைப் பார்க்கிலும் பிரபுக்களை நம்புகிறது விருதா? சங். 118: 9. அம்
பேயிருந்த கோலியாத்தைக் கொன்றவனும், அவன் பட்டயத்தை தன்
கையில் வைத்துமிருப்பதால் தன்னை எப்படியும் கொன்றுபோடுவார்
களென்று பயந்தான். இந்தச் சமயத்தில் 56-ம் சங்கீதம் பாடினார்.
தாவீது இந்த பயத்தினின்று தப்பிக்கொள்ள பைத்தியகாரனாகக் காட்
டினபோது ஆகீஸ் அவனைத் துரத்திவிட்டான். அப்போது 34-ம் சங்
கீதம் பாடினார்.

தாவீது அதைவிட்டு அதுல்லாம் (சனங்களின் நியாயம்) என்ற
கெபிக்குப்போனான். இது அவனுடைய ஜெனன ஊருக்குச் சமீபம்.
2 சாமு. 23: 13. 1 நாளா. 11: 15. அங்கே செபம்பண்ணினார். சங்.
142. இங்கே அவனுடைய பெற்றோரும், இனத்தாரும், சவுலுக்குப் பயந்
தவர்களும், கடன்பட்டவர்களுமான 400-பேர் அவனைச் சேர்ந்துகொ
ண்டார்கள். அவனுக்கு துன்பத்தில் உதவிசெய்யவும், தாவீது இராசா
வாகும்போது மேன்மையடையவும் நோக்கமாக வந்தார்கள். 1 நாளா.
11: 15. சவுல் அவன் நிமித்தம் அவன் பெற்றோரையும் அதிகமாய்ப்

பகைத்தபடியாலும், தன்னோடு விருந்தாப்பியரான அவர்கள் அலைந்து திரிய ஏதுவில்லையென்பதாலும் அவர்களை மோவாப் தேசத்திலுள்ள மிஸ்பேயில் மோவாபின் இராசாவிடத்தில் கொண்டுபோனான். ரூத் வழியில் அவன் கிட்டினவன் ரூத். 4: 10. சவுலுக்கு மோவாபின் இராசா பகை. 1 சாமு. 14: 47. தாவீதுக்கு துன்பகாலங்களில் உதவிசெய்யும்படி சாமுவேல் தீர்க்கதரிசி தம்மிடத்தில் படித்த காத் (நல்ல அதிஷ்டம்) தீர்க்கதரிசியை அனுப்பியிருந்தார். அந்தப்படி தாவீதுக்கு தேவஉத்தரவுண்டாயிற்று. 22-அதி: 5.

தாவீது பூதனானதால் சவுல் இராசா பென்யமீனரை அழைத்து, யோனத்தானும் தாவீதும் உடன்படிக்கைபண்ணினதைத் தனக்கு ஒருவரும் அறிவிக்கவில்லையென்பதாலும், சனங்கள் தனக்கு விரோதமாகக் கட்டுப்பாடுபண்ணினார்களென்பதை பொய்யாகவுஞ் சொல்லி, அதிக மூர்க்கமாயிருக்கையில் 22-அதி: 9—19. பொல்லாத துரோகியாகிய தோவேகு அகிமேலேக் செய்ததை திட்டமாய்ச் சொல்லாதபடியால் சேவகரைவிட்டு ஆசாரியர்களைக் கொல்லும்படி உத்தரவுசெய்யவே, அவர்கள் குற்றமற்றவர்களையும், தேவனுடைய ஆசாரியர்களையுங் கொலைசெய்ய பயந்து நிற்கவே, தோவேக், ஏபோத்தைதரித்தவர்களாய் நின்ற 85-ஆசாரியரை பயங்கரமாய் கொலைசெய்தான். அதுவுமல்லாமல் நோபிலுள்ள ஆசாரிய வம்சஷங்களையெல்லாம் கருவறுத்தும்போட்டான். இப்படியாக ஏலிக்கு சொல்லப்பட்ட சாபம் நிறைவேறிற்று. 1 சாமு. 2: 18. 3: 11—13. இந்தச் சமயத்தில் நெபியாவில் நடந்த சங்காரத்தைக் கேட்டு, அப்பியத்தார் ஏபோத்துடனே தாவீது அண்டைக்கு ஓடிப்போனார். அப்பியத்தார் என்றால் செல்வத்தின் தகப்பன் என்று அருத்தமாம்.

## கேள்விகள்.

1. தாவீதுடைய பாவங்களும், அதற்கு வந்த சிறுமையுமென்ன?
2. பலவானும் வீரனுமான தாவீது காட்டின கோழைத்தனமென்ன?
3. சங்கீத ஆகமத்துக்கு திறவுகோலாகவிருக்கிற சங்கதி எது? எங்கே?
4. தாவீதும் அவன் மனுஷரும் ஆசாரியர் தவிர மற்றவர்கள் புசிக்கத்தகாத பரிசுத்த அப்பத்தை சாப்பிட்டது தப்பிதமல்லவென்று காண்பியும்?
5. மாற்கு 2: 26-ல் அப்பியத்தார் காலத்தில் நடந்ததாகச் சொல்லியிருப்பதை இங்கே அகிமேலேக் காலத்தில் நடந்திருப்பதாக சொல்வதை சமாதானப்படுத்தும்?



6. தாவீது தோவேகு செய்த கொடுமையின்பேரில் பாடின சங்கீதங்கள்.
7. இந்த துன்பகாலங்களில் தேவன் தாவீதுக்குச் செய்த உதவிகளென்ன?

## A. FAREWELL ADDRESS.

*To*

The Editor of Friendly Instructor
PALAMCOTTAH.

*Dear Sir,*

இத்துடன் அனுப்பியிருக்கிறதும், இடையன்குடி மிஷன் ஆஜாரிகளாகிய நாங்கள் கனம் தா. சாமுவேல் ஐயரவர்களுக்கு எழுதி வாசித்ததுமான வந்தனோபசாரப் பத்திரிகையை தயவுசெய்து தங்கள் நற்போதகத்தில் அச்சிட்டுப் பிரசுரம்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
தங்களின்
*P. Lazarus.*

Edeyengudy.
Nov. 1881

கனம்பொருந்திய தா. சாமுவேல் ஐயரவர்களுக்கு
இடையன்குடிச் சேகரத்து சுதேசகுருமார்,
உபதேசிமார், உபாத்திமார், உபாத்திச்சிமார் எழுதிய
மங்கலோபசாரப் பத்திரம்.

சங்கைபொருந்திய ஐயாவே!

இதுமுன் நாங்கள் பலமுறை தங்களைச் சந்தித்து பல வந்தனோபசார வார்த்தைகளைப் பேசி வந்திருக்கிறோம். அந்தச் சமயங்களுக்கும் இந்தச் சமயத்திற்கும் மிகுந்த பேதமுண்டு. அந்தச் சந்திப்புகள் தங்களுக்கும் எங்களுக்கும் மிகுந்த சந்தோஷமாகவேயிருந்தது. ஆனால் இந்தச் சந்திப்போ எங்களுக்கு மனவலையும் மனச்சஞ்சலத்தையுங் கொடுக்கிறதாயிருக்கிறது.

1857-ம் வருஷத்துக்கும் 1881-ம் வருஷத்துக்கும் இடையே
யுள்ள 24-வருஷக்காலங்களில் 12-வருஷமாய் நாட்டாற்றுக்கு மேற்
கே இராதாபுரம் சேகரத்தில் எங்களுக்குச் சமீபமாயும், அதற்கு முன்
னும் பின்னுமாயுள்ள 12-வருஷங்களாய் எங்கள் நடுவிலும் வாசம்
பண்ணி எங்களுக்கு மிகுந்த நன்மைசெய்து வந்த தாங்கள் இப்பொ
ழுது ஜடுதியாய் எங்களையும் எங்கள் சேகரத்தையும் விட்டுப் பிரிந்து
தூத்துக்குடிக்குப் போய் அங்கே வாசம்பண்ணும்படி புறப்பட்டிருப்
பதை நாங்கள் கேள்விப்படுவதும், அதற்காகத் தங்களை வழிவிட்டனுப்
பும்படி நாங்கள் கூடி வந்து நிற்பதுமான இந்தச் சங்கதி எங்களுக்
குத் துயரத்தைக் கொடுப்பது இயல்புதானே.

தாங்கள் எங்கள் நடுவில் M. D. C. Catechist ஆகவும் உதவி குரு
வாகவும் இருந்து உழைத்துவந்த முந்தின 8-வருஷங்களிலும் குருவா
யிருந்து மூன்று ஐக்கிய சேகரங்களையும் மேல்விசாரணைசெய்து வந்த
4-வருஷங்களிலும் எங்களுக்கும் எங்கள் சபை, பள்ளிக்கூடங்களுக்
கும் பற்பல நன்மைகள் செய்து வந்திருக்கிறீர்கள். இப்போது இங்கே
நிற்கிற ஆசாமிகளில் சிலர் தவிர மற்ற யாவரும், அக்கம்பக்கங்களில்
போய் மிஷனில் உத்தியோகஞ்செய்துவருகிற இன்னம் அநேகரும்
தங்களுடைய விடாமுயற்சியினாலும், அரும்பிரயாசத்தினாலும் படிப்
பிக்கப்பட்டு அறிவில் தேறி வேலைத் திறமையுடையவர்களாய் முன்
னுக்கு வந்தவர்களென்பதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.

ஆசாமிகளுடைய வருஷாந்தர வேதப்பரீட்சையில் மற்றச் சேக
ரத்தாரைவிட இந்தச் சேகரத்தில் நிலையாக முறையாய் எங்களில்
ஒருவர் முதல் மன்றன் எடுத்து வருவதும், அநேகர் வெகுமதிகளும்,
அநேகர் அத்தியக்ஷர் பரீட்சையில் பரிசுபெறுவதும், எங்களில் சிலர்
சாயர்புரம் முதலான இடங்களிலுள்ள கல்விச்சாலைகளில் கற்காதவர்
களாயிருந்தும், உபாத்திமார், ரீடர், உபதேசிமார், குருமார் என்ற பல
அந்தஸ்துக்கேற்ற அறிவுக்கும் திறமைக்கும் வந்தெட்டியிருப்பதும்
தங்களுடைய விடாமுயற்சிக்கும், அரும்பிரயாசைக்கும், தெளிவான
போதனைக்கும் சாமர்த்தியமான நடத்துதலுக்கும் போந்த சாட்சி
களாயிருக்கின்றன.

1878-௵ தாங்கள் இந்தச் சேகரத்தைப் பொறுப்பாய் ஏற்றுக்
கொண்டபோது இருந்த கிறிஸ்தவர்களுடைய தொகை 3,835. நாள
திலோ 4,808. அப்போது ஞானஸ்நானம்பெற்றவர்கள் 2,748. இப்போ
து 3,488. அப்போது நற்கருணைக்குச் சேர்ந்தவர்கள் 711. இப்போது
857. அப்போது கிராமப் பள்ளிக்கூடங்களில் படித்த பிள்ளைகள் 1,160.
இப்போது 1,463. அப்போது அந்தப் பிள்ளைகளால் சோதனையில்
கிடைத்த சற்கார் வரும்படி ரூ 337. இப்போது ரூ 1,167-14. 0 அப்
போது ஸ்ற்றுன்றார்ட் வகுப்புகளில் ஒப்பேறின பெண்பிள்ளைப் பிள்ளை
கள் 10-க்குக் கீழும் அவர்களால் கிடைத்த வரும்படி ரூ 37-12-மாகி



ருக்க, சென்ற வருஷம் அவர்களால் வந்த சர்க்கார் வரும்படி ரூ
192-10. நாளதில் அந்த வகுப்புகளில் 96-பிள்ளைகள்மட்டும் சோத
னைக்கு ஆயத்தப்பட்டும் வருகிறார்கள். சபைகள் தா[illegible]விஷயத்தில்
தேறிவந்திருப்பதுமல்லாமல் சங்கவருமானங்களில் மிச்சம்பிடித்து
ரூ 4000-மட்டும் தாங்கள் சற்காரில் வட்டிக்குப் போட்டிருப்பதும்
சந்தோஷமான காரியம். இதன்றி தங்கள் காலத்தில் பொத்தக்காலன்
விளை, புதிருப்புவிளை, ஒருமன்குளம், சிவசுப்பிரமணியபுரம் என்ற இந்த
நாலு இடங்களில் நேர்த்தியான கோவில்களும், பொதுாரிலும் சொக்க
லிங்கபுரத்திலும் ஸ்திரமான இரண்டு பள்ளிக்கூடங்களும் கட்டப்பட்
டிருக்கின்றன. இப்படியே சபை பள்ளிக்கூட விஷயமான ஒவ்வொரு
காரியாதியும் தங்களது நயமும் பயமுமான நடத்துதலினாலும், திட்ப
நுட்ப விசாரணையினாலுமே படிப்படியாய் விர்த்தியாகி வந்திருக்கிற
தென்பதற்குச் சந்தேகமில்லை.

இதற்கிசைவாய் சென்ற மார்ச்சு மாசத்தில் இந்த மிஷனைப் பார்
வையிடவந்த கல்குத்தா மகாகனம்பொருந்திய பிரதம அத்தியக்ஷரவர்
கள் தங்களால் 12-வருஷக்காலமாய் விருத்திக்கு வந்திருக்கிற கூடன்
குளம் சபையையும், அங்கே தாங்கள் கட்டியிருக்கிற சிறப்பும் பலமு
மான தேவாலயத்தையும் பங்களாவையும் பார்த்தபோது அவர்கள்
தங்களை வியந்துபேசினது யதார்த்தமான காரியமே.

தேவகிருபையால் இவ்வளவு நன்மைகள் தங்களால் எங்களுக்
குக் கிடைத்திருக்க, தாங்கள் எங்களையும் இந்தச் சேகரத்தையும் விட்டு
வேறிடத்துக்குப்போயிருக்கப் புறப்படுகிறீர்களென்பதை நாங்கள்
காண்பது எங்கள் மனதுக்கு எவ்வளவோ சங்கடத்தையும் திகிலையும்
கொடுக்கிறது.

அருமையுள்ள ஐயாவே, தாங்கள் மகாகனம் கால்டுவேல் அத்தி
யக்ஷரவர்களுக்கு உதவியாயிருந்து எங்களை விசாரித்து நடத்திவந்த
காலங்களில் தாங்கள் உழைத்த உழைப்பையும், விடாமுயற்சியையும்,
பெலவீனருக்குக் காட்டின இரக்க உருக்கத்தையும், செய்துவந்த எழுப்
புதலான பிரசங்கங்களையும், படிப்பித்த நவமான போதனைகளையும்
காலத்துக்கேற்றதாய் தாங்கள் எங்களுக்குச் சொல்லித்தந்த நானு
வித யுக்திக் குறிப்புகளையும் நல்லாலோசனைகளையும் நாங்கள் ஒருபோ
தும் மறக்கக் கூடியதேயல்ல. கொஞ்சங்குறைய வேதமுழுவதற்கும்
அதிகப் பிரயாசத்துடன் தாங்கள் எங்களுக்குச் செய்துதந்திருக்கிற
வேதவியாக்கியானங்களும், ஜெபபுஸ்தகம், வேதசித்தாந்தப் பிரமா
ணங்கள், இந்துமதம் முதலானவைகளில் தாங்கள் போதிப்பித்துத்
தந்த விஸ்தரிப்புகளும், அருமையும் ஞானமுமுள்ள பிரசங்கக் குறிப்
புகளும், எல்லாம் தங்களுக்குப் பதிலாக தாங்கள் எங்கள் நடுவில்
நிறுத்திவைக்கும் ஓர் சிறந்த ஞாபகஸ்தம்பம் என்பதற்குச் சந்தேக
மில்லை.

தங்கள் விஷயத்தில் நேரிட்டிருக்கிற இந்த மாறுதல் தேவசெயலால் நடந்திருப்பதால், தேவனுக்கு மகிமையும் தாங்கள் போகிற இடத்துக்குச் சேமமும், தாங்கள் கையிட்டுக்கொள்ளும் எந்தக் காரியங்களிலும் சித்தியுமுண்டாகும்படி தேவனை மன்றாடுகிறோம். இரக்கம் நிறைந்த தேவன் தங்களுக்கும் அம்மாளவர்களுக்கும் அருமைப் பிள்ளைகளுக்கும் பூரண சுகத்தையும் பெலனையும் தீர்க்காயுளையும் அருளிச்செய்யும்படி அவரை நோக்கி பிரார்த்திக்கிறோம்.

தங்களால் நாங்கள் பெற்றுவந்திருக்கிற நன்மைகளுக்கு நன்றியறிதலாகவும், தாங்களும் எங்களை எப்போதும் நினைத்துக்கொள்ளும் ஞாபகச் சின்னமாகவும், தாங்கள் எங்களைவிட்டுப் பிரிந்திருந்தாலும் இன்னமும் எங்களுக்கு நன்மைசெய்யவேண்டுமென்பதற்கு ஒரு அனுதலாகவும், இத்துடன் நாங்கள் தங்களுக்குத் தருகிற எங்கள் அன்புக்குரிய இந்த அடையாளப் பொருளை பெரிதென்று அங்கீகரித்துக் கொண்டு எங்களுக்கு ஆசீர்வாத வாக்குத்தயவாய் அருளிச்செய்யும்படி தாழ்மையாய்க் கேட்டு தங்களை சமாதானமாய் வழிவிட்டனுப்பிக்கொள்ளுகிறோம்.

Edeyengoody<br>14th Novem. 1881.

ச. கிறிஸ்தியான் ஐயர்.<br>இயேசடியான் ஐயர்.<br>P. Gnanakan.<br>A. Aruminayegum.

| | |
|---|---|
| Arumai, David. | தேவ. ஆரோனுப. |
| தானியேல். | மா. மனுவேல் உபா. |
| V. Gnanapragasam. | வீ. நாத்தானியேல் உபா. |
| அருளானந்தம். | மா. மோசே. |
| R. Yesadian. | அருள். தாவீது. |
| வே. பிச்சமுத்து. | சுவாமி. ஞானக்கண் உபா. |
| N. A. Guanasigamony. | ஜேம்ஸ் உபா. |
| ஏ. சுவாமிதாசன். | பேதுரு யோவானுபா. |
| கோவிற்பிள்ளை. | வி. முத்தய்யா. |
| ராகேல். | தா. அற்புதமுத்து. |
| ஞானுவி. | யோசேப்பு உப. |
| பரிபூரணம். | மா. தாவீது. |
| S. Daniel. | ஞ. தாவீது உபா. |
| தருமக்கண் உப. | யா. திரவியம். |
| பா. வாசகு. | சவிசேஷமுத்து உப. |



## THE ANNUAL WEEK OF PRAYER.

*January* 1—8 1882.

## வருஷாந்த ஜெபவாரம்.

1882ஹு ஜனவரிமீ 1உமுதல் 8உவரை.

## ஜெபவாரத்தில் தினந்தோறும் புத்திசோல்லவும், ஜெபிக்கவும் வேண்டிய விஷயங்கள்.

### ஜனுவரிமீ 1உ ஞாயிற்றுக்கிழமை.

பிரசங்கம். "பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்." வெளி. 1: 17, 18.

### 2உ திங்கட்கிழமை.

துதியும், தோத்திரங்களும்;—தேவன் இகத்திலும் பரத்திலும் செலுத்துகிற இராஜரீக மகத்துவத்திற்காகவும், கிறிஸ்துநாதருடைய சுவிசேஷம் பிரபல்லியப்பட்டு வருகிறதற்காகவும், பலவிடங்களில் ஆரம்பித்த யுத்தங்கள் முடிந்துபோனதற்காகவும், பலவிடங்களிலுமுள்ள சபைகள் பெருகி பக்திவிர்த்தியடைந்து வந்ததற்காகவும் துதி தோத்திரம் செலுத்தவேண்டும். சங்கீதம் 148: 33. ஆபகூக். 3. ஏசாயா 25. கொலோ. 2: 1—16. உபா. 32; 1—14.

### 3உ செவ்வாய்க்கிழமை.

பாவ அறிக்கை;—தேவவசனத்தின்படி சகல காரியத்திலும் உண்
மையோடு நடவாமல் வழுவினதற்காக மன்னிப்புக் கேட்கிறதல்லாம
லும், செய்யவேண்டியவைகளைச் செய்யாமல் விட்டுவிட்டதற்காகவும்,
கிறிஸ்தவர்களுக்குள் அநேகவிடங்களில் பிரத்தியட்சமாய் நடக்கிற
குறைவுகளாகிய ஓய்வுநாள் மீறுதல், இச்சையடக்கமில்லாமை, அஞ்
ஞத்தனம், கொடுமைகள் முதலிய ஆகாமியங்களினிமித்தம் நாம் துக்
கப்பட்டு, கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி அவரிடத்தில்
மன்னிப்புக் கேட்கவேண்டியது. சங். 51. ஓசியா 14. தானி. 9: 3—20.
சங். 32. மீகா. 7: 18, 19. யோவேல் 2: 12—15.

### 4வ புதன்கிழமை.

**உலகமெங்குமுள்ள திருச்சபைக்காக ஜெபமும், வேண்டுதலும்:**

ஒவ்வொரு சபையும் உலகமெங்குமுள்ள சபையும், விசுவாசமும் நல்வாழ்வுமுடையதாகும்படி பரிசுத்தாவியானவர் கிரியைசெய்து, வரமளிக்கவும், தேவனுடைய ஜனங்கள் முற்றிலும் அவருக்குப் பிரதிஷ்டையாக்கப்படவும் ஜெபம்; விசுவாசமும், பரிசுத்தஆவியும் நிறைந்த மனிதர் எழும்பும்படியாகவும், அறிவும், பேச்சும், விசுவாசமும், பெலனும், ஆரோக்கிய மனமுமாகிய வரங்கள் அருளப்படவும் ஜெபம்; பக்தியுள்ள போதகர்களாகிய மேய்ப்பர்களுக்காகவும், வாக்கு வல்லபம்பொருந்திய சுவிசேஷ பிரசங்கிகளுக்காகவும், ஆண்டவருடைய எந்தவித ஊழியத்திலும் பக்திவைராக்கியமாய் உதவிசெய்பவர்களுக்காகவும் விண்ணப்பம். ஏசாயா 44: 1—9. யோவான் 7: 37—43. எபேசியர் 1: 3—23. யோவான் 16: 1—15. 1 கொரிந்தியர் 12: 12—31. ரோமர் 12.

### 5வ வியாழக்கிழமை.

**இளைஞருக்காகவும் அவர்களைப் படிப்பிக்கிறவர்களுக்காகவும் ஜெபம்.**

கிறிஸ்தவ பெற்றோர்களுக்காகவும், அவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கிறிஸ்துவுக்கென்று படிப்பித்து வளர்க்கத்தக்க விருப்பம் அவர்களில் உண்டாக்கவேண்டுமென்றும்;—சிறுபிள்ளைகளையும் வாலிபரையும் தெய்வ அறிவில் நடத்தும்படியாய் மேலான வரப்பிரசாதங்கள் அருளப்பட்ட உபாத்திமாரையும், உபாத்திச்சிமாரையும் எழுப்பவேண்டுமென்றும்; ஓய்வுநாள் பள்ளிக்கூடம், பாலகர் பள்ளிக்கூடமுதற்கொண்டு சர்வகலாசாலைவரைக்கும் படித்துக்கொடுக்கிறவர்கள்பேரில் தேவஆவியானவர் ஊற்றப்படவேண்டுமென்றும்; எதிரிகள் விவாதிக்கவாவது, எதிர்க்கவாவது கூடாதபடி அதிக ஞானமும், வேதத்திலும் கல்வியிலும் சாமர்த்தியமுமுடையவர்கள் புஸ்தகங்களை எழுதி அச்சிடும்படிக்கு அப்படிப்பட்டவர்கள் எழுப்பப்படும்படிக்கும் செய்ய வேண்டிய ஜெபம். உபா. 11: 18—28. 2 இரா. 22. சங். 119: 9—24. தீத். 4. கொலோ. 3.

### 6வ வெள்ளிக்கிழமை.

பற்பல தேசத்தாருக்காக மன்றாட்டு;—அவர்கள் அவிசுவாசத்திலிருந்தும், தேவனை மறந்து அவரை மறுதலிப்பதிலிருந்தும் இரட்சிக்கப்படவும், யூதர் இயேசுவை மெய்யான மேசியாவாக ஒப்புக்கொள்ளவும், மகமதுமார்க்கத்தார் கிறிஸ்துவை அறிக்கைசெய்வதற்குக் கொண்டுவரப்படவும், அஞ்ஞானிகள் விக்கிரகங்களைவிட்டுத் திரும்பவும், எல்லா ஜனங்களும தங்கள் பாவங்களையும் மற்றெல்லாவித போராட்டங்களையும் வெறுக்கவும், எல்லா மனிதரும் தேசசட்டத்திற்கும், அதிகாரத்திற்கும் மனதாரக் கீழ்ப்படியவும்; கொடுமைக்கும்,



துன்மார்க்கத்திற்கும் அநுகூலமான சட்டங்கள் நீங்கவும், அயின்
வியாபாரம் எடுபடவும், நியாயாதிபதிகளும், அதிகாரிகளும், இராஜாக்
களும் தேவஆவியால் பிரகாசிப்பிக்கப்பட்டு, நீதியையும் சமாதானத்
தையும் நடப்பிக்க மனமும், பெலனுமுடையவர்களாகவும், கர்த்தரை
அறியும் அறிவினால் பூமி நிரப்பப்படவும் மன்றாட்டு. யோவான் 12:
20—36. மீகா. 7. ரோமர் 13. யோபு 36. சகரியா 7: 1—9. & 20—33.
1 தீமோ. 2: 1-8. 1 தீமோ. 3: 4: 1—5.

### 7வ சனிக்கிழமை.

**சுயதேசத்திலும் அந்நிய தேசத்திலுமுள்ள மிஷியோன்களுக்காக ஜெபம்.**

தற்காலத்திலுள்ள தப்பறைகளுக்கு விரோதமாய் தேவனுடைய
ஜனங்கள் உண்மையாய்ச் சாட்சியிடவும், கிறிஸ்துவை அறியாதவர்
களுக்குள் அவரை அறிகிற அறிவு வளர்ந்தேறவும், நூதன சபைகள்
விசுவாசத்திலும், கிருபைகளிலும், ஜனத்தொகையிலும் பெருகும்படி
யாகவும், சுதேச போதகன்மார்களுக்கும் புதுக் கிறிஸ்தவர்களுக்கும்
அதிகமான ஆசீர்வாதங்கள் உண்டாகவும், கிறிஸ்தவ மிஷியோன்களை
நடத்துகிற பெரியோர்களுக்கு ஞானமும், யோசனையும் அருளப்பட
வும், பொதுவாய் எல்லா மனிதர்பேரிலும் பரிசுத்தஆவி ஊற்றப்படவும்
ஜெபம். அப். 8: 34-48. ஏசாயா 44. கொலோ. 2: 1—15. யோவேல் 2:
21—32. யோவான் 14: 12—27. ஏசாயா 55. 2 சாமுவேல் 22: 29—51.

### 8வ ஞாயிற்றுக்கிழமை.

பிரசங்கம்;—" இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று."
ரோ. 13: 12.

---

## சமாசாரத்திரட்டு.

இந்தியா.—சென்ற வருஷம் சிம்லாவில் நடந்த சித்திரப்பொ
ருட்காட்சி மிகவும் அநுகூலமாயிருந்தது. இத்தேசத்திய கைவேலை
யான சித்திரப் படங்கள் முதலியவைகளை விற்றதினால் 12-ஆ ரூபாய்க்
கு அதிகமான வரும்படி சற்காருக்குக் கிடைத்தது. சென்னை ராஜதா
னியின் புதிய கவர்னரவர்கள் அக்றோபர்மீ 31வ பம்பாய் நகரத்
தில் சேர்ந்து, நவம்பர்மீ 4வ சென்னைமா நகரிக்கு வந்து, வழக்கப்
படி பிரமாணத்துடன் உத்தியோகம் கைக்கொண்டார்கள். ஐதிராபாத்
நிசாம் அரசர் அரங்கபாத்துக்கு பிரயாணம்போய் வரவிருக்கிறார்.
அவர் சந்திக்கும் ஸ்தானங்களிலெல்லாம் அவருக்கு ஏற்ற உபசரணை
கள் நடக்கும். இதற்கு 2-லட்சம் ரூபாய் செலவாகுமென்று உத்தேசம்.

ஐரோப்பா.—இங்கிலந்தில் சில நாட்களுக்குமுன் கடும் புயல்
அடித்ததினால் மிகுதியான உயிர்ச்சேதம், பொருட்சேதம், கப்பற்சே
தங்களுண்டாயின. நார்தம்பர்லாந்து கரை ஒன்றில் நாசமான மீன்
பிடி வள்ளங்கள் 50, வலைகார 200-பேர். சாந்துகோதார்ட் மலைச்
சுரங்க பாதை முற்றும்பெற்ற சங்கதியின் நினைவுகூருதலுக்காக பர்ன்
கம்பட்டசாலையில் வெள்ளியினாலும். வெண்கலத்தினாலும் ஒரு முத்திரை
நாணயம் அடிக்கப்படுகிறது. சிரேஷ்ட இஞ்சினீர் முதல் மேற்படி
பாதையில் வேலைசெய்த தாழ்ந்த கூலிக்காரன் வரைக்கும் ஒவ்வொரு
வருக்கும் இப்பரிசு கிடைக்குமாம்.

## டிசம்பர் நாள்-31. கார்த்திகைமீ 18உமுதல், மார்கழிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௧௮ | எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார். மாற்கு 7: 37. |
| வெ | 2 | ௧௯ | பேதுரு பிரதியுத்தரமாக நீர் கிறிஸ்து என்றான். 8: 29. |
| ச | 3 | ௨0 | என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும். 9: 24. |
| ஞா | 4 | ௨௧ | நான் உனக்கு என்னசெய்யவேண்டும். 10: 51. |
| தி | 5 | ௨௨ | கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். 11: (9. |
| செ | 6 | ௨௩ | தேவனுடையதை தேவனுக்குஞ் செலுத்துங்கள். 12: 17. |
| பு | 7 | ௨௪ | முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே [illegible] வான். 13: 13. |
| வி | 8 | ௨௫ | உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது. 14: 36. |
| வெ | 9 | ௨௬ | அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார். 15: 28. |
| ச | 10 | ௨௭ | தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். 16: 19. |
| ஞா | 11 | ௨௮ | என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. லூக்கா 1: 46. |
| தி | 12 | ௨௯ | உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், 2: 14. |
| செ | 13 | ௩0 | மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள். (3: 6. |
| பு | 14 | ௧ | கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், 4: (19. |
| வி | 15 | ௨ | அதிசயமான காரியங்களை இன்று கண்டோம். 5: 26. |
| வெ | 16 | ௩ | இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ! 6: 25. |
| ச | 17 | ௪ | மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார். 7: 16. |
| ஞா | 18 | ௫ | என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன். 8: (46. |
| தி | 19 | ௬ | தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, 9: 23. |
| செ | 20 | ௭ | தேவையானது ஒன்றே. 10: 42. |
| பு | 21 | ௮ | அவனுக்குத் தேவையானதைக் கொடுப்பான். 11: 8. |
| வி | 22 | ௯ | தேவனுடைய ராச்சியத்தையே தேடுங்கள். 12: 31. |
| வெ | 23 | ௧0 | இது இந்த வருஷமும் இருக்கட்டும். 13: 8. |
| ச | 24 | ௧௧ | ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா. 14. (23. |
| ஞா | 25 | ௧௨ | காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன். 15: 6. |
| தி | 26 | ௧௩ | இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான். 16: 25. |
| செ | 27 | ௧௪ | இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் (கிலும். 17: 2: |
| பு | 28 | ௧௫ | தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். 18: 26. பார்க் |
| வி | 29 | ௧௬ | உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும். 19: 26. |
| வெ | 30 | ௧௭ | கனிகளில் தன் பாகத்தைக் கொடுத்தனுப்பும்படி, 20: 10. |
| ச | 31 | ௧௮ | எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள். 21: 36. |

## விசேஷ நாட்கள்.

4. அட்வெந்தென்னும் நாட்களில் 2-ம் ஞாயிறு.
5. பௌர்ணமி.
11. அட்வெந்தென்னும் நாட்களில் 3-ம் ஞாயிறு.
18. அட்வெந்தென்னும் நாட்களில் 4-ம் ஞாயிறு.
21. பரி-அப். தோமாவின் திருநாள். அமாவாசை.
25. கிறிஸ்துவின் ஜநந திருநாள்.
26. பரிஸ்தேவான் ரத்தச்சாட்சித் திருநாள்.
27. பரி-அப். யோவான் சுவி. திருநாள்.
28. குற்றமில்லாப் பாலகர் திருநாள்.

ஆவணக்காப்பக ... சென்னை-600 008.
160933

JL